# வெற்றியுள்ள வாழ்வின் இரகசியங்கள்

*(50 வேத பாடங்களின் தொகுப்பு)*

ஆங்கில மூலம்

**மறைதிரு பிரான்சிஸ் டிக்சன்**

*லேன்ட்ஸ்டவுன் பாப்டிஸ்டு திருச்சபை, இங்கிலாந்து*

தமிழாக்கம்

**பே. அ. சுந்தர ராஜன்**

( World Cassette Outreach of India, Bangalore – 42 )

இது ஒரு Words of Life, UK வெளியீடு

Copyright: ©Words of Life Ministries, UK
First Tamil Edition: January 2008   3000 Copies

Vetriulla Vazhwin Ragasiyangal
Rev. Francis W Dixon

Translated into Tamil by
Rev. P. A. Sundara Rajan

Cover Design Concept : James Ragland. S

Printed @ Screen Plant, Bangalore

Copies Available at:

World Cassette Outreach of India
90 Osborne Road
Bangalore 560 042 Karnataka

Phone: 080 – 25560959

*wcoindia@gmail.com*



## பிரான்ஸிஸ் டிக்சன் (1910 - 1985)

**பிரான்ஸிஸ் டிக்சன்** அவர்கள் 1910 இல் இலண்டனில் பிறந்து, 1929 இல் நிக்கல்சன் என்கிற அயர்லாந்தின் நற்செய்திப் பணியாளர் மூலம் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார். ஆண்டவரின் வேலைக்கென அழைப்பைப் பெற்ற பின்னர் அவர் 1940 முதல் 1946 வரை பல்வேறு சபைக ளில் ஊழியம் செய்து 1946 இல் லேன்ட்ஸ்டவுன் பாப்திஸ்து சபையின் போதகரானார். அவரது வருகைக்குப் பின் அச்சபையும் வேகமாக வளர்ந்தேறினது.

டிக்சன் அவர்கள் வரம் பெற்ற வேத போதகர், நற்செய்தியாளர். நற்செய்தியினை எளிய முறையில், உள்ளத்தைத் தொடும்படியும் எடுத்துக் கூற வல்லவர். அவரது செய்திகள் ஆழமாக இருப்பினும், பாமரரும் புரிந்து கொள்ளும்படியாக எளிமையாகவும் இருக்கும். அவர் தமது வேத பாடங்களை அச்சிட்டு சபையாருக்கு விநியோகிக்க ஆரம்பித்தார். விரைவில் அவை அவரது சபையாருக்கு மாத்திரமல்லாது, பிற நாடுகளிலுள்ள 40,000 பேருக்கு அஞ்சல் வழியாகவும், அனுப்பப்பட்டு வந்தது. அவரது வேதபாட குறிப்புகள், பிரசங்கங்கள் ஆன்ம ஆகாரத்திற்கென ஏங்கும் பல்வேறு நிலையிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும், அலுவல் மிகுதியால் அவதியுறும் போதகர்களுக்கும் ஏற்ற வரப்பிரசாதமாக இருந்தது. இப்படி அச்சிட்டு செய்திகளை வெளியிடுவதில் அவர் முன்னோடியாகத் திகழ்ந்தார். அவரது செய்திகளை **ஒலி** வடிவில் பதிவு செய்து, அவரது சபையார் பிறருக்குக் கொடுத்து வந்தனர். சபை ஊழியத்**திலி**ருந்து அவர் 1975 இல் ஓய்வு பெற்றாலும், 1985 ஜனவரியில், தமது மரணம்வரை பல்வேறு வகைகளில் ஊழியத்தில் ஈடுபட்டு அயராது உழைத்து வந்தார்.

அவரது வேதபாடங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி இதழாக வெளிவந்தன. இப்பொழுது முதன் முறையாக நூல் வடிவில் தமிழில் வெளிவந்துள்ளது. இந்நூ**லி**ல் அன்னார் அளித்த ஐம்பது வேதபாடங்கள் ஐந்து தொடர்களில் உள்ளன. அவையாவன

1. வெற்றியுள்ள வாழ்வின் இரகசியம்
2. எபேசியருக்கு எழுதின நிருபம்
3. சுவிசேஷத்தின் தலைசிறந்த வார்த்தைகள்
4. கிறிஸ்தவ வாழ்வில் வளர முதற்படிகள்
5. பி**லி**ப்பியருக்கு எழுதின நிருபம்.

இந்நூலைப் படித்து, அடைந்த பலனை எங்களோடு பகிர்ந்து கொள்ள, அன்புடன் வேண்டுகிறோம். எங்கள் முகவரி:

World Cassette Outreach of India
No. 90 Osborne Road, Bangalore -560 042 Karnataka

## பொருளடக்கம்

**தொடர் 1 வெற்றியுள்ள வாழ்வின் இரகசியங்கள்** பக்கம் 7 - 26

பாடம் 1 மெய்யான கடவுளைக் காண்பது எப்படி?

பாடம் 2 கடவுளை அறிவதனால் கிட்டும் பலன்கள் ஏராளம்

பாடம் 3 கடவுளுக்குப் பிரியமாக வாழ்வதே நமது ஒரே குறிக்கோள்!

பாடம் 4 நம் வாழ்விற்கான கடவுளின் திட்டத்தைக் காண்பது எப்படி?

பாடம் 5 பூரண சமாதானத்தை அனுபவிப்பது எப்படி?

பாடம் 6 நின்று நிலவும் மகிழ்ச்சியின் இரகசியம் யாது?

பாடம் 7 துன்பம் வரும்போது என்ன செய்யவேண்டும்?

பாடம் 8 பிறர்மீது கரிசனை கொள்ளவேண்டும்

பாடம் 9 நம்முடைய மேன்மை யாவும் ஆண்டவர் இயேசுவுக்கே

பாடம் 10 உயர்ந்த நிலையுள்ள வாழ்க்கை

**தொடர் 2 எபேசியருக்கு எழுதின நிருபம்** பக்கம் 29 - 48

பாடம் 1 கிறிஸ்துவில் நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்

பாடம் 2 சுபாவ மனிதனைக் குறித்த கடவுளின் படம்

பாடம் 3 கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்

பாடம் 4 திருச்சபையைப் பற்றிய ஏழு உண்மைகள்

பாடம் 5 அழைப்புக்குப் பாத்திரராக நடவுங்கள்

பாடம் 6 உன்னதத்திற்கு ஏறிச்சென்ற ஆண்டவர் அருளும் வரங்கள்

பாடம் 7 ஆவிக்குரிய போதை

பாடம் 8 கிறிஸ்தவனின் உறவுகள்.

பாடம் 9 நமது எதிராளியும், நமது போராட்டமும்.

பாடம் 10 சகலவித ஜெபங்களோடு எப்போதும் ஜெபிப்பது.

**தொடர் 3 சுவிசேஷத்தின் தலைசிறந்த வார்த்தைகள்** பக்கம் 51 - 70

பாடம் 1 பாவ உணர்வு

பாடம் 2 மனந்திரும்புதல்

பாடம் 3 விசுவாசம்

பாடம் 4 மறுபடியும் பிறத்தல்

பாடம் 5 நீதிமானாக்கப்படுதல்

பாடம் 6 கடவுளின் பிள்ளையாகத் தத்தெடுக்கப்படுதல்

பாடம் 7 நமக்குள்ளே இருப்பவர் அவர்

பாடம் 8 நிச்சயமானவை

பாடம் 9 பரிசுத்தமாக்கப்படுதல்

பாடம் 10 மகிமைப்படுதல்

**தொடர் 4 கிறிஸ்தவ வாழ்வில் வளரத் தேவையானவை** பக்கம் 73 - 92

பாடம் 1 கடவுளின் குடும்பத்தில் பிறக்க வேண்டும்.

பாடம் 2 புதுவாழ்வின் முதற்படிகள்

பாடம் 3 தேவையானது ஒன்றே

பாடம் 4 வெற்றியுள்ள வாழ்க்கை

பாடம் 5 வேதாகமம்

பாடம் 6 கடவுளின் சித்தத்தை அறிதல்

பாடம் 7 ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்

பாடம் 8 மற்றவர்கள் செய்யலாம் ஆனால் நீயோ, அதைச் செய்யக்கூடாது.

பாடம் 9 எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி ஊழியம் செய்

பாடம் 10 தொடர்ந்து செல்ல வேண்டியவன் கிறிஸ்தவன்!

**தொடர் 5 பிலிப்பியருக்கு எழுதின நிருபம்** பக்கம் 95 - 114

பாடம் 1 நமக்குள் கடவுளின் **உன்னதமான வேலை**

பாடம் 2 சுவிசேஷத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

பாடம் 3 பாடுகளின் மூலம் ஊழியம்

பாடம் 4 கிறிஸ்து இயேசுவின் சிந்தையைக் கொண்டிருத்தல்

பாடம் 5 விசுவாசத்திலே, பவுலின் மகன்

பாடம் 6 ஆண்டவரை முழுமையாக அறிதல்

பாடம் 7 பின்னானவைகளும், முன்னானவைகளும்

பாடம் 8 பூலோக கவலைக்குப் பரலோக மருந்து

பாடம் 9 கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றையும் செய்யலாம்

பாடம் 10 எதிர்பாராத இடங்களிலுள்ள பரிசுத்தவான்கள்!

## தொடர் 1

# வெற்றியுள்ள வாழ்வின் இரகசியங்கள்


பாடம் 1 மெய்யான கடவுளைக் காண்பது எப்படி?

பாடம் 2 கடவுளை அறிவதினால் கிட்டும் பலன்கள் ஏராளம்

பாடம் 3 கடவுளுக்குப் பிரியமாக வாழ்வதே நமது ஒரே குறிக்கோள்!

பாடம் 4 நம் வாழ்விற்கான கடவுளின் திட்டத்தைக் காண்பது எப்படி?

பாடம் 5 பூரண சமாதானத்தை அனுபவிப்பது எப்படி?

பாடம் 6 நின்று நிலவும் மகிழ்ச்சியின் இரகசியம் யாது?

பாடம் 7 துன்பம் வரும்போது என்ன செய்யவேண்டும்?

பாடம் 8 பிறர்மீது கரிசனை கொள்ளவேண்டும்

பாடம் 9 நம்முடைய மேன்மை யாவும் ஆண்டவர் இயேசுவுக்கே

பாடம் 10 உயர்ந்த நிலையுள்ள வாழ்க்கை

## பாடம் 1. **மெய்யான கடவுளைக் காண்பது எப்படி?**

***மைய வசனம்***: “இஸ்ரவேலிலே அநேக நாளாய் மெய்யான தேவனும் இல்லை, உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை, வேதமும் இல்லை. தங்கள் நெருக்கத்திலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பி, அவரைத் தேடினபோது, அவர் அவர்களுக்கு வெளிப்பட்டார்” ( 2 நாளாகமம் 15:3,4 )

வெற்றியுள்ள வாழ்வு நடத்தத் தேவையான சில இரகசியங்களை நாம் இத்தொடரில் கற்றுக் கொள்ளலாம். எல்லாம் வல்ல இறைவனை அறியாமல் ஒருவனும் வெற்றியுள்ள வாழ்வைத் தொடங்க முடியாது என்பது உறுதி. ஆகவே நாம் அவரை எவ்வாறு அறிந்து கொள்வது என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். 2 நாளாகமம் 15:1-19 வசனங்கள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. ஒரே ஒரு மெய்யான கடவுள் உண்டு. அவரே நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதா (2கொரிந்தியர் 1: 3) மெய்யான கடவுளைக் கண்டு கொள்வதே ஒரு மனிதன் இவ்வுலகில் பெற்று அனுபவிக்கும் பெரிதான ஆசீர்வாதம் எனலாம். அதே வேளையில் அவரை அறியாமல் இவ்வுலக வாழ்வைக் கடந்து போவது என்பது மிகவும் பரிதாபமாகும். இஸ்ரவேலரின் வரலாற்றின் ஒரு கால கட்டத்தினை நம்முடைய மைய வசனம் கூறுகிறது. அது இன்றைய உலக மக்களில் ஆயிரக்கணக்கானோரின் நிலையையும் கூறுகிறது. இந்த இரண்டு வசனங்கள் கூறும் சில முக்கிய போதனைகளை நாம் கிரமமாகப் பார்க்கலாம்.

### 1. அவர்களுக்கு மெய்யான தேவன் இல்லை

அநேக நாளாய் மெய்யான தேவனும் இல்லை என்று வசனம் 3 கூறுகிறது. அவர்கள் தேவனற்றவர்களாயும், தேவனைப்பற்றிய சிந்தையே இல்லாதவர்களாயும் இருந்தனர்.எபேசியர் 2:12 பார்க்க. இன்றைய மக்களில் அநேகர் இவ்விதமாக இருக்கின்றனர். அவர்கள் தேவனற்றவர்களாகவே வாழ்கின்றனர். இக்கட்டு காலங்கள் தவிர வேறு காலங்களில் அவருக்கு அவர்களது வாழ்வில் இடமுமில்லை. அவருக்கு வரவேற்பும் இல்லை. இஸ்ரவேலர் கடவுள் ஒருவர் உண்டென நம்பினர். அவரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவித்தனர். ஆயினும் அவர்களோ மெய்யான தேவனற்றவர்களாக இருந்தனர். அவர்கள் கடவுளற்றவர்களாக இருந்தனர் என்று இங்கு கூறப்படவில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்கென ஏதோ ஒன்றை வணங்கி வந்தனர் - சுயம், பணம், மகிழ்ச்சி, பேராசை போன்ற பல தெய்வங்கள் இருந்தன. இன்றும் மக்கள் பலர் வசனம் 3 கூறுவது போல் அநேக நாளாய் மெய்யான தேவனும் இல்லாதிருக்கின்றனர்.

### 2. அவர்களுக்கு உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை

உபதேசிக்கிற ஆசாரியன் என்பவன் கடவுளின் சத்தியத்தை மக்களுக்குப் போதிக்கிற கடமையுள்ளவன். இக்காலத்தில் உபதேசிக்கிற ஆசாரியன் என்பவர் யார்? கடவுளின் வார்த்தையை உண்மையாகப் போதிக்கிற போதகரும், பிரசங்கிமாருமே உபதேசிக்கிற இக்கால ஆசாரியர்கள். ஆயினும் பெரும்பாலான மக்களோ இந்தப் போதகர், பிரசங்கிமாரை விட்டு தூரமாகவே இருக்கின்றனர். அவர்கள் சபைக்குப் போவதில்லை. வேத விளக்கங்களைக் கேட்பதில்லை. அவர்கள் வேதாகமத்தைப் படிப்பதுமில்லை, கடவுளைப்பற்றிய சத்தியங்களைக் கூறும் புத்தகங்களையும் படிப்பதில்லை. இதன் விளைவாக அவர்கள் கடவுளைக் குறித்த காரியங்களில் ஏதும் அறியாதோராயும் இருக்கின்றனர். இதனால் கடவுளின் இரட்சிப்பின் வழியைக்குறித்துச் சாதாரண மனிதன் ஒன்றுமறியாதவனாய் இருக்கின்றான். எபேசியர் 2:8-10 படிக்கவும். மக்கள் பலர் சபை வைராக்கியம் அல்லது மார்க்கம் பற்றி மட்டுமே அறிந்துள்ளார்கள். ஆயினும் ஒரு சிலர் மட்டுமே நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து அருளும் இரட்சிப்பின் வழியைப் பற்றி அறிந்துள்ளனர். யோவான் 14:6, அப்போஸ்தலர் 4:12, ரோமர் 1:16 ஒப்பிட்டுப் பார்க்கவும்.

### 3. அவர்களுக்கு வேதமும் இல்லை

வசனம் 3இல் நாம் இதைக் காணலாம். ஆசாரியர்கள் வேதத்தைக் காக்கிறவர்கள். ஆசாரியனே இல்லையெனில், அவர்களுக்கு வேதமும் இல்லை. அக்காலத்தில் எவராவது வேதத்தை அறிய விரும்பினால் அவர்கள் ஆசாரியரைத் தேடிப் போவார்கள். ஆனால் இன்றோ நாம் கடவுளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அவரது வேதம், அவரது வார்த்தை, வேதாகமம் நம்மிடமுள்ளது. இருப்பினும் பெரும்பாலான மக்கள் வேதாகமத்தை வாசிப்பதே இல்லை. ஆகவே இவர்களுக்கு வேதாகமம் இருந்தும் இல்லாமலேயே இருக்கிறது. எது சரி, எது தவறு என்று கடவுள் நமக்கு வைத்துள்ள தரத்தை நிர்ணயிப்பது வேதம். ஆனால் பெரும்பாலான மக்கள் தங்கள் தராதரத்தை 1. செய்தித்தாள், 2. வானொலி 3. தொலைக்காட்சி 4. திரைப்படம் போன்ற தொடர் வழி சாதனங்கள் மூலம் நிர்ணயிக்கின்றனர். இதனால் கடவுளின் தரம் புறக்கணிக்கப்பட்டு உலகம், மனிதன், சாத்தான் போன்றோரின் தரம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நம்முடைய பண்பாடு மிகவும் அதிகமாகச் சீரழிந்துவிட்டது. வேதாகமத்திற்குத் திரும்ப வேண்டும் என்பதே இக்காலத்திற்குத் தேவையான சத்தியம். கடவுளின் நம்பத்தகுந்த வெளிப்பாட்டையும், அவரது அன்பையும் அவரது கிருபையையும், அவரது குமாரனைப் பற்றியும், அவர் மூலம் மக்கள் இரட்சிப்படையும் வழியையும் பற்றிக் கூறுவது இந்த ஒரு புத்தகம் மட்டுமே,.

### 4. அவர்கள் துன்பம் வந்தபோது தேவனிடம் திரும்பினர்

வசனம் 4இல் இதைக் காணலாம். வசனங்கள் 5,6 இல் அவர்கள் தங்கள் வாழ்வில் கடவுளுக்கு இடமளிக்காதபடியால் இந்தத் துன்பங்கள் அவர்களை நெருக்கினது என்று காண்கிறோம். ஆண்டவரை மக்கள் புறக்கணிக்கும்போது, தேசங்கள் மேலும், தனிப்பட்ட மக்கள் மீதும் இந்த துன்பங்கள் வரும். இந்த நெருக்கங்களைக் கடவுள் அனுப்புகிறாரென்பதைப் பாருங்கள். இது அவர் பாவத்திற்கெனக் கொடுக்கும் தண்டனை. தம்மிடம் மக்கள் திரும்பி வரவேண்டும் என்பதற்கென அவர் பயன்படுத்தும் முறை இது எனலாம். வசனம் 6ஐப் படியுங்கள். இன்றைக்கும் ஆண்டவர் இவ்விதமாக செயல்படுகிறார் அல்லவா. ஆம்! பல வருடங்களாகத் தனக்கென மட்டுமே வாழும் மனிதன் கடவுளைக் கண்டு அவரிடம் திரும்பி வரவேண்டும் என்பதற்காகவே அவர் துன்பங்களை மனிதனுடைய வாழ்வில் அனுப்புகிறார். தன்னுடைய தகப்பனிடம் திரும்பி வர ஆயத்தமாகும் முன்பு கெட்டகுமாரன் தன் நிலையை உணரவேண்டும் (லூக்கா 15:11-24). இன்னும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக சங்கீதம் 106ஐப் படிக்கவும். இதிலே கடவுள் மிகுதியாக அவர்களைச் சிட்சித்தபடியால், அம் மக்கள் கடவுளிடம் திரும்பி வந்தனர் என்று காண்கிறோம். அடுத்து என்ன நடந்தது?

### 5. அவர்கள் மெய்யான கடவுளைக் கண்டடைந்தனர்.

வசனம் 4 இல் அவர்கள் கடவுளைக் கண்டடைந்தது பற்றி மூன்று காரியங்கள் கூறப்பட்டுள்ளன. நாமும்கூட கடவுளைக் காண இவை உதவி செய்யும்.

1. **திரும்பு**, பாவத்தைவிட்டு, சுயத்தைவிட்டு திரும்பு 1தெசலோனிக்கேயர் 1:9
2. **தேடு:** கர்த்தரையும் அவரது மன்னிப்பையும் தேடு ஏசாயா 55:6.7
3. **வெளிப்படுவார்:** மெய்யான கடவுளைக் கண்டுகொள் 2நாளாகமம் 15:2,4,15

“கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டார்” என்று 2நாளாகமம் 15:4,15இல் காண்கிறோம். இஸ்ரவேலரின் அக்கால வரலாறு இவ்வாறு அற்புதமாக முடிவடைகிறது! நீங்கள் அவரைக் கண்டு கொண்டீர்களா? நீதிமொழிகள் 8:17 படிக்கவும்.

## பாடம் 2. **கடவுளை அறிவதனால் கிட்டும் பலன்கள் ஏராளம்**

***மைய வசனம்:***"*நீர் அவரோடே பழகிச் சமாதானமாயிரும்; அதினால் உமக்கு நன்மை வரும்*".*யோபு 22:21*

யோபு 22: 21 -29 வரையுள்ள வசனங்களுள் ஒன்றே நம்முடைய மைய வசனம். இப்பகுதியில் நாம் மெய்யாகவே கடவுளை அறியும்போது நமக்குக்கிட்டும் நன்மைகள், ஆசீர்வாதங்கள், பலன்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. கடவுளைப் பற்றி பொதுவாக அறிவதற்கும், தனிப்பட்ட முறையில், அறிவதற்கும் வேறுபாடு உண்டு. இலட்சக்கணக்கான மக்கள் கடவுளைப்பற்றி பொதுவாக அறிந்துள்ளனரேயன்றி மெய்யாக அவரை அறிய வில்லை. கடவுளைப்பற்றி அறிவுப்பூர்வமாக அறிவதற்கும் அனுபவப்பூர்வமாக அறிவதற்கும் வேறுபாடு உண்டு. அனுபவப்பூர்வமாக அறிவதே முக்கியமானது.

நாம் கடவுளை அறிவது எப்படி? வசனங்கள் 22,23 இல் கூறப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளுதல், மனந்திரும்புதல் என்கிற இரண்டு வார்த்தைகள் நமக்கு இதற்குரிய பதிலைத் தருகின்றன. "மனந்திரும்புதல்" என்பது ஒரே ஒருமுறை நடக்கும் செயல். ஏற்றுக்கொள்ளுதல் என்பது தொடர்ந்து நடப்பது.

**1. மனந்திரும்பு** (வசனம் 23) நாமெல்லாரும் வழிதப்பித்திரிந்தோம். (ஏசாயா 53:6, லூக்கா 15:13) சுபாவத்தின்படி நாம் அவருக்குத் தூரமானவர்கள். நாம் முதலாவது செய்யவேண்டியது யாதெனில் மனந்திரும்பி அவருடன் ஒப்புரவாக வேண்டும். சமீபித்து வரவேண்டும் (எபேசியர் 2:13, 1பேதுரு 2:25) கடவுளிடம் திரும்பி வருவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதை ஏசாயா 55:6,7 இல் காணலாம்.

**2. ஏற்றுக்கொள்** (வசனம் 22) அவரிடம் மனந்திரும்பி வந்த நாம் அவரை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும் (யோவான் 14:6; எபிரெயர் 7:25; வெளிப்படுத்தல் 3:20). பின்னர் நாம் அவரது வசனத்தை ஏற்றுக்கொண்டு, அவரது கட்டளைகட்கு கீழ்ப்படிய வேண்டும் (யோசுவா 1:8; யோவான் 14:15,21). இப்படித்தான் நாம் அவரை இரட்சகராக மட்டுமன்றி நண்பராகச் சரியான முறையில் அறிய முடியும் (யோவான் 15:14,15). அத்துடன் அவரை நாம் சுத்திகரிப்பவராகவும் (1கொரிந்தியர் 1:30) நம் தேவைகளைச் சந்திப்பவராகவும் (பிலிப்பியர் 4:19) நம்மைக் காக்கிறவராகவும் (யூதா 24) அறியமுடியும். சுருங்கக்கூறின் நாம் அவரை எல்லாரிலும் எல்லாமுமாய் அறியமுடியும் (கொலோசெயர் 3:11).

**கடவுளை அறிவதிலும் பல்வேறு நிலைகள் உண்டு**. யோவான் 14:9ஐ, முப்பது ஆண்டுகட்கு பின்னர், பவுல்கூறியதோடு ஒப்பிட்டுப்பார்க்கவும். அப்போஸ்தலர் 9:4- 6, பிலிப்பியர் 3:10. நாம் கடவுளிடமிருந்து எவ்வளவு பெற்றிருக்கின்றோம் என்பதைக் கொண்டுதான், நாம் கடவுளை எவ்வளவாய் அறிந்திருக்கின்றோம் என்று அளவிட முடியும். நாம் அவரது வார்த்தையை அதிகமாகப் பெறும்போதுதான் (கேட்பது, கீழ்ப்படிவது, வாழ்ந்து காட்டுவதனால்) நாம் அவரை அதிகமாக அறிய முடியும். அப்படியானால் நாம் கடவுளை அறியும் போதுதான் நன்மை கிடைக்கிறதா? கடவுளை அறிவதனால் கிட்டும் பலன்கள் யாவை?

### 1. நாம் திரும்பக் கட்டப்படுவோம்.

வசனம் 23 இல் இதைக் காணலாம். நாம் அவரை அறியும்போது நாம் ஆவிக்குரிய வாழ்வில் பலமுள்ள, திடமுள்ள, உறுதியுள்ள மக்களாக மாறுவோம். எபேசியர் 6:10 படிக்கவும். கிறிஸ்துவை உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, நீங்கள் கடவுளிடம் திரும்பி வந்துள்ளீர்களா? அப்படியானால் கொலோசெயர் 2:6,7, 2பேதுரு 3:18 ஐப் படியுங்கள். நாம் பலவீனமான, உபயோகமற்ற கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டிய அவசியமே இல்லை. தானியேல் 11:32 இன்படி திடன்கொண்டு அதற்கேற்றபடி செய்வோமா?

### 2. நாம் பாவத்தை வெறுத்துத் தள்ளுவோம்.

வசனம் 23 இதைக் கூறுகிறது. நமது சரீரம் கடவுளின் ஆலயம் (1கொரிந்தியர் 6:19). நாம் கடவுளைப் பற்றி அறியும் போது, நாம் அவரைப் போன்று பாவத்தை வெறுக்கும் அவரது தன்மையைப் பெறுகிறோம். 2கொரிந்தியர் 7:1 பார்க்கவும். பாவத்தைக் குறித்து எளிதாக கருதும் கிறிஸ்தவன் கடவுளோடு நெருக்கமாக உறவாடி அவரை அறிய முடியாது. ***உமது கூடாரம்*** என்று யோபு 22: 23 குறிப்பிடுவது நமது சரீரம் மட்டுமல்ல, நமது

குடும்பமும், தொழிலும் கூட. இந்தக் கூடாரங்களிலுள்ள பாவத்தையும், சந்தேகத்திற்குரிய காரியங்களையும் வெறுத்துத் தள்ளுகின்றோமா? 2நாளாகமம் 29:16,17ஐ சங்கீதம் 51:6 உடன் ஒப்பிட்டுப் பார்க்க.

### 3. நாம் வளமுடன் வாழுவோம்

வசனங்கள் 24, 25 இதைப்பற்றிக் கூறுகிறது. ''அப்பொழுது சர்வ வல்லவர் தாமே உமக்குப் பசும்பொன்னும், உமக்குச் சொக்க வெள்ளியுமாயிருப்பார்.''என வசனம் 25 கூறுகிறது. ஆகவே அவரை அறிந்து கொள்ளும்போது, நமக்கு வளம் கிட்டுகிறது. அளவற்ற பொன்னும், வெள்ளியும் கிட்டும். கொலோசெயர் 2:9 ஐயும் 10 ஐயும் படிக்கவும். நீங்கள் உண்மையான விசுவாசியாக இருந்தால், நீங்கள் தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரரு(பங்காளிகளு)மாவீர்கள் (ரோமர் 8:16,17); உங்கள் சுதந்தரங்களை சுதந்தரிப்பீர்கள் (ஓபதியா 17). பூரண சமாதானத்தை அனுபவிப்பீர்கள் (யோவான் 14:27); உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் (யோவான் 15:11); சாட்சிகூறப் பெலனடைவீர்கள் (அப்போஸ்தலர் 1:8) போதுமான கிருபை கிட்டும். (2கொரிந்தியர் 12:9)

### 4. நாம் சர்வவல்ல கடவுளில் மனமகிழ்ச்சியோடிருப்போம்

வசனம் 26 இதைக் கூறுகிறது. நாம் உலகத்தோடும், நிலையற்றவைகளோடுமுள்ள பழக்கத் தொடர்பை விட்டு விடுவோம். நிலையற்ற இவை ஏமாற்றத்தைத் தந்தாலும், நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் நமது மெய்யான மனநிறைவை, என்றும் மாறாத, எப்பொழுதும் கைவிடாத (எபிரெயர் 13:8) ஆண்டவரில் மட்டுமே காணமுடியும். நாம் கடவுளை அறியத் தொடங்கும்போது, நமது மகிழ்ச்சியானது அவரது ஈவுகள், அவரது சேவை, அவரது ஆலயம் போன்றவற்றில் மட்டுமல்லாது அவரிலும் பெருகும் என்பது உறுதி. அதோடு அவருக்கு மகிழ்வு தரும் காரியங்களைச் செய்யவேண்டுமென்கிற ஒரு புதிய வாஞ்சை நம்மில் உருவாகும். சங்கீதம் 37:4 ஐப் படிக்கவும்.

### 5. நம் ஜெபங்களுக்கு பதில் பெறுவோம்

வசனம் 27 இதைக் கூறுகிறது. கிறிஸ்தவர்களுக்குக் குறிப்பாக, இளம் விசுவாசிகட்குக் கிடைத்த சிலாக்கியம் என்பது ஜெபம். கடவுளை நெருக்கமாக அறிந்த மக்கள் தங்கள் ஜெபங்கட்குப் பதில் பெறுகின்றனர் என்பதே வேதாகமம் முழுவதும் காணப்படும் சாட்சியாகவும், நம் அனுபவத்தினால் கண்டறிந்த உண்மையாகவும் உள்ளது. 1யோவான் 3:22, 5:14,15 பார்க்கவும்.

### 6. நாம் பயனுள்ள சாட்சிகளாக இருப்போம்

இதை வசனங்கள் 28,29 இல் காணலாம். அவரை மெய்யாகவே அறிந்த மக்கள் தங்கள் வாழ்க்கையிலும், வார்த்தையிலும் ஆண்டவருக்குச் சாட்சியாக வாழுவார்கள்.

***1. வசனம் 28*** நாம் கடவுளை அறிந்து, அவரது கிருபையுள்ள சித்தத்தின்படி நடந்தால், நம்முடைய காரியங்கள் ஏதும் வீணாவதில்லை. மாற்கு 14:8,9, 1கொரிந்தியர் 15:58, கலாத்தியர் 6:9 பார்க்கவும்.

***2. வசனம் 29.*** நம் வேலைக்குக் கிடைக்கும் மேலான பலனைக் குறித்த ஒரு மகிமையுள்ள வாக்குறுதி! சங்கீதம் 107:2, யோவான் 3:14,15 பார்க்கவும்.

### 7. நம்முடைய வாழ்வில் கர்த்தர் மகிழ்வடைவார்

வசனம் 25 இல் ''உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.'' என்று கூறப்பட்டுள்ளது. இது அவரின் நல்ல வழிநடத்துதல், மகிழ்ச்சி, ஆசீர்வாதம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது. எண்ணாகமம் 6:24-26; சங்கீதம் 90:17, நீதிமொழிகள் 4:18, 10:22 படிக்கவும். இது எவ்வளவோ அற்புதமானது!

## பாடம் 3 **கடவுளுக்குப் பிரியமாக வாழ்வதே நமது ஒரே குறிக்கோள்!**

***மைய வசனம்:*** *"........அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்." (2கொரிந்தியர் 5:9)*

மெய்யாகவே கடவுளை அறிந்த ஒவ்வொருவரின் இடையறாத குறிக்கோள், அவருக்குப் பிரியமானவர்களாக இருக்கவேண்டும் என்பதே. யோவான் 8:29ஐப் படித்து யோவான் 13:16 உடன் ஒப்பிடுக. இதைவிட மேலான தலைசிறந்த குறிக்கோள் எவருக்காவது, எங்காவது இருக்க முடியுமா? அவருக்குப் பிரியமானவர்களா யிருப்பது உங்கள் குறிக்கோள்தானா? நிச்சயமாகவே, இதுதான் வெற்றியுள்ள வாழ்வின் இரகசியம் எனலாம். இந்தத் தொடரில் நாம் இப்படிப்பட்ட பத்து இரகசியங்களைக் கற்றுக்கொள்ளவிருக்கின்றோம். ஆனால் அந்த பத்து இரகசியங்களும் இந்தப் பாடங்கூறும் கருப்பொருளில் அடங்கியுள்ளது எனலாம். ஒவ்வொரு நாளும் ஆண்டவரைப் பிரியப்படுத்தும் வாழ்வு நடத்துவதைவிட மேலானது, சிறந்தது ஏதுமில்லை எனலாம். ஏனோக்கைக் குறித்துப் பரிசுத்தாவியானவர் என்ன எழுதி வைத்துள்ளார் என்று பாருங்கள். ஆதியாகமம் 5:22-24, எபிரெயர் 11:5. ஆதிமுதல் காலங்கள்தோறும் கடவுளைப் பிரியப்படுத்த வேண்டுமென்ற ஒரே சிறந்த நோக்குடன் வாழ்ந்த மக்களை நாம் காண்கிறோம். இன்றைய மக்களில் பெரும்பாலானோர் தங்களைத் தாங்களே பிரியப்படுத்த விரும்புகின்றனர். நியாயாதிபதிகள் 17:6, 1கொரிந்தியர் 10:5, 2தீமோத்தேயு 3:4 படிக்கவும். அவரைப் பிரியப்படுத்தும் வாழ்வு நடத்தக் கடவுளின் நிபந்தனைகளைத் தேடும் மக்கள் பலர் உண்டு.

### 1. கடவுளைப் பிரியப்படுத்த நிபந்தனைகள் யாவை?

**(1). நாம் மறுபடியும் பிறக்க வேண்டும்.** ரோமர் 8:8 ஐ யோவான் 3:5 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும். உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் பாவ சுபாவத்தினாலே கட்டப்பட்டிருக்கிறான். நாம் பாவ சுபாவத்திற்கேற்ப வாழும்போது கடவுளைப் பிரியப்படுத்த முடியாது (ரோமர் 8:5) ஆகவே நாம் பாவ சுபாவத்தினாலே ஆளுகை செய்யப்படாமல் ஆவியானவராலே ஆளுகை செய்யப்பட வேண்டும். (ரோமர் 8:9) ஆகவே இதற்கான முதற்தேவை நாம் மறுபடியும் பிறக்க வேண்டியது எனலாம்.

**(2). நாம் பாவத்திலிருந்தும், சந்தேகத்திற்குரியவற்றிலிருந்தும் விலக வேண்டும்.** நாம் மறுபடியும் பிறந்தவுடனே கடவுளின் பிள்ளைகளாகி விடுகிறோம். (1யோவான் 3:1) ஆயினும் கிறிஸ்தவ வாழ்வு ஒரு போர்க்களம் போன்றது. 2தீமோத்தேயு 2:3,4. உலக கிறிஸ்தவர்களின் வாழ்க்கை பாவமும், தடைகளும் நிறைந்தவை. ஆனால் கடவுளைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்களோ தங்கள் கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படும் தடைகளைத் தகர்த்துச் செல்வார்கள்.

**(3). நாம் நம்முடைய வாழ்வை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்.** ரோமர் 12:1 படிக்கவும். அதிலே, "பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான" என்கிற வார்த்தைகளை கவனிக்கவும். பாவத்திலிருந்தும், சந்தேகத்திற்குரியவற்றிலிருந்து விலக வேண்டும் என்பது எதிர்முறையான செயல். நம்மைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பது என்பது நேர்முறையான செயல் எனலாம். உங்கள் சரீரங்களை நீங்கள் எப்போதாகிலும் ஆண்டவருக்கு ஒப்புவித்ததுண்டா? நீங்கள் உங்கள் அவயவங்களை (ரோமர் 6:13) - கைகள், கால்கள், கண்கள், காதுகள். உதடுகள் போன்றவை - அதாவது உங்களையே அவருக்கு ஒப்புவித்ததுண்டா?

**(4). நாம் அவருக்கு நற்சாட்சிகளாக இருக்கவேண்டும்.** கடவுள் நம்மை நம்பி நம்மிடத்தில் சுவிசேஷத்தை ஒப்புக்கொடுத்துள்ளார். இது எவ்வளவு மேலான நம்பிக்கை. சுவிசேஷம் யாவருக்குமுரியது. இதை அறிவிப்பதே நமது முழுவேலையாக இருக்க வேண்டும். 1 தெசலோனிக்கேயர் 2:4, வசனம் 2 இல், சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி என்று எழுதியுள்ளார். நாம் அதைச் சொல்லுகிறோமா? ஆண்டவரைப் பிரியப்படுத்த நாமுங் கூட சங்கீதக்காரனைப் போல ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். சங்கீதம் 51:15. விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையின் மூலம் கடவுளின் கிருபைக்கும், வல்லமைக்கும் சாட்சியாக இருக்க வேண்டும். நம் வாழ்க்கைக்கும், நாம் பேசும் வார்த்தைக்கும் உடன்பாடு இருக்க வேண்டும். இதுவே ஆண்டவரைப் பிரியப்படுத்தும் என்பது உறுதி.

**(5). நாம் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருக்கவேண்டும்.** கொலோசெயர் 3:20 பார்க்கவும். தங்கள் பிள்ளைகள் தங்களுக்குக் கீழ்ப்படிவதைக் காணும் உலகப் பெற்றோர் மகிழ்ச்சியடையும் போது, தம்முடைய பிள்ளைகள் தமக்குக் கீழ்ப்படிகிறார்கள் என்பதைக் காணும் பரம பிதா எவ்வளவாய் மகிழ்ச்சியடைவார். கீழ்ப்படிதல் மிக முக்கியமானது எனலாம். 1சாமுவேல் 15:22; யோவான் 2:5, 14:15 அப்போஸ்தலர் 9:6 படிக்கவும்.

**(6). நாம் கடவுளை விசுவாசிக்க வேண்டும்.** எபிரெயர் 11:6 இல் “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.” என்று கூறப்பட்டுள்ளது. நாம் ஆண்டவரை விசுவாசிக்கிறோம் - பாவ மன்னிப்புக்காக (1யோவான் 1:9), உணவுக்காக (சங்கீதம் 34:10) நமது இரட்சிப்புக்காக (அப்போஸ்தலர் 4:12) மட்டுமல்ல, நமது எல்லாத் தேவைகளையும் அவர் சந்திப்பதற்காக (பிலிபபியர் 4:19) நாம் அவரை நம்பி அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

**(7). நாம் பெருந்தன்மையுள்ளோராக இருக்க வேண்டும்.** எபிரெயர் 13:16 ஐப் படிக்கவும். ஒரு மொழிபெயர்ப்பாளர் இதனை, “இரக்கமாக இருக்கவும், தயாளராயிருக்கவும் மறவாதீர்” என்று மொழிபெயர்த்துள்ளார். நாம் அன்பு நிறைந்தோராயும், இரக்கமுள்ளோராயும், பிறர் தேவையை உணர்ந்து, உதவி செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். சுயநலமின்றி, மற்றவர்களை ஊக்குவிக்க வேண்டும். ரோமர் 12:13, கலாத்தியர் 6:6 ஒப்பிட்டுப் படிக்கவும். இதுவே நடைமுறைக்கேற்ற வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை!

**2. கடவுளைப் பிரியப்படுத்துவதனால் கிட்டும் பலன்கள் யாவை?**

நாம் அவரைப் பிரியப்படுத்துவதை நமது குறிக்கோளாக்கும்போது அவர் நம்மேல் பிரியமாயிருப்பார். யோவான் 8:29, மத்தேயு 3:17ஒப்பிட்டுப் பார்க்க. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னிகரற்ற தேவகுமாரன். ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறான் (கலாத்தியர் 3:26) கடவுள் நம்மேல் தமது பிரியத்தை வைப்பது எவ்வளவு அற்புதமான செயல்! கடவுளைப் பிரியப்படுத்துவதினால் கிட்டும் மூன்று அனுபவபூர்வமான பலன்களை நாம் காணலாம்.

**(1). ஜெபத்திற்குப் பதில்.** 1 யோவான் 3:21,22 படிக்கவும். கடவுள் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு பதிலளிக்கிறார் என்று நாம் ஏன் உறுதியாக நம்ப முடிகிறது என்பதை இதில் காணலாம். இதிலே “வேண்டிக்கொள்ளு கிறதெதுவோ” என்ற வார்த்தையைக் கவனிக்கவும். இது நம் தேவைகள் யாவற்றையும் குறிக்கும் சொல். இது நமக்கு ஊக்கமளிக்கும் வாக்குறுதி. இந்த வசனம் நம் ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் வழியைக் கூறுவதோடு, நம்முடைய ஜெபங்கள் சிலவற்றிற்கு ஏன் பதில் கிடைப்பதில்லை என்பதையும் விளக்குகிறது.

**(2). எதிரிகளுடன் சமாதானம்.** நீதிமொழிகள் 16:7 இல் ஒரு அற்புதமான வாக்குத்தத்தம் கூறப்பட்டுள்ளது. இது ஒரு நிபந்தனையுடன் உள்ளது. அவரது பார்வைக்கு பிரியமானவர்களாக நடக்கவேண்டும் என்பதே அது. ரோமர் 12:17-21 வரை படிக்கவும். மனித உறவுகள் நன்றாக இருப்பதற்கு நாம் கடவுளுக்குப் பிரியமானவர்களாக இருக்க வேண்டும் என்பதை இவ்வசனங்கள் வலியுறுத்துகின்றன!

**(3). வெற்றியளிக்கும் வல்லமை.** பிரசங்கி 7:26 இல் குறிப்பிட்ட ஒரு சோதனை கூறப்பட்டுள்ளது. இந்தத் தீமையிலிருந்து விடுதலை பெறுவதும் வாக்களிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்குத் தத்தம் எல்லாத் தீங்குகட்கும் பொருந்தும். 1கொரிந்தியர் 10:13 ஐ 2தீமோத்தேயு 4:18 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும்.

**3. அவரைப் பிரியப்படுத்த நம்மை நெருக்கி ஏவும் நோக்கங்கள் யாவை?**

(1). கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடக்கவில்லை (ரோமர் 15:3)

(2). தேவனுடைய மகிமைக்கென்று செய்யவேண்டும் (1கொரிந்தியர் 10:31)

(3). கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நிற்க வேண்டும் (ரோமர் 14:10, 1கொரிந்தியர் 3:13)

நம்முடைய சொந்த பலத்தினால் நாம் அவரைப் பிரியப்படுத்த முடியாது என்பதை மனதிற் கொள்க பிலிப்பியர் 2:13.

## பாடம் 4 **நம் வாழ்விற்கான கடவுளின் திட்டத்தைக் காண்பது எப்படி?**

***மைய வசனம்:*** *"........ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்". (அப்போஸ்தலர் 22:10)*

தான் மனமாற்றம் பெற்ற வேளையின்போது, தர்சு பட்டணத்து சவுல், "ஆண்டவரே, நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்ட இந்தக் கேள்வியின் அடிப்படையில் நமது இந்த வேதபாடம் அமைந்துள்ளது. சவுலின் மனமாற்றம் சடுதியாக நேரிட்டதா? தமஸ்கு சாலையில் திடீரென ஏற்பட்ட அவரது மாற்றம் ஏதோ தற்செயலாக நடந்ததா?அல்லது இது கடவுளின் திட்டப்படி, அவரது நோக்கத்தின்படி நடந்ததா? அப்போஸ்தலர் 9:15 இல் இது கடவுளின் திட்டத்தின்படி நடந்ததென்று காண்கிறோம். அப்படியானால் கடவுள் என்னுடைய வாழ்க்கைக்கும் திட்டம் வைத்துள்ளாரா? அதை நான் அறிவது எப்படி? அதை அறிந்துகொள்ள என்ன செய்ய வேண்டும்? இப்படிப்பட்ட பல்வேறு வினாக்கட்கு நாம் பதில் காண வேண்டியவர்களாயிருக்கிறோம்.

**1. தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரின் வாழ்விற்கும் ஆண்டவர் நிச்சயமான ஒரு திட்டத்தை வைத்துள்ளார்.** இதை நம்புவதற்கு மூன்று உறுதியான காரணங்கள் உண்டு:

**(1). இதை எதிர்பார்ப்பதற்குக் காரணம் உண்டு.** நம் கடவுள் ஒழுங்கின் தேவன். எதையும் அவர் முறைப்படி செய்பவர். நாம் ஒரு வீட்டைக் கட்டுவதற்கு அல்லது ஆடையைத் தைப்பதற்கு ஒரு திட்டம் அல்லது மாதிரியை வைத்துக் கொள்கிறோம். அதுபோலவே கடவுள் நமக்குச் செய்கிறார்.

**(2). இது மக்கள் அனுபவத்தில் கண்ட உண்மை.** ஆபிரகாம் (எபிரெயர் 11:8-10) மோசே (எபிரெயர் 11:24-27) தாவீது (1நாளாகமம் 17:7) ஏசாயா (ஏசாயா 6:8) எரேமியா (எரேமியா 1:5-10) பவுல் (அப்போஸ்தலர் 9:15) போன்றோரின் வாழ்வைச் சற்று நோக்கிப் பாருங்கள்.

**(3). கடவுளின் வார்த்தை இதைப் போதிக்கிறது.** எபேசியர் 2:10 ஐ சங்கீதம் 27:11, 37:23, 73:24, 148:8, நீதிமொழிகள் 3:6, 15:19, 16:3, ஏசாயா 6:8, 30:21, யாக்கோபு 1:5 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும். நம்முடைய வாழ்விற்கென கடவுள் வைத்துள்ள திட்டத்தின் மூன்று பண்புகளை நாம் கவனிக்கலாம்.

**(1). இது தனி நபருக்குரிய திட்டம்.** அப்போஸ்தலர் 9:4 இல் 'நீ', 'என்னை' என்கிற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண்க. உங்களைப் போன்ற இன்னொருவர் இந்த உலகில் இல்லை. நீங்கள் நீங்களேதான்! ஆகவே கடவுளின் திட்டம் உங்களுக்கு மட்டுமேயுரியது. தனிப்பட்டது. உங்கள் வாழ்விற்கென அவர் ஒரு நோக்கம் வைத்துள்ளார். இன்னொருவரைக் கொண்டு அவர் அதை நிறைவேற்ற விரும்பவில்லை.

**(2). இது பூரணமான திட்டம்.** கடவுளின் திட்டத்தைப்பற்றி ரோமர் 12:1, 2 வசனங்களில் காணலாம். இதில் கடவுளின் சித்தம் அல்லது கடவுள் தம் பிள்ளைகட்கென வைத்துள்ள திட்டம், நோக்கம் பற்றிக் காணலாம். இது "நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம்" என்று கூறப்பட்டுள்ளது.

**(3). இது செயல்படும் திட்டம்.** இது அன்றாட வாழ்விலும், வேலையிலும் தொடர்பு கொண்டு செயல்படுத்த ஏற்ற திட்டம். "நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான" என்பது ஏதோ எழுத்தின்படியானதல்ல, இது அனுபவத்திலும் நன்கு செயல்படுவது.

**2. ஆகவே, நம் வாழ்விற்கென கடவுள் வைத்துள்ள திட்டத்தையும், நோக்கத்தையும் அறிவதே வாழ்வில் மிக முக்கியமான செயலாகும்.**

கிறிஸ்தவர்களில் சிலர் தங்கள் வாழ்விற்கென கடவுள் வைத்துள்ள திட்டத்தையும், நோக்கத்தையும் அறியாதிருப்பது வேதனைக்குரியது. இதனால்தான் அவர்கள் வாழ்க்கை முழுவதும் ஏமாற்றம், தோல்வி, ஆத்திரம், வீழ்ச்சி போன்றனவற்றால் நிறைந்துள்ளது என்பது தெளிவு. நாம் நல்லதை சாதித்து வருகிறோம் என்றும், நாம் செய்வது நமக்காக மட்டுமல்ல, நமது பரமபிதாவின் சித்தத்திற்கு இசைந்ததாக உள்ளது என்றும் நாம் உணரும்போது அது மிகவும் அற்புதமாகவுள்ளது. மன மாற்றம் பெறாத ஒவ்வொரு மனிதனும், தானே திட்டமிட்ட சுய விருப்பத்தின்படி மனமாற்றம் ஏற்படும்வரை சவுல் நடந்ததுபோலவே வாழ்கிறான். அப்போஸ்தலர் 9:5 படிக்கவும். அதோடு கிறிஸ்தவர்களில் அநேகர் தங்கள் வாழ்விற்குத் தாங்களே திட்டமிடுவதைப் பார்க்கும்போது அது வேதனைக்குரியதாகவும் உள்ளது. நாமே தீர்மானங்கள் செய்கிறோம், தெரிவு செய்கின்றோம், அப்புறம் அது தவறு என்று உணருகின்றோம். யோவான் 21:3 படிக்கவும். நாம் கடவுளின் சித்தத்தின் மையத்தில் இருக்கின்றோமென்று அறியும்போது அது மனதிற்கு ஆறுதலாகவுள்ளது. இதைவிட மேலானது ஏதுமில்லை.

**.3. இயேசு கிறிஸ்துவை நம்முடைய ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளும்போதே நாம் கடவுளின் திட்டத்திற்குள் அடியெடுத்து வைக்கின்றோம்.**

ஆண்டவர் சொல்லுகிறபடியே செய்யச் சவுல் தன்னை ஒப்புவித்தவுடனே அவர் கடவுளின் திட்டத்திற்குள் நுழைந்துவிட்டார். அப்போஸ்தலர் 9:6ஐ 8 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும். "இயேசு நானே" (அதாவது இரட்சகர் - மத்தேயு 1:21 பார்க்கவும்) என்று கூறி, ஆண்டவர் இயேசு தம்மைச் சவுலுக்கு வெளிப்படுத்தினார். சவுலின் மனமாற்றத்திற்கு முந்தின வாழ்க்கையில் கடவுள் விருப்பம் காட்டாதிருந்தார் என்பது இதற்குப் பொருளல்ல. இயேசு கிறிஸ்துவைத் தம்முடைய சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்று அவரது பாதத்தில் வீழ்ந்து வணங்கினபோது சவுல் மெய்யாகவே கடவுளின் திட்டத்திற்குள் அடியெடுத்து வைத்துவிட்டார்.

**4. அன்றாடம் நாம் அவருக்கும் அவரது வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கும் ஒப்புவித்து கடவுளின் திட்டத்திற்குள் தொடர்ந்து செல்லும்போது இதைக் காணலாம்.** நம் வாழ்நாள் முழுவதற்குமான திட்டத்தைக் கடவுள் தமக்கு முன்பாக வைத்துள்ளார். ஆனால் அதை நமக்கு அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்துகிறார். சங்கீதம் 37:23 பார்க்க. அவர் ஆதிமுதல் அந்தம்வரை அறிந்தவர். (ஏசாயா 46:9,10) மனிதனின் நிலை இதற்கு ஒத்திருக்க வேண்டும். நாம் கடவுளின் சித்தத்தை அறிந்து, அதன்படி செய்ய, முழுமையான ஒப்படைப்பும், அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்கிற உறுதியான தீர்மானமும் வேண்டும். அப்போஸ்தலர் 22:10 பார்க்க.

கடவுளின் சித்தத்தை அறிவதற்கு நான்கு காரியங்கள் தேவை.

**(1). ஜெபத்தின் மூலம் அவரோடு பேசுதல்.** இதற்குப் பொருத்தமான ஜெபத்தை சங்கீதம் 27:11 இல் காணலாம். நாம் தவறாமல் தனிமையான ஓரிடத்திற்குச் சென்று அவருடன் பேசும்போது, கடவுள் தமது திட்டத்தைப் படிப்படியாக நமக்கு வெளிப்படுத்துவதைக் காணலாம்.

**(2). அவரது வார்த்தையை ஆராய்ந்து படிப்பது.** கடவுளின் வார்த்தையைப் படித்து அது கூறும் கட்டளை கட்கும், வழிநடத்துதலுக்கும் ஒப்புவிக்கும்போது, கடவுள் தமது பரிசுத்தவான்களை அற்புதமாக வழிநடத்துகிறார். -சங்கீதம் 119:105 படிக்கவும்.

**(3). உடனடியாக, மறுப்பின்றி அவருக்குக் கீழ்ப்படிவது.** நாம் அவருக்குக் கீழ்ப்படியும்போது கடவுள் தமது சித்தத்தை வெளிப்படுத்துகிறார். -1சாமுவேல் 15::22 பார்க்கவும். அவர் படிப்படியாகவே வெளிப்படுத்துகிறார். சவுல் அடுத்த அடியெடுத்து வைக்க என்ன செய்ய வேண்டுமென்பதைப் பட்டணத்திற்குள் சென்ற பின்புதான் அறிய முடிந்ததது (அப்போஸ்தலர் 9:6)

**(4). முழுமையான, சலனமற்ற நம்பிக்கை வேண்டும்.** கடவுள் நம்மில் கிரியை செய்கிறார் என்பதை நாம் அபூர்வமாகத்தான் காணமுடியும். ஏனெனில் நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். அதாவது இதற்காக நாம் அவரை முழுமையாக நம்ப வேண்டும். ஆண்டவர் சவுலைத் "தெரிந்து கொண்ட பாத்திரமாக"க் கொண்டார். அவரது வாழ்வில் நேரிடும் பாடுகள், தனிமை, கல்லடி, சிறைவாசம் (2கொரிந்தியர் 11:24-28) போன்றவை கடவுளால் அனுமதிக்கப்படும்போது, சவுல் அவரை முழுமையாக நம்பி ஏற்கவேண்டும். நம் வாழ்வில் நேரிடும் சோதனைகளுங்கூட கடவுளின் திட்டம்தான் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். 1பேதுரு 4:12,13,19 படிக்கவும்.

**5. நம் வாழ்விற்கெனக் கடவுள் வகுத்துள்ள திட்டம் நித்தியமானதொன்று எனலாம்**

"வாழ்நாள் முழுவதையும் தங்கள் எதிரே வைத்துக் கொண்டுள்ள வாலிபச் செல்வங்களுக்கு இது உற்சாகமளிக்கும் கருத்து" என்று இப்பாடத்தின் இறுதிக்கு வந்துள்ள நீங்கள் யோசிக்கலாம். இது வயது முதிர்ந்த கிறிஸ்தவர்களுக்குக்கூட உற்சாகமூட்டும் கருத்தாகும். ஏனெனில் ஆண்டவருக்குச் சொந்தமான நம் யாவருக்கும் ஒரு மகிமையான நித்தியம் காத்துக் கொண்டிருக்கிறது. கடவுளின் திட்டத்தில் பூமிக்குரிய, பரத்துக்குரிய பகுதிகள் உண்டு. பூமிக்குரிய பகுதி என்பது கட்டடத்தின் அஸ்திபாரம் போன்றது; பரத்துக்குரிய பகுதி என்பது அதின் மீது கட்டப்பட்டுள்ள கட்டடம் போன்றது. கடவுளின் திட்டத்தைப் பற்றிய நம்முடைய அறிவு வரையறைக்குட்பட்டது. ஒரு கிறிஸ்தவன் தனது 30 அல்லது 40 வயதில் மரித்தால், நாம் அது பரிதாபம் என்போம். அது பூமிக்குரிய வரையறைக்குட்பட்ட கண்ணோட்டம். ஆனால் தம்முடைய பிள்ளைகட்கென கடவுள் வைத்துள்ள திட்டமோ நித்தியமான திட்டம். எபேசியர் 2:10, 1யோவான் 2:17, 2தீமோத்தேயு 4:7,8 பார்க்கவும்.

## பாடம் 5 பூரண சமாதானத்தை அனுபவிப்பது எப்படி?

***மைய வசனம்:*** *"உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்". (ஏசாயா 26:3)*

இஸ்ரவேல் வரலாற்றின் இருண்ட காலத்தின்போது அருளப்பட்ட அற்புதமான வாக்குத்தத்தம் இது. சந்தேகம், பயம், கவலை போன்ற இம்மூன்று எதிரிகளும் நம்மைத் தொடர்ந்து அச்சுறுத்தி வாழ்வின் அழுத்தங்களும், சோர்வும் நம்மைச் சூழ்ந்து பயமுறுத்தும் இன்றைய சூழலுக்கும் இந்த வசனம் ஒரு சிறந்த உதவியாக அமையும். எல்லாம் சுமுகமாகச் செல்லும்போதும், வானம் பிரகாசமாக இருக்கும்போதும் நம் மைய வசனத்தை மேலோட்டமாக வாசித்து ஏற்றுக் கொள்வது எளிது. ஆனால் சோதனை மேகங்கள் சூழ்ந்து, ஏமாற்றம், பயம், தோல்வி போன்ற மேகங்கள் நம் வானத்தில் தோன்றி, சூரியனை மறைக்கும் வேளை வரும். அப்பொழுது இந்த வசனங்கள் எவ்வளவு மதிப்புள்ளதாக நமக்குத் தோன்றும் தெரியுமா! நாம் நம்முடைய பூமிக்குரிய சரீரத்தில் இருக்கும்போது, துன்பங்களில் இருந்து விடுதலைபெற்று வாழமுடியும் என்ற வாக்குறுதியை வேதாகமத்தில் நாம் காணமுடியாது. ஆனால் அதைவிட மிகவும் மேலான வாக்குறுதி நமக்கு உண்டு. அதாவது துன்பங்களின் நடுவே சமாதானம் கிட்டும் என்கிற வாக்குறுதியே அது. உள்ளான சமாதானம் நம்மிடம் இல்லாதபோது, துன்பங்களிலிருந்து வெளிப்பிரகாரமான விடுதலை பெற்று என்ன பயன்? யுத்தம் மும்முரமாக நடக்கும்போது, புயல் அதிவேகமாக வீசும்போது, இதின் நடுவே நம்பிக்கையுள்ள ஆத்துமா அனுபவிக்கும் உள்ளான சமாதானம், ஆழ்ந்த அமைதி, உறுதியான நம்பிக்கை என்பவை எவ்வளவு அற்புதமானவை!

### 1. நமக்கு அருளப்படும் இந்தப் பெரிய ஆசீர்வாதம் எது?

இது பூரண சமாதானம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் பூரண சமாதானம் என்பது என்ன? இதை விளக்க முடியுமா? ஆம். இது நமது ஆத்துமாவுக்குள் இருக்கும் சலனமற்ற அமைதியான நிலை. நமக்குள்ளே இருக்கும் சரீர ஆரோக்கியத்தைக் குறிப்பது. பூரண சமாதானத்தால் நிறைந்திருப்பது என்பது, ஆவிக்குரிய ஆரோக்கி யத்தையும், ஆத்துமாவில் வேண்டாதவற்றையெல்லாம் நீக்கிவிட்ட நிலையையும் குறிப்பதாகும். சமாதானத்தால் நிறைந்திருக்கும் ஆத்துமாவில் பொறாமை, பகை, பேராசை, அடங்காச்சினம், சுயம், பெருமை, ஆத்திரம் போன்றவற்றிற்கு இட மில்லை. இவை யாவும் முரண்பட்ட பண்புகள். இது கடவுள் நமக்கு அருளும் சமாதானம், அவருடைய கிருபையினால் நாம் அனுபவிக்கும் இந்தச் சமாதானம் அனுபவபூர்வமானது. இது அவர் கட்டளை யிட்ட உடனே நிற்கும் புயலுக்குப் பின்னான அமைதியேயன்றி வேறல்ல. மாற்கு 4:39 பார்க்கவும். கடவுள், தாம் அருளும் சமாதானத்தைப் 'பூரண சமாதானம்' என்று அழைக்கிறார். இது எந்த வகையில் பூரணமானது?

**(1). இது பண்பில் பூரணமானது.** சமாதானம் அல்லது அமைதி என்பவைகளில் இது பூரணமானது. பூரணமற்ற சமாதானமும் உண்டு. எடுத்துக்காட்டாக அறியாமையின் சமாதானத்தைக் கூறலாம். எல்லாம் நன்றாக போய் கொண்டிருக்கிறது என்று கற்பனை செய்து கொண்டிருப்போம். ஆனால் உண்மையாகவே, நாம் கண்களைத் திறந்து பார்த்தால் அவை யாவும் நன்றாக நடக்கவில்லை என்று அறிவோம்(எரேமியா 6:14). தேங்கி நிற்கும் சமாதானம் என்பது இன்னொரு பூரணமற்ற சமாதானம். குட்டையில் இருக்கும் தண்ணீர் சலனமற்று, அமைதியுடன் இருக்கலாம். ஆனால் அதின் அடியிலோ, பாசியும், அழுகிப்போன அழுக்கும் இருக்கிறது. மக்களின் பெரும் பாலானோர் இப்படிப்பட்ட சமாதானத்தை அறிந்தவர்கள். ஒருநாள் கடவுளின் நியாயத்தீர்ப்பு என்னும் அதிர்ச்சி அவர்களது குட்டையைக் கலக்கும். அப்போதுதான் அவர்கள் தங்களுக்கு மெய்யான சமாதானம் இல்லையென்று அறிவார்கள். இன்னொரு வகையான பூரணமற்ற சமாதானம் சார்புச் சமாதானம் எனலாம். எதையாகிலும், எவரையாகிலும் சார்ந்திருப்பதினால் கிட்டும் சமாதானம் இது. நம்பியிருந்த அந்தப் பொருள் நமக்கு உதவாமற் போகும்போது, அல்லது அந்த மனிதர் கைவிட்டாலோ, இறந்து விட்டாலோ அந்தச் சமாதானம் இராது. அவர்கள் நம்பின சமாதானம் எங்கே போயிற்று? பூரணமற்ற இம்மூன்று சமாதானங்களைக் காட்டிலும் மேலானது கடவுள் அருளும் பூரண சமாதானம்.

**(2). இது அளவில் பூரணமானது** எப்படியெனில் இது நமக்குப் போதுமான அளவு அளிக்கப்படுகிறது. நம்முடைய தேவைக்கேற்பக் கொடுக்கப்படுகிறது. பூரண சமாதானம் என்பது நிறைவான சமாதானம். இதை இரட்டிப்பான சமாதானம் எனவும் கூறலாம். ஏனெனில் பிலிப்பியர் 4:7 இல் இந்த இரட்டிப்பான சமாதானம் இருதயத்திலும், சிந்தையிலும் இருப்பது என்று கொள்கிறோம். அப்படிப்பட்ட சமாதானமே நமக்குத் தேவை.

அது நமது சிந்தைக்கு அரணாக இருதயத்தை அமைதிப்படுத்தும். இந்த இரட்டைச் சமாதானம் என்பது இருவகையானது. முதலாவது கடவுளுடன் சமாதானம் (ரோமர் 5:1) இரண்டாவது கடவுளின் சமாதானம் (பிலிப்பியர் 4:7)

**(3). இது உறுதியில் மாறாதது.** இது நிரந்தரமானது. இது அவ்வப்போது வந்து போவதல்ல. இந்த வாக்குத்தத்தம் "காத்துக் கொள்வீர்" என்று உறுதி கூறுகிறது. சங்கீதம் 121:4 ஒப்பிட்டுப் படிக்கவும்.

**2. இந்தப் பூரண சமாதானம் நம்மிடம் வருவதெப்படி?**

**(1). கிறிஸ்து இயேசுவின் மூலம்.** பிலிப்பியர் 4:7 திரும்பப் படிக்கவும். இந்த தேவ சமாதானம் நமது உள்ளங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்ப் பாய்கிறதென்பதைக் கவனிக்கவும். நமக்குள்ளே இருக்கும் இந்தச் சமாதானம் கிறிஸ்தவனுக்கு மட்டுமே சொந்தமானது கிறிஸ்துவின் செய்து முடித்த இரட்சிப்பின் கிரியையைச் சார்ந்திராத எவருக்கும், கிறிஸ்துவை தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளாத எவருக்கும் சமாதானமிராது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார்" (கொலோசெயர் 1:20)

**(2). பரிசுத்த ஆவியானவர் மூலம்.** கல்வாரிச் சிலுவையிலே ஆண்டவர் இயேசுகிறிஸ்து சமாதானத்தைச் சம்பாதித்தார். அந்தச் சமாதானம் அவர் மூலமாய் நமக்குள் பாய்கிறது. ஆனால் அது பரிசுத்த ஆவியானவராலே நம்முடைய இருதயங்களிலேயும், சிந்தைகளிலேயும் அனுப்பப்படுகிறது -கலாத்தியர் 5:22, பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்க்கையை ஆளுகை செய்யும்போது, இந்த அற்புதமான கனியை அவர் நம்மிலே உருவாக்குகிறார்.

**(3). அவரது வார்த்தை மூலம்.** சங்கீதம் 119:165 இல் கூறப்பட்டுள்ள ஒப்பற்ற வாக்குத்தத்தத்தைப் பாருங்கள். பொருட்களும், மக்களும் நம்மை அடிக்கடி தொந்தரவு செய்யலாம்., நம்மை இடறிவிழச் செய்யலாம். ஆனால் இங்கு கடவுளின் வார்த்தையை நேசித்து, தியானிப்போருக்குக் கிட்டும் பூரண சமாதானத்தைக் குறித்த வாக்குத்தத்தத்தைக் காண்கிறோம்.

**(4). கீழ்ப்படிவதின்மூலம்.** லேவியராகமம் 26:3-6வரை வாசித்து அதிலே கூறப்படும் 'செய்தால்' என்கிற வார்த்தையைக் கவனித்துப் பாருங்கள். நாம் அவரது வார்த்தையின்படி நடந்தால், அவரது கட்டளைகட்குக் கீழ்ப்படிந்தால் கடவுள் நமது உள்ளங்களைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வதாக வாக்குறுதியளித்துள்ளார். நாம் நம்முடைய பங்கைச் செய்தால் கடவுள் தமது பங்கைத் தவறாது செய்வார்.

**(5). அதிகமான துதி, ஜெபத்தின் மூலம்.** பிலிப்பியர் 4:7 இல் கூறப்பட்ட வாக்குத்தத்தம், வசனம் 6 இல் கூறப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றும்போதுதான் தொடரும் என்பதை மறக்க வேண்டாம்.

**3. நமக்குப் பூரணமான சமாதானம் கிட்ட இரு நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன.**

கடவுள், பூரணச் சமாதானத்துடன் யாரைக் காத்துக்கொள்வார்? (1). முதலாவது அவரை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன். (2). இரண்டாவது அவரை நம்பியிருக்கிறவன். இந்த இரண்டு காரியங்களும் விசுவாசத்தைக் குறிப்பன. ஆனால் ஒன்று மூளையில் நிகழ்வனவற்றைச் சார்ந்தது. மற்றொன்று இருதயத்தைச் சார்ந்தது எனலாம். இதிலே என்ன வித்தியாசம் உண்டு? நம்முடைய மூளையில் நாம் ஏற்றுக் கொள்கிறோம், ஆனால் இருதயத்தில்தான் நம்புகிறோம். நம்முடைய தலையிலே (மூளையிலே) கடவுள் சமாதானத்தின் காரணர் என்றும், சமாதானத்தைக் கொடுப்பவரென்றும் அறிகிறோம். ஆனால் அவர் வாக்களித்ததை அருளுவாரென்று நம்முடைய இருதயத்திலே நாம் அவரை நம்புகிறோம்.

முடிவுரையாக ஒரு வார்த்தை. ஏசாயா 26:3 ஐ கவனித்துப் பாருங்கள். இந்த வசனம் கடவுளில் ஆரம்பித்து, கடவுளில் முடிவடைகிறது. 'உம்மை' என்று ஆரம்பித்து, 'காத்துக்கொள்வீர்' என்று முடிகிறது. 'நம்புகிற உள்ளம்' இதற்கு நடுவில் வருகின்றது. பூரண சமாதானம் இதற்கு நடுவில் வருகிறது. ஆண்டவர் நமக்குள்ளே இருப்பதே பூரண சமாதானம். இது ஒரு அனுபவம் அல்ல, கொள்கை அல்ல, ஆண்டவர்தாமே பூரண சமாதானம்.

## பாடம் 6 **நின்று நிலவும் மகிழ்ச்சியின் இரகசியம் யாது?**

**மையவசனம்:** *" என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்''. (யோவான் 15:11)*

இந்த வார்த்தைகளைக் கூறியவர் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவர் இதை எப்போது கூறினார் என்பதை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இன்னும் கொஞ்ச நேரத்தில் இருண்ட கெத்சமனே அனுபவத்திற்குள் அவர் செல்வதற்கு முன்பு, அவரைக் குற்றம் சாட்டுகிறவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள், கேலி, பரியாசங்களை எதிர்நோக்கும் முன்பு அவர் இதைக் கூறினார். சந்தோஷம், மகிழ்ச்சி பற்றிப் பேசுவதற்கு உகந்த நேரமல்ல இது. இருப்பினும் அவர் கல்வாரி வேதனைகளை ஏற்பதற்கு முன் "என்னுடைய சந்தோஷம்" என்று கூறினார். வேதாகமத்தில் ஆராய்ந்து பார்த்தால், இந்த ஓரிடத்தில்தான் ஆண்டவர் சந்தோஷத்தைப்பற்றிப் பேசியுள்ளார். மிகுந்த துன்பமும், சோதனையும் ஏற்படும் வேளையில் ஆண்டவரின் மகிழ்ச்சி தொடருகிறது என்பது ஒப்பற்ற செயலாகும். ஒவ்வொரு விசுவாசிக்கும் (நமக்கு) ஆண்டவர் கொடுக்க விருப்பப்படுவது அவரது சந்தோஷத்தையே. இது உலகம் கொடுக்கும் சந்தோஷத்தை விட வேறுபட்டது. இது நம்முடையதாகவே இருக்கவேண்டும். "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்." என்கிறார் ஆண்டவர்!

**1. கிறிஸ்தவ மகிழ்ச்சி ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் நிலைத்திருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று.**

துக்கம், சோர்வு, தோல்வி போன்றவை அடிக்கடி நம்மைத் தாக்குவதுண்டு. கிறிஸ்தவர்களாகிய நாமோ எல்லாவற்றிலேயும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். பிலிப்பியர் 4:4; 1தெசலோனிக்கேயர் 5:16 பார்க்க. நம்முடைய கிறிஸ்தவ அனுபவங்கள் யாவற்றிலும் நாம் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். மனமாற்றத்தின்போது மகிழ்ச்சி (அப்போஸ்தலர் 8:39); கடவுளின் வார்த்தையைப் படிக்கும்போது மகிழ்ச்சி (எரேமியா 15:16); ஜெபிக்கும்போது மகிழ்ச்சி (யோவான் 16:24); சோதனைகள் நடுவே மகிழ்ச்சி (யாக்கோபு 1:3); பாடுகளில் மகிழ்ச்சி (அப்போஸ்தலர் 5:41); ஊழியத்திலே மகிழ்ச்சி (2கொரிந்தியர் 1:24); வாழ்வின் பயணத்தின் முடிவில் மகிழ்ச்சி (எபிரெயர் 12:22). நாம் ஆண்டவரை நேசித்து, அவருக்குச் சொந்தமாக இருந்தால், நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்போம்.

**2. கிறிஸ்தவர்களாகிய நாம் அனுபவிக்கும் கிறிஸ்தவ மகிழ்ச்சி எப்படிப்பட்டது?**

**(1). இது கிறிஸ்துவின் மகிழ்ச்சி:** "என் சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும்.." (யோவான் 15:11) இங்கு, "என் சந்தோஷம்", "உங்களில்" என்றுள்ளது. ஒரு மனிதனுக்குள் இருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஜீவனே, கிறிஸ்தவனின் ஜீவன். கலாத்தியர் 2:20.கொலோசெயர் 3:4 பார்க்க. கிறிஸ்தவனுக்குள் இருக்கும் கிறிஸ்துவின் மகிழ்ச்சியே கிறிஸ்தவ மகிழ்ச்சி. அவராலேயன்றி வேறு எங்கும் கிட்டாத, நமக்குள்ளே ஆழ்ந்து கிடக்கும், நின்று நிலவும் மகிழ்ச்சியே அது எனலாம். வேறு இடங்களில் கிடைக்கும் பல்வேறு வகையான மகிழ்ச்சி உண்டு. ஆனால் அவரது மகிழ்ச்சி, அவரிடம் மட்டுமே கிட்டும்.

**(2). நிறைவான மகிழ்ச்சி:** "உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும்...." (யோவான் 15:11) சந்தோஷத்திற்கும், நிறைவான சந்தோஷத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு. பாத்திரத்தில் பாதிவரை நிறைந்திருப்பது அல்லது முழுவதுமாக நிறைந்திருப்பது போல. நாம் தொடர்ந்து முழுமையான மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டுமென்பதே ஆண்டவரின் விருப்பம் - சங்கீதம் 16:11; யோவான் 17:13; 1பேதுரு 1:8

**(3). இது நின்றுநிலவும் மகிழ்ச்சி:** "என் சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும்...." (1யோவான் 15:11) இங்குள்ள "நிலைத்திரு......" என்கிற வார்த்தையைக் கவனியுங்கள். வசனங்கள் 4,5,6,7,9,10களிலும் 'நிலைத்திரு' என்கிற வார்த்தை மீண்டும் மீண்டும் வருகின்றது. நாம் அவரில் நிலைத்திருத்தல், அவர் நம்மில் நிலைத்திருத்தல் என்பது அவரது மகிழ்ச்சி எப்போதும் நமக்குள்ளே நிலைத்து இருக்கின்றதென்று பொருள். நமது மகிழ்ச்சியென்பது அவ்வப்போது வந்து போகும் ஒன்றல்ல. இது நிரந்தரமான ஒன்று. சூழ்நிலைகளால் பாதிக்கப்படாத மகிழ்ச்சி இது எனலாம். யோவான் 16:22 இல் ஆண்டவர் தம்முடைய சீடர்களுக்குக்

கூறியுள்ளதைக் கவனியுங்கள். ஆண்டவரைப் பின்பற்றிய முதல் சீடர்கள் அநேக துன்பங்கள், சோதனைகள் நடுவே சென்றனர். ஆனால் அவைகள் ஏதும் அவர் கொடுத்த மகிழ்ச்சியை எடுத்துப்போட முடியாது என்றே அவர் சொன்னார்.

நின்று நிலவும் கிறிஸ்தவ மகிழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக கீழே மூன்று நிகழ்ச்சிகள் உள்ளன. இவை வெளியிலுள்ள சூழ்நிலைகள் எதுவும் நமக்குள்ளேயுள்ள கிறிஸ்துவின் மகிழ்ச்சியைப் பாதிக்காது என்பதைக் காட்டுகின்றன.

1). **யோவான் 15:11** - சிலுவைப் பாடுகட்கு முன்பு, நமது ஆண்டவர் இந்த அனுபவத்திற்குள் சென்றார் என்பதை நாம் பார்க்கிறோம். யோவான் 17:13ஐ படித்து ஒப்பிட்டு நோக்குக.

2). **லூக்கா 10:20** - நிரந்தரமற்ற, பூமிக்குரிய காரியங்களை உங்கள் மகிழ்ச்சிச் சார்ந்திராமல், நிலைத்து நிற்கும் பரலோக காரியங்களைச் சார்ந்திருக்கட்டும் என்ற அர்த்தத்தில்தான் இதை ஆண்டவர் கூறியிருக்க வேண்டும்.

3). **அப்போஸ்தலர் 16:25** பவுலும், சீலாவும் பெரிய துன்பத்தின் நடுவே, கிறிஸ்துவின் சந்தோஷத்தினால் நிறைந்திருந்தபடியால், அது நள்ளிரவிலே அவர்களை துதிபாடத் தூண்டிற்று - ஏசாயா 61:3; 2கொரிந்தியர் 8:2, எபிரெயர் 10:34 படிக்கவும்.

கிறிஸ்தவ மகிழ்ச்சி என்பது மோசமான சூழ்நிலைகளால் பாதிக்கப்படாதது மட்டுமல்ல, பாடுகளிலும், சோதனைகளிலும் சென்றுவர ஊக்கமளிக்கிறது என்பது குறிப்பிடத் தகுந்த அற்புதமான உண்மையாம். யாக்கோபு 1:2 படிக்கவும்.

**3. நாம் இந்த மகிழ்ச்சியைப் பெறுவது எப்படி?**

**(1). அவரைச் சொந்தமாகக் கொள்வதன்மூலம்.** இத்தகைய நிலைத்திருக்கும் மகிழ்ச்சி, கிறிஸ்துவினுடையது என்றால், நாம் அவரைச் சொந்தமாக்கிக் கொண்டால், அதுவும் நமதாகிவிடும் அல்லவா!அப்போஸ்தலர் 8:8இல் "அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று" என்று வாசிக்கிறோம். இது எதனால் ஏற்பட்டது? வசனம் 5இல் பதில் காணலாம்! வசனம் 35லும் காணலாம். நாம் அவரது சந்தோஷத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள முதலாவது அவரைச் சொந்தமாக்கிக்க கொள்ள வேண்டும். யோவான் 17:13 படிக்கவும்.

**(2). அவரது வார்த்தையைப் படிப்பதன் மூலம்.** நாம் வேதாகமத்தை வாசித்து, சத்தியத்தை அறியும்போது, மிகுந்த சந்தோஷத்தை அடைகிறோம். 1யோவான் 1:4 படிக்கவும். ஆண்டவரோடு நாம் ஐக்கியம் கொள்ளும்போது, அவர் நம்மோடு பேசுவார். அப்பொழுது நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியும் (லூக்கா 24:32)

**(3). அவருக்குக் கீழ்ப்படிவதன் மூலம்.** லூக்கா 10:21 படியுங்கள். அதிலே நமக்கு இரண்டு காரியங்கள் கூறப்பட்டுள்ளன. முதலாவது இயேசு களிகூர்ந்தாரென்று காண்கிறோம். இரண்டாவதாக அவர் பிதாவின் சித்தத்திற்கு முழுமையாக ஒப்படைத்தவராக இருந்தாரென்றும் காண்கிறோம். பரலோகத்திலுள்ள அவரது பிதாவுக்கு முழுமையாகத் தொடர்ந்து ஒப்புவித்த மகிழ்ச்சியே அவரது மகிழ்ச்சி. இதனையே கயான் அம்மையார், "ஏற்றுக்கொண்ட துக்கத்தினால் கிட்டும் ஆசீர்வாதம்" என்கிறார். நாம் அவரது கரத்திலிருந்து பாடுகளை ஏற்றுக்கொள்ளும்போது, மெய்யாகவே நம்முடைய சந்தோஷம் நிறைவாகும்.

**(4). பரிசுத்த ஆவியானவர் மூலம்.** லூக்கா 10:21 இல் இயேசு, ஆவியானவராலே களிகூர்ந்தாரென்று காண்கிறோம். "அந்த நேரத்திலே இயேசு ஆவியானவராலே ஆட்கொள்ளப்பட்டு மகிழ்ச்சியால் நிறைந்திருந்தார்" என ஒருவர் மொழிபெயர்த்துள்ளார். ரோமர் 15:13ஐ படித்து ஒப்பிட்டு நோக்குக.

இந்த வேளையிலே ஆண்டவர் இயேசு உயர்த்தப்பட்டவராக பூரண மனிதனாக, பூரண மனித சரீரத்தோடு, பரலோகத்திலிருக்கிறார். அவரது சந்தோஷம் நம்மில் பூரணமாக வேண்டும் என்பதே அவரது வாஞ்சை. அவர் அங்கே இருக்கிறார், நாம் இங்கே இருக்கிறோம். இது எவ்வாறு நடக்கும்? இதற்குப் பதில்: பரிசுத்த ஆவியானவர் மூலம் நடக்கும் என்பதே "ஆவியின் கனியோ ...... சந்தோஷம்" கலாத்தியர் 5:22ஐ அப்போஸ்தலர் 13:52, எபேசியர் 5:18 உடன் ஒப்பிடுக.

## பாடம் 7 **துன்பம் வரும்போது என்ன செய்யவேண்டும்?**

***மைய வசனம்**: ''தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்...........தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்''. (1சாமுவேல் 30:6)*

இந்தப் பாடம் 1சாமுவேல் 30:1-6 வரையுள்ள வேதபகுதியின் அடிப்படையில் உள்ளது. இதில் தாவீது தன் வாழ்வில் மிகுந்த துயரத்திலும், துன்பத்திலும் இருந்தபோது என்ன செய்தார்? ஆண்டவர் அவரை எவ்வாறு அற்புதமாக வழி நடத்தினார்? என்பதைக் காணலாம். துன்பம் யாவருக்கும் வரும் (யோபு 5:7; 14:1). ஒரு வேளை நீங்களுங்கூட துயரத்தின் பாதையில் போய்க் கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் இந்தப்பாடம் உங்களுக்கு உதவும். தற்போது நீங்கள் இக்கட்டின் நடுவே இல்லாவிடிலும், ஒரு வேளை எதிர்காலத்தில் துன்பத்தினூடே செல்ல வேண்டிய சூழ்நிலை வந்தால் இது உதவும். துயரங்கள் நமக்கு எப்போது வேண்டுமானாலும் வரலாம். அப்படி வரும்போது என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகக் கூறப்படும் ஆலோசனை இது. 1சாமுவேல் 30:1-6 வரையுள்ள பகுதியைப் பார்க்கலாம்.

### 1. தாவீதின் துயரம் உண்மையானது

இந்த வசனங்களை நாம் படிக்கும்போது, அது ஏதோ கற்பனை செய்து எழுதப்பட்டது அல்ல. உங்கள் துயரத்தை இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது எப்படிப்பட்டது? உங்கள் உடமைகள் கொள்ளையாடப் பட்டதா? (வசனம் 1) உங்களுக்கு அருமையானவர்களைப் பறி கொடுத்து விட்டீர்களா? (வசனம் 3) அழுகிறதற்குப் பெலனில்லாமல் போகுமட்டும் அழுது விட்டீர்களா? (வசனம் 4) நம்முடைய துயரங்கள் எவ்வளவு உண்மையானவை! அவை கற்பனை செய்யப்பட்டவை அல்ல. நாம் உணர்ச்சிமிகும்போது, பாரம் நீங்க மனம்விட்டுக் கதறி அழுவது தவறல்ல (யோவான் 11:35)

### 2. கடவுளுடைய பிள்ளையாக இருந்த தாவீதுக்கும்கூட கஷ்டம் வந்தது.

நாம் முக்கியமாக இதைக் கவனிக்கவேண்டும். ஆண்டவர் தாவீதை நேசித்தார். அப்போஸ்தலர் 13:22, இருப்பினும் தாவீது இந்த இக்கட்டான சூழ்நிலையில் சிக்கியிருந்தார். நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதினால் நமக்குத் துயரங்கள் வரவே வராது என்று எதிர்பார்க்க முடியாது. நம்முடைய ஆண்டவர் எவ்வளவாய்ப் பாடுபட்டார் (எபிரெயர் 13:12) அப்போஸ்தலனாகிய பவுலுக்கு வந்த துன்பங்கள் எத்தனை! (2கொரிந்தியர் 11:23-30) பாடுகள், சோதனைகளின் கசப்பை ருசிக்காத கடவுளின் பிள்ளைகள் யாரையாகிலும் நீங்கள் கண்டதுண்டா? நம் வாழ்வில் துயரம் குறுக்கிடும் போது, கடவுள் நம்மை நேசிக்கவில்லையென்று நினைக்கக் கூடாது. 1பேதுரு 4:12 படிக்கவும்.

### 3. ஆண்டவர் தாவீதுக்குத் துயரத்தை அனுமதித்தார்.

அவரே இதை நடக்க அனுமதித்தார். யோசேப்பின் வாழ்வில் இன்னல் வர அனுமதித்தது போலவே (ஆதியாகமம் 39:20) தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரின் வாழ்விலும் அனுமதிக்கிறார். எரேமியா (எரேமியா 37:15) பேதுரு (அப்போஸ்தலர் 12:5,6), மோட்சப் பிரயாணம் காவியத்தை எழுதின ஜான் பன்யன் போன்று இன்னும் அநேக கடவுளின் ஊழியர்களும் இக்கட்டின் வழியில் நடந்து வந்ததைக் காணலாம். யோபு துயரத்தில் உழன்றபோது, ஆண்டவர் மேல் அவருக்கு இருந்த விசுவாசம் உறுதிப்பட்டது. எல்லாம் வல்லவர் கடவுள். ஆகவே எதுவும் நடக்காது தடுக்கவும் அவரால் முடியும். தடுக்காமல் இருக்கவும் முடியும். யாவும் கடவுளின் கிருபையான அனுமதியின் பேரிலேதான் நடக்கிறது என்பதை உணர்ந்த யோபு கூறியுள்ளதை யோபு 13:15 இல் காணலாம். ஆண்டவரால் யோபுவின் துயரங்களைத் தடுத்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. ஏன் தெரியுமா? நம் வாழ்வில் ஆண்டவர் செய்வதை, 'ஏன்?' 'எதற்கு?' என்று கேள்வி கேட்காமல் அவரை முழுமையாக நம்பவேண்டும் என்ற பெரிய பாடத்தை நாம் கற்றுக் கொள்வதற்காகவே அவர் இவ்வாறு செய்கிறார். ரோமர் 8:28 நிரூபிக்கப்பட்டுள்ளது!

### 4. தாவீதுக்கு வந்த துயரம், அவர் செய்த தவறுக்குப் பலனாக வந்தது.

தாவீது பின்வாங்கிய நிலையிலிருந்தார். தவறு செய்யும் கடவுளின் பிள்ளைகள் எவரும் கடவுளின் சிட்சைக்குத் தப்ப முடியாது. அவர் தம்மைச் சீர்செய்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே தாவீதின் வாழ்க்கையில் கடவுள் துயரங்களை அனுமதித்தார் என்பது தெளிவாகிறது. சங்கீதம் 55:19ஐ உபாகமம் 8:2,3; எபிரெயர் 12:6 உடன்

ஒப்பிட்டுக் காண்க. அதே முதலாம் சாமுவேல் புத்தகத்தில் சவுலின் வரலாறு கூறப்பட்டுள்ளது. தாவீதைப் போன்றே அவரும் கடவுளின் அதிகாரத்தைத் தள்ளிவிட்டார். ஆனால் இந்த இருவரின் வாழ்விலும் நேரிட்டது வித்தியாசமானது. ஒன்று நியாயத்தீர்ப்பு, மற்றது சிட்சை. சவுல் செய்த தவறுக்கென அவரது வாழ்க்கையும், பதவியும் முடிவுக்கு வந்தது. ஆனால் தாவீதுக்கோ சீர்படுத்துவதற்கெனப் பிரம்பு எடுக்கப்பட்டது. இது அழிப்பதற்கு அல்ல. அவரைத் திரும்பக் கொண்டு வருவதற்கேயன்றி, நிரந்தரமாக அவரைத் துரத்தி விடுவதற்கல்ல. அவரை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்கே யன்றி அப்புறப்படுத்துவதற்காகவல்ல. உங்களுடைய தவறினாலே உங்களுக்கு இந்தத் துயரம் நேரிட்டிருக்கலாம். ஆதியாகமம் 42:21 படிக்கவும். “ஆகையால் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது” என்று கூறியுள்ளதைக் கவனிக்கவும். அவரது மகிமைக்கெனவும், எப்பொழுதும் நமது நன்மைக்கெனவும், கடவுள் நம் வாழ்வில் துன்பங்களையும், சோதனைகளையும் அனுப்புகிறார்.

**5. தாவீதின் துயரங்கள் மறைமுகமான ஆசீர்வாதம் எனலாம்.**

“மனைவி, வீடு, நண்பர்கள் யாவும் இழந்தது எப்படி ஆசீர்வாதமாகும்?” என்று நீங்கள் கேட்கலாம். இது மறைமுகமான ஆசீர்வாதம். ஏனெனில் வசனம் 8இல் தாவீது ஆண்டவரிடம் விசாரிப்பதைப் பார்க்கிறோம். எந்தக் காரியமாயினும், அது நம்மை ஆண்டவரிடம் நெருங்கிச்சேர வழி நடத்துமாயின் அது நல்லதுதானே! சங்கீதம் 119:67, எபிரெயர் 12:11 படிக்கவும். நாம் நம்மை முழுமையாக அர்ப்பணம் செய்ய வேண்டும் என்கிற ஒரே காரியத்தையே கடவுள் நம்முடைய வாழ்க்கையில் எதிர்பார்க்கிறார். நாம் அவரையும் அவரது சித்தத்தை யும் நேசித்து, அவரையே முழுமையாக நம்ப வேண்டும் என்று ஆசிக்கிறார்.

தன்னுடைய துயரத்தின் வேளையில் தாவீது என்ன செய்தார்? வசனம் 6 இல், “கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்” என்று காண்கிறோம். தனிப்பட்ட முறையில் ஆண்டவரில் திடப்படுவது நன்று. ஆனால் சில வேளைகளில் நாம் மனிதரின் உதவியை எதிர்பார்க்கிறோம்.

ஆண்டவரில் நாம் திடப்படுவது எப்படி?

**(1). நீங்கள் அவருக்குச் சொந்தமானவர்கள் என்பதை நினைவிற் கொள்க.** “தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்.” தனிப்பட்ட முறையில் அவரோடு கொண்டுள்ள உறவின் நிச்சயத்தைச் சார்ந்திருங்கள்.

**(2). அவரது பழைய கிருபைகளை நினைவுபடுத்துங்கள்.** கடந்த நாட்களில் அவர் உங்களை அற்புதமாக நடத்தின விதம், கொடுத்த ஆசீர்வாதங்கள், கொடுத்த ஈவுகள், பயன்படுத்தினவிதம் (1சாமுவேல் 7:12) போன்ற யாவற்றையும் மறக்கமுடியுமா?

**(3). அவரிடம் திரும்புங்கள்.** பாவத்தை அறிக்கையிடுங்கள்(1யோவான் 1:9) அவரை நோக்கிக் கூப்பிடுங்கள் (சங்கீதம் 34:6) உங்களைத் தாழ்த்தி, விடுதலைக்கென அவரை மட்டும் சார்ந்திருங்கள் (சங்கீதம் 69:17)

**(4). அவரிடம் விசாரியுங்கள்.** (வசனம் 8) இக்கட்டின் நடுவே இருக்கும்போது, என்ன செய்வதென்று அவரிடம் கேட்கவும்.

**(5). அவருக்குக் கீழ்ப்படியுங்கள்** (வசனங்கள் 9,10) “தொடர்ந்து போனான்” என்பதின் மூலம் தாவீது கீழ்ப்படிந்தாரென்று அறிகிறோம்.

**(6). அவரை நம்புங்கள்.** வசனம் 8இன் இறுதியில், வெற்றி கிட்டும் என்று ஆண்டவர் தாவீதுக்கு வாக்களித்தார். கடவுள் தாம் வாக்களித்தபடியே செய்வாரென்று நம்பி தாவீது தொடர்ந்து போனான் (வசனம் 9,10) அவர் நமக்கு வாக்களித்ததை நிறைவேற்றுவாரென்று அவரது வார்த்தையை நம்பி, அவர்மீது நாம் விசுவாசம் வைக்கவேண்டும் என்பதற்காகவே கடவுள் நமக்கென எல்லா வாக்குத்தத்தங்களையும் அருளியுள்ளார். சங்கீதம் 37:5, நீதிமொழிகள் 3:5,6 மத்தேயு 11:28, ரோமர் 8:28, பிலிப்பியர் 4:19.

**(7). அவர் தரும் நன்மைகளை நன்றியோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.** (வசனம் 23) சங்கீதம் 9:9, 27:5, 46:1, 143:11, நாகூம் 1:7

## பாடம் 8 **பிறர்மீது கரிசனை கொள்ளவேண்டும்**

***மைய வசனம்:*** *''அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள். தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்'' (மத்தேயு 14:35,36)*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி அறியாத மக்களுக்கு அவரது அன்பைக் கிரமமாக, தொடர்ந்து பகிர்ந்து கொள்ளாத கிறிஸ்தவன் ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை நடத்த முடியாது. ஆத்துமாக்களைக் குறித்த உண்மையான கரிசனை இல்லாத கிறிஸ்தவன் இதைச் செய்ய முடியாது இழந்துபோன ஆத்துமாக்கள் (லூக்கா 19:10), ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்ட (யோவான் 3:18), தேவ கோபத்திற்குட்பட்ட மக்கள் (யோவான் 3:36) யாவரையும் குறித்த பாரம் வேண்டும். இழந்துபோன மக்களைக் குறித்தக் கரிசனை உங்களுக்குண்டா? ஆத்துமாக்களைக் குறித்தப் பாரம் உண்டா? இரட்சிக்கப்படாத ஆயிரக்கணக்கானோர் உங்களைச் சுற்றியுள்ளனர். உங்களுக்கு அன்பான நண்பர்கள், உறவினர்கள் உண்டு. இவர்களைக் குறித்த கரிசனை உங்களுக்கு உண்டா? எவ்வளவு காலம் அவர்கள் நம்மோடு இருந்திருக்கிறார்கள். ஆண்டவரின் உதவி கொண்டு நாம் அவர்களிடம் இந்த அற்புதமான இரட்சகரைப்பற்றி கூறியிருக்கின்றோமா? இரட்சிக்கப்படாத நமக்கு அருமையானவர்கள், நண்பர்களில் எத்தனை பேர் சங்கீதக்காரன் சங்கீதம் 142:4 இல் கூறுவது போல கூறுகிறார்கள்? மத்தேயு 14:35, 36 படிக்கவும்.

**1. நம்மைச் சுற்றியுள்ள மக்களில் யாரெல்லாம் இரட்சிக்கப்படவேண்டுமென நாம் ஆழ்ந்த கரிசனை கொள்ளவேண்டும் என்பதைச் சற்று விளக்கமாகப் படிக்கலாம்.**

இழந்துபோன மக்களின் மெய்யான தேவை என்ன? இந்த வேதபகுதி நமக்கு என்ன பதில் கூறுகிறது? போன்ற வினாக்களைக் கேட்டால், அதற்குப் பதிலாக மூன்றுவகை மக்களைக் கூறலாம். இக்காலத்திலுங்கூட அவ்வகையான மக்களைக் காணமுடியும்.

**(1). அவர்கள் நோயாளிகளாய் இருந்தனர்** (வசனம் 35) இன்றைய மக்களில் பலர் பக்தியுள்ளவர்களாயும் மரியாதைக்குரியவர்களாயும், மேலான மதிப்புள்ள சன்மார்க்க வாழ்வு நடத்துகிறவர்களாயும் இருக்கின்றனர். ஆனால் இரட்சிக்கப்படாத ஆத்துமாக்கள் யாவரும் பாவ வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் (லூக்கா 5:12) அவர்கள் அதிலிருந்து குணமடையாவிட்டால் அவர்களது எதிர்காலம் இருண்டுவிடும் (ரோமர் 6:23). ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசம் வைப்பதன் மூலம் முழுமையாக குணமடைவதே மனிதனின் முதலாவது தேவையாகும். கடவுளின்றி நம்பிக்கையிழந்து வியாதிப்பட்ட நிலையிலேயே எண்ணற்ற மக்கள் (எபேசியர் 2:12) வாழ்ந்து மடிகின்றனர்.

**(2). அவர்கள் தூரமாய் இருந்தனர்** (வசனம் 35). "அவ்விடத்து மனுஷர்...., சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பினர்" என்று கூறுவதிலிருந்து அவர்கள் தூரத்தில் இருந்தனர் எனத் தெரிகிறது. அவர்கள் பூகோளரீதியாக ஆண்டவரை விட்டுத் தூரமாய் இருந்தனர். ஆனால் இன்றைய மக்கள் பலர் ஆவிக்குரிய நிலையில் அவரை விட்டுத் தூரமாயுள்ளனர். இன்றைய இளைய தலைமுறையினரில் பெரும்பாலானோர் கடவுளை அறியாமலும், அவரது கிருபையின் சுவிசேஷத்தைக் கேளாமலும் வளர்ந்து வருகின்றனர். வேதாகமத்தைக் குறித்தும், சுவிசேஷத்தைக் குறித்தும் அறியாத மக்கள் பலருண்டு. இப்படிப்பட்ட மக்களைக் குறித்த கரிசனை நமக்கு எவ்வளவு அவசியமாகவுள்ளது. மத்தேயு 9:36 படிக்கவும்.

**(3). அவர்கள் உடல் ஊனமுற்றோராயிருந்தனர்** (வசனம் 35). அவர்கள் ஆண்டவரிடம் கொண்டுவரப்பட வேண்டிய நிலையிலிருந்தனர். ஒவ்வொரு பாவியும் பாவத்தினால் ஊனமாக்கப்பட்டுள்ளான். (ரோமர் 5:6) மரியாதைக்குரியவர்கள் என்கிற போர்வைக்குள் இருக்கும் மக்களினுள் பொய், குடி, விபச்சாரம், போதை மருந்து, ஒழுக்கக்கேடு போன்ற பாவங்கள் குடி கொண்டு அவர்களை ஊனப்படுத்தியுள்ளன. இப்படிப் பட்டோரின் தேவையை உணர்ந்து, நாம் அவர்கள் மீது ஆழ்ந்த கரிசனை காட்டுகிறவர்களாக இருக்கவேண்டும்.

**2. மற்ற ஆத்துமாக்களைக் குறித்த கரிசனை எப்பொழுது ஆரம்பமாகின்றது?**

வசனம் 35 இல் இதற்குரிய பதிலைக் காணலாம்."அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து சுற்றுப்புற மெங்கும் செய்தி அனுப்பினர்.." என்று கூறப் பட்டுள்ளது. நடந்ததைப் பார்க்கும் போது எளிதாகத்

தோன்றுகிறது. இந்த மக்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் கண்டார்கள். மற்றவர்களும் அவரைக் காணவேண்டுமென்கிற கரிசனை அவர்களுக்கு உடனே வந்தது. எப்பொழுதும் இப்படித்தான் நடக்கின்றது. அவரை 'அறிவதும்' அவருக்கென 'செல்வதும்' இணைந்தே செல்லும். மெய்யாகவே நாம் அவரை அறிந்திருந்தால் நாம் அவருக்கென புறப்பட்டுச் செல்வோம். நாம் அவருக்கெனப் புறப்பட்டுச் செல்வதைக் கொண்டே, நாம் அவரில் எவ்வளவாய் அன்புகூருகிறோம் என்று அளவிடமுடியும். யோவான் 14:9, பிலிப்பியர் 3:10 ஐ சங்கீதம் 126:6, தானியேல் 11:32 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். இழந்துபோன ஆத்துமாக்களைத் தேடுகிறவர்களுக்குரிய தகுதியும், பலனும் இதுதான். அதாவது அவர்கள் ஆண்டவரைச் சொந்தமாகவும், அந்நியோன்யமாகவும் அறிந்திருக்க வேண்டும் என்பதே முக்கியம். (யோவான் 1:41,49).

**3.. இந்தக் கரிசனை எப்போது வெளிப்படும்?**

நமக்கு ஆத்துமாக்களைக் குறித்த மெய்யான பாரம் இருக்குமாயின், மக்களது இரட்சிப்பைக் குறித்த வாஞ்சை இருக்குமாயின், நாம் எவ்வாறு செயல்படுவோம்? "அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து.." செய்த காரியங்கள் மூன்றுண்டு. அவற்றை வசனங்கள் 35,36 இல் காணலாம்.

(1). **அவர்கள் தேடினார்கள்**(வசனம் 35) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் குணமளிக்கும் இரட்சிப்பின் தொடுதல் எவருக்கெல்லாம் தேவையோ, அப்படிப்பட்டவர்களைத் தேடிச் சுற்றுப்புறமெங்கும் அலைந்தனர். அவ்வட்டாரத்திலுள்ள தேவையிலுள்ள ஆத்துமாக்களை அவர்கள் தேடினர். இதுவே ஆண்டவர் நமக்குக் கொடுத்துள்ள கட்டளை. (மாற்கு 16:15) மத்திய ஆப்பிரிக்காவிலிருந்த அருட்பணியாளர்கட்கு சி.டி.ஸ்டட் என்ற ஊழியர் கொடுத்த ஆலோசனை இதுதான். "உங்களுடைய பெரிய வட்டாரம் முழுவதும் சென்று முதலாவது எளிமையான சுவிசேஷத்தைக் கூறுங்கள், அப்பொழுது ஆத்துமாக்கள் இரட்சிப்படைய நல்ல வாய்ப்பு இருப்பதைக் காணலாம். பின்பு ஒவ்வொரு ஆத்துமாவும் இரட்சிப்பைக் கண்டு கொள்வதைப் பாருங்கள்".

(2). **அவர்கள் கொண்டு வந்தார்கள்**(வசனம் 35) "அவரிடத்தில் கொண்டுவந்து..." என்கிற வார்த்தைகள் இந்தப் பாடத்தில் மிக முக்கியமானது. நாம் மற்றவர்களைக் கிறிஸ்துவுக்கென ஆதாயப்படுத்துவதில் வெற்றியுள்ளவர்களாக இருக்க வேண்டுமாயின் நம்மைப் புதுப்பிக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கக் காணலாம். நாம் அவர்களிடம் செல்வது முக்கியமானதுதான். ஆனால் இழந்து போன மக்களிடம் வெறுமனே செல்வதோடு, மீட்புப் பணி முடிந்து விடாது. ஆத்துமாக்கள் கிறிஸ்துவினிடம் கொண்டுவரப்படவேண்டும். மீன் பிடிக்கிறவன் மீன் பிடிக்கப் போவதில் மட்டும் திருப்தியடைந்துவிடமாட்டான். அவன் மீன்களைப் பிடிக்கும் போது தான் திருப்தியடைவான். நீங்களும், நானும் இரட்சகரின் அன்பைப் பிறருக்குச் சொல்வதோடு திருப்தியடைந்துவிடக்கூடாது. நாம் அவர்களை அவரிடம் கொண்டு வருவதற்கான கிருபையைத் தேட வேண்டும்.

(3). **அவரை வேண்டிக் கொண்டார்கள்** (வசனம் 36) தாங்கள் கொண்டு வந்த மக்களைக் குணமாக்க வேண்டுமென்று அவர்கள் அவரிடம் வேண்டினர். அதாவது அவர்கள் ஜெபித்தார்களென்றும் கூறலாம். ஆத்துமாக்களைக் குறித்த உண்மையான பாரம் இருக்குமாயின் அது அவர்களது இரட்சிப்பிற்காக இடைவிடாது ஜெபிப்பதின் மூலம் எளிதாக வெளிப்படும். நாம் அவருக்கென யாரையெல்லாம் தேடி, ஆதாயப்படுத்த வேண்டுமென்பதை கடவுள் நமக்கு நாம் ஜெபிக்கும்போது வெளிப்படுத்துவார். ஜெபிப்பதின் மூலம், பரிசுத்த ஆவியானவரும் நாம் அவர்களை ஆதாயப்படுத்தும் வேலையில் நம்மை அவரது வல்லமையின் வாய்க்கால்களாக மாற்றுகிறார்.

**4. இந்தக் கரிசனை எப்போது செயலாற்றத் தொடங்குகிறது?**வசனம் 35 இல் இதற்குரிய பதிலை "அவ்விடத்து மனுஷர்.... சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி ......"என்ற வார்த்தைகள் மூலம் காணலாம். தங்களுடைய சொந்த மக்களுக்கு அவர்கள் நற்செய்திப் பணியாளர்களாக மாறினர். நாம் ஆத்துமாக்களைக் குறித்துப் பாரப்படும்போது, நம்மைச் சுற்றி வாழும் மக்களின் இரட்சிப்பைக் குறித்து பாரமடைவோம். கரிசனை கொள்வோம் என்பது உறுதி. முன்பு 'எருசலேமிலே' இதைத் தொடங்க வேண்டும் (அப்போஸ்தலர் 1:8).

## பாடம் 9 **நம்முடைய மேன்மை யாவும் ஆண்டவர் இயேசுவுக்கே**

***மைய வசனம்***: *"....ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.". (மாற்கு 14:3)*

நம் உள்ளத்தைத் தொடும் நிகழ்ச்சி ஒன்றை நாம் மாற்கு 14:3-9 வரையுள்ள பகுதியில் காணலாம். தான் பெற்ற ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்தும் விதமாக இரட்சகருக்கு, சீமோன் ஒரு விருந்து கொடுத்தான். இயேசு வோடு அவரது சீடர்களும், மரியாளும், மார்த்தாளும், லாசருவும், அவ்விருந்திலே கலந்து கொண்டனர். திடீரென மரியாள் ஆண்டவரின் பக்கமாகத் திரும்பினாள். அவளது கையிலே விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணி (குப்பி) இருந்தது. அங்கிருந்த யாவரும் ஆச்சரியப்படும்படியாக அவள் அதை உடைத்து, நம்முடைய ஆண்டவரின் தலையிலும் (மாற்கு 14:3) அவரது பாதத்திலும் (யோவான் 12:3) ஊற்றி அவரை அபிஷேகித்தாள். அந்தத் தைலமும், அதின் பரணியும் (குப்பியும்) மிகுந்த விலையேறப் பெற்றதாயிருந்தது. மரியாளின் இந்தச் செயல் குறிப்பிடுவது என்ன? தன்னிடத்திலுள்ள மிகவும் மேலானதை அவள், தன் ஆண்டவர் இயேசுவுக்குக் கொடுத்தாள் என்பதைக் காட்டுகிறது. அதுவும் தனக்குண்டான யாவையும் கொடுத்தாள் என்றால் மிகையாகாது!

அந்தக் காலத்தில், ஒவ்வொரு இளம் பெண்ணும் விலையேறப்பெற்ற, அருமையான வாசனைத் தைலத்தைச் செய்து வைத்திருப்பாள். இதை அவள் தான் விரும்பும் ஆண், அவளிடம் வந்து, தன்னை மணந்துகொள்ளும் படி கேட்கும் நாள் வரை வைத்திருப்பாள். அவள் தனது அன்பையும், பக்தியையும் செலுத்த விரும்பினால், அந்த விலையேறப் பெற்ற வாசனைத் தைலத்தை, அது வைக்கப்பட்டிருக்கும் குப்பியை உடைத்து, அவனது கால்களில் ஊற்றிவிடுவாள். அதற்கு என்ன விலை கொடுத்தாள் என்பதல்ல, அவனுக்கு அவள் தன்னிடமுள்ள மிகச் சிறந்த மேன்மையானதைக் கொடுக்கிறாள் என்பதே முக்கியம். இவ்வாறே மரியாள், தன்னை நேசித்து, தனக்காகச் சிலுவையில் மரிக்கப்போகின்ற தன் ஆண்டவருக்கென இதைச் செய்தாள். ஆவிக்குரிய ஆத்ம மணாளனாக மரியாள் அவரை ஏற்றுக் கொண்டபடியால் (ஏசாயா 62:5. ஓசியா 2:19) தன்னிடமுள்ள மேலானதை, தனக்குள்ள எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்து விட்டாள்.

### 1. நம்மால் ஆண்டவர் இயேசுவுக்கு என்ன கொடுக்க இயலும்?

நம்மிடத்தில் விலையேறப் பெற்ற நளததைலம் உள்ள குப்பி(பாட்டில்) இல்லை. அப்படியிருக்க நாம் அவருக்கு எதைக் கொடுப்பது? நாமெல்லாரும் கொடுக்கத் தக்கதான மூன்று காரியங்கள் உண்டு. அவையாவன:

**(1). நமது மேலான அன்பை அவருக்குக் கொடுக்க முடியும்.** மரியாள் செய்த மேலான காரியம் இதுவே! அவள் கொண்டுவந்த தைலமும், அதை வைத்திருந்த பரணியும் அதிக விலையேறப் பெற்றதாக இருப்பினும், அவள், அவருக்கென கொண்டு வந்த பரிசுப் பொருள் அவளது அன்பேயாகும். நாமெல்லாம், நம்முடைய அன்பை அவருக்குக் கொடுக்க முடியும். மற்ற எல்லா வற்றையும்விட அவர் நம்மிடம், எதிர் பார்ப்பது இதுவே. உங்களுடைய மேலான அன்பை அவருக்குக் கொடுத்துள்ளீர்களா? மத்தேயு 10:37 உடன் யோவான் 21:15-17 வரை ஒப்பிடுக.

**(2). நம்முடைய வாழ்நாளின் நல்ல வாலிபத்தை அவருக்குக் கொடுக்க முடியும்.**

தன்னுடைய வாழ்நாளின், இளமையும், துடிப்பும் நிறைந்த முழு வாழ்க்கையைக் கொடுப்பது என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம். அவர் ஒருவரே நமது மேலானவற்றைப் பெற, வலிவும், வனப்புமுள்ள வாலிப நாட்களை ஏற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவரல்லவா! நாம் ஆண்டவருக்குச் சொந்தமானவர்கள் என்று அறிந்த போதிலும், நம்முடைய மேலான பலத்தையும், நேரத்தையும், வரங்களையும் அவருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக நம்மிடமே வைத்துக கொள்ளலாமா?

**(3). நமது தலைசிறந்த தாலந்துகளை அவருக்குக் கொடுக்க இயலும்.** ஒவ்வொருவருக்கும் சில தாலந்துகள் (திறமைகள்) அருளப்பட்டுள்ளன. உங்களுடைய தாலந்துகள் எவை? அவை எதுவாயினும் ஆண்டவர் அதைப் பயன்படுத்த விரும்புகிறார். நீங்கள் அதை அவரது பாதபடியில் வைத்து, அதை முழுமையாக அவருக்கென ஒப்புவித்தால், அவர் மிகவும் அற்புதமான வகையில் பயன்படுத்துவார். "எந்தன் ஜீவன் இயேசுவே" என்கிற அர்ப்பணப் பாடலை நீங்கள் வாசித்துப் பார்த்ததுண்டா? "வேளை, நாட்கள், .

கைகள், கால்கள், உதடுகள், வெள்ளி, பொன், ஞானம், சித்தம்" யாவும் அவருக்கே அர்ப்பணம் என்று கூறுகிறது

**2. ஆண்டவராகிய இயேசுவுக்கு நாம் ஏன் மேன்மையானவற்றை கொடுக்க வேண்டும்?** மீண்டும் இந்த வினாவிற்கும் மூன்று பதில்களைக் கூறலாம்.

**(1). ஏனெனில் அவரே நம் மேன்மையானவற்றைப் பெறத் தகுதி படைத்தவர்.** அவர் யார்? அவர் கடவுளின் நித்திய குமாரன் (யோவான் 1:1,14); மகிமையின் கர்த்தர். (1கொரிந்தியர் 2:8); மனுமக்களின் இரட்சகர் (1தீமோத்தேயு 1:15); நமது இரட்சகர் (கலாத்தியர் 2:20); இப்படிப்பட்ட அவர் நமது மேலானவற்றை மட்டுமல்ல, நமக்குள்ள யாவற்றையும் பெறத் தகுதியுள்ளவரல்லவா!

**(2). ஏனெனில் அவர் தம்முடைய மேலானவற்றை நமக்குக் கொடுத்தவர்.** அவர் தமக்குள்ள யாவற்றையும் நமக்குக் கொடுத்தார். நாம் மீட்கப்படும் பொருட்டாக, அவர் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிலுவையில் சிந்தினார். (1பேதுரு 1:18,19) தன் ஆண்டவர் தனக்காக எல்லாவற்றையும் கொடுத்து விட்டாரென்பதை உணர்ந்த மரியாள், தன்னிடமுள்ள மேலானவற்றை, தனக்கெனவுள்ள யாவற்றையும் தயக்கமின்றிக் கொடுக்க முடிவு செய்தாள். மாற்கு 14:8இல் கல்வாரி அன்பு அவளை நெருக்கி ஏவினதென அறிகிறோம். (2கொரிந்தியர் 5:14)

**(3). நம்முடைய மேலானவற்றை நாம் அவருக்குக் கொடுப்பதின்மூலம் மட்டுமே நாம் அவர் அருளும் மேலானவற்றை அனுபவிக்க முடியும்.** மரியாளின் வாழ்க்கையிலே, இந்த அர்பணிப்பின் வேளை, ஆனந்தம் நிறைந்ததாக இருந்தது. அவள் தன்னிடமுள்ள மேலான ஈவை, தனக்குள்ள யாவற்றையும் ஆண்டவருக்கெனக் கொடுத்ததினால், அது முதல் அவளுக்குள் ஆழ்ந்த மகிழ்ச்சியும் (யோவான் 15:11), என்றென்றும் அவளை விட்டு நீங்காத நித்திய சமாதானமும் (யோவான் 16:33) வந்தடைந்தன. அவருக்கென நாம் கொஞ்சமாகக் கொடுத்தால், நாம் அவருடையதைக் கொஞ்சமாகவே அனுபவிக்க முடியும். ஆனால் நாம் அவருக்கென நமக்குள்ள யாவற்றையும், மேலானவற்றைக் கொடுக்கும்போது அவர் நமக்குச் சொல்லமுடியாத அளவுக்கு விலையேறப்பெற்ற ஈவாகி விடுகிறார். (1பேதுரு 2:7)

**3. நம்முடைய மேலானவற்றை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கும்போது விளைவது என்ன?**

**(1). மக்கள் சிலர் இதை எதிர்ப்பார்கள்.** மரியாள் தன்னுடைய மேலான ஈவை ஆண்டவருக்குக் கொடுத்தபோது, ஏளனம், முறுமுறுப்பு, குறைகூறுதல், தவறாகப் புரிந்து கொள்ளுதல் போன்ற யாவும் உருவாயின. யோவான் 12:5. யூதாஸ் வேகமாகச் சினம் கொண்டு, மரியாளின் இந்த அர்ப்பணச் செய்கையை 'வீண்செலவு' என்று கூறினான். ஆண்டவருக்கென முழுமையாக நம் வாழ்க்கையை அர்ப்பணிக்கும் போது இந்த உலகம் அடிக்கடி இப்படித்தான் எடை போடுகிறது. மத்தேயு 26:8

**(2). ஆண்டவராகிய இயேசு இதனால் மகிழ்ச்சியடைவார்.** இந்த உலகில் நாம் ஆண்டவரின் பாராட்டைப் பெறுவதுதான் தலைசிறந்த செயலாகும். வசனம் 6 ஐப் படிக்கவும். அவர் நம்மைப் பாராட்டும்போது உலகம் ஏதாவது பேசினால் அதை நாம் பொருட்படுத்தலாமா?

**(3). மற்றவர்கள் இதனால் பயனடைவார்கள்.** மரியாளின் இந்த எளிய பக்தியுள்ள அர்ப்பணிப்பினால் விளைந்த விளைவு எப்படிப்பட்டது? வசனம் 9 ஐப் படிக்கவும். ஆண்டவருக்கென முழுமையாக ஒப்புக் கொடுத்த வாழ்வின் மூலம் வரும் எண்ணற்ற பலன்களை எவரால் எடைபோட முடியும். நீங்கள் உங்கள் வாழ்க்கையை முழுமையாக அவருக்கென அர்ப்பணித்து விட்டீர்களா?

## பாடம் 10 **உயர்ந்த நிலையுள்ள வாழ்க்கை**

***மைய வசனம்:*** *"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்." (ஏசாயா 40:31)*

பிரகாசமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கென வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள சில இரகசியங்களைப் பகிர்ந்து கொள்வதே இந்த வேதபாடத் தொடரின் நோக்கமாகும். நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள மைய வசனம் இதுவரை கூறப்பட்டுள்ள இரகசியங்கள் யாவற்றிற்கும் சிகரமானது. நம்முடைய கிறிஸ்தவ வாழ்விலும், ஊழியத்திலும் தோல்விகள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதை நாம் உண்மையுள்ளவர்களாக இருப்பின் ஒத்துக் கொள்வோம். (1) கடவுளின் வார்த்தை நம்மை ஒத்துக் கொள்ளச் செய்கிறது. நாம் அடிக்கடி 'சோர்ந்து' போய், பலமிழந்து (வசனம் 29) போவதுண்டு அல்லவா? நாம் அடிக்கடி 'இளைப்படைந்து' (வசனம் 30) இடறி விழுவதுண்டல்லவா? தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் அவ்வப்போது நேரிடும் தோல்விகளைக் குறித்து கடவுள் கூறும் விளக்கம் இது எனலாம். (2) கூர்ந்து கவனிக்கும்போது நாம் நமது தோல்விகளை ஏற்றுக் கொள்வோம். நாம் நம்மையே பார்க்கும்போது, நாம் தோல்வியடைகிறோம். நம் இருதயமும் இதை ஆமோதிக்கின்றது. நாம் எவ்வளவாய்ச் சோர்வடைந்து, இளைப்படைகிறோம். வெற்றியும், வல்லமையும் அளிக்கும் வழியைக் கற்றுக்கொள்வதிலே நாம் எவ்வளவு நிதானமாக இருக்கின்றோம்! நீதிமொழிகள் 14:10.

**1. நம்முடைய வீழ்ச்சியின் காரணம் என்ன?**

**(1). நம்முடைய கைவசமுள்ள வளங்களை நாம் அறியாமல் இருப்பதே முதற்காரணம்** இது அறியாமைதான்! ஓசியா 4:6ஐ மத்தேயு 22:29உடன் ஒப்பிடுக. பின்னர் ஏசாயா 40:28 படியுங்கள். "இதை நீ அறியாயோ?" என்றுள்ளது. நம்முடைய கைவசமுள்ள வளங்கள் யாவை? வசனங்கள் 28,29 இல் "கர்த்தராகிய அநாதி தேவன்", "சிருஷ்டிகர்" நமக்குத் தேவையான பலத்தையும் சக்தியையும் அருளுபவர் என்று காணலாம். நம்முடைய தோல்விகளை மகிமையான வெற்றியாக அவர் மாற்றுவார் என்கிற வாக்குத்தத்தம் நமது தோல்விகளின் பின்னணியில் கூறப்பட்டுள்ளது. இந்தக் கடவுள், சர்வ வல்லமையுள்ள ஆண்டவர், தமது அளப்பறியா வல்லமை, பலம் போன்ற எல்லாவற்றையும் நாம் பயன்படுத்தும்படி நம்மிடம் கொடுத்துள்ளார். அந்த வளங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இனி இரண்டாவது காரணத்தைக் காணலாம்.

**(2). நம்மிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தாமலிருப்பதே தோல்விக்கான இரண்டாம் காரணம்.** வசனம் 29 இல் "பெலன் கொடுத்து......" என்பதில் அவர் கொடுக்கிறார் என்று காண்கிறோம். அவர் கொடுக்கும்போது நாம் பெற்றுக் கொள்ள வேண்டாமா? இந்தக் கொடுக்கல் வாங்கல் எவ்வாறு நிகழ்கிறது? மிகுந்த பலமுள்ளவர்களாக நாம் மாறுவது எப்படி? அவரது வல்லமையை எனக்குக் கொடுக்கக் கடவுள் பயன்படுத்தும் முறை என்ன? வசனம் 31 இல் "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ......" என்று கூறப்பட்டுள்ளது. கர்த்தருக்குக் காத்திருப்பது என்றால் என்ன அர்த்தம்? இது ஜெபிப்பது, ஆராதிப்பது, ஆராதனையில் கலந்து கொள்வது, வேதாகமத்தை வாசிப்பது போன்றவற்றைக் குறிக்கிறதா? ஆம்! அதோடு முக்கியமானது வேறொன்றுண்டு. அது ஏசாயா 41:1 இல் ".....எனக்கு முன்பாக மவுனமாயிருங்கள்" என்று கூறப்பட்டுள்ளது. சங்கீதம் 62:1 ஒப்பிட்டுப் பார்க்கவும். 'காத்திருத்தல்' என்பதற்கு 'அமைதியாக இருப்பது' என்றும் பொருள் கூறலாம்.

அவரையே முழுவதுமாகச் சார்ந்திருந்து, அவர் சொல்வதைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிய ஆயத்தமாயிருந்து, எல்லாவற்றிற்கும் அவரையே முழுமையாக எதிர்நோக்கி, நம் பாரங்கள் எல்லாவற்றையும் அவர் மீது வைத்து விடுவதே கர்த்தருக்குக் காத்திருத்தல் என்பதன் பொருளாகும். நம்மீதோ அல்லது மற்ற மக்கள் மீதோ நம்பிக்கை வைக்காமல், ஆண்டவரில் நம் முழு நம்பிக்கையையும் வைக்க வேண்டும் என்பதையே இது வலியுறுத்துகிறது எனலாம்.

**2. கர்த்தருக்குக் காத்திருப்பதினால் கிட்டும் பலன் என்ன?** கர்த்தருக்குக் காத்திருப்பதினால் கிட்டும் நான்கு வகை பலன்களை வசனம் 31 இல் காணலாம். இது மிகவும் மேலான நிலையிலுள்ள வாழ்க்கை. இதுவே மெய்யான வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை எனலாம்.

**(1). நம்முடைய பலவீனத்திற்குப்பதிலாக கடவுளின் பெலன் கிட்டும்**

'புதுப்பெலன்' என்பதற்கு மாற்றம் பெற்ற அல்லது மாற்றிக்கொண்ட பெலன் என்றும் அர்த்தம் கூறலாம். உங்களுடைய சொந்த பெலன்தான் உங்களது பெலவீனம் என்பதை அறிவீர்களா? நீங்கள் ஆண்டவருக்கு முன்பாக உங்களது அதிபலவீனத்தோடு செல்வீர்களாயின், அவர் உங்கள் பலவீனத்திற்குப் பதிலாகத் தமது பெலனைக் கொடுப்பார் என்று அறியீர்களா? அவர் கொடுப்பது எப்படிப்பட்ட பெலன்? 1) உடல் பலமா? ஆமாம்! நாம் அவருக்குக் காத்திருக்கும் போது, அவர் நம் சரீர பலத்தையும் நிச்சயமாகப் புதுப்பிக்கிறார். ரோமர் 8:11 படிக்கவும். 2) மனோவலிமையா? ஆம்! அவரே எல்லா ஞானத்திற்கும் ஊற்றும், காரணரானவர். நாம் அவருக்கு முன்பாக காத்திருக்கும்போது, அவர் நிச்சயமாக நமது மனதைப் புதிதாக்குகிறார். ரோமர் 12:2, எபேசியர் 4:23; 2தீமோத்தேயு 1:7 படிக்கவும். 3) ஒழுக்கஞ்சார்ந்த பெலனா? ஆம்! நம்மை ஒழுக்கக் கேட்டிற்குத் தூண்டும் ஒலிகளும், காட்சிகளும் நிறைந்த இவ்வுலகில், நமக்கு இது தேவையென்று அவர் அறிந்து நமக்கு இந்த பெலனைத் தருகிறார். எபேசியர் 6:10, 2தீமோத்தேயு 2:1. 4. ஆவிக்குரிய பெலனா? ஆம் அதையும் அளிக்கிறார். லூக்கா 24:49, அப்போஸ்தலர் 1:8, 1கொரிந்தியர் 1:25, ஏசாயா 30:15

**(2). நாம் சாதாரண வாழ்வுக்கு மேலான வாழ்வை அநுபவிப்போம்.**

நாம் "கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து" எழும்புவோம். பூமிக்குரிய நிலையைத் தாண்டி எழுவோம். அவரது மகிமையின் பிரகாசத்துக்கு முன்பு பூமிக்குரியவை மங்கலாகிவிடும். பறவைகளில் கழுகு மட்டுமே நம் கண் பார்வைக்கும் எட்டாத உயரத்தில் பறக்கும் சக்தியுள்ளது. நாமுங்கூட அப்படியே பறந்திடுவோம். இப்பொழுதே நமது குடியிருப்பு பரலோகத்திலுள்ளது (பிலிப்பியர் 3:20). இங்கிருக்கும் நாம், கிறிஸ்து இயேசுவுக்குள், அவரோடு உன்னதங்களிலே உட்கார்ந்திருக்கிறோம் (எபேசியர் 2:7), கொலோசெயர் 3:1, 2 படிக்கவும். இப்படியிருக்க, கழுகைப் போல, வானத்தின் உயரத்திற்குப் பறந்து எழும்ப வேண்டிய நிலையை விட்டுச் சிறகொடிந்த பறவைபோல, நொண்டி, நொண்டிச் செல்லும் பூமிக்குரிய கிறிஸ்தவர்கள் எத்தனைபேர்! நொண்டியடித்துச் செல்வதற்கல்ல, உயர, உயரப் பறப்பதற்கே நாம் உருவாக்கப்பட்டுள்ளோம்.!

**(3). இயற்கைக்கும் அப்பாற்பட்ட காரியங்களை நம்மால் செய்ய முடியும்.** நாம் ஓடினாலும் இளைப்படையமாட்டோம். ஓடிக்கொண்டேயிருந்து இளைப்படையாதிருப்பது இயற்கையல்ல. இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்ய, இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைத் தருவதாகக் கடவுள் நமக்கு வாக்களித்துள்ளார். நாம் இயற்கைக்கும் மேலான மக்கள். ஏனெனில் நாம் இயற்கைக்கும், அப்பாற்பட்ட கடவுளோடு இணைக்கப்பட்டுள்ளோம்! யோவான் 7:38, 14:12 பார்க்கவும். நம்முடைய உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறதா? நம் மூலமாக பெரிய காரியங்கள் செய்யப்படுகின்றனவா?

**(4). நம் கடினமான அன்றாட வாழ்க்கையிலும் நாம் வெற்றிகரமாக வாழ முடியும்.** நாம் நடந்தாலும் சோர்ந்து போகமாட்டோம். சிலவேளைகளில் நடப்பதைக் காட்டிலும் ஓடுவது எளிதாகத் தோன்றும். "ஓடினாலும் இளைப்படையார்கள்" என்று கூறியுள்ளதைக் கவனிக்கவும். நம் ஒவ்வொருவருக்கும் சோதனைக்குரிய இடமாகவும், கடினமாகவும் இருப்பது நமது அன்றாட வாழ்வின் சாதாரணமான கடமைகள்தான் எனலாம். ஆதியாகமம் 5:24, சங்கீதம் 37:23 படிக்கவும். ஏ.பி. சிம்சன் என்ற வல்லமையான ஊழியர், "நான் தோல்வி யடைந்தவன். என்னிடம் பலன் ஏதும் இல்லை. ஆனாலும் நீரே என் ஜீவனாயிருக்கிறீர், நீரே என் பெலன், நீரே என் வெற்றியாக இருக்கிறீர்" என்று அடிக்கடி தனது தனிமையில் உட்கார்ந்து, ஆண்டவரோடு கூறுவதுண்டு. விசுவாசத்திலே அவர் உயிரோடு எழுந்த ஆண்டவரின் ஜீவனைத் தன் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஏற்றுக் கொள்வதுண்டு. இதுதான் கர்த்தருக்குக் காத்திருப்பதென்பது. இதன் பலன் என்ன? உன்னதங்களில் மேலான வாழ்வு நமக்கு உண்டு. இதுவே மெய்யான ஆவிக்குரிய வெற்றி என்பதில் ஐயமில்லை!

*தொடர் 2*

# எபேசியருக்கு எழுதின நிருபம்

பாடம் 1 கிறிஸ்துவில் நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்

பாடம் 2 சுபாவ மனிதனைக் குறித்த கடவுளின் படம்

பாடம் 3 கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்

பாடம் 4 திருச்சபையைப் பற்றிய ஏழு உண்மைகள்

பாடம் 5 அழைப்புக்குப் பாத்திரராக நடவுங்கள்

பாடம் 6 உன்னதத்திற்கு ஏறிச் சென்ற ஆண்டவர் அருளும் வரங்கள்

பாடம் 7 ஆவிக்குரிய போதை

பாடம் 8 கிறிஸ்தவனின் உறவுகள்

பாடம் 9 நமது எதிராளியும், நமது போராட்டமும்

பாடம் 10 சகலவித ஜெபங்களோடு எப்போதும் ஜெபிப்பது

## பாடம் 1 **கிறிஸ்துவில் நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்**

*வேதபகுதி: எபேசியர் 1:1 - 14*

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்தில் மூன்றாண்டுகள் தங்கியிருந்தார் (அப்போஸ்தலர் 19 & 20:17-38) அவரது ஊழியத்தின் பலனாக அந்தப் பட்டணத்திலே ஒரு சபை நிறுவப்பட்டது. பத்து ஆண்டுகட்குப் பின்னர், ரோமாபுரி சிறைச்சாலையிலிருந்து பவுல் அங்குள்ள கிறிஸ்தவர்கட்கு இக்கடிதத்தை எழுதி தீகிக்குவின் மூலமாக அனுப்பினார். எபேசியருக்கு எழுதின நிருபம் மெய்சிலிர்க்கவைக்கும் ஒரு கடிதம் எனலாம். ஒரு மனிதன் (நாம்) எவ்வாறு கிறிஸ்தவனாக மாறமுடியும் என்பதையும், (நாம்) எவ்வாறு கிறிஸ்தவ வாழ்வு நடத்தவேண்டுமென கடவுள் விரும்புகிறார் என்பதையும் உணர்ச்சிபூர்வமாகக் கூறும் கடிதம் இது. முதல் மூன்று அதிகாரங்களும் கிறிஸ்துவில் நமது சம்பத்துக் குறித்தும் அதிகாரங்கள் 4 முதல் 6வரை கிறிஸ்துவில் நமது நடக்கை பற்றியும் கூறுகிறது.

முதல் மூன்று அதிகாரங்கட்கு மைய வசனமாக 1:3 கூறலாம். அது இந்த முதலாம் பாடத்தின் மையக் கருத்தைக் கூறுகிறது. அவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக, விசுவாசியைத் தமது ஆவிக்குரிய சம்பத்து எல்லாவற்றிற்கும் உரிமையாளராக வைத்துள்ளார். கிறிஸ்து இல்லாமல், நாம் ஒன்றுமில்லை. நம்மிடம் ஒன்றுமில்லை. அவராலேயன்றி நம்மால் ஒன்றும் செய்யக் கூடாது (யோவான் 15:5) ஆனால் விசுவாசிகளாகிய நம்மிடம் கடவுள் கூறுவது லூக்கா 15:31. நாம் எவ்வளவு பெரிய செல்வந்தர்கள்! இருப்பினும் நம்மில் ஒரு சிலர் மட்டுமே தம்முடைய மெய்யான செல்வத்தை அறிந்து, தங்களுடைய சுதந்திரங்களைச் சுதந்தரித்துக் கொள்கின்றனர் (ஒபதியா 17) கடவுள் தமது குமாரனை, நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் மூலகாரணமாக வைத்துள்ளார். நாம் அவரை நமது இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ளும்போது, அப்பொழுதே அவரில் உள்ள எல்லா ஆசீர்வாதங்களும் நமக்குரியவைகளாகி விடுகின்றன. நாம் சுதந்தரித்து அனுபவிக்க வேண்டிய கிறிஸ்துவிலுள்ள நமது ஆசீர்வாதங்கள் எவை? வசனங்கள் 4-14 வரை கூறப்பட்டவை ஏழு!

### 1. நாம் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் *தெரிந்து கொள்ளப்பட்டோம்*

(வசனம் 4) கடவுள் நம்மைத் தெரிந்துகொண்டார் என்பது பேருண்மையாகும். தமக்குச் சொந்தமாயிருக்கும்படி கடவுள் நம்மைத் தெரிந்துகொண்டார் என்பது எவ்வளவு அற்புதமானது! அவர் நம்மை எப்பொழுது தெரிந்து கொண்டார்? எதற்காகத் தெரிந்து கொண்டார்? என்று பாருங்கள். யோவான் 15:16ஐ 1பேதுரு 1:15,16உடன் ஒப்பிட்டுப் படிக்கவும். உன்னதமான கிருபையின் மகத்துவமான செயல் இதுவன்றோ! நமது இரட்சிப்பு என்பது கடவுளின் சலனமற்ற நிச்சயமான சித்தம். இதற்கான திட்டம் நித்தியத்தின் கடந்த காலத்தே உருவாயிற்று. விசுவாசியே நீங்களுங் கூட இரட்சிக்கப்பட முடியும் என்று முன்னர் எப்போதாகிலும் சிந்தித்ததுண்டா? வசனம் 4ஐ மீண்டும் வாசித்துத் தியானியுங்கள். உங்கள் சந்தேகங்களை நிரந்தரமாகத் தள்ளிவிடுங்கள் - யோவான் 6:37-39 வரை படியுங்கள்.

### 2. நாம் அவருக்குச் சுவிகாரபுத்திரராகும்படி *முன் குறிக்கப்பட்டுள்ளோம்.*

முன்னதாகவே நியமித்து வைத்தல் என்பதே இதன்பொருள். (வசனங்கள் 5,6) நித்தியத்திலே அவர் நமக்கு என்ன செய்யப்போகிறார் என்றும் திட்டமிட்டுள்ளார். தெரிந்து கொண்டார் என்பது பின்னோக்கிப் பார்த்து நாம் தெரிந்து கொள்ளப்பட்டோம் என்று கூறுவது (வசனம் 4). முன்குறித்தல் என்பது முன்னோக்கிப் பார்த்து நாம் எதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்டோம் என்று கூறுவது (வசனம் 5). நாம் அவரது குடும்பத்தின் அங்கமாக கொண்டுவரப்பட்டு, ஒரு குமாரனுக்குரிய அந்தஸ்து, சிலாக்கியங்களை அளிக்கவேண்டும் என்பதற்காகவே கடவுள் நம்மைத் தெரிந்து கொண்டார். அவரைவிட்டுத் தூரம்போன நம்மை, அவரது விரோதிகளான நம்மை தம்முடைய புத்திரராகும்படி அதுவும் பரலோகத்தின் அரச குடும்பத்தின் அங்கத்தினராகும்படித் தெரிந்துகொண்டார். இதை மறக்கமுடியுமா! 1யோவான் 3:1-3ஐ ரோமர் 8:18,19,23 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும்.

**3. நாம் பிரியமானவருக்குள் *ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம்*** (வசனம் 5,6)

நம்மைப் பாவத்தோடும், மறுபடியும் பிறவாத நிலையில் கடவுள் ஏற்றுக்கொள்ளவே மாட்டார். ஆயினும் நாம் கிறிஸ்துவை நமது இரட்சகராக விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொள்ளும்போது, பிரியமான அவருக்குள் நம்மை அவர் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதே இதன் பொருள். ஏசாயா 64:6. எபேசியர் 1:5,6 படிக்கவும். இது நம் சந்தேகங்கள் யாவற்றையும் நீக்குகிறது. நான் என்னுடைய பாவமுள்ள சுயத்தைப் பார்க்கும்போது எனக்குள்ளே சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் என்னை ஏற்றுக்கொண்ட ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பார்க்கும்போது (எபிரெயர் 12:1) என் சந்தேகங்கள் யாவும் பறந்துபோய் விடுகின்றன. ஏனெனில் கடவுள் தமது குமாரனின் பூரணமான வாழ்வையும், செய்து முடித்த கிரியையையும் ஏற்று, அவருக்குள் என்னையும் ஏற்றுக் கொண்டுவிட்டார் என்று நான் காண்கிறேன்.

**4. நாம் பாவமன்னிப்பாகிய *மீட்பை இவருக்குள் பெற்றுள்ளோம்*.** (வசனம் 7)

மீட்பு என்பது மீண்டும் வாங்குதல், பிணைத்தொகை கொடுத்து விடுவிப்பது எனலாம். 1பேதுரு 1:18,19 படிக்கவும். நாம் பாவத்திற்கு அடிமைகளாக விற்கப் பட்டோம் (ரோமர் 7:14) நாம் மீண்டும் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டோம் (1கொரிந்தியர் 6:20) அதுமட்டுமல்ல, நாம் மன்னிக்கப்பட்டோம் (ஏசாயா 44:22,23; சங்கீதம் 103:12, லூக்கா 7:47) கடவுள் நம்மைத் தமக்குச் சொந்தமானவர்களாக மட்டும் மாற்றவில்லை, நாம் அவரோடு என்றென்றும் வாழ்வதற்குத் தகுதியுள்ளவர்களாகவும் மாற்றினார். அவர் இதை எவ்வாறு செய்தார்? ஆண்டவராகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் - அவர் பலியாக மரித்து, பரிகாரம் செய்தார். (மத்தேயு 20:28ஐ 2கொரிந்தியர் 5:21; எபிரெயர் 9:12, 1பேதுரு 1:18; 2:24, வெளிப்படுத்தல் 1:5,6 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும்.

**5. நாம் தெய்வீக இரகசியத்திற்குள் *அடியெடுத்து வைத்துள்ளோம்*.** (வசனம் 8-10)

இங்கு 'இரகசியம்' எனப்படுவது ஒரு காலத்தே கடவுள் மறைத்து வைத்திருந்தது. அதை அவர் இப்பொழுது வெளிப்படுத்தியுள்ளார். வசனம்10 இல் கூறப்படும் 'இரகசியம்' வெளிப்படும் என்பது பிலிப்பியர் 2:10,11 இன் நிறைவேறுதல் எனலாம், அப்பொழுது யாவும் மகிமையான நிறைவுக்கு வரும். கடவுள் தமது தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்கே வெளிப்படுத்துகிறார்? (வசனம் 9,10) அவரது வார்த்தையின் மூலமாக அது 'அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம்' (2பேதுரு 1:19), அதிலே நமக்கென கடவுள் வைத்துள்ள எதிர்கால திட்டத்தைக் காணலாம். காலம் நிறைவேறும்போது, இரட்சிக்கப்பட்டோர் யாவரும் அவருடன் நித்தியமாக வாழ்வார்கள்.

**6. நாம் நம்முடைய *சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வோம்*.** (வசனம் 11,12)

இம்மைக்கும், மறுமைக்கும் தேவையான யாவும் கிறிஸ்துவுக்குள் நமக்கு அருளப்பட்டுள்ளன (வசனம் 12) - 1பேதுரு 1:4, ரோமர் 8:17, 32, 1கொரிந்தியர் 3:21-23, 2தீமோத்தேயு 2:12, வெளிப்படுத்தல் 5:10. நமது சுதந்திரம் என்பது செல்வம், வளம், சொத்து போன்றவற்றைக் குறிப்பது - நாம் அவருக்குள் எவ்வளவு தனவந்தர்களாக இருக்கின்றோம்! நமது சுதந்திரத்திற்கு அச்சாரம் (முன் பணம்) கொடுக்கப்பட்டாயிற்று என்று வசனம் 14 கூறுகிறது. கிறிஸ்துவுக்குள் நமக்குச் சொந்தமான யாவற்றிலும் நாம் ஒரு நாள் நுழைந்து சென்று அனுபவிப்போம் என்று ஆவியானவர் நமக்குள்ளே உறுதி கூறுகிறார். எபேசியர் 4:30 ஐ யோவான் 14:16,17 உடன் ஒப்பிட்டுக.

**7. நாம் வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் *முத்திரை போடப்பட்டுள்ளோம்*.**

(வசனம் 13,14) இந்தத் தெய்வீக முத்திரை நமது பாதுகாப்பையும், நம் உரிமையாளர் யார் என்பதையும் குறிப்பதாகவுள்ளது. நாம் அவருக்குச் சொந்தமானவர்கள். எப்போதும் சொந்தமுள்ளவர்களாக இருப்போம். நாம் இந்த பயணத்தின் முடிவு பரியந்தம் (எபேசியர் 4:30) முத்திரை போடப்பட்டுள்ளோம். ஆவிக்குரிய இந்த ஏழு ஆசீர்வாதங்கள் யாவும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் சொந்தமானது. நாம் 'கிறிஸ்துவுக்குள்' (வசனம் 3) இருந்தால் இவை யாவும் நமக்குமட்டுமே சொந்தம். "உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது இவை சொந்தமாகின்றன." (வசனம் 13)

## பாடம் 2 **சுபாவ மனிதனைக் குறித்த கடவுளின் படம்**

***(வேதபகுதி: எபேசியர் 2:1-12)***

தேவ ஆவியானவரால் அருளப்பட்டது வேதாகமம் (2தீமோத்தேயு 3:16). மனித இனத்தினைப் படம் பிடித்துக் காட்டும் நூல் இதுவே. இது ஒரு குடும்பத்தின் புகைப்படத் தொகுப்பு போன்றது. கடவுளின் படத்தொகுப்பிலுள்ளவை யாவும் உண்மையானது. திருத்தம் செய்யாதவை. ஆகவே அதைப் பாராட்டத் தேவையில்லை. சுபாவ மனிதன் என்று இங்கு குறிப்பிடப்படும் மனிதன் ஒரு கிறிஸ்தவன் அல்ல. அவன் மறுபடியும் பிறந்தவனே அல்ல; எபேசியர் 2:3 இல் குறிப்பிடப்பட்டுள்ள 'சுபாவத்தின்' பிள்ளை அவன். 1 கொரிந்தியர் 2:14 பார்க்க. இந்தப் பாடத்தில் நாம் வீழ்ந்து போன மனித இனத்தைக் கடவுள் படம் பிடித்துக் காட்டியிருக்கக் காணலாம். அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. நாமுங் கூட பரிசுத்தாவியானவரால் உயிர்ப்பிக்கப் படாதிருந்தால், கடவுளின் கிருபைக்குத் தூரமாயிருந்தால் அவ்வாறே இருந்திருப்போம். எபேசியர் அதிகாரம் 2 இல் உள்ள கடவுள் எடுத்த நமது முழுமையான படத்தைப் பார்க்கும் முன்பு 'சுபாவ மனிதனின்' மற்ற படங்களைக் காண்போம். ஆதியாகமம் 6:5; சங்கீதம் 14:2-3; ஏசாயா 1: 5,6; 64:6, எரேமியா 17:9; மத்தேயு 15:18- 20; ரோமர் 1:21-32. நாம் எபேசியர் 2:1-12 வரை பார்க்கும்போது, நாம் இரட்சிக்கப்படாமல் இருந்தபோது எப்படி இருந்தோம் எனவும், இயேசு கிறிஸ்துவைவிட்டுத் தூரமாக இருந்தால் எப்படி இருப்போம் என்றும் காணலாம்.

**1. சுபாவ மனிதன் என்பவன் அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்தவன்.** (வசனம் 1)

ஒப்பிட்டுப் படிக்கவேண்டிய வசனங்கள் - ஆதியாகமம் 3:15-17ஐ ரோமர் 5:12உடன் ஒப்பிடுக. யோவான் 5:24,40; 1யோவான் 3:14; 5:11,12ஐ எபேசியர் 4:18 உடன் ஒப்பிடுக. சரீரமரணம் என்பது சரீரத்திலிருந்து ஆத்துமா பிரிவது. ஆவிக்குரிய மரணம் என்பது ஆத்துமா கடவுளைவிட்டுப் பிரிவது. சுபாவத்தின்படி நாம் யாவரும் ஆவிக்குரிய மரணமடைந்தவர்களே.

**2. சுபாவ மனிதன் என்பவன் 'இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி' நடப்பவன்.** (வசனம் 2)

அதாவது அவனது நடக்கை அவன் வாழும் காலத்திற்கு ஏற்றபடி மாறுபடும். மறுபடியும் பிறக்காத மனிதன், இவ்வுலகத்திற்குரிய தரத்தின்படி பாவம், சந்தோஷம், உடை ஆசைகள் போன்றவற்றை மாற்றிக் கொள்வான். மத்தேயு 7:13,14 ஐ சங்கீதம் 1 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

**3. சுபாவ மனிதன் "இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும்" நடப்பவன்.** (வசனம் 2) இதையே வேறுவிதமாகக் கூறினால் சுபாவத்தின்படி அவன் சாத்தானால் ஆளுகை செய்யப்படுகிறான். நமது முதற் பெற்றோர் சாத்தானின் பொய்க்குச் செவி கொடுத்தனர். அவர்கள் தங்களை அவனுக்கு ஒப்புக்கொடுத்த போது அவனது ஆளுகைக்குட்பட்டனர். ஆதியாகமம் 3:1-13 படிக்கவும். அப்படியே நாமும் ஆத்துமாக்களின் விரோதியான அவனால் ஆளுகை செய்யப்படுகிறோம். சாத்தான் உண்மையாகவே இருக்கிறான். அவனது ஆளுகை வானமண்டலத்திலுள்ளது. அவன் தீவிரமாகச் செயல்படுகிறான். 1யோவான் 5:19 பார்க்கவும்.

**4. சுபாவ மனிதன் என்பவன் கீழ்ப்படியாதவன்.** (வசனம் 2) நமது முதற் பெற்றோர் கீழ்ப்படியாமற் போயினர். விழுந்துபோன அவர்களது சுபாவத்தை நாம் சுதந்தரித்துக் கொண்டோம். ஆகவேதான் நாமும் நமது சுபாவத்தின்படி ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமற் போகிறோம் - சங்கீதம் 51:5 படிக்கவும். அதிலே பாவம் செய்வது நமது சுபாவம் என்று கூறப்பட்டுள்ளது.

**5. சுபாவ மனிதன் என்பவன் மாம்ச இச்சையின்படி நடந்து, மாம்சமும், மனசும் விரும்பினவற்றைச் செய்கிறான்.** (வசனம் 3) இங்கு 'விருப்பம்' என்கிற வார்த்தை கலகம் செய்கிற நமது கெட்ட தன்மையைக் குறிப்பிடாமல், இயற்கையாகவே நமக்குள்ள ஆசையைக் குறிப்பிடுகிறது. அதோடு நாம் ஆவிக்குரியபடி செத்தவர்களாயும், சாத்தானின் ஆளுகைக்குட்பட்டவர்களாயும் இருப்பதினால் நாம் மாம்ச இச்சைகட்கும்,

துன்மார்க்கத்திற்கும், சிற்றின்பங்கட்கும் இடமளிக்கின்றோம். வசனம் 3 இல் 'சுபாவத்தினால்' என்கிற பதத்தைக் கவனிக்கவும். இது பாவ சுபாவம் - ரோமர் 7:18, 8:8 படிக்கவும்.

**6. சுபாவ மனிதன் என்பவன் 'கோபாக்கினையின்' பிள்ளை.** (வசனம் 3) சுபாவத்தின்படி இவ்வுலக மக்கள் யாவரும் குற்றவாளிகளாக, மரண தண்டனைக் குட்பட்டிருக்கிறார்கள் என்பதே இதன் பொருள். யோவான் 3:18,19; 3:36; ரோமர் 1:18-20 போன்ற வசனங்களைப் படித்தால் இந்த உண்மை எவ்வளவு அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது என்பதைக் காணலாம். இது எவ்வளவு கொடூரமானது! கிறிஸ்தவரல்லாத ஒவ்வொருவரும் குற்றவாளிகளெனத் தீர்க்கப் பட்டாயிற்று. அவர்கள் கடவுளின் கோபாக்கினைக்குட்பட்டவர்கள்.

**7. சுபாவமனிதன் என்பவன் கிறிஸ்துவைச் சேராதவன்.** (வசனம் 12) ஆண்டவர் இயேசு கிறிஸ்து யோவான் 14:6 இல் கூறியிருப்பதைப் பாருங்கள். கிறிஸ்துவைவிட்டுத் தூரம்போவது எவ்வளவு பரிதாபம்! இவ்வுலகில் இலட்சக் கணக்கானோர் மக்களின் ஒரே இரட்சகரான கிறிஸ்து இல்லாதவர்களாக இருக்கின்றனர் - அப்போஸ்தலர் 4:12; 1தீமோத்தேயு 2:5,6 ஐப் பார்க்கவும்.

**8. சுபாவமனிதன் என்பவன் 'காணியாட்சிக்குப் புறம்பானவன்'.** (வசனம் 12) அதாவது குடியுரிமை இல்லாதவன். மறுபடியும் பிறவாதவன். ஒதுக்கப்பட்டவனாக, நாடோடியாக அலைபவன். ஆவிக்குரியபடி நிலை தவறியவன். சொந்த நாடு இல்லாதவன். அதாவது பரலோக வீடு இல்லாதவன். (யோவான் 14:1-30) கிறிஸ்தவன் அல்லாதவன் நிலை இதுதான்.

**9. சுபாவ மனிதன் என்பவன் அந்நியன்.** (வசனம் 12) கடவுளிடம் உரிமை கொண்டாட அந்நியனுக்கு உரிமை இல்லை. கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அதினால் அவரது குடும்பத்தின் உறுப்பினராக மாறியவர்கள் மட்டுமே கடவுளிடம் உரிமை கொண்டாட முடியும். மத்தேயு 22:11-13; லூக்கா 13:25, 26 படிக்கவும்.

**10. சுபாவ மனிதன் நம்பிக்கையற்றவன்.** (வசனம் 12) கிறிஸ்துவுக்குத் தூரமானவன் நம்பிக்கையற்றவன் மட்டுமல்ல நாதியற்றவன். சிலவேளைகளில் மருத்துவர்கள் சில நோயாளிகளைப் பார்த்து நம்பிக்கை இல்லை என்று கூறுவதுண்டல்லவா அதுபோல! அவர்கள் சரீரத்தின் படி நம்பிக்கை இழந்தவர்கள். கிறிஸ்து இல்லாத நம் நிலை ஆவிக்குரியபடி நம்பிக்கையற்ற நிலை என்று கடவுள் கூறுகிறார் - யோவான் 8:21,24 படிக்கவும்.

**11. சுபாவ மனிதன் என்பவன் கடவுளற்றவன்.** (வசனம் 12) லூக்கா 12:16-21 வரையுள்ள பகுதியில் கூறப்பட்டுள்ள பணக்கார விவசாயி போன்றவன். இவன் கடவுளற்றவன். லூக்கா 12:24 படியுங்கள். இங்கு காகங்களுக்குக் களஞ்சியங்கள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அவைகட்குக் கடவுள் உண்டு. ஆனால் லூக்கா 12:18 இல் படிக்கின்றோம், அந்தப் பெரிய பணக்காரனுக்குக் களஞ்சியங்கள் இருந்தன, ஆனால் கடவுள் இல்லையே!

**12. சுபாவ மனிதன் என்பவன் கடவுளின் பகைவன்.** (வசனங்கள் 15,16) நாம் சுபாவத்தின்படி கடவுளை வெறுக்கின்றோம் - சங்கீதம் 14:1 'தேவன் இல்லை' என்கிறான்! இதுதான் சுபாவ மனிதனைக் குறித்த கடவுளின் படம். கடவுளின் கணிப்பின்படி மனிதன் சுபாவத்தின்படி இழந்துபோன, உதவியற்ற, பாவத்தினால் முழுவதும் நாசமடைந்து, சாத்தானின் அதிகாரத்திற்குட்பட்ட நிலையில் இருக்கிறான். ஆகவே அவனுக்கு ஒரு இரட்சகர் தேவை. அவனை உயிர்ப்பிக்க பரிசுத்த ஆவியானவர் தேவை. சுபாவத்தின்டி நாம் இவ்வளவு மோசமாக இருந்தும், கடவுள் நம்மை நேசிக்கிறார். நம்மை விரும்புகிறார் என்பது எவ்வளவு ஆச்சரியமான செயல்! இந்த மகிமையான உண்மையை வெளிப்படுத்தும். எபேசியர் 2: 4-7 படித்து தியானிக்கவும்.

## பாடம் 3 **கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்**

*(வேதபகுதி: எபேசியர் 2:13-22)*

விழுந்துபோன மனித இனத்தின் பரிதாபமான ஆனால் உண்மையான, கடவுளின் விளக்கத்தை எபேசியர் 2:1-3,12 இல் கண்டோம். கிறிஸ்து இல்லாமல் நாம் ; பாவத்திலே மரித்தவர்கள் (வசனம் 1); உலகத்தினால் ஏமாற்றப்பட்டவர்கள் (வசனம் 2); வாழ்வில் சீரழிந்தவர்கள் (வசனம் 3); நாம் இழந்து போன, உதவியற்ற, நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். உலகம் இந்த உண்மையை ஏற்காது. ஆனால் கடவுள் இவ்வாறு கூறியுள்ளார்- ரோமர் 3:10-18 படிக்கவும். வீழ்ந்துபோன மனுக்குலத்தைக் குறித்த கடவுளின் கருத்து என்ன? கடவுளிடம் நமக்கு எதையும் கேட்க எவ்வித உரிமையும் இல்லை? தரித்திரமான, தள்ளப்பட்ட, கீழ்ப்படியாமை நிலையிலுள்ள நாம் கடவுளிடம் எதையாவது எதிர்பார்க்கமுடியுமா? அவர் நம்மைக் குறித்து என்ன கருதுகிறார்? கிறிஸ்து இயேசுவில் கடவுள் நம்மீது கொண்டுள்ள அற்புதமான அன்பை எபேசியர் இரண்டாம் அதிகாரத்திலுள்ள இரண்டு வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. அவற்றுள் ஒன்று வசனம் 4. மற்றொன்று வசனம் 13. கடவுளோடு முழுமையாக நாம் மீண்டும் ஐக்கியம் கொள்வதற்காக நம்முடைய ஆண்டவராகிய இயேசு கல்வாரி சிலுவையில் மரித்துத் தமது மரணத்தின் மூலம் யாவும் செய்து முடித்தார். பாவத்தினால் இழந்த யாவும், வீழ்ச்சியின் விளைவுகள் யாவும் அவரால் சரி செய்யப்பட்டது. விசுவாசிக்கிற நாம் அவருக்குச் சமீபமாகக் கொண்டு வரப்பட்டோம். அவருக்குச் சமீபமானோம் என்றால் என்ன? இது ஏழுவகை காரியங்களைக் குறிப்பிடுகின்றது.

**1. நாம் மறுபடியும் பிறந்து, நித்திய வாழ்வைப் பெற்றுள்ளோம்.**

(வசனம் 1,5) மறுபடியும் பிறத்தல் என்கிற அற்புதத்தின்மூலம், பாவத்திலே ஆவிக்குரியபடி செத்தவர்களாக இருந்த நாம் உயிர்ப்பிக்கப்பட்டோம். (யோவான் 3:3,5) நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவுடனே, அவரை நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டவுடனேயே (யோவான் 1:12) அந்த வேளையிலேயே நாம் தேவனாலே பிறக்கிறோம் (யோவான் 1:13) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடனே நாம் நித்திய ஜீவனை உடையவர்களாகிறோம். (1யோவான் 5:11,12) அவரது தெய்வீக சுபாவத்திற்குப் பங்காளிகளாகின்றோம் (2பேதுரு 1:4)

**2. நாம் உன்னதங்களிலே கிறிஸ்து இயேசுவுக்குள் உட்கார உயர்த்தப்படுகிறோம்.**

(வசனம் 7) இதற்கு என்ன அர்த்தம்? நாம் கிறிஸ்துவுடனேகூட உன்னதங்களிலே உட்காருகிறோம் என்பது இதன் பொருள் அல்ல. நாம் 'கிறிஸ்து இயேசுவுக்குள்' உன்னதங்களிலே உட்காருகிறோம். அதாவது நாம் விசுவாசத்தினாலே கிறிஸ்துவிடம், மகிமையின் மேன்மையான இடத்திற்கு உயர்த்தப்பட்டு, அவரோடு நாமும் இணைக்கப்படுகிறோம். மிகவும் கீழான அடிமட்டத்திலிருந்த நாம் கிறிஸ்துவில் மேலான உயரத்திற்கு உயர்த்தப்பட்டோம்! கிருபையினாலே நமக்குக் கிடைத்த உயர்வு இது எனலாம். இப்போது நமது குடியுரிமை பரலோகத்திலுள்ளது (பிலிப்பியர் 3:20)

**3. நாம் அவரது கிருபையினாலே இரட்சிக்கப்படுகின்றோம்**

(வசனங்கள் 8-10) 'இரட்சிக்கப்படுகின்றோம்' என்பது எவ்வளவு மேலான வார்த்தை! கிறிஸ்துவில் நாம் விசுவாசம் வைக்கும்போது நமக்குக்கிட்டும் எல்லா ஆசீர்வாதங்களையும் உள்ளடக்கினதே இந்த வார்த்தை! வசனங்கள் 8 முதல் 10 வரை படிக்கும்போது 1). இரட்சிப்பு நிகழ்காலத்துக்குச் சொந்தமானது. 2). இது கிருபையினால் மட்டுமே கிடைப்பது. 3). விசுவாசத்தினால் மட்டுமே கிடைக்கும் ஈவு இது. 4). இது 'நற்கிரியைகளைச் செய்கிறதற்காகக்' கொடுக்கப்பட்டுள்ளது.

**4. நாம் கடவுளோடு ஒப்புரவாகி சமாதானமுள்ளோராயிருக்கின்றோம்.**

(வசனங்கள் 14-17) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சிந்துதலினால் முன்னே விரோதிகளாக இருந்த

நாம் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டோம். கிறிஸ்துவின் மூலமாக எல்லாவிதமான இன, சமுதாயத் தடைகள் யாவும் தகர்த்தெறியப்பட்டன என்பது ஆசீர்வாதமான உண்மை. ஆனால் இவைகள் எல்லாவற்றையும்விட மேலான தடை நமக்கும், கடவுளுக்கும் நடுவேயுள்ளதுதான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாயும், அவர் செய்து முடித்த கிரியையின் மூலமாயும் மட்டுமே இத் தடையை முழுமையாக நீக்க முடியும். வசனம் 14 இல் கூறப்பட்டுள்ள "அவரே நம்முடைய சமாதானகாரணர்" என்கிற சொற்களைத் தியானித்து ரோமர் 5:1 ஐ ஒப்பு நோக்குக.

**5. நாம் கடவுளோடு ஒரு புதிய உறவுக்குள் கொண்டுவரப்பட்டோம்.**

(வசனம் 18) இந்த வசனத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் ஆராய்வது பயனுள்ளது. "அவர் மூலமாய்" என்பது நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பது. "இரு திறத்தார்" என்பது யூதரையும், புறஜாதியாரையும் குறிப்பிடுவது. சிலாக்கியம் என்பது வரவேற்பைக் குறிக்கும் சொல். "ஒரே ஆவியினாலே" என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்குஞ்சொல். "பிதாவினிடத்தில்" என்று கூறப்பட்டுள்ளதையும் பார்க்கவும். நாம் கடவுளிடம் சேர்ந்தவுடனே, கடவுள் பரிசுத்தமானவர் என்பதோடு, நீதியுள்ள கடவுள் என்றும், வல்லமையுள்ள சிருஷ்டிகர் என்றும் அறிகிறோம். ஆனால் அவரோ கிருபையும், அன்புமுள்ள நமது பரமபிதா.

**6. நாம் கடவுளின் வீட்டாராகின்றோம்.**

(வசனம் 19) "தேவனுடைய வீடு" என்பது திருச்சபை. திருச்சபையின் உறுப்பினராக நாம் மாறுவது எப்படி? ஆவியானவரின் ஞானஸ்நானத்தினால் (1கொரிந்தியர் 12:13). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து திருச்சபையின் அஸ்திபாரம் (1கொரிந்தியர் 3:11) ஆனால் இங்கு பவுலடியார் அப்போஸ்தலரும், புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் சபைக்கு அஸ்திபாரம் என்கிறார். ஏனெனில் அவர்களது ஊழியத்தின் பலனாக, சபையானது "இசைவாய் இணைக்கப்பட்டு", பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. (வசனம் 21)

**7. நாமுங்கூட கடவுளின் வாசஸ்தலமாகக் கட்டப்படுகிறோம்.**

(வசனம் 22) சபை என்பது கடவுளின் பரிசுத்த ஆலயம். பரிசுத்த ஆவியானவரால் கட்டப்படுவது. விசுவாசிகள் என்னும் ஜீவனுள்ள கற்களைக் கொண்டு காலங் காலமாகக் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் கடவுளின் ஆலயம் கட்டப்பட்டு முடிவடையும். அப்பொழுது கிருபையின் காலம் முடிவுக்கு வரும். நாம் அவரிடத்திற்கு நடுவானில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவரது பிரசன்னத்தில் நம்முடைய ஆண்டவரோடு என்றென்றும் வாழுவோம் (1தெசலோனிக்கேயர் 4:15-17) "ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டிக் கட்டப்பட்டு" வருகிறோம் என்று சபையைப் பற்றிக் கூறியுள்ளதைக் கவனிக்கவும். ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் அவரது ஆலயம் என்பது எவ்வளவு உண்மை!. 1கொரிந்தியர் 6:19 பார்க்கவும்.

## பாடம் 4 திருச்சபையைப் பற்றிய ஏழு உண்மைகள்

**(வேதபகுதி எபேசியர் 3:1-12)**

இந்தப் பகுதியில் திருச்சபையைக் குறித்த ஏழு உண்மைகள் கூறப்பட்டுள்ளன. இதை நாம் படித்தறிவது மிகவும் இன்றியமையாததாகும்.

**1. திருச்சபை பற்றிய இரகசியம்.**

'இரகசியம்' என்கிற பதம் 3,5,11 வசனங்களில் உள்ளது. புரியாத ஒன்று அல்லது அறியப்படாத ஒன்று என்பது இதன் பொருளல்ல. இது ஒரு தெய்வீக இரகசியம், யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமோ அவர்கட்கு மட்டும் வெளிப்படுவது. வசனம் 3ஐப் படித்து, 1கொரிந்தியர் 2:7-12 வரை ஒப்பிடுக. சபையைக் குறித்த உண்மை, சிறப்பான வெளிப்பாடாக முதன்முதல் பவுலுக்கு அளிக்கப்பட்டது. கடவுளால் அவருக்கு அருளப்பட்ட வெளிப்பாட்டைத் தவிர சபையைப்பற்றிய இரகசியத்தை யுகங்களின் அடிப்படையில் அவர் அறியவில்லை. அதேபோன்று பரிசுத்த ஆவியானவரின் விளக்கமும், உதவியுமின்றி நாமுங்கூட இந்த இரகசியத்தின் முக்கியத்துவத்தை அறிய இயலாது. இதைக் குறித்து மேலும் அறிய ரோமர் 11:25, 1கொரிந்தியர் 15:51, எபேசியர் 3:3-5; 6:19,20 1தீமோத்தேயு 3:16 படிக்கவும்.

**2. திருச்சபை என்பதின் பொருள்.**

திருச்சபை என்று நாம் கூறும்போது எதைக் குறிப்பிடுகிறோம்? கடவுள் கூறுவது என்ன? சபைக் கட்டடத்தை நாம் சபையாக கருதுவதில்லை. வசனங்கள் 6,10,11 இல் சபையைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அது ஒரு சரீரம். ஆகவே சபை என்பது கிறிஸ்துவின் சரீரம் - எபேசியர் 4:12,15,16, கொலோசெயர் 1:18ஐப் படிக்கவும். சபை கிறிஸ்துவின் சரீரமாக இருப்பின், அவரே அந்தச் சரீரத்தின் தலையானவர். சபையின் உறுப்பினர்கள் யார்? அவர்கள் எவ்வாறு உறுப்பினராகின்றனர்? தொடர்ந்து பார்க்கலாம்.

**3. சபையின் உறுப்பினர்கள்**

வசனம் 3 இல் சபையைப்பற்றிக் கூறும்போது, அது கிறிஸ்துவின் சரீரம் என்றும், அதிலே யூதரும், புறஜாதியாரும் இணைந்துள்ளனர் என்றும் காணலாம். இதுதான் 'இரகசியம்'. அதாவது யூதரும், புறஜாதியாரும் ஒரே சரீரத்தில் இணைக்கப்படுவது என்பது முற்றிலும் புதுமையான காரியம். அப்படியானால் இந்தச் 'சரீரம்', அதுதான் சபை. அது எவ்வாறு உருவானது? 'சுவிசேஷத்தினாலே' உருவானது (வசனம் 3) அதுவும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினாலே. சுவிசேஷம பிரசங்கிக்கப்படுகையில் பரிசுத்த ஆவியானவர் பாவத்தை உணர்த்தி, மனந்திரும்பச் செய்கிறார். யூதரிலும், புறஜாதியாரிலும் ஆத்துமாக்கள் மறுபடியும் பிறந்து. கிறிஸ்துவின் சரீரத்தில் இணைக்கப்படுகின்றனர். 1கொரிந்தியர் 12:13. இதனையே பரிசுத்த ஆவியானவர் இன்றும் செய்து வருகிறார் (அப்போஸ்தலர் 15:13,14). மறுபடியும் பிறந்து, கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் கழுவப்பட்டோர் மட்டுமே, சபையில் அதாவது அவரது சரீரத்தில் உறுப்பினராகின்றனர்

**4. திருச்சபையின் வேலைகள்.**

உலகத்தில் திருச்சபையின் வேலை என்ன? அது இரண்டுவகைப்பட்டது. வசனங்கள் 8 உம் 10 உம் இதைப் பற்றிக் கூறுகின்றன. ஒன்று இவ்வுலகில் திருச்சபையின் ஊழியமும், நோக்கமும் மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதாகும். மற்றொன்று உன்னதங்களிலுள்ள தேவதூதர்களுக்கும் மறைவான அதிகாரங்களுக்கும் "அவரது மகத்துவமான ஞானத்தை வெளிப்படுத்துவது" மாகும். "கிறிஸ்துவிலுள்ள அறிய இயலாத ஐசுவரியம்" என்பதும், "கடவுளின் அநந்த ஞானம்" என்பதுமே சபையின் செய்தியேயன்றி, சன்மார்க்க வாழ்வு, நல்வழிப் போதனை, தத்துவம், அரசியல் போன்றவையல்ல! மத வழிபாட்டிற்கென மக்களைக் கூட்டிச் சேர்ப்பது சபையின்

வேலையன்று. உலகக் காரியங்களுக்காக உலகத்தோடு போட்டி போடுவதும் உலகத்தை மாற்றுவதும் அதன் வேலையன்று. உலகிற்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதே சபையின் மேலான வேலையாகும். மத்தேயு 28:19

**5. திருச்சபையின் ஊழியங்கள்**

பவுல் திருச்சபையின் ஊழியராக அல்லது சபையின் போதகராக இருப்பதனால், சுவிசேஷத்திற்கு ஊழியக்காரரானார் என்று வசனம் 7 இல் கூறுகிறார். ஊழியக்காரன் என்கிற சொல் இங்கு அதிகார தோரணையில் கூறப்படவில்லை. திருச்சபையின் உண்மையான எல்லா உறுப்பினரும் சபையின் ஊழியரே. சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு அவர்களும் பொறுப்புள்ளோர் என உணர்ந்து அவர்கள் பங்கை நிறைவேற்ற வேண்டும். நாமுங்கூட எவ்வாறு ஊழியக்காரராகின் றோம் என்பதைக் கவனித்துப் பார்க்கவும். அவருடைய கிருபையினாலே இந்த சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன் என்று பவுல் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (வசனம் 7) ஊழியக்காரர் எவ்வாறு உருவாகின்றனர் என்று கேட்டால், கடவுள் அவர்களை உருவாக்குகிறார் என்று கூறலாமே. எபேசியர் 4:12,13 ஒப்பிட்டுப் பார்க்க.

**6. திருச்சபையின் அடையாளங்கள்.**

சபையின் உறுப்பினராக இருக்கும் ஆண், பெண், யூதர், புறஜாதியார் போன்றோரின் சில பண்புகளை இந்த வேதபகுதியில் காணலாம். அவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்கள் எதை விரும்புகிறார்கள்? கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரிடமுள்ள ஐந்து பண்புகளைக் காணலாம். 1). பிடிபட்டவர்கள், நாம் ஆண்டவர் இயேசுவுக்கெனக் கட்டப்பட்ட அடிமைகளாக இருக்கிறோம் (வசனம் 1) 2). ஐக்கியம் - வசனம் 3 இல் 'உடன் சுதந்தரரும்', 'உடன் பங்காளிகளும்' என்ற பதங்கள் நாம் கிறிஸ்துவுக்குள் பங்காளிகள் என்பதை நினைப்பூட்டுகறது. 3). தாழ்மை (வசனம் 8) 4). சாட்சி (வசனம் 8) 5). ஏற்றுக் கொள்ளப்படல் (வசனங்கள் 11,12). வசனம் 12 இல் வரும் *'அவருக்குள்'*, *'திடநம்பிக்கை'*, *'தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம்'* போன்ற வார்த்தைகளைக் கோடிட்டு வைத்துக் கொள்க.

இந்தக் காரியங்களுக்குத் தகுதியானோர் யார்? நம்முடைய சொந்த பலத்தினால், நமக்கு விடுக்கப்பட்ட இந்த மேலான அழைப்பை நிறைவேற்ற இயலுமா? முடியாது! கடைசியாக ...

**7. திருச்சபையின் வலிமை**

இது வசனம் 7 இல் "தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே" என்ற சொற்களால் குறிப்பிடப் பட்டுள்ளது.

இன்றைய திருச்சபையின் சாட்சி வலுவற்றதாகவும், பயனற்றதாகவும் இருக்கிறது. அநேக கிறிஸ்தவர்கள் அரை மனதுடையோராயும் இருப்பதினால் திருச்சபை வீழ்ச்சியடைந்து முடிவில் அழிந்து போகும் என்று கருதும் மக்கள் பலருண்டு. ஆனால் திருச்சபை அழியாது. ஏனெனில் அதை ஆரம்பித்தவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. அவரே அதின் அஸ்திபாரம், அவரே அதைக் கட்டுபவர். பூமியிலுள்ள எந்த வல்லமையும், பாதாளத்தின் வாசல்களும் சபையை மேற்கொள்வதில்லை என்று அவரே வாக்களித்துள்ளார். மத்தேயு 16:13-18, 1கொரிந்தியர் 3:11 பார்க்கவும்.

## பாடம் 5 **அழைப்புக்குப் பாத்திரராக நடவுங்கள்**

## (வேதபகுதி எபேசியர் 4:1-3; 17-26)

நாம் இந்தக் கடிதத்தின் இரண்டாம் பகுதிக்கு வந்துள்ளோம். முதல் மூன்று அதிகாரங்கள் போதனைகள். அவை 'கிறிஸ்துவுக்குள்' நமது நிலையைக் கூறுகிறது. அதிகாரங்கள் 4 முதல் 6 வரை நடைமுறையில் நாம் சாதிக்க வேண்டியதைப் பற்றிக் கூறுகிறது. அவை இவ்வுலகில் நம்முடைய நிலை என்னவென்பதை வலியுறுத்துகின்றன. போதனைகள் நம் கடமையைக் கூறுகின்றன. நம்முடைய போதனை, நமது சாதனையில் வெளிப்பட வேண்டும். எப்போதும் நாம் தவிர்க்க வேண்டிய இரண்டு அபாயங்கள் உண்டு (1) கடமைக்குத் தொடர்பில்லாத கோட்பாடுகளைப் போதிப்பது - இது நம்மைப் புத்திசாலியாகக் காட்டும். ஆனால் செத்த ஆசாரம் போன்றது. (2) கோட்பாடுகளற்ற கடமையைப் போதிப்பது - இது மோலோட்டமானது, தவறு செய்ய வழி நடத்தும் போலியான வளர்ச்சியாகும்.

அப்போஸ்தலனாகிய பவுல், இக்கடிதத்தின் பிற்பகுதியை எவ்வாறு ஆரம்பிக்கிறார் என்பதை வசனம் 1 இல் பாருங்கள். அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடக்க வேண்டுகிறார். இரட்சிக்கப்பட்ட மனிதனின் முதல் அடையாளம் மாறுபட்ட வாழ்க்கையே. இது இதற்குமுன்பு எபேசியர் 2:2-,4; 4:17-19 வரை கூறியுள்ளதுபோல இருந்தது. ஆனால் தற்போது எவ்வளவு பெரிய மாறுதல் ஏற்பட்டுள்ளது!

### 1. தகுதியுள்ள வாழ்வு நடத்த உந்தப்படுதல்

ஒரு தகுதியுள்ள வாழ்வு நடத்த நம்மை நெருக்கி ஏவுவது எது? வசனம் 1 இல் கூறப்பட்டுள்ளதுபோல அன்பான, கரிசனையுள்ள ஒரு வேண்டுதல் மூலம் நாம் இதற்காக உந்தப்படுகிறோம். இந்த எபேசியரைப் பவுல் கிறிஸ்து வினிடம் வழிநடத்தினார். இப்பொழுது சோர்வூட்டும் சிறைச்சாலையிலிருந்து, ஆவிக்குரிய தம்முடைய பிள்ளை கட்கு, "...நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடவுங்கள்" என்று எழுதுகிறார். அதாவது உங்கள் நடக்கையானது கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அழைக்கப்பட்ட மேலான அழைப்புக்கு இசைந்ததாக இருக்க வேண்டும் என்பதே. பவுல் எழுதியுள்ள இந்த வேண்டுகோளின் பின்னணியில், 'பாத்திரராக நடவுங்கள்' என்று வேண்டுகிற நமது அன்பான ஆண்டவரின் குரலையும் கேட்க முடிகிறது. இந்த வேண்டுகோளுக்கு நாம் பதிலளிக்கப் போகின்றோமா? அல்லது கிறிஸ்துவுக்கு இழிவு கொண்டுவரும் ஒரு வாழ்க்கை வாழப் போகின்றோமா? தெரிந்து கொள்ளவேண்டியது நம்முடைய பொறுப்பு. அவர் நம்மில் அன்புகூர்ந்து தம்மைத் தாமே நமக்காக ஒப்புவித்தார். (கலாத்தியர் 2:20). அவரது கட்டளைகட்கு கீழ்ப்படிந்து, அவரைப் பிரியப்படுத்தும் ஒரு வாழ்க்கை வாழ அவரது அன்பு நம்மை நெருக்கி ஏவவில்லையா? 2கொரிந்தியர் 5:14 படிக்கவும்.

### 2. தகுதியுள்ள வாழ்க்கையின் பண்புகள்.

ஏனோக்கு (ஆதியாகமம் 5:22-24) ஆபிரகாம் (ஆதியாகமம் 24:40)போன்ற பல்வேறு பரிசுத்தவான்கள் ஆண்டவரோடு நடந்தார்கள் என்று நாம் பழைய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். இதே கருத்து, புதிய ஏற்பாட்டில், "சீராய் நடக்கக் கடவோம்" (ரோமர் 13:13) என்றும், "கவனமாய் நடக்க வேண்டும்" (எபேசியர் 5:15, 2கொரிந்தியர் 5:7; கலாத்தியர் 5:16; கொலோசெயர் 2:6 1யோவான் 1:7 3யோவான் 3) என்றும் பல்வேறு நடைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். இந்த வேத வசனங்கள் யாவும், தகுதியுள்ள இந்த வாழ்வுக்குரிய அடையாளங்கள் அல்லது பண்புகளைப்பற்றிக் கூறுகின்றது. நமக்குரிய வேத பகுதியில் இவ் வாழ்வுக்குரிய வேறு ஐந்து பண்புகளைப் பார்க்கலாம்.

**(1). தகுதியுள்ள இந்த வாழ்வு பரலோக வாழ்வு.** (4:1) "...அழைக்கப்பட்ட அழைப்பு" என்று கூறப்பட்டுள்ளது. நம்முடைய அழைப்பு, 'பரம அழைப்பு' (எபிரெயர் 3:1, பிலிப்பியர் 3:14) எனவும், 'பரிசுத்த அழைப்பு'' (2தீமோத்தேயு 1:9) என்றும் கூறப்பட்டுள்ளது. பரத்துக்குரிய மக்களாகிய நாம் இந்த பூலோகத்தில் வாழ்கின்றோம். அதற்குத் தகுதியுள்ளோராக வாழ வேண்டும் என்பது - அதாவது நாம் பூலோகத்திலே, பரலோக வாழ்வை வாழவேண்டும் என்பதே இதன் பொருள்.

**(2). தகுதியுள்ள வாழ்வு என்பது தாழ்மையுள்ள வாழ்வு** (வசனம் 2). தாழ்மை என்பது சுயநலமற்ற, சுயத்திற்கு இடமளிக்காதது எனலாம். மத்தேயு 11:29, பிலிப்பியர் 2:3, தீத்து 3:2, யாக்கோபு 1:21 பார்க்கவும். அதாவது 'குற்றம் பாராத ஆவி' என்பதே மூல வார்த்தையின் பொருளாகும். இதுதான் தாழ்மை - ஆகவே 1பேதுரு 5:6 ஐ பின்பற்றுங்கள்!

**(3). தகுதியுள்ள வாழ்வு என்பது பயனுள்ள வாழ்வு** (வசனம் 2). 'நீடிய பொறுமை' என்பதற்கு 'அமைதியான (சலனமற்ற) உள்ளத்தோடு சகித்துக் கொள்ளுதல்' என்று பொருள் கூறலாம். ஆம், நாம் பொறுமையற்றவர்களாயும், சாந்தமற்றவர்களாயும், குறைகாண்போராயும் இருக்கக்கூடாது! கொலோசெயர் 3:13 இல், 'ஒருவரையொருவர் தாங்கி....' என்று கூறுவதும் இதை விளக்கும் சொல். மற்ற மக்கள் தங்களுக்கு வேண்டாமென்று தள்ளிவிட்டதை நாம் அன்பினாலே தாங்கிக் கொள்வது என்பதே இதன் பொருள். இவை யாவற்றிற்கும் ஊக்குவிக்கும் சக்தியாக இருப்பது அன்பு எனலாம். எபேசியர் 5:2 இதைத் தெளிவுபடுத்தும்.

**(4). தகுதியுள்ள வாழ்வு என்பது கடினமான வாழ்வு** (வசனம் 3). "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்று கூறப்பட்டுள்ளது. நாம் முயற்சி எடுக்க வேண்டிய காரியத்தைப் பவுல் இங்கு கூறுகிறார். முயற்சிக்குக் கடின உழைப்பும், பொறுமையும், பிரயாசமும் தேவை. விசுவாசிகள் யாவரையும், கிறிஸ்துவின் சரீரத்திலே, கடவுள் அற்புதமாக இணைத்துள்ளார் (வசனங்கள் 4-6) நமக்குள்ளே இருக்கும் பரிசுத்த ஆவியானவர், நமக்குள்ளே உண்மையான ஒருமைப்பாட்டை உண்டாக்கு கிறார். சரீரத்தின் அங்கமாக இருக்கும் நம்முடைய பொறுப்பு, இந்த ஒருமையைக் காத்துக் கொள்வதாகும். - ரோமர் 12:18 படிக்கவும்.

**(5). தகுதியுள்ள வாழ்வு என்பது, பரிசுத்தமான வாழ்வு** (வசனம் 3) இந்த வசனத்தில் 'ஆவியின்' என்ற பதம் பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுகிறது. நமக்குள்ளே வாசம் செய்யும் அவரை நாம் எளிதில் துக்கப்படுத்த இயலும் (எபேசியர் 4:30). நாம் தொடர்ந்து அவரது கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் (எபேசியர் 5:18).

வசனங்கள் 17 முதல் 26 வரை, நாம் இந்த பரிசுத்த வாழ்வு நடத்தத் தேவையான, நாம் கீழ்ப்படிய வேண்டிய ஐந்து கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன (1தெசலோனிக்கேயர் 2:10)

1. வசனங்கள் 17-19 "இனி நடவாதிருங்கள்"
2. வசனம் 22 "களைந்து போடுங்கள்"
3. வசனம் 24 "தரித்துக் கொள்ளுங்கள்"
4. வசனம் 25 "களைந்து விடுங்கள்"
5. வசனம் 26 "செய்யாதிருங்கள்"

**3. தகுதியுள்ள வாழ்வின் முடிவு**

இந்த பூமிக்குரிய வாழ்வு எவ்வளவு காலம் செல்லும்? இது எங்கு முடியும்? எவ்வாறு முடியும்? வசனம் 11. இதற்குப் பதிலளிக்கும்! பூரண மனிதனாவது எவ்வளவு மகிமையுள்ளது!

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மா இராஜாவே வந்திடுவார்
அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனைச் சந்திப்போமே எக்காள சத்தம்

## பாடம் 6 **உன்னதத்திற்கு ஏறிச்சென்ற ஆண்டவர் அருளும் வரங்கள்**

***(வேதபகுதி: எபேசியர் 4:4-16)***

எபேசியர் 4:4-6 வரையுள்ள பகுதியில், விசுவாசிகளை ஒருமைப்படுத்தும், கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை உண்மைகள் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. சபையாகிய, கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு வரங்களைப்பற்றி பவுலடியார் 4:7-16 வரையுள்ள வசனங்களில் கூறியுள்ளார். இது நம் ஆவலைத் தூண்டும் காரியம். ஆவிக்குரிய வரங்கள் பற்றி நாம் தெளிவாக அறிய, இதைப்பற்றிக் கூறும் புதிய ஏற்பாட்டிலுள்ள மூன்று பகுதிகளைப் படிக்க வேண்டும். அவை ரோமர் 12:3-8, 1கொரிந்தியர் 12:4-11, (அதிகாரங்கள் 12,13,14 ஐ படிப்பது நன்று) 1பேதுரு 4:10-11 என்பவை. இப்போது நாம் எபேசியர் 4:4-16 வரைக் கூறப்பட்டுள்ள போதனைகளை மட்டும் படிக்கலாம்.

### 1. வரங்களை *அளிப்பவர்* யார்?

வசனங்கள் 7,8,13 இல் பதில் கூறப்பட்டுள்ளது. தமது சரீரமாகிய சபைக்கு வரங்களை அளிப்பவர் கிறிஸ்து என்று கூறப்பட்டுள்ளது. குறிப்பாக வசனம் 8ஐப் பார்க்கவும். இது சங்கீதம் 68:18லிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடெழுந்து, பரத்திற்கு ஏறிப்போனார். அவர் பாவத்தையும், மரணத்தையும், பாதாளத்தையும் வென்று, பரத்திற்கு ஏறிப்போனார். “சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டு போனார்” (இவர்கள் யாவரும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள். இவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்வரை பரதீசில் இருந்தவர்கள்). பின்னர் அவர் சபைக்கு அருளும்படி பிதாவிடமிருந்து வரங்களைப் பெற்றார். இந்த வரங்களை அவர் யாருக்குக் கொடுக்கிறார்?

### 2. வரங்களைப் *பெற்றுக் கொள்வோர்* யார்?

கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையிலுள்ள ஒரு சிலருக்கு மட்டுமே இந்த ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்படு கின்றதா? வசனம் 7 ஐப் பார்க்கவும். அதிலே “நம்மில் அவனவனுக்கு” என்கிற வார்த்தைகளைக் கோடிட்டுக் கொள்க. இது ஒவ்வொரு, உண்மையான விசுவாசியைக் குறிக்கின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், விதிவிலக் கின்றி, உயிர்த்தெழுந்த, உயர்த்தப்பட்ட ஆண்டவரிடமிருந்து சில வரங்களைப் பெற்றுக் கொள்கிறான் - ரோமர் 12:4 பார்க்கவும். அதிலே, நம் ஒவ்வொருவருக்கும் ஒரு ‘தொழில்’ உண்டு என்று கூறியிருக்கக் காணலாம். 1கொரிந்தியர் 12:4,5; 1பேதுரு 4:10 படிக்கவும். “என்னால் எதுவும் செய்ய இயலாது” என்று ஒரு கிறிஸ்தவன் கூறுவது தவறு. “என்னுடைய ஊழிய காலம் முடிந்துவிட்டது” எனக் கூறுவதும் தவறு. “கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக” ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது அற்புதமான உண்மை! நாம் பயன்படுத்தும்படி நமக்கு அளிக்கப்பட்ட வரங்களின் தன்மை, அளிக்கப்பட்ட கிருபையின் அளவைத் தீர்மானிக்கிறது. போதகருக்குப் போதிக்கும் கிருபையும், ஜெபவீரனுக்கு ஜெபிக்கும் கிருபையும், உதவிக்காரருக்கு உதவி செய்யக் கிருபையும் அளிக்கப்பட்டு வருகின்றது (1கொரிந்தியர் 12:28) இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். எல்லாருக்கும் ஒரே மாதிரியான வரம் அளிக்கப்பட்டுள்ளதா?

### 3. வரங்களில் *வித்தியாசம்* உண்டா?

வசனம் 13 படியுங்கள். ஆண்டவர் தமது திருச்சபைக்கென அளித்துள்ள ஐந்துவகை விசேஷித்த வரங்களைப் பவுல் குறிப்பிட்டுள்ளார். (ஐந்துவகை மக்கள் சிறப்பான வரங்களைப் பெற்றவர்கள்)

1. **அப்போஸ்தலர்**
2. **தீர்க்கதரிசிகள்**

} எபேசியர் 2:20 கூறுகிறது. இவர்கள் திருச்சபைக்கு அஸ்திபாரம் போடுவதற்காகக் கொடுக்கப்பட்டவர்கள்

3, **சுவிசேஷகர்கள்** மனந்திரும்பாத மக்கள் நடுவே ஊழியம் செய்வதற்கென ஏற்படுத்தப்பட் டோர் சுவிசேஷகர் (2தீமோத்தேயு 4:5 பார்க்கவும்).

**4. மேய்ப்பர்கள்** - சபையை மேய்ப்பவர்கள் யோவான் 21:15-17 ஐயும் அப்போஸ்தலர் 20:28 ஐயும் ஒப்பிட்டு நோக்குக. கிறிஸ்தவின் மந்தையிலுள்ள ஆடுகளைப் பராமரிக்கும் ஊழியம் இது.

**5. போதகர்கள்** - கடவுளின் காரியங்களைக் குறித்துச் சபைக்குப் போதிப்பது போதகரின் வேலை. சபை மக்கள் வளர்ந்து, சீரடைவதற்குக் குழந்தைகள் போன்ற இளம் விசுவாசிகட்கு களங்கமற்ற ஞானப்பால் கொடுப்பது (1பேதுரு 2:2), வளர்ந்த விசுவாசிகட்கு பலமுள்ளஆகாரம் (எபிரெயர் 5:14) கொடுப்பதும் இவர்களது வேலை.

மேற்குறிப்பிட்ட வரங்களைத் தவிர வேறு பல வரங்களைக் குறித்து 1கொரிந்தியர் 12:8-11; 14-25 வரையுள்ள பகுதியில் காணலாம். ஒருவேளை உங்களுக்குரிய வரம் அங்குச் சொல்லப்பட்டிருக்கலாம். இந்தப் பகுதியைக் கவனமாய்ப் படியுங்கள். 1கொரிந்தியர் 12:28 இல் 'ஊழியங்கள்' என்கிற வார்த்தை 'உதவிகள்' என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரமும் முக்கியமானது. அவசியமானது. உங்களுடைய வரம் எது? வரங்கள் எதற்காகக் கொடுக்கப்படுகின்றன?

**4. வரங்கள் அளிக்கப்பட்ட *நோக்கம்* யாது?**

கடவுள் இந்த வரங்களைத் தமது சபைக்குக் கொடுத்ததற்கு மூன்றுவகை நோக்கங்கள் உண்டு என்று வசனங்கள் 12,14 இல் காணலாம்.

**1. நம்மை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்த**: வசனம் 12 இல் நாம் இதைக் காணலாம். சபையானது பக்தி விருத்தியடைவதற்கு ஆண்டவர் சபையில் சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் போன்றோரைக் கொடுத்துள்ளார். ஊழியம் முழுவதையும், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர்களால் செய்து முடிக்க முடியாது. சரீரத்தின் அங்கங்களாக, ஊக்கமாகச் செயல்பட பரிசுத்தவான்களைத் தட்டியெழுப்புவதே இவர்களது வேலை.

**2. நாம் வளர்வதற்கு உதவிசெய்ய** - வசனம் 12 இல் "...பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு" என்று கூறப்பட்டுள்ளது. நாம் ஆவிக்குரிய நிலையில் குழந்தைகளைப் போலிருப்பதைக் கடவுள் விரும்பவில்லை. ((1கொரிந்தியர் 3:1-3) நாம் வளர வேண்டுமென்று அவர் விரும்புகிறார் (2பேதுரு 3:18). சபையின் உறுப்பினர்கள் வளரவேண்டும். இதற்கெனவே அவர் சபைக்கு வரங்கள் பலவற்றை அளித்துள்ளார். வசனம் 15ஐப் படிக்கவும்.

**3. தீமையினின்று நம்மைப் பாதுகாப்பதற்காக** கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பதற்காக (மத்தேயு 24:24) எதிராளி எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். நாம் அவனது கள்ளத் தீர்க்கதரிசிகளிடமிருந்து காக்கப்படவும் (மாற்கு 13:22) அவர்களது தீங்கு விளைவிக்கும் கள்ள உபதேசத்திலிருந்து விலகி (2பேதுரு 2:1) இருக்க வேண்டும். இதற்கென ஆண்டவர் சபையிலே போதகர்களை ஏற்படுத்தியுள்ளார். அப்பொழுதுதான் நாம் பிசாசின் கள்ள உபதேசங்களையும், பொய்களையும் கண்டறிந்துகொள்ளப் போதிக்கப் படுவோம். ஆண்டவர் தமது சபைக்கு வரங்களைக் கொடுத்ததற்குரிய மேலான காரியம் வசனம் 11 இல் கூறப்பட்டுள்ளது. அதிலே வரங்கள் எவ்வளவு காலம் இருக்கும் என்று காணலாம்.

**5. வரங்களின் *காலவரம்பு* எவ்வளவு?**

சபைக்கு இந்த வரங்கள் எவ்வளவு காலத்திற்குத் தேவை? வசனம் 11 இல், 'வரைக்கும்' என்று வரையறை கூறப்பட்டுள்ளது. சரீரமாகிய திருச்சபையின் தலையாகிய கிறிஸ்துவுடன் நாம் இணைக்கப்படும்போது அவரே நமக்கு எல்லாமுமாயிருப்பார் (எபேசியர் 1:23) அப்பொழுது வரங்களுக்கு இடமில்லை, தேவையுமில்லை. அவரே நமக்கு எல்லாமுமானவர்.

## பாடம் 7 **ஆவிக்குரிய போதை**

### *(வேதபகுதி எபேசியர் 5:1-21)*

எபேசியர் 5:18 இல் மதுபோதையிலுள்ள ஒரு மனிதனை, பரிசுத்தஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட மற்றொரு மனிதனுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகத்தின் திராட்சைத் தோட்டத்திலிருந்து வரும் திராட்சரச மதுவைக் குடிக்கக்கூடாது. ஆனால் பரலோகத் திராட்சைத் தோட்டத்திலிருந்து மெய்யான திராட்சைச் செடியின் புதிய திராட்சை (யோவான் 15:1) இரசத்தைக் குடிக்கிறோம். இவ்வசனத்தில் வரும் இரண்டு முரண்பட்ட கட்டளைகளைக் கூறுவதற்கு ஒரு நோக்கம் உண்டு. கடவுள் திராட்சை இரத்தத்தில் வாசம் செய்கிறார் என்று புறஜாதியார் நம்புகின்றனர். ஆகவே திராட்சைரச மது குடிப்பதை அவர்களது சடங்குகளில் ஒன்றாக்கி விட்டனர். இதனால் ஒரு மனிதன் தன்னை நிரப்பியுள்ள கடவுளின் ஆளுகைக்குள்ளாக இருப்பதாக நம்புகிறான். பவுல், எபேசியக் கிறிஸ்தவர்களுக்கு இந்த அஞ்ஞான மார்க்கத்தாரின் நம்பிக்கையை நினைப்பூட்டி மெய்யாகவே கடவுளின் ஆளுகைக்குட்படுவது எவ்வாறு என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்க்கையைக் குறித்த சில சத்தியங்களை நாம் தொடர்ந்து இங்கு காணலாம்.

**1. ஆவியானவரால் நிரப்பப்படுதல் என்பது ஒரு கட்டளை.** எபேசியர் 5:18 இல் இரண்டு கட்டளைகள் கூறப்பட்டுள்ளன. இரண்டுக்கும் கீழ்ப்படிதல் அவசியம். அவை இரண்டும், நமது விருப்பத்திற்கு விடப்படாமல் கட்டாயம் செய்ய வேண்டியவை.

**2. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஆவியானவரால் நிரப்பப்படுவது கட்டளையாகவுள்ளது.** பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுகிற அனுபவம் விசுவாசிகளில் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாருக்கு மட்டும் கொடுக்கப்படாமல், மறுபடியும் பிறந்த ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ‘அவர்களெல்லாரும்’ என்ற வார்த்தையை அப்போஸ்தலர் 2:4, 4:31 இல் கவனிக்கவும்.

**3. ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுவது வேறு, அவரால் நிரப்பப்படுவது வேறு.** எபேசு பட்டணக் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ‘முத்திரை’ போடப்பட்டிருந்தனர் (எபேசியர் 1:13, 4:30). அவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்தார் என்பது இதன் பொருள். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் அவர் இவ்வாறே வாசம் செய்கிறார் (1கொரிந்தியர் 6:19) அவர் நமக்குள்ளே வாசம் பண்ணலாம். ஆனால் நம்மை அவர் முழுமையாக ஆட்கொள்வதில்லை (நாம் நிரப்பப்படுவதில்லை) அவர் நம்மை ஆட்கொள்ளாமல், நாம் அவரை நமக்குள்ளே வைத்திருக்கலாம்.

**4. ஆவியானவரால் நிரப்பப்படுதல் என்பது வரம்பு மீறிய செயலன்று.** ‘நிறைந்து’ என்ற சொல் ‘போதையைக்’ குறிக்கும். கடவுளின் ஆவியானவரால் நிரப்பப்பட்ட மக்களே, உலகத்திலே ஆவிக்குரிய நிதானமும், தெளிந்த புத்தியும் உள்ள மக்களாவர். இதற்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு முன்மாதிரி.

**5. கடவுளின் பிள்ளைகட்கு, ஆவியானவரால் நிரப்பப்படுவது என்பது சாதாரண அனுபவமாகும்.** எபேசியர் 5:18, எப்போதும் நிறைந்திருப்பதைப் பற்றிக்கூறுகிறது. தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்ட வாழ்விலும் (எபேசியர் 5:15-21) குடும்பத்திலும் (எபேசியர் 5:22-33, 6:1-4) வேலை செய்கிற இடத்திலும் (எபேசியர் 6:5-9) தம்மை மகிமைப்படுத்தும்படி வாழ வேண்டும். இதற்காக அவர்கள் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும் என்பதே நமக்குரிய கடவுளின் திட்டமாகும்.

**6. ஆவியானவரால் நிரப்பப்படுவது என்பது அவரை நாம் அதிகமாகப் பெறுவது அல்ல,** நாம் அவரில் அதிகமாக நெருங்கி வருகிறோம் என்பதே. பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆள். அவரால் நிரப்பப்படுவது என்றால் நாம் நம்முடைய முழு ஆள்த்துவத்தையும் அவரது முழுமையான கட்டுப்பாட்டிற்கு ஒப்புவிக்கின்றோம் என்பதே பொருளாகும்.

**7. ஆவியானவரால் நிரப்பப்பட்ட மனிதனை நாம் எளிதில் அடையாளம் காணமுடியும்.** ஒரு குடிகாரனை எவ்வாறு மக்கள் எளிதாக அடையாளங்காண முடியுமோ அதேபோன்று ஆவியானவரால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவனையும் அடையாளங்காண முடியும். அவர்களது நடக்கை அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடும்.

.

இருவரது பண்புகளையும் எபேசியர் 5:14-21 வரை கூறப்பட்டிருக்கக் காணலாம். நாம் அவற்றை ஆராய்வோம்

**1. குடிகாரன் போதையில் இருக்கும்போதுதான் மிக நன்றாக இருப்பதாக உணருகிறான்.** கிறிஸ்தவனும் அவ்வாறே! ஆவியானவரால் நிரப்பப்பட்ட அவன் உயிர்ப்பிக்கப் பட்டவனாயும், மகிழ்ச்சி பொங்குகிறவனாகவும் இருக்கின்றான். அவர்கள் மதுபானவெறி கொண்டிருக்கிறார்கள் என்று ஆதிக்கிறிஸ்தவர்களைக் (அப்போஸ்தலர்2:15) குற்றம் சாட்டினார்கள். ஆதிசீடர்கள் எப்போதும் மகிழ்ச்சியாயிருந்தனர் அப்போஸ்தலர் 13:52ஐப் படிக்கவும்.

**2. குடிகாரனை அவன் முகத்தைப் பார்த்தவுடனே அடையாளம் காணலாம்.** ஆவியானவரால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவனையும் அவ்வாறே முகத்தைப் பார்த்தவுடனே கூறிவிடலாம். நம்மில் அநேகருடைய முகங்கள் பிரகாசிப்பதற்குப் பதிலாக இருளடைந்துள்ளது. மோசே (யாத்திராகமம் 34:29), ஸ்தேவான் (அப்போஸ்தலர் 6:15); ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து (லூக்கா 9:29) போன்றோரின் முகங்கள் பிரகாசித்தது போன்று நம்முடைய முகத்தில் தேவஒளி வீசவேண்டும். சங்கீதம் 34:5, 40:3, எபேசியர் 5:19,20ஐப் படிக்கவும்.

**3. குடிகாரனிடமிருந்து வரும் வாசனை அவனைக் காட்டிக்கொடுக்கும்.** கிறிஸ்தவனும் அவ்வாறே காட்டிக்கொடுக்கப்படுவான். குடிகாரனை அவனிடமிருந்து வரும் வாசனை காட்டிக் கொடுக்கும் - இப்போது எபேசியர் 5:2 படித்துப் பாருங்கள். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பிதாவுக்கு முன்பாகவும், உலகத்திற்கு முன்பாகவும் சுகந்த வாசனையாக இருந்தார். ஆவியானவரால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவர்கள் எவ்வித மாறுதலுமின்றி அப்படியே இருக்கின்றனர். நம்முடைய வாழ்வு அழகாக, கிருபையுள்ளதாக, சாந்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, கடவுள் ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்வை நமக்குக் கொடுத்துள்ளார்.

**4. குடிகாரனை நாம் அவனது நடையினால் கண்டறியலாம்.** ஆவியானவரால் நிரப்பட்ட கிறிஸ்தவனையும் அவ்வாறே கண்டறியலாம். நம்முடைய நடை என்பது வாழ்க்கைமுறை. எபேசியர் 5:15 கூறுவதுபோல, குடிகாரன் கவனமாய் நடக்கமாட்டான். ஆனால் ஆவியானவரால் நிரப்பப்பட்ட மனிதனோ, ஒழுங்காகவும், சீராகவும் நடப்பான். குடிகாரனால் நேராக நடக்க முடியாது. ஆனால் ஆவியானவரால் நிரப்பப்பட்டவனோ, கடவுள் முன்பாகவும், உலகத்திற்கு முன்பாகவும் எல்லாவற்றிலேயும் நேர்மையாகவும், உண்மையாகவும் நடக்க இயலும்.

**5. குடிகாரனை அவனது பேச்சு காட்டிக்கொடுக்கும்.** ஆவியானவரால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவனும் அவ்வாறே! குடிகாரர் பலர் நாத் தடுமாறி பேசுவர். அசுத்தமான, கெட்டவார்த்தைகளையும் பேசுவார்கள். ஆனால் தான் பேசுகிற வார்த்தைகள், பேசுகிற காரியங்கள் போன்றவற்றில் ஆவியானவரால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவன், கவனமாக இருப்பான். சாட்சி கூறுகிறவனாகவும் இருப்பான். அப்போஸ்தலர் 4:20 படியுங்கள்.

**6. தன் செய்கைகட்குக் குடிகாரன் பொறுப்பல்ல.** கிறிஸ்தவனும் அவ்வாறே! குடிகாரன் இழிவான செயல்களைச் செய்தாலும் அவன் அதற்குப் பொறுப்பல்ல. கிறிஸ்தவனும் அவ்வாறே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்போது, அவனால் கொடுக்கமுடியாத ஆவியின் கனியை (கலாத்தியர் 5:22,23) கொடுப்பான். ஆவியானவரே இதைச் செய்கிறார். அப்போஸ்தலர் 3:12 இல் பேதுரு கூறியிருப்பதைப் பாருங்கள்.

**7. ஒரு குடிகாரனை, அவனது நண்பர்களைக் கொண்டு கண்டுகொள்ளலாம்.**ஆவியானவரால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவனும் அவ்வாறே - குடிகாரன் மதுபானக் கடைக்கு வேகமாய்ச் செல்வான். ஆனால் கடவுளின் பிள்ளைகளுடைய ஐக்கியத்தைத் தேடி, ஆவியானவரால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவன் செல்வான். அப்போஸ்தலர் 4:23 பார்க்கவும்.

நாம் ஆவியானவரால் நிரப்பப்படுவது, அதாவது அவரால் ஆட்கொள்ளப்படுவது, ஆளுகைக்குட்படுவது எப்படி? குடிகாரனைப் பாருங்கள். அவன் எவ்வாறு குடிகாரனாகிறான்? குடித்துக், குடித்துக், குடித்துக் கொண்டேயிருப்பதினால்தானே. இப்படிக் குடிக்க மூன்று காரியங்கள் தேவை. **1. மெய்யான தாகம்** (ஏசாயா 44:3, மத்தேயு 5:6, யோவான் 7:37-39 2. **பெரிய கொள்ளளவு** (சங்கீதம் 81:10) 3. **எளிய விசுவாசம்** (லூக்கா 11:13, 1யோவான் 5:14,15.

## பாடம் 8 **கிறிஸ்தவனின் உறவுகள்**

*(வேதபகுதி எபேசியர் 5:22-33, 6:1-19)*

இந்தப்பாடம் மிகவும் முக்கியமானது எனலாம். ஏனெனில், கிறிஸ்தவ வாழ்வில் கணவன், மனைவி உறவு, பெற்றோர், பிள்ளைகள் உறவு, எஜமான், வேலைக்காரர் உறவு எப்படி இருக்க வேண்டுமென்று கூறப் பரிசுத்தாவியானவர் இக்கடிதத்தில் பெரும்பகுதியை எடுத்து வலியுறுத்தியுள்ளார்.

**1. உலகில் மிகவும் அருமையானது கிறிஸ்தவக் குடும்பம்.** கிறிஸ்தவக் குடும்பம் எப்படி இருக்க வேண்டு மென்று கடவுள் விரும்புகிறார் என்றும், அவரது உதவியுடன் நாம் என்ன சாதிக்க முடியும் என்றும் இந்த வேத பகுதியில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**2. கிறிஸ்தவ வாழ்வு முதலாவது குடும்பவாழ்வில் பிரதிபலிக்கவேண்டும்.** தனிவாழ்வு, சமுதாயம், வியாபாரம், தொழில், பொழுதுபோக்கு போன்ற வாழ்வின் உறவுகளில் நாம் நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தைப் பிரதிபலிக்கவேண்டும். வெளி உலகிற்கு இதைக் காட்டும் முன்பு வீட்டிற்குள்ளே இதைக் காட்ட வேண்டும். மாற்கு 5:19, லூக்கா 8:39 படிக்கவும். நம்முடைய குடும்பத்திலே நம் வாழ்வும், வார்த்தையும் பேசவேண்டும். 1தீமோத்தேயு 5:4, தீத்து 2:5 பார்க்க.

**3. குடும்பச் சூழலில் சீரான வாழ்வு வாழ்வது கடினம்.** ஏனெனில் வீட்டில் நாம் எளிதில் கருத்து வேறு பாடு, எதிர்ப்புகளுக்குள் செல்லவேண்டும். பூசலும், பிணக்கும் நிறைந்த குடும்ப வாழ்வில் ஒற்றுமையாக வாழக் கடவுளின் திட்டத்தையும், வெற்றிக்கான அவரது வழியையும் நாம் கற்றுக் கொண்டாலன்றி சீரான வாழ்வு நடத்துவது கடினம்.

**4. மகிழ்ச்சியான, ஒற்றுமை நிறைந்த, சமாதானமுள்ள கிறிஸ்தவக் குடும்பமே உலகிற்கு நாம் அளிக்கும் தலைசிறந்த சாட்சியாகும்.** கிறிஸ்தவத்தின் செயல்பாட்டினை, நடைமுறையில் வெளிப்படுத்தும் இடம் நமது குடும்பமாகும். 2இராஜாக்கள் 4:8-10 பார்க்கவும்.

**5. குடும்பத்தில் சீரான கிறிஸ்தவ வாழ்வு நடத்த, கடவுள் தம் பிள்ளைகட்குத் தேவையானவற்றைத் தருகிறார்.** இதற்கெனக் கடவுள் அளிக்கும் ஈவு பரிசுத்தஆவியானவர் எனலாம் எபேசியர் 5:18. குடும்பவாழ்விற் கேற்றபடி நம்மை வழிநடத்தக் கடவுளின் சரியான ஏற்பாடு பரிசுத்தாவியானவரால் நிரப்பப்படுதல் எனலாம்.

குடும்ப வாழ்வில் சரியான உறவு வைக்க, விசுவாசிகள் எவ்வாறு நடக்கவேண்டும்? இதற்கு வசனம் 21இல் பதில் உள்ளது. ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருப்பதே ஓர் இன்பமான, ஒற்றுமை நிறைந்த குடும்பத்தின் இரகசியம் என்று கூறலாம். கர்வத்தினால் எதிர்த்து நிற்பதினாலோ, 'உரிமை' கேட்டுப் போராடுவதினாலோ ஏதும் நடக்காது. ஒருவருக்கொருவர் அன்பு கூர்ந்து, மரியாதை கொடுத்து, உண்மையாயிருந்து, கிறிஸ்துவின் ஆவியுடையவர்களாய் இருக்க வேண்டும். இந்த உறவுகளைக் குறித்து இன்னும் விவரமாகப் படிக்கலாம்.

### 1. ***மனைவிகளே*** **உங்கள் கணவருக்குக் கீழ்ப்படியுங்கள் (5:22-24,33)**

இது மனிதனுடைய யோசனை அல்ல. கடவுளின் ஆலோசனை! மனைவியர் "கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல..." தங்கள் சொந்தக் கணவர்கட்குக் கீழ்ப்படிய வேண்டும். சரீரமாகிய திருச்சபையின தலைவர் ஆண்டவராகிய கிறிஸ்து. அவர் சபையை நேசித்து, போஷித்து, பாதுகாக்கிறார். இதையே கணவன், தன் மனைவிக்குச் செய்ய வேண்டும். அதேபோல மனைவியும், அவளது தலையான, கணவருக்குக் கீழ்ப்படிந்து தன்னை ஒப்புக் கொடுக்க வேண்டும். இது கணவன் மேலானவன், மனைவி கீழானவள் என்று கூறாமல், கடவுள் தமது மேலான ஞானத்தினாலே ஒவ்வொருவருக்கும் நியமித்த பொறுப்பைக் காட்டுகிறது. படைப்பு முதலே கடவுளின் முறை இதுதான். - ஆதியாகமம் 2: 21-23 படிக்கவும். இந்த முறை மாறும்போது, நிலை தவறும்போது அங்கு எப்போதும் பிரச்சினைதான் ஏற்படும்.

**2. *கணவர்களே,* உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள் (5:25-33).**

"கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து......தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" அதே போன்று கணவன், மனைவியிடம் அன்புகூர வேண்டும். அந்த அன்பு சுயநலமற்றதாகவும், தியாகமுள்ளதாகவும் இருக்கவேண்டும். எத்தனைமுறை கணவன் மனைவியைப் பற்றிச் சிந்திக்காமலும், தன் கடமைகளைப் புரிந்து கொள்ளாமலும் இருக்கிறான். இதனால் அடிக்கடி குடும்பத்தில் பிரச்சினை ஏற்படுகிறதல்லவா. கணவன் தன் மனைவியிடம் அன்புகூருவதைத் திருமண வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை போன்றவற்றில் வெளிப்படுத்த வேண்டும். அதாவது அவர்கள் அந்நியோன்யமான தம்பதியர் என்பதை மற்றவர்கள் காண வேண்டும்.

**3. *பிள்ளைகளே* உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் (6:1-3).**

கிறிஸ்தவக் குடும்பத்திற்கான கடவுளின் கட்டளை இது. இப்படிப்பட்ட குடும்பத்தை மட்டுமே அவர் அங்கீகாரம் பண்ணுகிறார். இக்காலப் பிள்ளைகள் வசனம் 2,3 க்குச் செவிகொடுக்க வேண்டுவது எவ்வளவு அவசியம். 2தீமோத்தேயு 3:1-3 வரை காண்க. கடைசிக் காலத்தே நேரிடும் வீழ்ச்சியின் அடையாளங்களில் ஒன்று, பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை என்று அதிலே காண்கிறோம். கீழ்ப்படிதலுக்கெனச் சரியான முன்மாதிரி, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. - லூக்கா 2:51 பார்க்கவும்.

**4. *பெற்றோரே,* உங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்றபடி வளர்ப்பீர்களாக (6:4)**

இந்த வசனம் ஒரு எச்சரிப்போடு தொடங்குகிறது. "உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாதிருங்கள்" என்பதே அது. உபாகமம் 6:6-9 வரை படிக்கவும். "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" என்பது நம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட புனிதமான ஊழியமல்லவா? நீதிமொழிகள் 22:6ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்.

**5. *வேலைக்காரரே,* எஜமான்களுக்குக் கீழ்ப்படியுங்கள் (6:5,6)**

எபேசு பட்டணத்திலே, பெரும்பாலான வீடுகளில் அடிமைகள் இருந்தனர். ஆகவேதான் பரிசுத்த ஆவியானவர் இங்கு எஜமான் - வேலைக்காரன் உறவைப் பற்றியும் கூறியுள்ளார்.வேலைக்காரரிடமிருந்து எவ்வளவு உயர்வான தகுதி எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய பரலோக எஜமானுக்கு வேலை செய்வது போன்று, பூமிக்குரிய எஜமான்களுக்கும் வேலை செய்ய வேண்டும் (வசனம் 5-7). அதாவது நாம் நேரம் பார்க்காமல், கால தாமதமாக வேலைக்கு வராமல் இருக்க வேண்டும். எஜமானது நம்பிக்கைக்குரியவராய் இல்லாமலும், சோம்பேறிகளாயும் இருக்கக்கூடாது என்பதே இதின் பொருள். இப்படிச் செய்யும்போது கடவுள் நமக்குரிய பலனளிப்பார்.

**6. *எஜமான்களே,* வேலைக்காரரின் நல்வாழ்வை கருத்தில் கொள்ளுங்கள் (6:9)**

எஜமான்கள் வேலைக்காரரிடம் எவ்வளவாய் எதிர்பார்க்கிறார்களோ, அந்த எதிர்பார்ப்புக்கேற்ப, , அவர்களது தகுதிக்கேற்ப கொடுக்க வேண்டும். இது நிர்வாகிகட்கேற்ற நல்ல ஆலோசனையெனலாம்.

மகிழ்ச்சியான, பரிசுத்தமான, இசைந்து செல்லும் மனித உறவுகட்குக் கடவுள் தரும் கட்டளைகள் இவை. நாம் எபேசியர் 5:18 இன்படி நடக்கும்போதுதான் இது சாத்தியமாகும். அதாவது கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர், வேலைக்காரர், எஜமான்கள் யாவரும் தங்களைப் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுத்து, அவருக்குக் கீழ்ப்படியும்போது இது சாத்தியமாகும்.

## பாடம் 9 **நமது எதிராளியும், நமது போராட்டமும்**

***(வேதபகுதி எபேசியர் 6:10-19)***

கிறிஸ்தவ வாழ்க்கையைப் பல்வேறு வகையில் உருவகப்படுத்திப் பவுல் இந்தக் கடிதத்தில் கூறியுள்ளார். தனக்குப் பிரியமான கிறிஸ்தவர்களாகிய எபேசியருக்குக் கிறிஸ்தவன் எவ்வாறு வாழவேண்டுமென்றும் பவுல் கூறுகிறார். 2:2; 4:1,17; 5:2, 8,15ஐ ஒப்பிட்டு நோக்குக. அதிகாரங்கள் 5,6 இல் மனைவிகள் (5:22-,,24), கணவர்மார் (5:25- 31), பிள்ளைகள் (6:1-3), பெற்றோர் (6:4), வேலைக்காரர் (6:5-8), எஜமான்கள் (6:9) போன்றோர் எவ்வாறு நடக்கவேண்டும், எவ்வாறு வாழ வேண்டுமென்று கூறியுள்ளார். திடீரென்று அப்போஸ்தலர் தனது உருவகத்தை வேறுவிதமாகத் திருப்பிவிடுவதை அதிகாரம் 6 வசனம் 10 இல் காணலாம். கிறிஸ்தவவாழ்வில் நிமிர்ந்து நிற்க வேண்டிய காரியத்தை அறிமுகம் செய்கிறார். நாம் எதிர்கொள்ள வேண்டிய வல்லமையுள்ள எதிரி உண்டெனவும், நாம் போராடவேண்டிய போராட்டம் உண்டெனவும், “நாம் முற்றும் ஜெயங் கொள்ளுகிற வர்களாக...” (ரோமர் 8:37) இருப்பதற்கு, ‘தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்” என்று ஆலோசனை கூறுகிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்தவான்கள் (எபேசியர் 1:1) சுவிகாரபுத்திரர் (1:6), விசுவாசிகள் (1:13) வேலைக்காரர் (6:5) போர்வீரருங்கூட (6:11) என்று கூறப்பட்டுள்ளோம். 2தீமோத்தேயு 2:3,4ஐ ஒப்பிட்டுப் பார்க்க. போர்வீரராகிய நமக்கு முன்னே தீங்கு உண்டு, போராடவேண்டிய போராட்டம் உண்டு (1தீமோத்தேயு 6:12, 2தீமோத்தேயு 4:7).விசுவாசிகளாகிய நாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். அதை எதிர் நோக்கும்படிக்குத் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, வெற்றியுள்ள கடவுளின் படைவீரராகச் செல்வோம். நாம் முதலாவது இந்தப் போராட்டம் எத்தன்மையுடையதென்றும், தொடர்ந்து எதிராளியின் பண்புகள், மற்றும் கடைசியாக வெற்றியின் இரகசியத்தையும் பற்றிப் படிக்கலாம்.

### 1. நமது போராட்டத்தின் தன்மை

**(1). இது மெய்யான போராட்டம்.** இது உண்மையான எதிரியோடு செய்யும் உண்மையான போராட்டம். ‘எதிர்த்து நிற்க’ என்கிற பதம் வசனம் 11 இல் வருவதைக் காணவும்.

**(2). இது மெய்யான இரு எதிரிகள் நடுவேயுள்ள போராட்டம்.** அவர்கள் யார்? நமது கர்த்தர் (6:10), பிசாசு (6:10) என்போர். ஆண்டவரின் பக்கத்தில் அவரது படையாக நிற்போர், கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள். வசனம் 12 இல் வரும் ‘நமக்கு’ என்கிற வார்த்தை பரிசுத்தவான்களைக் குறிப்பதாகும். அதேபோல சாத்தானின் கூட்டாளிகள் வசனம் 12 இல் கூறப்பட்டுள்ளனர்.

**(3). இது பயங்கரமான போராட்டம்.** இந்தப் போராட்டம் எவ்வளவு பயங்கரமானது என்பதை வசனம் 12 இன் மூலம் அறியலாம்.

**(4). இது மிக நெருக்கமான போராட்டம். மாம்சத்தோடும், இரத்தத்தோடும் போராடுவது போன்ற மெய்யான போராட்டம்.** ஆனாலும் இது அதைவிட பத்தாயிரம் மடங்கு கொடூரமானது (வசனம் 12) எனலாம். ஏனெனில் இது மனிதரோடும், காணக்கூடியவற்றோடுள்ள போராட்டம் அல்ல. இது மனித சக்திக்கு மேற்பட்ட, கண்ணுக்குப் புலனாகாத சக்திகளோடுள்ள போராட்டம் (லூக்கா 12:4,5)

இது ஏதோ கற்பனையான கட்டுக்கதையல்ல, நமக்கு வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் சத்தியம். கடவுளின் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் (வசனம் 11) கொண்டு, எதிராளியை எதிர்க்க ஆயத்தப்படும்போதுதான் நாம் இந்தச் சத்தியத்தை ஏற்றுக் கொண்டவர்களாகிறோம்.

**2. எதிராளியின் பண்பு (1). அவன் மெய்யான ஆள்.** சாத்தானுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பண்புகள், பெயர்கள் மூலம், நாம் அவனது ஆள்த்துவத்தை அறியமுடியும். ஏமாற்றுகிறவன், பொய்யன், கொலைபாதகன், குற்றஞ்சாட்டுபவன், சோதனைக்காரன், உலகத்தின் அதிபதி போன்றவை அவனது பெயர்கள். யோபு 1:6, ஏசாயா 14:12, மத்தேயு 4:10, 6:13, 9:34, 10:25, 25:41, லூக்கா 4:12, யோவான் 8:44; 12:31, 2கொரிந்தியர் 2:11,

1தெசலோனிக்கேயர் 2:18, 3:5. 2தெசலோனிக்கேயர் 2:9-11 போன்ற வசனங்களைப் படித்துப் பார்க்கவும்.

**(2). அவன் உயர்த்தப்பட்ட நிலையில் அமர்ந்திருந்தான்.** அவன் 'ஆகாயத்து அதிகாரப் பிரபு' (எபேசியர் 2:2), இது அவன் ஆவிகளின்மேல் அதிகாரமுடையவன் என்று சுட்டிக் காட்டுகிறது. அவன் 'இந்த உலகத்தின் அதிபதி' என்பது (யோவான் 12:31, 14:30, 16:11), 'கீழ்ப்படியாமையின் பிள்ளை களிடத்தில்' (எபேசியர் 2:2) தன் அதிகாரத்தைக் காட்டுகிறான் என்பதைக் குறிக்கும். அவனுக்கென 'இராஜ்ஜியம்' ஒன்றுண்டு (மத்தேயு 12:26). அவன் 'இப்பிரபஞ்சத்தின் தேவன்' (2கொரிந்தியர் 4:4). அவன் போலியான கிறிஸ்தவத்தைப் பரப்புகிறவன் (1கொரிந்தியர் 10:20,21), 2கொரிந்தியர் 11:14, 1தீமோத்தேயு 4:1, வெளிப்படுத்தல் 2:9)

**(3). அவன் அதிக வல்லமையுடையவன்.** அவனது வல்லமை சூழ்ச்சியானது (2கொரிந்தியர் 11:14) கொடியது (கொலோசெயர் 1:13) இயற்கைக்கு அப்பாற்பட்டது (2தெசலோனிக்கேயர் 2:9) கேடுவிளைவிப்பது (எபிரெயர் 2:14) அப்போஸ்தலர் 26:18) படிக்கவும்.

**3. வெற்றியின் இரகசியம்**

**(1). நாம் கிறிஸ்துவுக்குள் நிற்பதை உணரவேண்டும்.** வசனம் 10ஐப் படியுங்கள். அதில் 'கர்த்தரில்' பலப்படுங் கள் என்று கூறியிருப்பதை நோக்கவும். அவருக்குள் நாம் அடைந்த பலத்தைக் கொண்டாலன்றி நாம் வேறு எந்த பலத்தாலும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடமுடியாது. நாம் நிற்பதும், தாக்குப்பிடிப்பதும் நம்முடைய சொந்தப் பலத்தினாலல்ல, அவரது பலத்தினால் மட்டுமே (வசனங்கள் 11,13,14) என்பதை நினைவிற் கொள்க.

**(2). கிறிஸ்துவிடமிருந்து வரும் பாதுகாப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.** நம்முடைய பயன்பாட்டுக்கென அவர் அருளும் 'தேவனுடைய சர்வாயுதவர்க்கம்' அவரிடமிருந்து கிட்டும் பாதுகாப்பு (வசனம் 11,13). பாதுகாப்புக்கான கருவிகள் ஐந்தும், எதிர்ப்பதற்கான கருவி ஒன்றும் இதிலே அடங்கும். முதுகைக்காக்க ஏதுமில்லை. ஏனெனில் நாம் புறமுதுகு காட்டமாட்டோம். லூக்கா 9:62 இவற்றைத் தரித்துக் கொள்ளவேண்டியது நம் கடமை வசனம் 11. சத்தியம் என்னும் கச்சை(14) இடுப்பைச்சுற்றிக் கச்சையானது கட்டப்பட்டிருப்பதுபோல, சத்தியம் நம் வாழ்க்கையைச் சுற்றியிருக்க வேண்டும் (சங்கீதம் 51:6, யோவான் 8:32. 3யோவான் 4) மாய்மாலம், பொய், கபடு, ஒத்தவேஷம் தரித்து இருக்கக்கூடாது.

**நீதி என்னும் மார்க்கவசம் (14)** இது முக்கியமான உடலுறுப்புக்களைக் காப்பது. நம்முடைய நீதியாகிய கிறிஸ்துவில் நாம் உறுதியாக நிற்கவேண்டும். நம்முடைய வாழ்விலும் நீதியுள்ளோராய் (உண்மையுள்ளோராய்) இருக்கவேண்டும்.

**ஆயத்தம் என்னும் பாதரட்சை (15)** சோதிக்கப்படும்போது, பாடுபடும்போது, பிலிப்பியர் 4:7, ஏசாயா 26:3இன் அனுபவத்தால் தாங்கப்படுவோம்.

**விசுவாசமென்னும் கேடகம் (16)** நம் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவத்தையும் கேடகம் பாதுகாப்பது போன்று, நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் விசுவாசம் நம்மைப் பாதுகாக்கும்.

**இரட்சணியமென்னும் தலைச்சீரா (17)** காக்கப்படாத நம் சிந்தை, சாத்தானின் ஏமாற்றத்திற்கும், வஞ்சகத்திற்கும், அழிவுக்கும் இரையாகிவிடும்.

**ஆவியின் பட்டயம் (17)** மத்தேயு 4:4,7,10 இல் 'எழுதியிருக்கிறதே' என்று கூறப்பட்டுள்ளது. எபிரெயர் 4:12 ஒப்பிடு.

**3. நாம் கிறிஸ்துவுடன் எப்போதும் தொடர்பு கொண்டவர்களாக இருக்கவேண்டும்.** (வசனம் 18) வெற்றிக்கு இது இன்றியமையாதது. "எந்த சமயத்திலும், சகலவிதமான வேண்டுதலோடும்..... விழித்துக் கொண்டிருங்கள்".

## பாடம் 10 **சகலவித ஜெபங்களோடு எப்போதும் ஜெபிப்பது**

***(வேதபகுதி எபேசியர் 6:18-24)***

பவுல் ஜெபிக்கிற ஜெபவீரனாக இருந்தார். அவரது வாழ்வு, அற்புதமான ஈர்ப்புச் சக்தி, அவரது பாடுகள், மக்களின் ஆத்துமாக்கள் மீது கொண்ட தணியாத தாகம் போன்றவற்றிற்குரிய இரகசியம் அவரது ஜெபமேயாகும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக, பரிசுத்தமான கலையாகிய ஜெபத்திற்கு விளக்கங்கொடுக்கத் தகுதியுள்ள ஒரேயொரு மனிதர் பவுல் எனலாம். நமக்குமுன் வைக்கப்பட்ட வேதபகுதியில் அவர் ஜெபத்தைக்குறித்த ஏழு முக்கியமான உண்மைகளைக் கூறியுள்ளார்.

**1. ஜெபம் *இன்றியமையாத* ஒன்று.**

சர்வாயுதவர்க்கத்தைப்பற்றி விளக்கிக்கொண்டிருந்த பவுல் திடீரென, தொடர்ந்து “எந்த சமயத்திலும் ஜெபிக்க வேண்டும்” என்கிறார். போர்வீரன் சரியான ஆயுத வர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, பட்டயத்தோடு ஆயத்தமாக இருப்பது மிகவும் முக்கியமானதுதான். ஆயினும் தன்னுடைய படைத்தலைவனோடு (எபிரெயர் 2:10) எப்போதும், இடைவிடாத தொடர்பு கொண்டிருக்க வேண்டியதும் மிக மிக அவசியம். போர்க்களத்தில் இருக்கும் கிறிஸ்தவனுங்கூட, கடவுளின் சிம்மாசனத்தோடு தொடர்ந்து ஜெபம் என்கிற சாதனத்தின் வழியாக, உயிர்த்தெழுந்த ஆண்டவருடன் உரையாடுகிறவனாக இருக்கவேண்டும். இந்தத் தொடர்பு துண்டிக்கப்படவே கூடாது. ஜெபம் மிகவும் இன்றியமையாததொன்று. விரும்பும்போது மட்டும் செய்வதல்ல. இது நமது அடிப்படையான தேவை.

**2. நாம் *எப்போதும்* ஜெபிக்க வேண்டும்.**

நாம் “எந்தச் சமயத்திலும்” ஜெபிக்க வேண்டுமென்று பவுல் வலியுறுத்த, 1தெசலோனிக்கேயர் 5:17ஐ நமக்கு நினைப்பூட்டுகிறார். அதிலே இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டுமென்று கூறப்பட் டுள்ளது. அதாவது நாம் எப்போதும் ஜெபநினைவுடன், ஜெபச்சூழலில் இருக்க வேண்டும் என்பதே இதற்குப் பொருள். நாம் ஜெபிப்பதற்கென குறிப்பிட்ட நேரம் வைத்துக் கொள்வது மிக முக்கியமானதாகும். தானியேல் மூன்றுமுறை தினமும் ஜெபித்தார் (தானியேல் 6:10). தாவீது நாள் தோறும் மூன்றுமுறை ஜெபித்தார் (சங்கீதம் 55:17). அதன் பின்னர் அவர், ஏழுமுறை ஜெபித்தார் (சங்கீதம் 119:164) என்று காண்கிறோம். நமது ஆண்டவரும் தனித்துப்போய், அவ்வப்போது ஜெபித்தார் (லூக்கா 6:12). நாமுங்கூட இவர்களைப்போன்று ஜெபிக்கவேண்டும். நாம் ஜெபிக்க வேண்டிய வேறு சமயங்களுமுண்டு. அவையாவன. துன்பத்தில் இருக்கும்போது (சங்கீதம் 55:16), தேவையான வழி நடத்துதலுக்கென (யாக்கோபு 1:5), சோதனையின் போது (சங்கீதம் 69:1), பாடுபடும்போது (சங்கீதம் 7:1), மனச்சமாதானத்தைக் கெடுக்கும் கடிதம் வந்தபோது (ஏசாயா 37:14), வியாதிப் படுக்கையில் (யாக்கோபு 5:14), எந்த வேளையிலும், எந்தத் தேவையாக இருந்தாலும் (பிலிப்பியர் 4:6) நாம் ஜெபிக்க வேண்டும்.

**3. *எல்லாவகையான* ஜெபங்களையும் ஏறெடுக்கவேண்டும்.**

“சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும்” என்று கூறப்பட்டுள்ளது. அதாவது நம்முடைய ஜெபத்தில் துதி, ஸ்தோத்திரம், நன்றிகூறுதல், விண்ணப்பம், வேண்டுதல், மன்றாடுதல் போன்றவை இடம்பெற வேண்டும். இருப்பினும் தனிஜெபம் (மத்தேயு 6:6) ஒருமனப்பட்ட ஜெபம் (மத்தேயு 18:19) கூட்டு ஜெபம் (அப்போஸ்தலர் 12:5) போன்ற இந்த மூன்று வகையான ஜெபங்களும் தேவை என்பதை மறவாதீர்.

**4. நாம் *தொடர்ந்து* ஜெபிக்க வேண்டும்.**

நாம் இடைவிடாமல் விழிப்புடன் ஜெபிக்கவேண்டும் (வசனம் 18) லூக்கா 18:1 ஐ லூக்கா 11:5-8 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும். நாம் ஜெபத்தில் மன உறுதியுள்ளோராயும் இருக்கவேண்டும். (1இராஜக்கள் 18:43). ஜெபத்திற்கு வரும் தடைகள் ஏராளம். ஆகவேதான் ‘விழிப்புடன்’ ஜெபிக்கக் கூறுகிறார். ஜெபத்திற்கு வரும் தடைகளாவன. **1. கவனம் திரும்புதல்(சிதறுதல்)** நாம் ஜெபிக்கும்போது, நமது ஜெபத்திற்குத் தடையாக பல்வேறு காரியங்கள் வருகின்றன. **2. விருப்பமின்மை** - களைப்பினால் அல்லது உலக காரியங்களின் ஈடுபாட்டினால் இது ஏற்படலாம். **3. சோர்வு** - ஒன்று அல்லது இரண்டு முறை ஜெபித்து பதில் கிடைக்காமற் போயிருக்கலாம்.

அதனால் சோர்வு ஏற்படும். **4. மனக்கசப்பு** - கடவுள் பேரில் நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக, ஏமாற்றமும், ஜெபத்தின்மீது நம்பிக்கை இழந்து, சூழ்நிலை மீதும், ஏன் கடவுள்மீதுங் கூட கசப்பு ஏற்படுவதுண்டு. **5. தோல்வி** - தோல்வி மேற்கொள்ளும்போது துவண்டு போகிறோம். நியாயாதிபதிகள் 16:20 படிக்கவும்.

**5. சகல *பரிசுத்தவான்களுக்காகவும்* ஜெபிக்க வேண்டும்.**

பரிசுத்தவான்கள் யாவரையும் தனித்தனியாக நினைத்து ஜெபிப்பது என்பது முடியாத காரியம். ஆயினும் பொதுவாக, கிரமமாக முடிந்த போதெல்லாம் ஜெபிக்கலாம். நாம் அன்றாடம், கிரமமாக ஜெபிக்கச் சில குறிப்புகள்.

**1. பாடுபடும் கடவுளின் ஊழியர்கள் 2. பாவத்திலே இருக்கும் கடவுளின் ஊழியர்கள்.** இவர்களுக்காக நீங்கள் எப்போதாகிலும் ஜெபித்ததுண்டா? உலகம், மாமிசம், பிசாசினால் சோதிக்கப்பட்டு வீழ்ந்துபோன கிறிஸ்தவர்கள், எதிராளியின் வலையில் சிக்கித் தவிப்போர், பின்வாங்கிப்போன கிறிஸ்தவர்களுக்காக ஜெபித்ததுண்டா? **3. அடைபட்ட கடவுளின் பரிசுத்தவான்கள்.** ஆண்டவரை நேசிக்கும் மக்கள் பலர் ஒருபுறம் வியாதிப்பட்டிருந்தாலும், அந்த வியாதி சுவிசேஷம் பரம்புவதற்கு ஏதுவாக அமைய (பிலிப்பியர் 1:12) ஜெபியுங்கள். இம்மாதிரியாக பாதிக்கப்பட்ட மக்கள் கிறிஸ்துவின் வல்லமையையும், அவர் தரும் நிறைவையும் குறித்துச் சாட்சி கூறத் தேவையான கிருபையைப் பெற நம்முடைய ஜெபங்கள் தேவை. **புதிய விசுவாசிகளுக்கென** ஜெபியுங்கள். (அப்போஸ்தலர் 9:17) **அறுப்புக்கு வேலையாட்கள்** வேண்டுமென (மத்தேயு 9:38) ஜெபிக்க வேண்டும். **கிறிஸ்தவ இலக்கியங்கள் அனுப்பப்பட** (சங்கீதம் 43:3) ஜெபியுங்கள். **சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிட்ட** (1கொரிந்தியர் 16:9) ஜெபிக்க வேண்டும். **சாத்தானின் வல்லமை உடைபட** (லூக்கா 13:12-16) ஜெபிக்கவும்.

**6. போர்க்களத்தின் *முன் வரிசையில் நிற்கும் ஊழியர்கட்காக* ஜெபிக்க வேண்டும்.**

வசனங்கள் 19, 20 இல் கிறிஸ்தவ ஊழியத்தில் முக்கிய பொறுப்பு வகிக்கும் மக்களுக்கென கடவுளின் மக்கள் விசேஷமாக ஜெபிக்க வேண்டுமென்று காண்கிறோம். அப்போஸ்தலர் 4:29 பார்க்கவும். பிரசங்கிமார், நற்செய்திப் பணியாளர், போதகர்கள், கடவுளின் அறுவடைப் பணியில் ஈடுபட்டுள்ள தலைவர்கள் போன்றோருக்கு நாம் எவ்வாறு ஜெபிப்பது? அவர்கள் சுவிசேஷத்தைத் தைரியமாக அறிவிக்க வாக்குபலம் அருளப்பட ஜெபிக்க வேண்டும்.

**7. *"ஆவியினாலே ஜெபிப்பதுதான்"* வல்லமையுள்ள ஜெபம்.**

'ஆவியினாலே' என்பதுதான் (வசனம் 18) ஜெபத்தின் மேலான இரகசியம். ரோமர் 8:26,27 ஒப்பிட்டுப் படிக்கவும். "பலவீனமுள்ள பரிசுத்தவான் முழங்காலில் நிற்பதைக் காணும் சாத்தான் பயந்து நடுங்குகிறான்" என்று வில்லியம் கூப்பர் கூறியுள்ளது எவ்வளவு உண்மை!

இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கி விடும்
சடைப்பில்லாமல் காத்திருப்போம்

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

தொடர் 3

# சுவிசேஷத்தின் தலைசிறந்த வார்த்தைகள்

பாடம் 1 பாவ உணர்வு

பாடம் 2 மனந்திரும்புதல்

பாடம் 3 விசுவாசம்

பாடம் 4 மறுபடியும் பிறத்தல்

பாடம் 5 நீதிமானாக்கப்படுதல்

பாடம் 6 கடவுளின் பிள்ளையாகத் தத்தெடுக்கப்படுதல்

பாடம் 7 நமக்குள்ளே இருப்பவர் அவர்

பாடம் 8 நிச்சயமானவை

பாடம் 9 பரிசுத்தமாக்கப்படுதல்

பாடம் 10 மகிமைப்படுதல்

பாடம் 1 **பாவ உணர்வு**

***(வேதபகுதி யோவான் 16:1-11)***

ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படும் முன்பு, பரிசுத்த ஆவியானவர் பாவ உணர்வைக் கொடுத்து இரட்சிப்புக்கு வழி நடத்துகிறார். யோவான் 16:7-11 வரை ஆண்டவர் இயேசு கூறியுள்ள இந்தப் பாவ உணர்வைப் பெறாமல் எவரும் மெய்யான இரட்சிப்பைப் பெறமுடியாது. 'சுயசித்தத்தினாலே' இரட்சிக்கப்படமுடியும் என்று மக்கள் பலர் கருதுகின்றனர். அதாவது அவர்கள் இரட்சிக் கப்படவேண்டும் என்று நினைத்தால் போதும் இரட்சிப்படைய முடியும் என்று எண்ணுகின்றனர். பிரசங்கம் செய்வோரும் ஆவிக்குரிய பலன் கிடைப்பதற்கென, பரிசுத்த ஆவியானவர் பாவ உணர்வைத் தரவேண்டும் என்கிற உண்மையை அவ்வப்போது மறந்து விடுகின்றனர். எப்போதும் நமது ஆத்தும இரட்சிப்பின் செயலில் முதலாவது அடியெடுத்துவைப்பவர் கடவுள்தான். ஆதியாகமம் 3:9, யோவான் 15:16. கடவுள் மனிதனைத் தேடிவராவிடில், மனிதன் கடவுளைத் தேடப்போவதே இல்லை. ரோமர் 3:11 பார்க்கவும். யோவான் 5:6, 6:44 உடன் ஒப்பிடுக. பிதாவானவர், கிறிஸ்துவிடம் மக்களை எவ்வாறு இழுக்கிறார்? என்கிற கேள்வி நமக்குள்ளே எழும்பலாம். இதற்குப் பதில் பரிசுத்த ஆவியானவர் மூலம் என்பதே. இதற்கென பரிசுத்த ஆவியானவர் நடப்பிக்கும் மேலான கிரியை பாவ உணர்வடையச் செய்வதேயாகும். அதாவது இதை எளிமையாகக் கூறவதாயின், நமக்கு ஒரு இரட்சகர் இன்றியமையாத தேவை என அவர் உணர்த்துகிறார் என்று கூறலாம். - ஆதியாகமம் 6:3, எபிரெயர் 3:7,8 பார்க்க.. பரிசுத்த ஆவியானவர் பேசுகிறார், முயற்சி எடுக்கிறார் என்பதெல்லாம் இந்த பாவ உணர்வைக் கொண்டுவரும் பெரிய வேலையாகும்.

**1. பரிசுத்தஆவியானவர், பாவ உணர்வுக்குள் ஒரு பாவியை எப்படி நடத்துகிறார்?**

**1. அவர் *பாவத்தைக்* குறித்து பாவியிடம் உணர்த்துகிறார்.** அவர் பாவத்தின் விளைவைக் காட்டாமல், பாவத்தின் வேரைக் காட்டுகிறார். பாவத்தின் உச்சகட்டம் அவிசுவாசம். கிறிஸ்துவைப் புறக்கணித்தல் (யோவான் 16:9) என்கிற பாவங்களே. சூடுண்ட மனசாட்சி (1தீமோத்தேயு 4:1) நமக்கு இராதிருந்தால், அது களவு, பொய், பொறாமை போன்ற நம் பாவங்களை உணர்த்தும். ஆயினும், கடவுள் கொடுத்த இரட்சகரைப் புறக்கணித்தலாகிய பெரிய பாவத்தை, பரிசுத்த ஆவியானவர் நம் கண்களைத் திறந்தாலன்றி நாம் காணமுடியாது. எவரும் செய்யக்கூடிய பாவம், ஆக்கினையை வருவிக்கும் பாவம் எதுவென்றால், கிறிஸ்துவைப் புறக்கணித்தலாகிய பாவமே எனலாம். யோவான் 3:18, 36 படிக்கவும்.

**2. அவர் *நீதியைக்* குறித்துப் பாவிக்கு உணர்த்துகிறார்.** மனிதனுக்குத் தேவையான நீதியைப் (ஏசாயா 64:6) பற்றி அவர் உணர்த்துகிறார். இந்த நீதியைக் கடவுள் தமது குமாரன் மூலமாய் மனிதனுக்கு அளிக்கிறார் (2கொரிந்தியர் 5:21) இதை விசுவாசத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் (ரோமர் 3:21,22). பரிசுத்தாவியானவரின் வெளிப்பாடின்றி, மனிதன் தன்னுடைய சொந்த அநீதியையும், கடவுளின் நீதியையும் குறித்து அறிய இயலாது யோவான்16: 10,11.

**3. அவர் *நியாயத்தீர்ப்பைக்* குறித்துப் பாவிக்கு உணர்த்துகிறார்.** சாத்தானும், அவனைச் சார்ந்தவர்களும், ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டுவிட்டனர் என்று பரிசுத்த ஆவியானவர் மனிதனுக்கு உணர்த்துகிறார் - வசனம் 11 பார்க்கவும். எபிரெயர் 2:14, வெளிப்படுத்தல் 12:7-9, 20:10 படிக்கவும்.

பரிசுத்தாவியானவரின் இந்த மூவகை உணர்த்துவிக்கும் பணி இக்காலத்திற்கு எவ்வளவாய் தேவைப்படுகிறது. இதற்கு மாற்று வழி ஏதும் இல்லை. ஸ்தாபனமோ, போதகரின் திறமையோ இதற்குப் போதாது. மனிதனின் அத்தியாவசியமான தேவை, ஒரு இரட்சகர் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே மக்கட்கு உணர்த்தமுடியும்.

**2. பரிசுத்த ஆவியானவர் இந்த பாவ உணர்வை எவ்வாறு கொடுக்கிறார்?**

**1) சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலம் அவர் பாவத்தை உணர்த்துகிறார்.** விசுவாசிக்கிற எவரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் படியாக, (ரோமர் 1:16) கடவுளின் வார்த்தை, சுவிசேஷம், ஆவியின் பட்டயம் (

எபேசியர் 6:17).என்கிற வல்லமையுள்ள கருவியை (எபிரெயர் 4:12) பயன்படுத்துகிறார். நாம் உத்தமத்தோடு, 'சுவிசேஷத்தை' (1கொரிந்தியர் 15:1-4)யும், கடவுளின் ஆலோசனையையும் (அப்போஸ்தலர் 20:27). பிரசங்கிக்கும் போது, அதின்மூலம் மக்கள் பாவ உணர்வடைவதைக் காணலாம். பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்த போது, அதைக் கேட்ட மக்கள் பாவத்தைக் குறித்தும் (அப்போஸ்தலர் 2:23) நீதியைக் குறித்தும் (அப்போஸ்தலர் 2:24,33), நியாயத்தீர்ப்பைக் குறித்தும் (அப்போஸ்தலர் 2:19,20) அறிந்து குத்தப்பட்டனர் என்று வசனம் 37 இல் காணலாம்.

**2) கிறிஸ்தவன் சாட்சி கூறுவதின்மூலம் அவர் உணர்த்துகிறார்.** ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்வதின் மூலம் மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் சாட்சி கூறுவதின் மூலமாகவும் அவர் இதைச் செய்கிறார். சான்றாக, பிலிப்பு கிறிஸ்துவைப் பிரசங்கித்தது (அப்போஸ்தலர் 8:26-39), பவுல், பேலிக்ஸ் முன்பு எடுத்துரைத்தது (அப்போஸ்தலர் 24:24,25) பவுல், அகிரிப்பா இராஜாவுக்கு முன்பு சாட்சி கூறினது (அப்போஸ்தலர் 26:26-29) என்பதைக் கூறலாம்.

**3) விசேஷித்த வெளிப்பாடுகள், அற்புதங்கள் மூலம் உணர்த்துகிறார்.** சவுல் தமஸ்குக்குச் செல்லும் பாதையில், ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தி, இந்தச் சடுதியான செயலின் மூலம் பாவ உணர்வுக்குள் கொண்டு வந்தார் (அப்போஸ்தலர் 9:1-6). தொற்காளின் மரணம், உயிர்த்தெழல் மூலமாக யோப்பா பட்டணத்து மக்கள் பாவ உணர்வுக்குள் வந்தனர் (அப்போஸ்தலர் 9:36-42 - குறிப்பாக வசனம் 42), சிறைச்சாலைக்காரன் பவுல், சீலாவின் சாட்சியினாலே மட்டுமல்ல (அப்போஸ்தலர் 16:25) கடவுள் அனுப்பின பூமியதிர்ச்சியின் மூலமாகவும் (அப்போஸ்தலர் 16:26-30 - குறிப்பாக வசனம் 30 பார்க்க) பாவ உணர்வுக்குள் வந்தான் என்று காண்கிறோம்.

**4) தம் மக்களின் ஜெபத்திற்குப் பதிலாக கடவுள் பாவ உணர்வைக் கொடுக்கிறார்.**

பிரசங்கியாரின் பிரசங்கத்தினால் மட்டுமல்ல, ஒரு சுவிசேஷக் கூட்டத்திலிருக்கும் கிறிஸ்தவன், பிரசங்கியாரோடு இணைந்து, பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்காகச் செய்தியின்போது தொடர்ந்து ஜெபித்தால், அவர் அங்கு பாவ உணர்வைக் கொடுப்பதைக் காணலாம் (மத்தேயு 18:19 படிக்கவும்)

**5) சுத்திகரிக்கப்பட்டு, ஒப்புக்கொடுத்த, ஆவியானவரால் நிரப்பப்பட்ட மக்கள் மூலமாயும் அவர் பாவத்தை உணர்த்துகிறார்.**ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்ட வேளையில் (அப்போஸ்தலர் 7:54-60) சவுல் அதைப் பார்த்தார் (வசனம் 58) அவரது சாட்சியைக் கேட்டார். கிறிஸ்துவைப் போன்ற ஆவியை அவரில் கண்டார் (வசனம் 59). சவுல் இந்த வேளையில்தான் பாவ உணர்வு அடைந்திருக்கலாம்.

கடைசியாக யோவான் 16:7,8 இல் கூறியுள்ளது. "அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் (உங்களிடம்) வந்து .....உணர்த்துவார்." அவர் உங்களிடம் எவ்வளவாய் நெருங்கி வருகின்றாரோ, அவ்வளவாய் உங்களை உணர்த்துவிப்பார் என்பதே இதன் பொருள்.

## பாடம் 2 **மனந்திரும்புதல்**

***(வேதபகுதி - லூக்கா 15:3-24)***

'மனந்திரும்புதல்' என்கிற சத்தியத்தின் முக்கியம் குறித்து எவருக்கேனும் சந்தேகம் வந்தால், அவர்கள் லூக்கா 13:3 இல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மதிப்புமிக்க வார்த்தைகளை வாசித்துப் பார்க்கட்டும். 'மனந்திரும்புதல்' பற்றி வேதாகமம் முழுவதும் கூறப்பட்டிருக்கக் காணலாம். அதில் நூற்றுக்கும் மேலான இடங்களில் இப்பதம் வந்துள்ளது. புதிய ஏற்பாட்டில் மட்டும் 58 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கால நவீன நற்செய்திப் பணியில், மனந்திரும்புதல் என்கிற பதம் விடுபட்டுள்ளது என்று யாரோ ஒருவர் சரியாகக் கணித்துக் கூறியுள்ளார். புதிய ஏற்பாட்டு பிரசங்கத்தின் முக்கிய வார்த்தையே இதுதான். 'மனந்திரும்புங்கள்' என்ற அழைப்புடன் யோவான் ஸ்நானன் தமது ஊழியத்தை ஆரம்பித்தார் (மத்தேயு 3:2). நம்முடைய ஆண்டவரின் முதல் வார்த்தையுங்கூட 'மனந்திரும்புங்கள்' என்பதே (மத்தேயு 4:17). 'மனந்திரும்புங்கள்' என்று பிரசங்கம் செய்யக் கட்டளையிட்டு அவர் சீடர்களை அனுப்பினார் (மாற்கு 6:12, லூக்கா 24:47). மனந்திரும்புகிற ஒரேயொரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சியுண்டாகும் (லூக்கா 15:10). பேதுரு மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 2:37,38). பவுல் மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 17:30,31). விசுவாசத்திற்கு வழிநடத்தும் இந்த மனந்திரும்புதலை, 'இரட்சிப்பு' என்று வேதாகமத்தில் எல்லா இடங்களிலும் கூறப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 20:21).

### 1. மனந்திரும்புதல் அல்லாதது எது?

**1) பாவ உணர்வடைவது மனந்திரும்புதல் அல்ல.** மனந்திரும்புதல் என்பது பாவ உணர்வுடன் இணைந்தது. பாவ உணர்வடைந்த பின்பும் மனந்திரும்பாமல் போனோர் பலருண்டு. இதற்குச் சான்றாக பேலிக்ஸைக் கூறலாம். அப்போஸ்தலர் 24:24,25

**2) பாவத்திற்காக வருந்துவது மனந்திரும்புதல் அல்ல.** மனந்திரும்புதலில் மனவருத்தமும், துக்கமும் இருக்கும். ஆனால் இது போதாது. பாவத்திற்காக மனம் வருந்தினாலும், மனந்திரும்பாமற் போக வாய்ப்புண்டு. 2கொரிந்தியர் 7:9,10 படிக்கவும்.. 'மனந்திரும்புவதற்கேதுவான துக்கம்' என்று குறிப்பிட்டுள்ளதைக் காண்க.

**3) பாவத்தை வெறுப்பது மனந்திரும்புதலாகாது.** மனந்திரும்புதலுக்கு இது தேவைதான். ஆயினும் பாவத்தில் விருப்பமில்லாதிருந்தும் பாவத்தை விட்டு விலகமாட்டார்கள். ஒவ்வொரு பாவியும் பாவத்தை வெறுக்கிறவன் என்று கூற முடியாது. பாவத்தை வெறுக்காமல் எவரும் மனந்திரும்ப இயலாது. பாவத்தை வெறுப்பது மட்டும் மனந்திரும்புதலாகாது.

**4) "இனி இதைச் செய்யமாட்டேன்" என வாக்குறுதியளிப்பது மனந்திரும்புதல் அல்ல.** மக்கள் பலர் இவ்விதமாக வாழ்நாள் முழுவதும் வாக்குறுதியளிப்போராய் இருக்கின்றனர். கெட்டகுமாரன் திரும்பிப் போகவேண்டுமென்று தீர்மானம் செய்தான். (லூக்கா 15:18) வெறுமனே தீர்மானம் செய்வது மட்டும் மனந்திரும்புதலாகாது. 'நரகத்தின்' பாதை நல்ல தீர்மானங்களால் பரப்பப்பட்டுள்ளதாம்.

**5) ஒரேயொரு பாவத்தை மட்டும் விட்டுத் திரும்புவது மனந்திரும்புதலல்ல.** பாவங்களை விட்டுவிடுவதல்ல, கனியை அல்ல, அதின் வேரை நீக்கிவிட வேண்டும். அதாவது, அந்தப் பாவ எண்ணத்தையே நீக்க வேண்டும்.

### 2. மனந்திரும்புதல் என்றால் என்ன?

மனந்திரும்புதல் என்பது எண்ணத்தை மாற்றுவது: 1.சிந்தையின் அனுபவம்; இது ஒரு மாறுபட்ட உணர்வு. 2. உணர்வுபூர்வமான அனுபவம், இது நோக்கத்தால் ஏற்படும் மாறுதல். 3. விருப்பத்தின் அனுபவம் – இது

பண்பை மாற்றும். ஒழுக்க அனுபவம், மனந்திரும்புதல் என்பது இவற்றுள் ஒன்றல்ல. இவை அனைத்தும் இணைந்தது எனலாம்.

**1) மனந்திரும்புதல் என்பது *மனமாற்றம்.*** மனந்திரும்புதலில் ஏற்படும் மனமாற்றம் என்பது அடிப்படை மாற்றமாகும். இதிலே பாவியானவன் கடவுளைப் பற்றியும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், பாவத்தைக் குறித்தும், தன்னைப்பற்றியும் முற்றிலும் மாறுபட்ட நோக்கமுள்ளவனாகி விடுகிறான். மத்தேயு 21:28,29 படிக்கவும். இதிலே மனந்திரும்புதலைக் குறித்த எடுத்துக்காட்டை ஆண்டவர் கூறியிருக்கக் காணலாம்.

**2) மனந்திரும்புதல் என்பது *உணர்விலே மாற்றம்.*** தர்சு பட்டணத்து சவுல், மனமாற்றத்தின் பின்னர், ஆண்டவராகிய இயேசுவுக்குக் கொடுத்த துன்பத்திற்காக வருத்தப்பட்டார் - சங்கீதம் 38:18. ஆயக்காரன் மிகுந்த தாழ்மை உணர்வோடு, வேதனையோடு தன் மார்பில் அடித்து அறிக்கையிட்டதைப் (லூக்கா 18:13) பார்க்கிறோம். கெட்டகுமாரனுங்கூட திரும்பி வந்தபோது, 'நான் பாத்திரன் அல்ல' என்று (லூக்கா 15:21) உணர்ந்து கூறினான்.

**3) மனந்திரும்புதல் என்பது *நோக்கத்திலே* மாற்றம்.** நமது 'சித்தம்' இதிலே ஈடுபட்டுள்ளது. கெட்டகுமாரன், தன் தகப்பனிடம் போக வேண்டுமென்று தீர்மானித்தான் (நோக்கம்) லூக்கா 15:18 வசனம் 20 இல் அவன் எழுந்து புறப்பட்டான் என்று காண்கிறோம். யோவான் 5:6 இல் ஆண்டவர் இயேசு, அந்த நோயாளியிடம் என்ன கூறினாரென்று பாருங்கள். சங்கீதம் 119:59, ஏசாயா 55:7, எசேக்கியேல் 18:30ஐ ஒப்பிட்டு நோக்குக.

**4) மனந்திரும்புதல் என்பது *குணத்திலே* மாற்றம்.** இதற்கு எடுத்துக்காட்டாக, சகேயு (லூக்கா 19:1-10), தர்சு பட்டணத்துச் சவுல் (அப்போஸ்தலர் 9:1-6), சிறைச்சாலைக்காரன் (அப்போஸ்தலர் 16:30-34) போன்றோரைக் கூறலாம். *மனந்திரும்புதல் என்பது முன்பு நான் விரும்பிய பாவங்களுக்காக மனம்வருந்தி, நான் இனிமேல் அவற்றைச் செய்யமாட்டேனென்று உறுதிகொண்டு விட்டுவிடுதலாகும்.*

**3. மனந்திரும்புதல் கிட்டுவது எப்படி?**

**1) மனந்திரும்புதல் என்பது கடவுளின் ஈவு.** அப்போஸ்தலர் 5:30,31, 11:18, 2தீமோத்தேயு 2:25

**2) மனந்திரும்புதலாகிய இந்த ஈவு, நற்செய்தியைப் பிரசங்கிப்பதினால் அருளப்படுகிறது.** மத்தேயு 12:41, அப்போஸ்தலர் 2:38-41, 19:8,10,19 இவற்றுடன் 1தெசலோனிக்கேயர் 1:5-10 வரை ஒப்பிட்டு நோக்குக.

**3) தேவதயவு, மனந்திரும்புதலுக்கு வழிநடத்துகிறது.** ரோமர் 2:4 இதைக் கூறுகிறது. நாம் கடவுளின் அன்பை அறியும்போது, குறிப்பாக நமக்காகச் சிலுவைக்குச் சென்ற (1பேதுரு 2:24) நமக்கு ஈவாகக் கொடுக்கப்பட்ட அவரது குமாரனின் (யோவான் 3:16) தியாகம் நம்மை இந்த மனந்திரும்புதலுக்கு ஈர்க்கிறது.

**4) வாழ்வின் துன்பங்கள் மக்கள் பலரை மனந்திரும்புதலுக்கு இழுத்துச் செல்கிறது.** மக்களை மனந்திரும்புதலுக்குள் இழுத்துச் செல்லும் கருவிகளாகக் கடவுள் நமது பாடுகளையும், துன்பங்களையும் பயன்படுத்துகிறார். சங்கீதம் 78:34 படித்து ஆதியாகமம் 42:21, யாத்திராகமம் 9:27, யோபு 42:5,6, சங்கீதம் 119:67, வெளிப்படுத்தல் 3:19ஐ ஒப்பிட்டு நோக்குக.

**5) வாழ்வின் வெறுமை, சிலரை மனந்திரும்புதலுக்கு வழி நடத்துகிறது.** கெட்டகுமாரன் வாழ்வில் அவனது வெறுமையே அவனை மனந்திரும்பத் தூண்டியது - லூக்கா 15:17 படிக்கவும்.

**4. எப்பொழுது மனந்திரும்ப வேண்டும்?**

இப்பொழுதே மனந்திரும்புக. அப்போஸ்தலர் 17:30,31, வேதாகமத்தின் மிகச் சிறந்த வசனங்களுள் ஒன்றாகிய 2பேதுரு 3:9 கூறுவதைக் கவனியுங்கள். "......கர்த்தர்......ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்".

## பாடம் 3 **விசுவாசம்**

*(வேதபகுதி மாற்கு 5:25-34)*

மக்கள் இனத்தை, விசுவாசிகள், அவிசுவாசிகள் என்கிற இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். கடவுளின் மக்கள் விசுவாசிகள். இவர்கள் விசுவாசத்தையுடையோர், விசுவாசத்தினாலே நடப்பவர்கள் (ரோமர் 1:17) புதுவாழ்வு நடத்த அதாவது கிறிஸ்தவ வாழ்வு நடத்த உதவுவது விசுவாசமேயாகும். எபிரெயர் 11 ஆம் அதிகாரத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதுபோல, விசுவாசத்திற்குப் பல்வேறு நிலைகள் உண்டு. ஆனால் இந்தப் பாடத்தில் நாம் இரட்சிக்கும் விசுவாசத்தைப் பற்றி மட்டுமே படிக்கப்போகிறோம். இந்த விசுவாசம் நம்மைக் கடவுள் அருளும் இரட்சிப்பின் அனுபவத்திற்குள்ளாகவும், மகிழ்ச்சிக்குள்ளாகவும் நடத்துவதாகவுள்ளது.

**1. நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? (அப்போஸ்தலர் 16:30)**

இது கேள்விகளுக்கெல்லாம் மேலான கேள்வி எனலாம். இரட்சிப்பின் காரியத்தில் மனிதனுடைய பொறுப்பு என்ன? என்பதே இந்தக் கேள்வி. விலையேறப்பெற்ற கிரயத்தினால், ஒவ்வொரு பாவிக்கும் இரட்சிப்பு அருளப்பட்டுள்ளது (1யோவான் 2:2) கடவுளின் ஒரே பேறான குமாரன் பரலோகத்தைவிட்டு இறங்கி வந்தார். சிலுவையில் நமக்காக மரித்து, இரட்சிப்பைச் சம்பாதித்தார் (ஏசாயா 53:5,6, யோவான் 1:29, 2கொரிந்தியர் 5:21) பிதாவாகிய கடவுள் அவர் செய்து முடித்த கிரியையை அங்கீகரித்தார். மரணத்தினின்று அவரை உயிர்ப்பித்து, பரலோகில் தமது வலது பக்கத்தில் அமர்த்தி மேலாக உயர்த்தினார். (அப்போஸ்தலர் 2:32,33) இப்பொழுது இரட்சிப்பு யாவருக்கும் அளிக்கப்படுகிறது (ஏசாயா 45:22) என்ன நிபந்தனையின் பேரில்? அப்போஸ்தலர் 16:31 இல் இதற்குப் பதில் உண்டு. எல்லையற்ற அளவுக்கு இரட்சிப்பு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதைப் பெறுவதற்கு மக்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பில் உள்ளனர். புதிய ஏற்பாட்டில் 150 இடங்களில், விசுவாசத்தினாலே இரட்சிப்பு கிட்டுமென்று கூறப்பட்டுள்ளதைக் காணலாம். எடுத்துக்காட்டு: யோவான் 3:16, அப்போஸ்தலர் 13:38,39, ரோமர் 1:16, 3:26, 4:5, 10:9,10, எபேசியர் 2:8, 1யோவான் 5:1

**2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பது என்பதன் பொருள் யாது?**

என்னுடைய சொந்த இரட்சகராக, அவரை மட்டுமே நம்பி ஏற்றுக்கொண்டு, என் முழு நம்பிக்கையையும் அவர் பேரில் வைப்பதாகும்.

**3. கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள மூன்று படிகள் உண்டு.**

**1) முதற்படி - *கேட்டல்*** ரோமர் 10:17 படிக்கவும். சுவிசேஷத்தை நான் கேட்காமல் விசுவாசிக்க முடியாது. கிறிஸ்து என்னை இரட்சிக்க வல்லவர். அவர் என்னை இரட்சிக்க விரும்புகிறார் என்பதை நான் கேட்டால்தானே கிறிஸ்து என்னை இரட்சிக்க வல்லவர், இரட்சிக்க விரும்புகிறார் என்று விசுவாசிக்க முடியும். யோவான் 5:24 பார்க்கவும்.

**2) இரண்டாம்படி - *விசுவாசித்தல்.*** அவர் யார் என்றும், அவரால் எனக்கு என்ன செய்ய முடியும் என்பதைக் கேட்டறிந்த பின்னர், நான் கேட்டதை விசுவாசிக்க வேண்டும். நான் சம்மதிக்க வேண்டும். நான் அவரைப்பற்றி அறிந்ததை நம்புகிறேன். அவர் எனக்காக மரித்தார் (ஏசாயா 53:5) அவர் என்னை இரட்சிக்க வல்லவர் (எபிரெயர் 7:25) அவர் என்னை இரட்சிக்க விரும்புகிறார் (யோவான் 5:40) என்பதே. அறிவுபூர்வமான இந்த சம்மதம் என்பது இரட்சிக்கும் விசுவாசம் அல்ல. இரட்சிக்கும் விசுவாசத்திற்கு இதுவும் தேவையானதுதான்.

**3) மூன்றாம்படி - *நம்பிக்கை.*** நான் கேட்டேன்....நான் விசுவாசித்தேன்...ஆனால் இப்போது நான் நம்ப வேண்டும். நான் கேட்டு விசுவாசித்தவற்றை அவரால் எனக்குச் செய்யமுடியுமென்று நான் நம்பி, என் முழு நம்பிக்கையையும் அவரில் வைக்கவேண்டும். என்னை இரட்சிப்பதற்காக நான் என்னை முழுமையாக ஒப்புவித்து, அவரில் நம்பிக்கை வைக்கிறேன். நம்பிக்கை என்பது நம்முடைய முயற்சிகளையெல்லாம்விட்டு, யாரை நம்புகிறோமோ அவரையே முழுமையாகச் சார்ந்திருப்பதாகும்.

**4. இரட்சிக்கும் விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டான மூன்று நிகழ்ச்சிகள்:**

**1) மாற்கு 5:25-34** அந்தப் பெண் கேள்விப்பட்டாள் (கேட்டாள்) வசனம் 27. தான் கேட்டதை விசுவாசித்த படியால் வந்தாள் (வசனம் 28). நம்பிக்கையோடு அவள் தொட்டாள் (வசனம் 27,29) என்பதைக் கவனிக்கவும்.

**2) அப்போஸ்தலர் 8:29-37** அந்த மந்திரி கிறிஸ்துவைக் குறித்துக் கேட்டான். (வசனங்கள் 30-35) அவன் அவரை விசுவாசித்தான் (வசனம் 36) அவரைத் தன்னுடைய சொந்த இரட்சகராக நம்பினான் (வசனம் 37).

**3) அப்போஸ்தலர் 16:30,31** சிறைச்சாலை அதிகாரி இந்த மூன்று படிகளையும் கடந்து வந்ததைப் பாருங்கள். வசனம் 30. இந்தக் கேள்வி கேட்பதற்கு, அவன் முதலாவது கேள்விப்பட்டிருக்க வேண்டும். பின்பு அவன் விசுவாசித்தான். அவன் இரவோடு இரவாக ஞானஸ்நானம் எடுத்து அறிக்கையிட்டதும், மாறுபட்ட வாழ்வும், கிறிஸ்து தன்னை இரட்சிப்பார் என்கிற நம்பிக்கை அவனுக்குள் இருந்ததென்பதை உறுதிப்படுத்துகிறது.

**5. இரட்சிக்கும் விசுவாசம் குறித்த இரண்டு வகை எளிய எடுத்துக்காட்டுகள் :**

**1) வங்கியில் வைக்கும் விசுவாசம்.** உங்களுக்கு பெருஞ்செல்வம் கிடைத்துள்ளது என்று வைத்துக்கொள் வோம். அதைப் பத்திரமாக எங்கே வைப்பது என்று தெரியாமல் நீங்கள் அறியாமல் தவிக்கிறீர்கள். ‘முற்றிலும் பாதுகாப்பான வங்கி’ ஒன்றைப்பற்றி உங்கள் நண்பரொருவர் கூறுகிறார். அவர் கூறுவதைக் கேட்டீர்கள், அவரது சாட்சியை விசுவாசிக்கிறீர்கள். நீங்கள் உங்கள் செல்வத்தை அந்த வங்கியிடம் ஒப்புக்கொடுக்கிறீர்கள்.

**2) மருத்துவரில் வைக்கும் விசுவாசம்.** குடல்வால் நோய் முற்றி நீங்கள் மயங்கி விழுந்து விட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். தனக்கு அறுவை சிகிச்சை செய்து நன்கு குணமாக்கின ஒரு நல்ல மருத்துவரைப் பற்றி உங்கள் நண்பரொருவர் கூறுகிறார். உங்கள் நண்பர் கூறியதைக் கேட்டீர்கள். நீங்கள் அவரது சாட்சியை விசுவாசிக்கிறீர்கள். நீங்கள் அந்த மருத்துவரை முழுமையாக நம்பி உங்களை அறுவை சிகிச்சைக்கென ஒப்புக் கொடுக்கிறீர்கள்.

**6. கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்கள் சில கீழேயுள்ளன. அவற்றில் அவரில் விசுவாசம் வைப்பது என்றால் என்னவென வெவ்வேறு வடிவில் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கேட்டல், விசுவாசித்தல், நம்புதல் போன்ற இம்மூன்று படிகளும் இருப்பதைக் காணலாம்.**

**1) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல் என்பது அவரைக் கடவுளின் ஈவாக ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும்.** யோவான் 3:16,1:12 (விசுவாசித்தல் = ஏற்றுக்கொள்ளுதல்) அப்போஸ்தலர் 16:14; வெளிப்படுத்தல் 3:20 ஐ ஒப்பிட்டு நோக்குக.

**2) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல் என்பது அவரிடம் வருவதைக் குறிக்கும்.** மத்தேயு 11:28ஐ யோவான் 5:40, 6:37 உடன் ஒப்பிட்டு நோக்குக.

**3) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல் என்பது, அவரது மந்தையில் அவர்மூலமாக பிரவேசிப்பதைக் குறிக்கும்.** யோவான் 10:9 ஐ லூக்கா 13:24-27 வரை ஒப்பிடுக.

***4) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல் என்பது அவரிடம் வந்து, பானம் பண்ணுகிறதைக் குறிக்கும்.*** யோவான் 4:13,14, 7:37 ஐப் பார்க்கவும்.

***5) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல் என்பது, இரட்சிப்பிற்காக அவரை நோக்கிக் கூப்பிடுவதைக் குறிக்கும்.*** ரோமர் 10:13 பார்க்கவும். பின்னர் சிலுவைக் கள்ளன் செய்ததைப் பாருங்கள். (லூக்கா 23:42,43) பேதுரு செய்தது (மத்தேயு 14:30,31) ஆயக்காரன் செய்தது (லூக்கா 18:13,14) குஷ்டரோகி செய்தது (லூக்கா 5:12,13) புறஜாதிப் பெண் செய்தது (மத்தேயு 15:22,28) போன்ற யாவற்றையும் பாருங்கள். இதை நீங்கள் செய்ததுண்டா?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல் என்பது, இரட்சிப்பிற்காக அவரைச் சார்ந்திருப்பதாகும். நீங்கள் இப்படி விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்களா?

## பாடம் 4 **மறுபடியும் பிறத்தல்**

*(வேதபகுதி - யோவான் 3:1-16)*

பாவியிடம் பரிசுத்த ஆவியானவர் தெய்வீக வாழ்வைச் செலுத்தி அவனைக் கடவுளின் பிள்ளையாக மாற்றுகிறார். இந்தச் செயலை மறுபடியும் பிறத்தல் அல்லது புதிதாகப் பிறத்தல் என்று கூறுகிறோம். கடவுளின் வார்த்தையில், புதிய பிறப்பு என்பது மற்ற எல்லா சத்தியங்களை விட முன்னணியில் நிற்கும் போதனை எனலாம். மற்ற சத்தியங்களைப் புரிந்துகொள்வதற்கு முதலாவது இந்தச் சத்தியத்தை அறியவேண்டும். இன்றைய சபைப்பிரிவு கள் யாவற்றிலும், பெயரளவில் இயங்கிவரும் சபைகளில், இரண்டுவகை மக்கள் உள்ளனர். மறுபடியும் பிறந்த மக்கள். இவர்கள் மெய்யான திருச்சபை உறுப்பினர்கள். மற்றவர்கள் மறுபடியும் பிறந்த அனுபவம் இல்லாதவர்கள்

### 1. புதிய பிறப்பு என்பது எதுவல்ல ?

1) **இது இயற்கையாக பிறப்பது அல்ல.** (யோவான் 3:4,6) இதுவும் இயற்கையாகப் பிறப்பது போன்ற தன்மைகள் உடையதாக இருக்கலாம். நாம் பிறக்கும்வரை ஒளியைக் கண்டதில்லை. நாம் ஆவிக்குரிய வாழ்வை ஆரம்பிக்கும் முன்பு நாம் புதிதாகப் பிறக்கவேண்டும்.

2) **இது ஒரு மனோவியல் அனுபவமல்ல.** "புதிய பிறப்பு என்பது கடவுளைப் பற்றிய ஒரு மனநிலை அல்லது மனப்பாங்கு" என்று தற்கால இறையியலார் கூறுகின்றனர். ஆனால் வேதாகமம் இவ்வாறு போதிப்பதில்லை.

3) **இது சமயப்பற்றுள்ளவராக இருப்பதல்ல.** நிக்கொதேமு சமயப்பற்றுள்ள மனிதர். ஆனால் மறுபடியும் பிறவாதவர் (வசனம் 10) அவர் இஸ்ரவேலின் சமயப் போதகராக இருந்தார். இருப்பினும் இரண்டாம் பிறப்பின் தன்மையையும், தேவையையும் உணராத குருடனாக இருந்தார்.

4) **இது மூளையின் அறிவல்ல.**(வசனங்கள் 2,10) நிக்கொதேமுவுக்கு அறிவுசார்ந்த விசுவாசம் இருந்தது. அவர் ஆண்டவர் இயேசுவுடன் உரையாட ஆரம்பிக்கும்போது, 'அறிந்திருக்கிறோம்' (வசனம் 2) என்றே கூறுகிறார். புதியபிறப்புக்கு இணையாக அறிவு பயன்படாது. பிசாசுகளுங்கூட, விசுவாசித்து நடுங்குகின்றன (யாக்கோபு 2:19).

5) **இது வெளியரங்கமான சீர்திருத்தம் அல்ல.** நிக்கொதேமுவைவிடச் சிறந்த வெளியரங்கமான நல்லவர்கள் யார் உண்டு? இருப்பினும் அவர் மறுபடியும் பிறக்கவில்லை. 2தீமோத்தேயு 3:5 பார்க்கவும்.

6). **இது சுயமுயற்சி அல்ல, நற்கிரியை அல்ல.** எபேசியர் 2:8-10 படிக்கவும். எவ்வளவுதான் நற்செயல்கள் செய்தாலும், அது புதிய பிறப்பைத் தராது. கடவுள் நம்மில், நமக்குள்ளே கிரியை செய்த பின்னரே, நாம் நற்கிரியை செய்து இரட்சிப்பை நிறைவேற்ற வேண்டும். (பிலிப்பியர் 2:12,13)

7) **இது திருமுழுக்கு, திடப்படுத்தல், திருச்சபை உறுப்பினராதல் போன்ற சடங்கு, சம்பிரதாயங்கள் போன்றது அல்ல.** தீத்து 3:5 படிக்கவும். யோவான் 3:5 இல் குறிப்பிடப்பட்டுள்ள 'தண்ணீர்' திருமுழுக்கு என்கிற நியமத்தைக் குறிக்காது. ஞானஸ்நானத்தால் மறுபிறப்பு கிட்டாது. நாம் மறுபடியும் பிறந்த பின்னரே, திருமுழுக்கும், திருச்சபை உறுப்பினராதலும் வருகின்றன. அதற்கு முன்னர் வராது. அது புதுப்பிறப்பைத் தராது. அப்போஸ்தலர் 2:37 - 41 படிக்கவும். தீத்து 3:5 இல் 'தண்ணீர்' எதைக் காட்டுகிறது என்று காணலாம்.

### 2. புதிய பிறப்பு என்பது எது?

1) **இது ஒரு புதிய பிறப்பு, இரண்டாம் பிறப்பு,** மேலான பிறப்பு என்பது. வசனங்கள் 3,7 பார்க்கவும். அதிலே வரும் 'மறுபடியும்' என்கிற வார்த்தை 'பரத்திலிருந்து' என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

**2) இது மரணத்திலிருந்து உயிர்ப்பிப்பது.** மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசிப்பது எனலாம். சுபாவத்தின்படி மனிதன் ஆவிக்குரிய நிலையில் செத்தவனாயிருக்கிறான். (எபேசியர் 2:1) ஆயினும் புதிய பிறப்பு என்கிற அற்புதத்தின் மூலம் அவன் புதிதான ஜீவனுக்குள் எழுப்பப்படுகிறான். (ரோமர் 6:4)

**3) அவருடைய திவ்விய சுபாவத்திற்கு பங்காளிகளாதல்.** புதியபிறப்பு என்பது, மனிதனின் ஆள்த்து வத்தில், கடவுளின் தெய்வீகத் தன்மை உருவாதல் எனலாம். 2 பேதுரு 1:4 படிக்கவும். கடவுள் பழைய வாழ்க் கையை மாற்றவோ, ஒட்டுப்போடவோ மாட்டார். அவர் முற்றும் மாறுபட்ட ஒரு புதிய வாழ்வு தருகிறவர்.

**4) இது மனிதனில் ஏற்படும் மறுபிறப்பு.** யோவான் 1:11-13 வரை படிக்கவும். குறிப்பாக வசனம் 13 இல் உள்ள கடைசி வார்த்தைகளைக் கவனிக்கவும்.

**5) இது ஒரு பெரிய மாறுதல்.** 2கொரிந்தியர் 5:17 படித்து ரோமர் 6:4, கலாத்தியர் 6:15 உடன் ஒப்பிடுக.

**3. இந்தப் புதிய பிறப்பு ஏன் தேவை?**

**1) ஏனெனில் நமது ஆண்டவரும் இது தேவையெனக் கூறியுள்ளார்.** யோவான் 3:3 பார்க்கவும். இது தட்டமுடியாத வார்த்தை அல்லவா!

**2) ஏனெனில் நாம் யாவரும் வீழ்ந்துபோன சுபாவம் உள்ளவர்கள்.** நாம் எவ்வளவுதான் படித்திருந்தாலும், நாகரீகம் உள்ளவர்களானாலும், கடவுளின் முன்பு எப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றோம் என்பதை எபேசியர் 2:2,3 கூறுகிறது.

**3) ஏனெனில் சுபாவத்தின்படி நாம் ஆவிக்குரிய நிலையில் மரித்தவர்களாகவே இருக்கிறோம்.** யோவான் 5:40, எபேசியர் 2:1, 1யோவான் 5:12 படிக்கவும்.

**4) ஏனெனில் விழுந்துபோன நிலையிலுள்ள நாம் கடவுளைப் பிரியப்படுத்த இயலாது.** கடவுள் பரிசுத்தர். நாமோ பாவிகள். நாம் இருக்கிற இந்த நிலையில் அவரோடு, ஒருபோதும் ஐக்கியம்கொள்ள முடியாது. யோவான் 3:6, ரோமர் 8:8 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும்.

**5) ஏனெனில் நாம் கடவுளின் இராஜ்யத்துக்குரியவைகளை அனுபவிக்கும் தகுதியுள்ள சுபாவத்தை அடைந்தாலன்றி நாம் அவரது இராஜ்யத்திற்குள் நுழையவே முடியாது.** வானத்து நட்சத்திரங்களை, வான சாஸ்திரம் மூலம் புரிந்து கொள்ளலாம். பியானோ இசையை இசை வழியாக அறிந்து கொள்ளலாம். மலர்களைத் தாவரவியல் மூலம் புரிந்து கொள்ள முடியும். ஆனால் பரத்துக்குரிய காரியங்களை, ஆவிக்குரிய காரியங்களை ஆவிக்குரிய பிரகாரமாய் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். ஆகவே யோவான் 3:3 முக்கியம்.

**4. புதிய பிறப்பு எப்படி, எப்பொழுது நிகழ்கிறது?**

புதிய பிறப்பு எவ்வாறு நிகழ்கிறது? அதற்கு உறுதுணையாக இருப்பன யாவை?

**1). பரிசுத்த ஆவியானவரால் நிகழ்கிறது.** யோவான் 3:5,6, தீத்து 3:5 பார்க்கவும். யோவான் 1:13இல் வரும் 'தேவனாலே' என்கிற வார்த்தையைக் கவனிக்கவும். ஆகவே புதிய பிறப்பு என்பது, மனிதனின் செயல் அன்று, இதைப் பரிசுத்த ஆவியாகிய கடவுள் நடப்பிக்கிறார்.

**2) கடவுளின் வார்த்தையால்** பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் கருவி கடவுளின் வார்த்தையாகும். 1கொரிந்தியர் 4:15, யாக்கோபு 1:18, 1பேதுரு1:23 படிக்கவும். பரிசுத்த ஆவியானவர் கடவுளின் வார்த்தையாகிய விதையை விதைக்கிறார். அதன் மூலம் அவர் புதிய பிறப்பை நம்மில் உருவாக்குகிறார்.

**3) விசுவாசத்திற்கேற்ப செயல்படுவதனால்.** யோவான் 1:11-13, 3:14,15 படித்து எண்ணாகமம் 21:1-9 வரை ஒப்பிடுக. அதோடு கலாத்தியர் 3:26 பார்க்கவும். நீங்கள் விசுவாசித்ததுண்டா? நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதுண்டா? உங்கள் இரட்சிப்பிற்கென நீங்கள் அவர் ஒருவரை மட்டுமே நோக்கிப் பார்க்கிறீர்களா?

## பாடம் 5 - **நீதிமானாக்கப்படுதல்**

*(வேதபகுதி - லூக்கா 18:9-14, ரோமர் 5:1-11)*

அன்று யோபு 25:4 இல் கேட்கப்பட்ட அதே கேள்வி இன்றும் கேட்கப்படுகிறது. தேவனற்ற மக்களை நீதிமானாக்கி, பூரணமான நிறைவுதரும் வழியைக் கடவுள் ஏற்படுத்தியுள்ளார் என்பதே மகிமையான சுவிசேஷத்தின் செய்தியாகும். (ரோமர் 3:26; 4:5).

### 1. நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன?

அப்போஸ்தலர் 13:38,39 இல் கூறப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். விசுவாசிப்பதின் மூலம், 'பாவ மன்னிப்பு' கிட்டுகிறது (வசனம் 38); நாம் நீதிமானாக்கப்படுகிறோம் (வசனம் 39). நீதிமானாக்கப்படுதல் என்பது மன்னிப்பை விட மேலானது. இது எல்லாக் குற்றச்சாட்டுகளையும், குறைவுகளையும் முற்றும் நீக்கிப் போடுவதைக் குறிக்கும் சொல். உலக நீதிமன்றங்களில், ஒரு நீதிபதி ஒரு மனிதனை ஒரே நேரத்தில் மன்னித்து நீதிமானாக்க முடியாது. அந்த மனிதனை நீதிபதி மன்னித்தால் அவன் குற்றம் செய்தவனாகிவிடுகிறான். ஆகவே அவன் குற்றமே செய்யாத நீதிமானாக முடியாது. அவனை நீதிமானாக்கினால், அவனுக்கு மன்னிப்புத் தேவையில்லை. இருப்பினும் கடவுள் இரண்டையும் செய்கிறார். பாவத்தை மன்னிக்கிறார். பாவியை நீதிமானாக்குகிறார். அதாவது, தண்டனைக்குரிய பாவியை, குற்றவாளியை மன்னித்து, அவனை அவன்பேரில் எப்போதும் எந்தக்குற்றமும் சாட்டப்படாத ஒரு புதிய நிலையில் கொண்டுபோய் அமர்த்துகிறார் (ரோமர் 8:1).

### 2. நாம் எவ்வாறு நீதிமான்களாக்கப்படுகிறோம்?

ஒருவரும் தங்கள் சொந்த முயற்சியினால், அல்லது கிரியையினால் நீதிமானாக முடியாது என்று கடவுளின் வார்த்தை தெளிவாகக் கூறுகிறது. ரோமர் 3:20, கலாத்தியர் 2:16; 3:11 பார்க்க. இந்தப் பயங்கரமான தவறை ஆண்டவரின் உவமையில் கூறப்பட்ட பரிசேயன் செய்தான். லூக்கா 18:11,12. நம்முடைய கிரியைகளோ, நல்ல தீர்மானங்களோ அல்லது சீர்திருத்தமோ நம்மை நீதிமானாக்காது. அது நீதிமானாவதற்கு ஒரு துளியும் உதவாது. இது ஒரு கொலைகாரன் தன் குற்றத்திற்காக வருந்தி முடிந்த அளவு எல்லா நற்கிரியைகளையும் செய்து, இப்படிச் செய்வதினால் சட்டத்தின் முன்பும், நீதிபதியின் கண்களிலும் நீதிமானாக முடியுமென்று கற்பனை செய்வதற்கு ஒப்பாகும். அவனை நீதிமானாக்க, உலகிலுள்ள எல்லா நற்கிரியைகளும் சேர்ந்து வந்தாலும் உதவாது. அதே போன்று ஒரு பாவியின் நற்கிரியைகள் யாவும், சேர்ந்து அவனை நீதிமானாக்க முடியாது. புதிய ஏற்பாட்டில் நீதிமானாக்கப்படுதல் என்பது ஏழு நிலைகளில் கூறப்பட்டுள்ளது.

1) **நாம் கடவுளால் நீதிமான்களாக்கப்படுகிறோம்.**அவரே நாம் நீதிமானாக்கப்படுதலின் காரணகர்த்தரா வார். ரோமர் 3:26; ;4:5, 8:33 பார்க்கவும். இந்த வசனங்களினால் கடவுளே நம்மை நீதிமானாக்குகிறவர் என்று அறிகிறோம்.

2) **நாம் கிருபையினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம்.** நீதிமானாக்கப்படுதலின் அடிப்படை இது. நம்மில் எந்தவிதமான அருகதையும் இல்லாமல் நீதிமானாக்கப்படுகிறோம் என்பதே இதன் பொருள். தீத்து 3:6, ரோமர் 3:24 படிக்கவும். 'இலவசமாய்' என்கிற வார்த்தையைக் கவனிக்கவும். இதைப் பெறுவதற்கு நமக்கு எந்தத் தகுதியும் இல்லை. நாம் இதைச் சம்பாதிக்க நம்மிடம் ஏதும் இல்லை என்பதே இதற்குப் பொருள்.

3) **நாம் இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம்.** இது நீதிமானாக்கப்படுவதின் ஆதாரம். தேவனற்ற பாவியை நீதிமானாக்க, பரிசுத்தமுள்ள கடவுளுக்கு நீதியுள்ள ஆதாரம் தேவை. இந்த ஆதாரம் சிலுவையில் சிந்தின இரத்தத்தில் உள்ளது. தண்டனைக்குட்பட்ட பாவியான மனிதன், தன் பாவத்திற்குப் பரிகாரமாக மரணதண்டனை ஏற்கவேண்டும் (ரோமர் 6:23). நாம் எல்லாரும் பாவம் செய்தவர்கள் (ரோமர் 3:23) கடவுளின் சட்டப்படி யாவரும் மரிக்க வேண்டியவர்களே. கடவுள் நம்மில் அதிகமாக அன்புகூர்ந்தபடியினாலே, அவரது குமாரன், சிலுவையில் நம்முடைய இடத்தை ஏற்று, நமக்காக மரித்தார். பாவிக்கு எதிராகச் சட்டப்படி எதிர்பார்க்கப்படும் நீதியின் எல்லாத் தேவைகளும் சிலுவையில் முழுமையாக நிறைவேற்றப்பட்டன கடவுளின் பரிசுத்தத் தகுதிக்குத் தேவையான யாவும் கொடுத்து நிறைவேற்றப்பட்டன.

. **4) நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம்.** நீதிமானாக்கப்படுவதற்குரிய நிபந்தனை இது.. நீதிமானாக்கப்பட, மனிதனுக்கென விதிக்கப்பட்ட ஒரேயொரு நிபந்தனை - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்பதே. ரோமர் 3:22-,28, ரோமர் 5:1, 4:5, கலாத்தியர் 2:16 ஒப்பிட்டுப் படிக்கவும்.

**5) நாம் உயிர்த்தெழுதலின் மூலம் நீதிமான்களாக்கப்படுகிறோம்.** நீதிமானாக்கப்படுவதற்கான உறுதி இது. ரோமர் 4:25 இல் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே நமக்குக் கண்கூடான சாட்சி என்று காண்கிறோம். ஏனெனில் இதன் மூலம் கடவுள் அவரது செய்து முடித்த கிரியையினால் நிறைவடைந்தார். இதனால் மக்கள் யாவருக்கும் நீதிமான்களாக்கப்படும் சிலாக்கியம் கிட்டுகிறது. ஆகவே விசுவாசிகள் யாவரும் நீதிமான்களாக்கப்படுகின்றனர்.

**6.) நாம் கிரியைகளினால் நீதிமான்களாக்கப்படுகிறோம்.** நீதிமானாக்கப்பட்டதற்கு அடையாளம் இது. நாம் ரோமர் 3:20ஐயும், யாக்கோபு 2:24யும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது முரண்பட்ட கருத்தாகத் தோன்று கிறதா? ஆனால் இதில் முரண்பாடு ஏதுமில்லை. யாக்கோபு 2:20 பாருங்கள். விசுவாசத்திற்கு அடையாளம் கிரியைகள் என்று காண்கிறோம். எங்கெல்லாம் உண்மையான விசுவாசம் உள்ளதோ அங்கு கிரியைகளின் மூலம் அது வெளிப்படும் - யாக்கோபு 2:18 பார்க்க.

**7) நாம் அனுபவத்தில் நீதிமான்களாக்கப்படுகிறோம்.** நீதிமானாக்கப்பட்டதின் பலன் இது. நீதிமானாக்கப்பட்டதனால் சில அற்புதமான காரியங்கள் நிகழ்கின்றன. அவை தொடர்கின்றன.

**3. நீதிமானாக்கப்படுதலின் பலன்கள் எவை?**

ரோமர் 5:1-11 வரையுள்ள வசனங்களில் இவை ஏழு என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அதிகாரம், "இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்" என்று ஆரம்பிக்கிறது. - அதாவது நாம் நீதிமான்களாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளோம்.

**1) நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் கடவுளிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்** (வசனம் 1) நாம் கடவுளின் பகைவராயிருந்தோம் (வசனம் 10) ஆனால் கல்வாரியில் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மைக் கடவுளோடு ஒப்புரவாக்கினார் (ரோமர் 5:10). சமாதானத்தையும் உண்டாக்கினார் (கொலோசெயர் 1:20).

**2) நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினாலே பெற்று நிலை கொண்டிருக்கிறோம்.** (வசனம் 2) இதன் பொருள் என்னவெனில், நாம் நீதிமான்களாக்கப்பட்டபடியினால், கடவுளின் பிரசன்னத்தில் நுழைவதற்கு அனுமதியும், வரவேற்பும் கிடைத்துள்ளது என்பதாகும். யோவான் 10:9, எபிரெயர் 10:19 ஒப்பிட்டுப் பார்க்கவும்.

**3) தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மகிழ்ச்சியடைகிறோம்** (வசனம் 2). இங்கு நம்பிக்கை என்பது நிச்சயப்படுத்தும் காரியம் அல்ல. தாம் எவர்களை நீதிமான்களாக்கினாரோ, அவர்கள் யாரானாலும், கடவுள் தமது சித்தத்தை நிறைவேற்றுவார் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதன் பொருள் என்னவென கொலோசெயர் 3:4, தீத்து 3:7 இல் காணலாம்.

**4) நம்முடைய உபத்திரவங்களிலே மகிழ்ச்சியடைகிறோம்** (வசனம் 3) இதற்கான நான்கு காரணங்களை நாம் வசனம் 4,5 இல் காணலாம். நமக்கு உபத்திரவம், பரீட்சை வரும்போது நாம் 2கொரிந்தியர் 4:17ஐக் கூறலாம்.! அப். 14:22, 2கொரிந்தியர். 4:8-10. 6:4-10. 1தெசலோ. 3:3 பார்க்க.

**5) நம்முடைய இருதயங்களில் கடவுள் தமது அன்பை ஊற்றினார்** (வசனம் 5). இது நான்கு பரிமாணம் கொண்ட அவரது அன்பு எனலாம். எபேசியர் 3:17,18. அவரது அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டதனால், நாம் ஒருவரிலொருவர் அன்புகூருகிறோம். (1யோவான் 3:14)

**6) பரிசுத்த ஆவியானவரை நமக்கு அருளியுள்ளார்** (வசனம் 5) கடவுள் நம்மை நீதிமான்களாக்கிய அந்த நேரமே, பரிசுத்த ஆவியானவர் நமது உள்ளங்களில் குடியேறுகிறார். யோவான் 14:16,17, ரோமர் 8:9, 1கொரிந்தியர் 6:19 ஒப்பிட்டுப் பார்க்க.

**7) நாமும் கடவுளில் மகிழ்ச்சியடைகிறோம்** (வசனம் 11). அதாவது நாம் மேன்மை பாராட்டுகிறோம். இது எவ்வளவு அற்புதமானது. நாம் தண்டனைக்குரியவர்கள்; பாவிகள்; இருப்பினும் இப்பொழுது அவரது கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டோம். ஆகவே நாம் அவரில் மகிழ்ச்சியடைகிறோம்.

## பாடம் 6 **கடவுளின் பிள்ளையாகத் தத்தெடுக்கப்படுதல்**

*(வேதபகுதி ரோமர் 8:1-17)*

புத்திரசுவீகாரம் (தத்தெடுக்கப்படுதல்) என்றால் என்ன? இந்தக் கேள்விக்குரிய பதிலை யாத்திராகமம் 2:10 (எபிரெயர் 11: 24 ஒப்பிடுக) எஸ்தர் 2:7, லூக்கா 15:11-24 என்ற பகுதிகளில் கூறப்பட்டுள்ள மூன்று எடுத்துக் காட்டுகளும் விளக்குகின்றன. புத்திர சுவீகாரம் என்றால் புத்திரனாக நிலைநிறுத்தப்படுதல் என்பதே! நாம் மறுபடியும் பிறக்கும்போது, கடவுளின் குடும்பத்தின் பிள்ளைகளாகின்றோம் (யோவான் 1:12,13) கடவுள், நம்முடைய அன்பான பரலோகத் தகப்பனாகிறார் (யோவான் 6:32) நாம் கடவுளின் பிள்ளைகளாவது மட்டுமல்ல, சட்டப்பூர்வமாக, அங்கீகரிக்கப்பட்ட புத்திரராகின்றோம் - ரோமர் 8:14-17. இவ்விதமாக புத்திரசுவீகாரத்தின் மூலம் கடவுள் நமக்கு ஒரு புதிய அந்தஸ்தைக் கொடுக்கிறார். இந்தப் புதிய நிலையில், அதாவது இந்த அந்தஸ்து கிடைத்தவுடனே, நமக்கு ஒரு புதிய சிலாக்கியமும், புதிய பொறுப்பும் கிடைக்கின்றன.

**1. சுவீகரிக்கப்பட்ட நமக்குக் கிட்டும் சிலாக்கியங்கள் யாவை?**

எபேசியர் 1:4,5 இல் ‘உலகத்தோற்றத்துக்கு முன்னே’ கடவுளின் சித்தப்படி, விசுவாசிகளாகிய நாம் புத்திரராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளோம். புத்திரராகச் சுவீகரிக்கப்பட்ட நமக்கெனக் கிட்டும் சிலாக்கியங்களும், ஆசீர்வாதங்களும் பல. அவையாவன.

**1) அவரது *ஆவியானவரைப்* பெற்றிருக்கிறோம்.** ரோமர் 8:15, கலாத்தியர் 4:6 பார்க்கவும். கடவுளின் ஒவ்வொரு புத்திரனும், புத்திரசுவீகாரத்தின் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளான். இதனால், அவன் கடவுளிடம் வந்து அவரை உரிமையோடு ‘அப்பா’ என்று அழைக்கிறான்.

**2) நாம் *புதிய பெயரைப்* பெற்றுக் கொண்டுள்ளோம்.** உலகப் பிரகாரமாக ஒரு பிள்ளையைச் சுவீகாரம் (தத்து) எடுக்கும்போது, அதை அவர்களுடைய மகனாக சட்டப்படி பதிவு செய்யும்போது, வழக்கமாகப் புதிய பெற்றோரின் பெயரைச் சேர்த்துக்கொள்வார்கள். கடவுள் நம்மை அவரது குடும்பத்திற்குள் கொண்டுவந்து, மகன் என்ற தகுதியைத் தரும்போது, அவரது பெயரைத் தரித்துக்கொள்ளும் சிலாக்கியத்தையும் தருகிறார். எபேசியர் 3:14,15 படிக்கவும். நமக்குக் கிடைக்கும் பெரிய பெயர்கள் எவை தெரியுமா? அப்போஸ்தலர் 11:26, 26:28, 1பேதுரு 4:16 ஒப்பிட்டு நோக்குக.

**3) அவரது *சாயலுக்கு* ஒப்பாயிருப்பதற்கு நாம் முன் குறிக்கப்பட்டுள்ளோம்.** ரோமர் 8:29 பார்க்கவும். நாம் கடவுளின் புத்திரராகும்போது, பரிசுத்த ஆவியானவர் நமது இருதயத்தில் நுழைந்து, நம்மை உறுதிப் படுத்துகிறார். நம்மை ஆண்டவராகிய இயேசுவைப் போன்று, அவரது சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கென மாற்றுகிறார் (2கொரிந்தியர் 3:18). அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதனால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிவோம். இதுவே கடவுளின் திட்டம் .(1யோவான் 3:2).

**4) நாம் அவரது *சிட்சையை* எதிர்பார்க்க வேண்டும்.** அதைத் தவறாகக் கருத வேண்டாம். இது ஒரு ஆசீர்வாதமே. கடவுளின் பிள்ளைகளால் மட்டுமே அனுபவிக்கக் கூடிய ஒரு சிலாக்கியம் இது! எபிரெயர் 12:6-11 கவனமாகப் படிக்கவும். கடவுளின் சிட்சிக்கும் கரம் நம்மீது இருக்கும் போது, நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். ஏனெனில் பிலிப்பியர் 1:5 பார்க்கவும்.

**5) நாம் அவரது *ஆறுதலையும்* அனுபவிப்போம்.** 2கொரிந்தியர் 1:3,4 ஏசாயா 66:13 படிக்கவும். மத்தேயு 23:37 இல் நம்முடைய ஆண்டவர் கூறியுள்ள அருமையான உருவகத்தைப் பாருங்கள். இது எதிர் முறையாகக் கூறப்பட்டது. ஆனால் இது வலியுறுத்தும் கருத்து இதுவே. அதாவது கோழி தன் குஞ்சுகளைச் சிறகின் கீழ் சேர்ப்பது போல, ஆண்டவர் நம்மைப் பாதுகாக்கிறார், தேற்றுகிறார் என்பதே!

**6) நாம் அவரது *விடுதலையையும்* அனுபவிக்க வேண்டும்.** ரோமர் 8:19-23 வரை, பவுல், பாவத்திலிருந்து விடுதலை, பாவத்தின் விளைவாக வரும் யாவற்றிலிருந்தும் விடுதலையைப் பற்றி இங்கு கூறியுள்ளார். சிருஷ்டியானது ஒரு நாளிலே , இந்த விடுதலையை அனுபவிக்கும். கடவுளின் ஒவ்வொரு பிள்ளையும்

இந்த விடுதலையைப்பெற்று ஆனந்திக்க வேண்டுமென்பதே கடவுளின் விருப்பம். பிள்ளைகளுக்குரிய சுதந்திரம் வீட்டு வேலைக்காரர்களுக்குக் கிடையாது. நாம் அவரது புத்திரர். யோவான் 15:13-15 ஒப்பிட்டுப் பார்க்க.

**7) நாம் அவரது *மகிமையில்* பங்கடைவோம்.** ரோமர் 8:17 பார்க்கவும். நாம் அவரோடுகூட அரியாசனத்தில் அமர்ந்து, நித்தியமாக அவரோடு யாவும் அனுபவிப்போம் என்பது உறுதி!

புத்திரராகச் சுவீகரிக்கப்பட்டவர்களுக்குரிய சிலாக்கியங்கள் இவை எனலாம். ஆயினும் ஒவ்வொரு சிலாக்கியத்தையும் அனுபவிக்க வேண்டுமானால் அதன் பின் ஒரு பொறுப்பும், இணைந்துள்ளது. 2பேதுரு 3:11

**2. சுவீகரிக்கப்பட்ட நமக்குரிய பொறுப்புகள்.**

நாம் நமக்குரிய சிலாக்கியங்களையும், பொறுப்புக்களையும் அடுத்தடுத்து வைத்துப் பார்க்கலாம்.

**1) நாம் அவரது ஆவியானவரைப் பெற்றிருக்கிறோம்.** ஆகவே நாம் அவரைத் துக்கப்படுத்தக் கூடாது. எபேசியர் 4:30 பார்க்கவும். குறிப்பாக வசனங்கள் 17-32 வரை வாசித்து அவரைத் துக்கப்படுத்தும் சில காரியங்களைக் கவனிக்கவும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம் பண்ணுகிறார் என்ற நீங்காத உணர்வைக் காட்டிலும் நாம் பரிசுத்த வாழ்வு நடத்த நமக்கு வேறு தூண்டுகோல் ஏதுமில்லை,

**2) நாம் புதிய பெயரைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.** ஆகவே நாம் அவருக்கு அவமரியாதையைக் கொண்டுவரக் கூடாது. அப்போஸ்தலர் 9:15, 2தீமோத்தேயு 2:19 படிக்கவும். இதற்கு எதிரிடையானது. அப்போஸ்தலர் 5:41. ஒரு கிறிஸ்தவன் அவரது பெயருக்கு இழுக்கைக் கொண்டு வருவதைக் காட்டிலும் கடவுளின் ஊழியத்தைத் தடைசெய்யயும் செயல் வேறு ஏதுமில்லை.

**3) அவரது சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு நாம் முன்குறிக்கப்பட்டுள்ளோம்.** ஆகவே நாம் பரம குயவனின் கைக்குள் அடங்கியிருப்போம். எரேமியா 18:1-6, ஏசாயா 64:8 பார்க்கவும். சில வேளைகளில் அவர் நம்மை நடத்தும் விதம் வேதனையாக இருக்கலாம். அடிக்கடி அவை நமக்குத் திகைப்பூட்டுவதாகவும் இருக்கும். இருப்பினும் அவை யாவும் நமது நன்மைக்கெனவே வருகின்றன (ரோமர் 8:28).

**4) நாம் அவரது சிட்சையை எதிர்பார்க்க வேண்டும்.** நாம் அதை அனுபவித்துப் பழகுவோம். எபிரெயர் 12:11, 1கொரிந்தியர் 11:27-32 படிக்கவும். ஒவ்வொரு முறையும் நாம் சோதனைக்குள் செல்லும்போது, "இதன்மூலம் ஆண்டவர் எனக்கு என்ன புதிய பாடத்தைக் கற்றுத்தர விரும்புகிறார்?" என்ற கேள்வியைக் கேட்டுக் கற்றுக் கொள்ளவேண்டும்.

**5) நாம் அவரது ஆறுதலை அனுபவிப்போம்.** ஆகவே நாம் அனுபவித்ததைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். 2கொரிந்தியர் 1:4 படிக்கவும். "ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி" என்பதை 'உற்சாகப்படுத்தல்' அல்லது 'தைரியப்படுத்தல்' என்றும் கூறலாம். எபிரெயர் 10:25 ஒப்பிடுக. அவரது ஆறுதலை அனுபவிப்பது என்பது எவ்வளவு அற்புதமானது! ஆனால் அதிலே கவனம் தேவை. அவரது ஆசீர்வாதங்களை அனுபவிக்கும் நாம் சுயநலமுள்ளவர்களாயும், தற்புகழ்ச்சியுள்ளோராயும் மாறிவிடக் கூடாது.

**6) நாம் அவரது விடுதலையை அனுபவிக்க வேண்டும்.** நாம் மாம்சத்துக்குரிய சட்டத்தின் கட்டுகள் ஒவ்வொன்றிலிருந்தும் வெற்றி பெற வேண்டும். யோவான் 8:36ஐ ரோமர் 8:2 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும். லாசரு உயிருடன் எழுப்பப்பட்டாலும், "அவன் கால்களும், கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது", "அவன் முகமும் சீலையினால் சுற்றப்பட்டிருந்தது..." (யோவான் 11:44) இது நமது செய்கை, நடை, சாட்சியைக் குறிக்கும்.

**7) நாம் அவரது மகிமையில் பங்கடைவோம்.** நாம் அவரது வருகையை எதிர்நோக்கி நம்மைத் தாழ்த்துவோம். வெளிப்படுதல் 1:17 படிக்கவும். பின்னர் 1யோவான் 3:1,2 படிக்கத் தவற வேண்டாம்.

## பாடம் 7 **நமக்குள்ளே இருப்பவர் அவர்**

***(வேதபகுதி: யோவான் 14:16-18,26, 15:26, 16:7-11,13,14)***

கடவுள் தம்முடைய பிள்ளைகளோடிருந்து, அவர்களைத் தாங்க விரும்புகிறார். இதைக் கவனிப்பது நன்று.

1. ***அவர் நமக்குமேலாக உயர இருக்கிறார்*** - உபாகமம் 4:39, எபேசியர் 1:20,21
2. ***அவர் நமக்குக் கீழே ஆதாரமாக இருக்கிறார்*** - உபாகமம் 33:27
3. ***அவர் நமக்கு முன்னாக இருக்கிறார்*** - யாத்திராகமம் 13:21,22, யோவான் 10:4
4. ***அவர் நமக்குப் பின்னாக இருக்கிறார்*** - யாத்திராகமம் 14:19
5. ***அவர் நம்மைச் சூழ்ந்து இருக்கிறார்*** - சங்கீதம் 34:7, 125:2
6. ***அவர் நம்மோடு இருக்கிறார்*** - ஏசாயா 41:10, எபிரெயர் 13:5,6
7. ***அவர் நமக்குள்ளே இருக்கிறார்*** - கலாத்தியர் 2:20, கொலோசெயர் 1:27

மேலே கூறப்பட்டுள்ள முதல் ஆறு உறவுகளும் மகிமை குறைவானது. ஆனால் கடைசியாகக் கூறப்பட்டதோ மிகவும் சிறப்பானது. கடவுள்தாமே இறங்கி வந்து மனிதனுடைய ஆளுமைக்குள் வாசம் பண்ணுகிறார் என்பதே அது. எசேக்கியேல் 36:27இல் அவர் நமக்குள்ளே வாசம்பண்ண விரும்பினார். ஆனால் இதைப்பற்றி முழுமையாக நமது ஆண்டவர் கூறியுள்ளார் (யோவான் 14:16-18,26; 15:26; 16:7-11,13,14), யோவான் 14:16-18 வரையுள்ள பகுதியில் கூறப்பட்டுள்ள முக்கியமான சத்தியங்களை நாம் கவனிப்போம்.

**1) பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆள்.** யோவான் 14:16 இல் 'நான்', 'உங்களுடனே', 'அவர்'.'ஆவியாகிய' என்று நான்கு ஆட்களைக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். யோவான் அதிகாரங்கள் 14,15,16 ஐப் படித்துப் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் சொற்களைக் கவனியுங்கள். நமது வேதபகுதியில் கூறப்பட்டுள்ள செயல்கள் யாவும் ஒரு ஆளினால் மட்டுமே செய்யமுடியும்.

**2) பரிசுத்த ஆவியானவர் கடவுள் தன்மையுள்ள நபர்.** யோவான் 14:16 இல், திரியேக கடவுளில் உள்ள மூவர் 'நான்'. 'பிதா', 'தேற்றரவாளன்' என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும், குமாரனோடுமுள்ள கடவுள்.

**3) பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் வாசம் செய்பவர்.** யோவான் 14:17 இன் கடைசி வார்த்தைகளைக் கவனியுங்கள். அவர் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் வாசம் பண்ணுகிறார். பரிசுத்த ஆவியானவரைத் தனக்குள்ளே கொண்டிராத விசுவாசி இல்லை. (யோவான் 7:37-39, அப்போஸ்தலர் 2:38,39, ரோமர் 5:5; 8:9, 1கொரிந்தியர் 6:19, கலாத்தியர் 3:2; 4:6).

**4) பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் தங்கி வாசம் செய்கிறார்.** ஆம் அவர் நமக்குள் தங்கி வாசம் செய்ய வருகிறார் (யோவான் 14:16). பழைய ஏற்பாட்டின் காலத்தில் அவர் வருவார் - பின்னர் போய்விடுவார் - நியாயாதிபதிகள் 6:34, 16:20, 1சாமுவேல் 10:6. 16:14ஐ சங்கீதம் 51:11 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும். ஆனால் இப்பொழுதோ நம்மோடு என்றென்றும் வாசம்பண்ணும்படியாக நமக்குள்ளே வருகிறார்.

**5) கிறிஸ்துவின் பிரசன்னத்தை நமக்குள்ளே கொடுப்பதற்கென பரிசுத்த ஆவியானவர் நம்மோடு வாசம் செய்கிறார்.** தம்முடைய சரீரத்தினாலே ஆண்டவராகிய இயேசு பரலோகத்திற்குள் பிரவேசித்திருக்கிறார் ((எபிரெயர் 9:24) அதே வேளையில், பரிசுத்தாவியானவர் வாசம் செய்வதின் மூலம் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும், அவர் நமக்குள்ளேயும் இருக்கிறார். (யோவான் 14:17,18) இதுவே 'இரகசியம்' - கொலோசெயர் 1:27ஐ யோவான் 14:23 உடன் ஒப்பிடுக.

ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியானவர் செயல்படுத்தும் ஏழு வகையான ஊழியங்களைக் குறித்து, நமது ஆண்டவர் உரைத்தவற்றை யோவான் 14,15,16 ஆம் அதிகாரங்களில் காணலாம். நம் வாழ்விற்கு முக்கியமான ஏழுவகைத் தேவைகளை, அவர் நமக்குள்ளே வாசம் பண்ணி, நமக்கெனக்

கொடுக்கிறார். அவையாவன:

1) **"எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார்" (14:26).** அவர் நமக்குள்ளேயுள்ள தெய்வீக ஆசான். நாம் அறிய வேண்டுமென்று அவர் விரும்புகிற யாவற்றையும் தேவையான ஆவிக்குரிய காரியங்களையும் நமக்குப் போதிப்பதற்காகவே அவர் அங்கே இருக்கிறார். 1கொரிந்தியர் 2:9-14 வரை தயவு செய்து படியுங்கள். இந்தப் பரலோக ஆசான், தாழ்மையான இளம் விசுவாசிக்குள்ளே இருக்கிறார். ஆவிக்குரிய காரியங்களை அறியாமல் இருக்கும் நமக்கு இது ஒரு சவுக்கடியாகும். 1யோவான் 2:27 படிக்கவும்.

2) **"நான் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (14:26).** புதிய ஏற்பாட்டின் புத்தகங்களை எழுதப்போகும் அப்போஸ்தலரைக் குறித்த ஒரு குறிப்பு இது எனலாம். இந்த முக்கியமான பணியைச் செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவரே அவர்களுக்குப் போதுமானவர். அவர்கள் தங்களது நினை வாற்றலை மட்டும் சார்ந்திருப்பது போதாது. ஆவியானவரையும் சார்ந்திருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டு நூல்கள் யாவும், மேலான தெய்வீக அங்கீகாரம் பெற்றவை என்ற தகுதி பெறக் காரணம் : அவை யோவான் 14:26ஐச் சார்ந்திருப்பதுதான். (2தீமோத்தேயு 3:16) இதனால் நமக்கு என்ன பயன்? அவர் நம்முடைய தேவைக்கேற்ப, ஆறுதலான வார்த்தை, வழிநடத்தும் வார்த்தை, ஞானமுள்ள வார்த்தை, கடிந்துகொள்ளும் வார்த்தை போன்றவற்றை நமக்கு அளிக்கிறார். மத்தேயு 10:18,19 ஒப்பிட்டுப் படிக்கவும்.

3) **"என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்" (15:26,27).** வல்லமையான சாட்சியாக நாம் இருப்பதற்கு வல்லமையளிப்பவர் நமக்குள்ளேயுள்ள பரிசுத்த ஆவியானவரே. அப்போஸ்தலர் 1:8. "என்னைக் குறித்து" என்று கூறியுள்ளதைக் கவனிக்கவும். அவர் எப்பொழுதும் ஆண்டவர் இயேசுவைக் குறித்துச் சாட்சி கொடுப்பாரேயன்றி, நம்மைப் பற்றியோ, நமது ஊழியங்களைக் குறித்தோ, சபையைப் பற்றியோ, சபைப் பாகுபாட்டைக் குறித்தோ சாட்சி கூறமாட்டார். அவர் நமக்குள்ளேயிருந்து, நாம் அவரது வழியைவிட்டு விலகிச்செல்லும்போது உணர்த்தி வழி காட்டுகிறார்.

4) **"உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" (16:7-11).** அவர் ஒருவர் மட்டுமே, அவிசுவாசிகளிடம், அவர்களுக்கு ஒரு இரட்சகர் வேண்டுமென்று உணரச்செய்பவர். அவர் இதை நம்மூலமாகச் செய்கிறார். (வசனம் 8) நாம் அவர்களுடைய ஆவிக்குரிய தேவையையும், கடவுளின் அன்பு அவர்களுக்குத் தேவை என்பதையும் நம் சொந்த முயற்சியினால் உணர்த்த இயலாது. ஆனால் பரிசுத்த ஆவியானவரால் முடியும். அவர் நமக்குள்ளே இருந்து நாம் வழிதவறும் போது உணர்த்தி நல்வழிப்படுத்துகிறவர் அவரே.

5) **"சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (16:13).** ஆண்டவர் இஸ்ரவேலரை வழிநடத்தினார்! யாத்திராகமம் 13:21 பார்க்கவும். ஆனால் நமக்கோ, நம்முடைய வாழ்நாள் முழுவதும் நமக்குள்ளே இருந்து நம்மை வழிநடத்தும் ஒரு வழிகாட்டி நமக்குண்டு. ரோமர் 8:14 ஒப்பிட்டுப் பார்க்கவும். சத்தியத்தின் பாதையில் நாம் நடப்பதற்காக, நமக்குள்ளே அவர் வழிகாட்டியாகவுள்ளார்.

6) **"வரப்போகின்ற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (16:13).** சீடர்கள் புதிய ஏற்பாட்டை எழுதுவதற் குத் தேவையான தீர்க்கதரிசன வரத்தைக் குறிக்கும் வார்த்தைகளே இவை. நீங்களும் நானும் அவரை நமக்குள்ளே கொண்டிருப்பதினால் நம்மால் அந்தத் தீர்க்கதரிசனங்களை புரிந்து கொள்ளவும், விளக்கவும் முடிகிறது.

7) **"என்னை மகிமைப்படுத்துவார்" (16:14).** அவர் நமக்குள்ளே இருப்பதினால், ஆண்டவர் இயேசுவை உண்மையுள்ளவராக, விலையேறப்பெற்றவராக நமக்குக் காட்டி, நம் மூலம் மற்றவர்களுக்கும் காட்டுகிறார்.

**முடிவுரை:**பரிசுத்தஆவியானவர் நமக்குள்ளேயிருந்து, இந்த ஏழுவகை ஊழியங்களையும் நடப்பிப்பதினால் நாம்

*(1) நமக்குள்ளேயுள்ள அவரது பிரசன்னத்தை அங்கீகரிக்க வேண்டும்.* (1கொரிந்தியர் 6:19)

*(2) நமக்குள்ளேயுள்ள அவரது பிரசன்னத்தைப் பிரதிபலிக்க வேண்டும்.*.(எபேசியர் 5:18)

*(3) நமக்குள்ளேயுள்ள அவரது பிரசன்னத்தைச் சார்ந்திருக்க வேண்டும்.* (2கொரிந்தியர் 3:5,6)

## பாடம் 8 **நிச்சயமானவை**

*(வேதபகுதி - 1யோவான் 5:1-13)*

இந்தப் பாடத்தின் முக்கிய வார்த்தை ‘அறிதல்’ என்பதாகும். 1யோவான் 5:13 ஐப் படித்து, யோவான் நிருபத்தில் ‘அறிதல்’ என்கிற பொருளில் வரும் வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்க. 2:3-5,11,21,29; 3:2,5,14,15,19,24; 4:2,6,13; 5:2,13,15,18-20. இம்மையிலும், மறுமையிலும் அவரது பிள்ளைகளாக இருப்போம் என்கிற இந்தக் காரியத்தைக் குறித்து அறிந்து நிச்சயமுள்ளோராய் இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

நாம் வாழும் இந்தக் காலத்தின் தன்மையைக் குறிக்கும் பொருத்தமான ஒரே வார்த்தை ‘நிச்சயமற்றது’ என்பதாகும். நம்மைச் சுற்றியுள்ள யாவும் நிரந்தரமற்றவை. இதனால் மக்களின் இருதயம், பயம், கவலை, மனச்சோர்வு போன்றவற்றால் நிறைந்துள்ளது. லூக்கா 21:26 பார்க்கவும். இந்த நிச்சயமின்மைதான் கடவுள் அருளும் பெரிதான ஈவா? இல்லை! தம்முடைய பிள்ளைகள் நிச்சயமுள்ளோராய் இருக்கவேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். கிறிஸ்தவன் எனப்படும் கடவுளின் பிள்ளையைக் குறிக்கும், சுட்டிக் காட்டும் ஒரே வார்த்தை ‘நிச்சயமுள்ளவன்’ என்பதே. நாம் நிச்சயமானவற்றையும், உறுதியானவற்றையும் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நமக்கு எப்படி இது நிச்சயமானது என்று தெரியும்? நம்முடைய இந்த நிச்சயத்தின் (உறுதியின்) ஆதாரம் என்ன? கடவுளின் வார்த்தையே நம்முடைய இந்த உறுதியின் ஆதாரம். கடவுள் பேசினார். அவரது வார்த்தை உறுதியுள்ளது. மாறாதது (மத்தேயு 24:35, 1பேதுரு 1: 23, 25) வேதாகமம், அவரது வார்த்தை, நாம் கீழ்க்கண்டவற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்று எழுதப்பட்டது. அவையாவன:

### 1. ஆண்டவராகிய இயேசு நமது சொந்த இரட்சகர் என்று நாம் *அறிய வேண்டுமென்று* அவர் விரும்புகிறார்.

நாம் நிச்சயமாக அறிய வேண்டிய முதலாவது நிச்சயமான காரியம் ஒரு ஆளைப் பற்றியது. அது அவரது குமாரன், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்ததே. 2தீமோத்தேயு 1:12 புரட்டிப் பாருங்கள். அதிலே “நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்” என்ற வார்த்தைகளைக் கவனிக்கவும். அவரை சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் தனிப்பட்ட முறையில் அறிந்து கொண்டிருப்பது, ஒவ்வொரு கடவுளின் பிள்ளைக்கும் கிடைத்த சிலாக்கியம். இந்த உலகம் நிச்சயமற்றுத் தவிக்கும்போது, சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அவரை, (எபிரெயர் 8:1, 12:2) நான் எனக்குச் சொந்தமானவராக அறிந்து கொண்டிருப்பது எவ்வளவு விந்தையானது! நான் அவரை அறிவேன் என்பதையும், அவர் என் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் குடிகொண் டுள்ளார் என்பதை நான் எவ்வாறு நிச்சயமாக அறிவேன்? நீங்கள் அவரை வரவேற்று ஏற்றுக் கொண்டதை (வெளிப்படுத்தல் 3:20) உறுதிப்படுத்துங்கள். அப்படி நீங்கள் அவரை அழைத்திருந்தால், “நான் பிரவேசித்து....” என்கிற அவரது வார்த்தைகளை நம்புங்கள்!

### 2. நம்முடைய பாவங்கள் யாவும் கழுவப்பட்டு நாம் மன்னிக்கப்பட்டோம் என்பதை நாம் *அறிய வேண்டும்* என்று அவர் விரும்புகிறார்.

நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால், நம்முடைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டன, மன்னிக்கப்படலாம் என்பதல்ல. மன்னிக்கப்பட்டாயிற்று (1யோவான் 2:12). ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளை நம்புவது ஊகம் அல்ல. அவர் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கூறுவது - மாற்கு 2:5. நம்முடைய பாவங்களை நீக்குவதற்காகவே (ஏசாசா 53:5,6, யோவான் 1:29, 1பேதுரு 2:24) அவர் கல்வாரிச் சிலுவையில் தொங்கி மரித்தார். நாம் இந்த உண்மையை நம்பி, நம்முடைய வாழ்வில் அவரை ஏற்றுக் கொள்ளும்போது, நமக்கு அவரளிக்கும் மன்னிப்புக் கிடைக்கிறது. அப்போஸ்தலர் 13:38,39 ஐச் சங்கீதம் 32:1, 103:12 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்கிற நிச்சயம் உங்களுக்கு உண்டா?

### 3. நாம் மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கின்றோம் என்பதை *அறியவேண்டு மென்று* அவர் விரும்புகிறார்.

சுபாவத்தின்படி நாம் ஆவிக்குரிய நிலையில் செத்தவர்கள் (யோவான் 5:40, ரோமர் 5:12,எபேசியர் 2:1). ஆனால் மறுபடியும் பிறக்கும்போது, கிறிஸ்தவர்களாகிறோம் (யோவான் 1:11-14) அப்பொழுது நமக்கு அவரது ஜீவன், புதுவாழ்வு(யோவான் 10:10), நித்தியவாழ்வு போன்றன (யோவான் 10:27-29, 1யோவான் 5:11-12) கிட்டுகிறது. இப் பொழுது 1யோவான் 3:14 இல் கூறப்பட்டுள்ள அதி நிச்சயமான வார்த்தைகளைப் பாருங்கள். நீங்கள் மறுபடியும் பிறந்தவர்கள் என்றும் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிவீர்களா? (யோவான் 5:24)? இப் புதிய வாழ்வு, அல்லது புதியபிறப்புக்கான ஐந்து அடையாளங்களை, அதாவது ஐந்து சான்றுகளை யோவானின் முதலாம் நிருபத்தில் நாம் காணலாம். நீங்கள் மறுபடியும் பிறந்துள்ளீர்களா? என்பதை அவற்றைக்கொண்டு சோதித்துப் பாருங்கள்:

1. 1யோவான் 2:29 கடவுளைப் பிரியப்படுத்த உங்களுக்கு வாஞ்சையுண்டா?
2. 1யோவான் 3:9 பாவத்தில் மகிழ்வதில் உங்களுக்கு விருப்பமில்லையா?
3. 1யோவான் 3:14 மற்ற கிறிஸ்தவர்களிடம் நீங்கள் அன்புகூருகிறீர்களா?
4. 1யோவான் 5:1 அவரது சர்வ வல்லமையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா?
5. 1யோவான் 5:4 வெற்றிகொள்ளும் வல்லமை உங்களிடம் உண்டா?

**4. நம்முடைய வாழ்விற்கென அன்பான ஒரு திட்டத்தையும், நோக்கத்தையும் அவர் வைத்துள் ளார் என்பதை நாம் *அறிய வேண்டும்* என்று அவர் விரும்புகிறார்.**

அவிசுவாசி தன் வாழ்வில் நிலையற்றுத் தவிக்கிறான். நல்லதை எதிர்நோக்குகிறான். ஆனால் அவன் வாழ்வில் சிக்கல்களும், பிரச்சினைகளும் ஏற்படும்போது, அவனுக்கு பதில் ஏதும் கிட்டுவதில்லை. நிச்சயமற்று தவிக்கிறான். ஆனால் விசுவாசிக்கோ, அற்புதமான நிச்சயம் உண்டு. ரோமர் 8:28-30 வரை படித்துப் பார்க்கவும். கடவுளின் நோக்கத்தில், தீர்மானத்தின்படி, விசுவாசியை அவர் முன்னறிந்தார், முன்குறித்தார், அழைத்தார், நீதிமானாக்கினார், மகிமைப்படுத்தியுமிருக்கிறார்! இந்த உண்மை எவ்வளவு பெரிய நிச்சயத்தை நமக்கு அளிக்கிறது! குறிப்பாக வசனம் 28ஐப் படிக்கவும். நாம் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டால், சோதனை, துன்பம், துக்கம், இழப்பு, தோல்வி, ஏமாற்றம் போன்றவை நம்மை அணுகாது என்று கூற முடியாது. நமக்கு இவை யாவும் உண்டு. ஏன்? ஏனெனில், "....தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்...." கடவுளின் வழிகள் யாவற்றையும் நாம் இப்பொழுது புரிந்துகொள்ள முடியாது. ஆனால் ஒரு நாளிலே இவை யாவும் நமது நன்மைக்காகவே வந்தன என்று உணருவோம் என்கிற நிச்சயம் நமக்கு உண்டு (யோவான் 13:7).

**5. ஆண்டவர் இயேசு இராஜாதி இராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக வீற்றாளும் நாள் வரும் என்ற அவரது சித்தத்தின் நிறைவேற்றத்தை நோக்கி இன்றைய உலகின் நிகழ்வுகள் யாவும் முன்னேறிச் செல்கின்றன என நாம் *அறிய வேண்டுமென்று* அவர் விரும்புகிறார்.** இது நம்முடைய ஆசீர்வாதமான நம்பிக்கை - யோபு 19:25-27 படிக்கவும். ஒவ்வொரு ஆண்டும் கடந்து செல்லும்போது, கடவுள் தமது நோக்கத்திற்கென கிரியையை செய்கிறார். முடிவில் சூரியன் தோன்றும் இடமெல்லாம் அவர் ஆளுகை செய்வார். அவரது இராஜ்யம் இக்கரை முதல் அக்கரை வரை நீண்டிருக்கும். சந்திரன் வளர்ந்து தேய்வது போல அல்ல. நாம் அவரைப் பார்ப்போம். (வெளிப்படுத்தல் 1:7) அவரது வெற்றியில் பங்கடைவோம் (வெளிப்படுத்தல் 3:21).

## பாடம் 9 **பரிசுத்தமாக்கப்படுதல்**

*(வேதபகுதி - 1தெசலோனிக்கேயர் 4:1-12)*

'பரிசுத்தமாக்கப்படுதல்' என்கிற இந்தக் கோட்பாட்டிற்கு வேதாகமத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப் பதிலிருந்து இது எவ்வளவு முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதை அறியலாம். இந்தப் பாடத்தில் இரண்டு காரியங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். முதலாவது பரிசுத்தமாக்கப்படுதல் என்ற இந்த வார்த்தைக்கு என்ன பொருள் என்பதை அறியலாம். இரண்டாவதாக இந்த வார்த்தை எவ்வாறு பயன்படுத்தப் பட்டுள்ளது, குறிப்பாக விசுவாசிகளைத் தொடர்புபடுத்திக் கூறுவது என்னவெனக் காண்போம்.

**1. இந்த வார்த்தைக்குரிய இரண்டுவகைப் பொருள்.**

முதலாம் அர்த்தத்தைப் பார்ப்போம். மூல மொழியில், 'பரிசுத்தமாக்கப்படுதல்' என்பதற்கு 'பரிசுத்தம்' அல்லது 'புனிதம்' என்கிற பொருள் உண்டு. எபிரெய, கிரேக்க மொழிகளில் பிரித்தெடுக்கப்படுதல் என்பதற்கு புனிதமான வேலைக்கென பிரிக்கப்படுதல் என்ற பொருளும் உண்டு(லேவியராகமம் 21:8). இயேசு இணையற்றவர், மீட்பின் பணியைச்செய்ய அவர் ஒருவரே தகுதியுள்ளவர். அவர் தம்மைத்தாமே இதற்கெனப் பரிசுத்தமாக் கினார். பரிசுத்தமாக்கப்பட்ட நாட்கள், இடங்கள், பொருட்கள் குறித்து நாம் பழையஏற்பாட்டில் படிக்கிறோம். இவை பரிசுத்தமான, புனித பணிக்கெனப் பிரித்து வைக்கப்பட்டவை. ஆதியாகமம் 2:3, யாத்திராகமம் 29:43, 40:10,11

'பரிசுத்தமாக்கப்படுதல்' என்பதற்கு இன்னொரு அர்த்தமும் உண்டு. மனிதனிலும், இந்த உலகிலும் பாவமும் தீமையும் இருப்பதினால், மனிதனைக் குறிப்பிடும்போது, பிரித்தெடுக்கப்படுதல் என்கிற வார்த்தை பரிசுத்தமான, புனிதமான நோக்கத்திற்காக அவன் பிரிக்கப்பட்டவன் அதாவது, தீமை, பாவம் அசுத்தம் இவைகளினின்று சுத்திகரிக்கப்பட்டவன் என்ற பொருள்படும். இதற்கு எடுத்துக்காட்டாக பழைய ஏற்பாட்டில் 2 நாளாகமம் 29:5, புதிய ஏற்பாட்டில் 2கொரிந்தியர் 7:1 ஐயும் கூறலாம்.

இவ்விதமாகப் பரிசுத்தமாக்கப்படுதல் என்கிற இந்த வார்த்தைக்கு இருவகைப் பொருள் உண்டு. அவை பாவம், அசுத்தத்திலிருந்து பிரிக்கப்படுதல், கடவுளுக்கென்று முழுமையாக அர்ப்பணித்தல் என்பன. அதிலிருந்து, இதற்கென்று பிரிக்கப்படுதல். இதைத் தொடர்ந்து நாம் பரிசுத்தமாக்கப்படுதல் என்ற சொல், விசுவாசியுடன் எவ்வாறு தொடர்புள்ளது என்று காண்போம்.

**2. விசுவாசிகளைத் தொடர்புபடுத்தி, இந்த வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் கூறலாம்.** இந்த வார்த்தை வேதாகமத்தில், விசுவாசியைத் தொடர்புபடுத்தி இரண்டு வகைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது ஒவ்வொரு விசுவாசியும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவிடம் கொண்டுள்ள விசுவாசத்தினாலும், அவரோடுள்ள ஐக்கியத்தினாலும், முழுமையாக, நித்தியத்திற்கென பரிசுத்தமாக்கப்பட்டாயிற்று. எபிரெயர் 10:10,14 - இரண்டாவதாக ஒவ்வொரு விசுவாசியும் இன்னமும் பரிசுத்தமாக வேண்டும். 1தெசலோனிக்கேயர் 4:3 (வசனங்கள் 1-12) இதனை இன்னொரு விதமாக கூறலாம். ஒவ்வொரு விசுவாசியும் ஏற்கெனவே சுத்திகரிக்கப் பட்ட நிலையில் உள்ளான். இந்த மகிமையான உண்மையை மறுக்க முடியாது. கிறிஸ்தவர்கள் என்கிற நாம் பரிசுத்தவான்கள்தான், சுத்திகரிக்கப்பட்ட மக்கள்.தான் ஆனால் ஆராய்ந்து பார்க்கும்போது நாம் முழுமையாகப் பரிசுத்தமாகவில்லை என அறியலாம். இதைக் கடவுள் நம் வாழ்வில் படிப்படியாகச் செய்து வருகிறார். செய்து வருவார். எதுவரை? அதாவது, கிறிஸ்துவின் சாயலை நம்மிலே காணும் வரை, மேலும்,மேலும் மாற்றம் பெறும்வரை, நாம் அவரைப் பார்க்கும்போது, அவரது சாயலுக்கு ஒப்பாகும் வரை (ரோமர் 8:29), "....தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே..... உங்களை மாசற்றவர்களாயும்" (யூதா 24), "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான" எபேசியர் 5:27 நிலையிலும் நிறுத்துவார்.

**3. நாம் படிப்படியாக எவ்வாறு பரிசுத்தமாக்கப்படுகிறோம்.**

நம்முடைய அனுபவத்தில் படிப்படியான இந்தப் பரிசுத்தமாக்கப்படுதல் எவ்வாறு கொண்டு வரப்படுகிறது? இது கடவுளின் வேலை. அப்படியானால் அவர் இதற்கென பயன்படுத்தும் கருவிகள் எவை? இதற்குப் பதிலளிக்க நாம் வேதாகமத்தில் கையாளப்பட்டுள்ள வேறு பதங்களைப் பார்க்க வேண்டும். பிலிப்பியர் 2:12,13 படியுங்கள். கடவுள் நம்மில் செயல்படுகிறார். நாமும் பிரயாசப்படவேண்டும். அவர் நம்மில் செயல்படுவதை நாம் வெளிப்படுத்தப் பிரயாசப்படவேண்டும். எவ்வாறு?

***1) நமது பாவத்திலிருந்தும், ஐயத்திற்குரிய காரியங்களிலிருந்தும் அவர் வலிய வந்து நம்மைப் பரிசுத்தப் படுத்துகிறார்.*** எல்லாச் சுத்திகரிப்புக்கும் ஆதாரம், கிறிஸ்துவின் இரத்தமாகும். 1யோவான் 1:7 படிக்கவும். ஆனால் நடைமுறைச் சுத்திகரிப்புக்கு (பரிசுத்தமாக்கப்படுதலுக்கு) நாம் செயலாற்ற அழைக்கப் படுகிறோம். எடுத்துக்காட்டுகள். 2நாளாகமம் 29:5,12,15-17, 2கொரிந்தியர் 6:14,15,17, 7:1. கொலோசெயர் 3:5-10, 2தீமோத்தேயு 2:19-22.

***2) நாம் எவ்விதக் கபடமுமின்றி நம்மை அவரிடம் ஒப்புவிக்கும்போது அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.*** ரோமர் 12:1ஐ ரோமர் 6:13 உடன் ஒப்பிட்டுப் பார்க்க. நம்முடைய சரீரம் என்பது பல்வேறு அவயவங்களைக் கொண்டது. 1கொரிந்தியர் 12:12 பார்க்க.

***3. நாம் ஜெபத்தின் மூலம் அவரோடு உரையாடும் வாழ்க்கையை நடத்தும்போது அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.*** லூக்கா 11:1, பிலிப்பியர் 4:6, 1தெசலோனிக்கேயர் 5:17, 2பேதுரு 3:18 பார்க்கவும்.

***4. நாம் அன்றாட வாழ்வில் அவரது வார்த்தைக்கும், அவரது ஆவியானவருக்கும் கீழ்ப்படிந்து நடக்கும்போது, அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.*** யோவான் 15:3, 17:17, எபேசியர் 5:18, கொலோசெயர் 3:16, 1பேதுரு 1:22, 2கொரிந்தியர் 3:18.

***5. கடவுளிடம் நம்முடைய அன்றாடக் கணக்கை முடிக்கும்போது, அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.*** நாம் பாவம் செய்துவிட்டோம் என உணர்ந்தவுடனே நம்முடைய எல்லாப் பாவங்களையும் அறிக்கையிட்டு விட்டுவிட வேண்டும். நீதிமொழிகள். 28:13, 1யோவான் 1:9.

***6. வாழ்வில் அவர்தரும் சிட்சைகளுக்காக அவரை நம்பும்போது, அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.*** எபிரெயர் 12:10ஐ யோபு 23:10, யாக்கோபு 1:2-4, 1பேதுரு 1:7, ரோமர் 8:28,29 உடன் ஒப்பிட்டுப் பார்க்க.

***7. அவர் வருகிறார் என்ற நம்பிக்கையில் நாம் வாழும்போது, அவர் நம்மைப் பரிசுத்தப் படுத்துகிறார்.*** யாக்கோபு 5:7-9, 2பேதுரு 3:11-14, 1யோவான் 2:28, 3:1-3 வரை படிக்கவும்.

ஆகவே விசுவாசியே

1, ஆண்டவர் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்று, அவரோடு ஐக்கியப் பட்டிருப்பதினால், நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்ட நிலையில் இருக்கிறீர்கள் - எபிரெயர் 10:10,14.

2. அனுபவபூர்வமாக, படிப்படியாக நீங்கள் இந்தக் கிருபையின் மாறுதலை ஏற்று பரிசுத்தமாக்கப்பட மேற்கூறிய ஏழுவகை கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இப்பொழுது நீங்கள் 1தெசலோனிக்கேயர் 5:23,24 படிக்கவும்.

**ஜெபம்:** இயேசுவே, என் எஜமானே, நான் உமக்கே சொந்தம் குறைவற்ற ஆட்டுக்குட்டியானவரே, நீர் வந்து உம்முடைய இரத்தத்தை வலிய சிந்தி, என்னைக் கிரயத்திற்குக் கொண்டவர் நீர் ஒருவரே, என் உள்ளம் உமக்கே சொந்தம் நான் உமக்காக மட்டுமே வாழ வழிநடத்தும்.

## பாடம் 10 **மகிமைப்படுதல்**

*(வேதபகுதி - ரோமர் 8:28-39)*

ரோமர் 8:29,30 வசனங்களில் வரும் ‘முன்னறிதல்’, ‘முன்குறித்தல்’, ‘அழைக்கப்படல்’, ‘நீதிமானாக்கப்படல்’, ‘மகிமைப்படல்’ போன்ற சொற்கள், கடவுள் தமது பிள்ளைகள் ஒவ்வொருவருக்காகவும் கொண்டுள்ள நோக்கத்தையும், விருப்பத்தையும் வெளிப்படுத்தும் சொற்களாகவுள்ளன. கடவுளின் தீர்மானத்தின்படி ((2தீமோத்தேயு 1:9) இரட்சிக்கப்பட்ட யாவரும், முன்னறிந்து, முன் குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டு, மகிமைப்பட்டாயிற்று. நமது நித்தியமான பாதுகாப்புக்கு உறுதிமொழி இதுதான். இப்பொழுது நாம் உண்மையாகவே ஆண்டவருக்குரியோரானால் நமது நிச்சயமான, பூரணமான அனுபவம் மகிமைப்படுதலேயாகும். வேதாகமம் கூறும் மகிமைப்படுதல் என்கிற கோட்பாட்டை,ப் பின்வரும் வேத வாக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. சங்கீதம் 73:24, 84:11, 1கொரிந்தியர் 15:43, கொலோசெயர் 3:4, எபிரெயர் 2:10, 1பேதுரு 5:10. இந்த வசனங்கள் யாவும் கூறும் மகிமைப்படுதல் என்பது என்ன? இரட்சிக்கப்பட்டோருக்குக் கிட்டும் மகிமையும், ஆசீர்வாதமும் எவையெனக் காண்போம்

**1, நாம் ஆண்டவரோடு என்றென்றும் வாழ்வதே அந்த மகிமையும், ஆசீர்வாதமும்.**

நம்முடைய நேசரும், ஆண்டவரும், இரட்சகருமாகிய அவரோடு நாம் என்றென்றும் இருப்போம் என்பதே வரப்போகும் இந்த மகிமை காட்டும் மேலான ஈர்ப்புவிசை எனலாம். யோவான் 14:3, 1தெசலோனிக்கேயர் 4:17 பார்க்கவும். இப்பொழுது ஆண்டவர் நம்மோடிருக்கிறார் (ஏசாயா 43:2, சங்கீதம் 23:4. எபிரெயர் 13:5,6) ஆனால் அப்பொழுதோ நாம் அவரோடு இருப்போம். அவிசுவாசி இதில் நுழையவே முடியாது. இப்பொழுது அவர் தங்களோடு இருக்க வேண்டுமென்று விரும்புகிற மக்கள் மட்டுமே அவரது மகிமையில் அவரோடு இருக்க விரும்புபவர்கள்.

**2. அவரது குமாரனின் சாயலுக்கு ஒப்பாக இருப்பதே அந்த மகிமையும், ஆசீர்வாதமும்.** நாம் அவரோடு கூட இருப்பது மட்டுமல்ல, நாம் அவரைப் போலவே இருப்போம், - 1யோவான் 3:2 படிக்கவும். அவரது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக ஒவ்வொரு விசுவாசியும் இருக்க வேண்டும் என்பதே கடவுள் நமக்கென வைத்துள்ள திட்டமாகும். ரோமர் 8:29, சங்கீதக்காரனும் இதைக் கூறியுள்ளார். சங்கீதம் 17:15 ஒவ்வொரு விசுவாசிக்கும் அவரது சரீரத்தைப் போன்ற சரீரம் கிட்டும். 1கொரிந்தியர் 15:20,43, பிலிப்பியர் 3:21ஐ எபேசியர் 5:27 உடன் ஒப்பிடுக. நாம் தேவதூதர்கள்போல் இராமல், சரீரத்தைவிட்டுப் பிரிந்த ஆவியைப் போன்று இராமல் நாம் புதிதாக, மகிமையுள்ள சரீரத்தில், அவர் இருக்கிறவண்ணமாகவே இருப்போம்.

**3. நாம் பரிபூரணமான சூழலில் வாழ்வதே இந்த மகிமையும், ஆசீர்வாதமும்.**

நம்முடைய முதற் பெற்றோர், ஏதேன் தோட்டத்தில், குறைவற்ற ஒரு பரிபூரண சூழ்நிலையில் வாழ்ந்தனர். ஆனால் முதல் மனிதனாகிய ஆதாம் மூலம் பாவம் நுழைந்து (ரோமர் 5:12) அதனோடு சாபம் கிட்டிற்று. பரதீசை இழந்தனர். காலம் நிறைவேறினபோது (கலாத்தியர் 4:5) இரண்டாம் ஆதாம் போரிட்டு மீட்டுக் கொள்ள வந்தார். அவர் சிலுவையில் செய்து முடித்த கிரியை மூலம், மகிமையுள்ள இந்த மனிதரின் நீதியின் மூலம், விசுவாசிகளின் நித்திய வீடாகிய பரலோகம் மீண்டும் கிடைத்தது. விசுவாசிக்குரிய மகிமை என்பது, குறைவற்ற பரிபூரணமான நிலையில் குழப்பம் ஏதும் இல்லாது வாழும் உலகம் எனலாம். - மத்தேயு 6:10. வெளிப்படுத்தல் அதிகாரங்கள் 21,22 படித்தால் அங்கு பரலோகத்தின் மகிமையைத் தீர்க்கதரிசனமாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கக் காணலாம்.

**4. பூலோகக் குறைபாடுகளிலிருந்து விடுதலை பெறுவதே இம்மகிமையும் ஆசீர்வாதமும்**

நாம் இந்தச் சரீரத்திலிருக்கும்போது, நாம் இதிலிருந்து விடுபடத் தவிக்கிறோம். அளவற்ற நித்தியத்தின் பரந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்க ஏங்குகிறோம். இங்கே இந்தக் கீழுலகில், பாவம் நம்மைக் கட்டுப்படுத்துகிறது. நாம் குற்றத்திலிருந்தும், தண்டனையிலிருந்தும், விடுதலையாக்கப் பட்டுள்ளோம். ஆயினும் நாம் விழுந்துபோன சுபாவத்திலும், பாவத்தின் வல்லமைக்கும், சாத்தானின் தாக்குதலுக்கும் இலக்கான விழுந்துபோன சரீரத்திலும்

வாழ்ந்து வருகிறோம். இந்த உலகில் நம்முடைய சரீரங்கள் நமக்கு அதிக துன்பத்தைத் தருகிறது. பலவீனம், வியாதி, வேதனை, முதிர்வயதின் குறைபாடுகள், இறுதியாக மரணமும் நாம் அனுபவிக்க வேண்டியவை - ரோமர் 8:23 இதைக் கூறுகிறது. பரலோகத்தில் கண்ணீர், மரணம், துக்கம், அழுகை, வேதனை போன்றவை இருக்காது. இதைக் குறித்து தியானித்துப் பாருங்கள் (வெளிப்படுத்தல் அதிகாரங்கள் 21,22).

**5. மீட்கப்பட்ட யாவரோடும் ஐக்கியம் கொள்வதே இந்த மகிமையும், ஆசீர்வாதமுமாகும்**

இவ்வுலகில் அடிக்கடி நாம் விசுவாசிகளாகக் கூடி ஐக்கியப்படும்போது, இது வரப்போகும் மகிமைக்குரிய 'முன்ருசி' என்போம். இது உண்மையே. நாம் மகிமைப்படும்போது, எல்லாக்காலத்தும் வாழ்ந்த பரிசுத்தவான்களைச் சந்திப்போம் (லூக்கா 13:29). பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், புதிய ஏற்பாட்டுப் புனிதர்கள், ஆதி இரத்தசாட்சிகள், சீர்திருத்தவாதிகள், நம்முடைய கிறிஸ்தவ நண்பர்கள், நமக்கு அன்பானவர்கள், எண்ணற்ற சிறுபிள்ளைகள் (மத்தேயு 18:10) யாவரையும் சந்திப்போம். என்னே அற்புதமான கூடுகை இது. ஆம் அப்பொழுது நாம் ஒருவரை யொருவர் அடையாளங்காண முடியும்! முகமுகமாய்ப் பார்த்தறிவோம். (1கொரிந்தியர் 13:12) இது விளக்கப்பட்டுள்ளது (லூக்கா 9:30,31), உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (1தெசலோனிக்கேயர் 4:16-18, 2:19). இது நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது (1கொரிந்தியர் 15:6).

**6. இராஜ சேவையில் நாம் ஈடுபட்டிருப்பதே அந்த மகிமையும் ஆசீர்வாதமுமாம்.**

வெளிப்படுதல் 22:3 இதைக் கூறுகிறது. இப்பொழுது நாம் இங்கே செய்யும் சேவை, அப்பொழுது, அங்கே செய்யப்போகும் சேவைக்குரிய ஒத்திகை எனலாம். மத்தேயு 25:21 இதைக் கூறுகிறது. இத்துடன் மத்தேயு 19:28, லூக்கா 19:17, 1கொரிந்தியர் 6:2,3 ஐ ஒப்பிட்டுப் பார்க்க. அங்கே நாம் எந்த வகை சேவையில் அல்லது ஊழியத்தில் இருப்போமென்று கூற முடியாது. ஆனால் நாம் அங்கு அவருக்கு ஊழியம் செய்வோம் என்பது உறுதி. அந்த ஊழியம் எவ்வளவு மகிழ்ச்சியும், மகிமையும் நிறைந்ததாக இருக்கும். அங்கேயுள்ள அதிகாரத்திற்கும், பொறுப்புகளுக்கும் நம்மைத் தகுதிப்படுத்துவதற்கு, நாம் இங்கே உண்மையுடன் இருக்க வேண்டும் என்பதை மறக்கவேண்டாம்.

**7. உண்மையோடு, தடையின்றி ஆராதிப்பதே அந்த மகிமையும் ஆசீர்வாதமுமாகும்.**

இந்தப்பாடம் எங்கு ஆரம்பமானதோ அங்கேயே முடிவடைகிறது. நம்முடைய மேலான மகிழ்ச்சியும், ஆச்சரியமும் கொண்ட மகிமைப்படுதலை நாம் அனுபவிப்போம். எப்போது தெரியுமா? திரள் கூட்டமான எண்ணற்ற மக்களோடு நாமும் வானில் இணைந்து, தங்கள் தகுதிகளை விட்டு, இயேசு ஒருவரே துதிக்குப் பாத்திரர் என்று உணர்ந்து, இயேசுவின் நாமத்தைப் புகழ்ந்து உயர்த்திப்பாடும்போது! நீங்கள் அவருக்குச் சொந்தமானவர்களா? அப்படியானால் நீங்கள் அவரால் நீதிமானாக்கப்பட்டு மகிமைப்படுவீர்கள்! யூதா வசனங்கள் 24, 25 பார்க்கவும்.

*அவர் வார்த்தையினால் புயலை அமர்த்தும்போது, எல்லா நாட்டவரும் அவரை எவ்வாறு புகழுவர் என்று என்னால் கூற முடியாது. மனிதரின் உள்ளங்கள் யாவும் அவரது அன்பினால் நிரப்பப்பட்டிருக்கும் போது, அது எவ்வளவு பெரிய ஆர்ப்பரிப்பாக இருக்கும் என்று கூற இயலாது. ஆனால் இது ஒன்று மட்டும் எனக்கு நிச்சமமாகத் தெரியும். நடுவானில் சபை எடுத்துக் கொள்ளப்பட்டு இலட்சோப இலட்சமான மனிதக் குரல்கள் பாடும். பூலோகமும், பரலோகமும் எதிரொலிக்கும். கடைசியாக நமது இரட்சகர், பூலோக இரட்சகர் இராஜாதி இராஜாவாய் வீற்றிருப்பார்!*

தொடர் 4

# கிறிஸ்தவ வாழ்வில் வளரத் தேவையானவை

பாடம் 1 கடவுளின் குடும்பத்தில் பிறக்க வேண்டும்

பாடம் 2 புதுவாழ்வின் முதற்படிகள்

பாடம் 3 தேவையானது ஒன்றே

பாடம் 4 வெற்றியுள்ள வாழ்க்கை

பாடம் 5 வேதாகமம்

பாடம் 6 கடவுளின் சித்தத்தை அறிதல்

பாடம் 7 ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்

பாடம் 8 மற்றவர்கள் செய்யலாம் ஆனால் நீயோ,செய்யக்கூடாது

பாடம் 9 எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி ஊழியம் செய்

பாடம் 10 தொடர்ந்து செல்ல வேண்டியவன் கிறிஸ்தவன்!

## பாடம் 1 **கடவுளின் குடும்பத்தில் பிறக்க வேண்டும்**

*(வேதபகுதி - யோவான் 1:1-16)*

கடவுளின் குடும்பத்தில் நுழைவதற்கென ஒரேயொரு வழிதான் உண்டு. அது அவரது குடும்பத்தில் பிறப்பதேயாகும். பூலோகக் குடும்பத்தில் நுழைவதற்கான வழி சரீரத்தின்படி அந்தக் குடும்பத்தில் பிறப்பதாகும். பரலோகக் குடும்பத்தில் நுழைவதற்கான வழி ஆவிக்குரிய பிறப்பு. அதாவது இரண்டாம் முறை பிறப்பது, பரத்திலிருந்து பிறப்பது என்கிற அற்புதத்தினால் மட்டுமேயாகும் - யோவான் 3:3-8 வரை படிக்கவும் (எவ்வளவு அற்புதமான செயல்!). பாவத்திலே உழலும் தரித்திர ஜீவன்கள், உன்னதமான கடவுளின் பிள்ளைகளாவது! இந்த அற்புதத்தை உணர்ந்துதான் அப்போஸ்தலனாகிய யோவான் வியப்புடன் எழுதியுள்ளார் - 1யோவான் 3:1!

**1. நாம் எப்போதும் கடவுளின் பிள்ளைகளாகத்தானே இருக்கின்றோம்.**

உலகெங்குமுள்ள மக்கள் யாவரும் கடவுளின் பிள்ளைகள்தானே. கடவுள் நம் எல்லோருக்கும் தகப்பன் அல்லவா. படைக்கப்பட்டவிதத்தில் நாம் அவரது பிள்ளைகள். அவர் நமது தகப்பன். மல்கியா 2:10, அப்போஸ்தலர் 17:28 பார்க்கவும். அதின்படி கடவுள் நம்மைப் படைத்தார். அவர் நம்முடைய தகப்பன். ஆனால் நாம் யோவான் 1:12, கலாத்தியர் 3:26ஐப் படிப்போமாகில், நாம் இதைவிட மேலான ஒரு நெருக்கமான உறவுக்குள்ளாக வரவேண்டிய அவசியத்தை அறியலாம். அந்த ஆவிக்குரிய உறவுக்குள் வரும்போதுதான் நாம் அவரை அன்புள்ள பரலோகப்பிதாவாக அறிகிறோம். கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவின் பேரில் வைத்ததினால் (கலாத்தியர் 3:26) அவர்கள் மாத்திரமே கடவுளின் பிள்ளைகள் எனக் கருதப்படுகின்றனர்.

**2. நாம் கடவுளின் பிள்ளைகளாவது எப்படி?**

நம்முடைய பூலோகப் பெற்றோருக்கு நாம் எப்படிப் பிள்ளைகளாகின்றோமா, அப்படியே நாம் கடவுளுக்கும் பிள்ளைகளாக மாறுகிறோம். பிறப்பின் மூலமாக - யோவான் 1:13, 'பிறந்தவர்கள்' என்கிற வார்த்தையைக் கவனிக்கவும். பிள்ளையாகப் பிறந்தாலன்றி, ஒருவரும் பிள்ளையாக மாறுவதில்லை. கடவுளின் குடும்பத்தில் பிறவாமல், ஒருவரும் அவரது குடும்பத்தின் உறுப்பினராக முடியாது. அப்படியானால் கடவுளின் குடும்பத்தில் பிறப்பது எப்படி? யோவான் 1:13 இல் மூன்று எதிரிடையான காரியங்கள் சொல்லப்பட்டுள்ளன.

**1. முதலாவது - இயற்கை மரபுவழி பிறப்பதல்ல இது.** மனிதனாகப் பரம்பரையாக மரபு வழி பிறப்பது போன்றதல்ல இது. நாம் கடவுளின் குடும்பத்தில் உறுப்பினராவது பரம்பரை உரிமையல்ல. நாம் நம்முடைய பெற்றோரிடமிருந்து பரம்பரைச் சொத்தாக அவர்களது உடைமைகள், அவர்களது குணங்கள், அவர்களது சாயல் போன்றவற்றைப் பெறுகிறோம். ஆனால் அவர்களது ஆவிக்குரிய கிருபை என்கிற ஒன்றைமட்டும் நாம் பெற்றுக் கொள்ள முடியாது. சுயமுயற்சியால் கிறிஸ்தவப் பெற்றோர் தாமாகக் கிறிஸ்தவ பிள்ளைகளை உண்டாக்க முடியாது.

**2. இரண்டாவது - மனிதத் தீர்மானத்தின்படியல்ல இது!** சுய தீர்மானத்தினால் அல்லது சுய முயற்சியினால் எவரும் கடவுளின் பிள்ளைகளாகவே முடியாது. எவ்வளவுதான் நாம் தீர்மானங்கள் எடுத்தாலும், உறுதிபூண்டாலும், நாம் கடவுளின் குடும்பத்தின் உறுப்பினராவது இயலாத செயல். ஏனெனில் இது மனிதத் தீர்மானத்தின்படியாவதல்ல. நான் அரச குடும்பத்தின் பிள்ளையாக விரும்புகிறேன். "நான் சாதாரண குடிமகனாக இருந்து சலித்துப் போனேன், ஆகவே இப்பொழுது நான் அரச குடும்பத்தில் உறுப்பினராக விரும்புகிறேன்" என்று சொன்னால் போதுமா! நடக்குமா? சாத்தியமா?

**3. மூன்றாவது - புருஷனுடைய சித்தத்தினாலல்ல இது.** ஒருவரையும் கடவுளின் பிள்ளையாக மாற்ற எந்த மனிதனாலும் முடியாது. நல்ல மனிதர்களால், நமக்கு உதவும்படியான, நல்ல பெரிய காரியங்களை மட்டுமே செய்ய முடியும். நம்முடைய ஆவிக்குரிய நலனைக்குறித்துக் கரிசனை கொண்ட கிறிஸ்தவ பெற்றோரையும், நண்பர்களையும் வைத்திருப்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம்! இருப்பினும் எப்பேர்ப்பட்ட பெரிய

பரிசுத்தவானாக, பரிசுத்தவாட்டியாக இருந்தாலும், அவர்களால் நம்மில் ஆவிக்குரிய மறுபிறப்பை உண்டாக்க முடியாது. கடவுளால் மட்டுமே இதைச் செய்ய முடியும்!

இவை மூன்றும் எதிர்மறையானவை. ஆனால் வசனம் 13 இல் எதிர்மறையற்ற ஒரேயொரு காரியம் கூறப்பட்டுள்ளது. நாம் கடவுளின் குடும்பத்தில் பிறப்பது எப்படி? "அவர்கள் தேவனாலே பிறந்தவர்கள்" என்று வசனம் கூறுகிறது. நான் தேவனாலே பிறக்க வேண்டும். கடவுள் ஒருவரே என்னைத் தமது குடும்பத்தின் பிள்ளையாக மாற்றமுடியும். இது அவராலே மட்டுமே முடியும். இது அவரது வேலையாகும்.

**3. இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் கடவுள் செயல்பட்டு நம்மைக் கடவுளின் குடும்பத்தில் பிறக்கச் செய்கிறார்.**

நாம் ஏற்கவேண்டிய இரண்டு நிபந்தனைகள் இதற்கு உண்டு. இதனை வேறு விதமாகவும் கூறலாம். எப்பொழுது கடவுள் நம்மை அவரது பிள்ளைகளாக்குவார்? வசனம் 12 இல் இதற்குப் பதில் உண்டு. 1. ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக்கொள். 2. அவரது நாமத்தின்மேல் விசுவாசம் வை. இதிலே நாம் இரண்டாவது காரியத்தைப் பார்ப்போம். "அவரது நாமத்தின்மேல் விசுவாசம்" வைப்பது என்பதின் பொருள் என்ன? அவரது நாமம் என்பது அவரது ஆள்த்துவத்தையும், அவரது வேலையையும் குறிக்கும். மத்தேயு 1:21, எபிரெயர் 7:25. முதலாவதாக நாம் அவரை இரட்சகராகக் காண்கிறோம். அவரை நம்பி, அவருக்குச் சொந்தமானோர் யாவருக்கும் அவர் இரட்சகர். அவரது நாமத்தை விசுவாசிப்பது என்பது, அவர் கூறுகிறபடியெல்லாம் செய்வது என்று பொருள். இதன்படி அவர் தமது மக்களின் இரட்சகராகவும், ஆண்டவராகவும் இருக்கிறார். நாம் கடவுளின் பிள்ளைகளாவதற்கு அவரது நாமத்தின்மேல் விசுவாசம் வைத்தால் மட்டும் போதாது. நாம் இயேசுவை நமது வாழ்விலும், உள்ளத்திலும் ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும், அவரை அங்கீகரிக்க வேண்டும். அவரை வரவேற்க வேண்டுமென்பதே. வெளிப்படுத்தல் 3:20 பார்க்கவும். ஒரு மனிதன் கடவுளின் பிள்ளையாவது எப்படி? 1. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னை இரட்சிக்க வல்லவர், இரட்சிக்க விரும்புகிறார் என்று விசுவாசிக்க வேண்டும். 2. இரட்சகராகிய அவரைத் தன் வாழ்விலும், இருதயத்திலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாக எவராகிலும் அவரை விசுவாசித்து, ஏற்றுக்கொள்ளும்போது, கடவுள் அவர்களைத் தமது பிள்ளைகளாக உறுதிப்படுத்துகிறார். அவன், அவரது குடும்பத்தில் பிறக்கிறான்.

நாம் ஆவிக்குரியபடி வளரவேண்டுமாயின், நாம் மறுபடியும் பிறந்துள்ளோம் என்கிற நிச்சயத்தையுடையோராக இருக்க வேண்டியது மிகவும் அவசியம் (சங்கீதம் 87:4-6). நாம் நித்திய ஜீவனையும் (1யோவான் 5:12) உடையோராக இருக்கிறோம் என்று உறுதியுள்ளோராக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் வளரமுடியும் ((1பேதுரு 2:2, 2பேதுரு 3:18).

இந்தப் பாடத்தின் கடைசியாக யோவான் தனது முதலாம் நிருபத்தில் மெய்யாகவே மறுபடியும் பிறந்த மனிதனின் அடையாளங்கள் அல்லது சான்றுகளாக, ஐந்து காரியங்களைக் கூறியுள்ளார். அவைகளைப் பார்க்கலாம்:

1. இயேசுவை மேசியாவாக (கிறிஸ்துவாக) விசுவாசித்தல் (5:1) வேண்டும்.
2. நீதியைச் செய்கிற வாழ்க்கை நடத்துதல் (2:29) வேண்டும்.
3. பாவ பழக்கமுள்ளவர்களாக வாழக்கூடாது (3:9, 5:18).
4. ஒருவரிலொருவர் அன்பாயிருத்தல் (4:7) வேண்டும்.
5. சோதனையை ஜெயித்தல் (5:4) வேண்டும்.

## பாடம் 2 **புதுவாழ்வின் முதற்படிகள்**

*(வேதபகுதி - அப்போஸ்தலர் 9:1-31)*

நமக்கு முன்பாகவுள்ள இந்த வேதப்பகுதியில் தர்சு பட்டணத்துச் சவுலின் சடுதியான மனமாற்றம் பற்றிய விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் முன்பு முகமுகமாய்ச் சந்தித்த அந்த அற்புதச் சந்திப்பு இது. சவுலின் மனமாற்றம் திடீரெனச் சடுதியாய் ஏற்பட்டது. உண்மையான இந்த மன மாறுதலை நாம் மாதிரியாக வைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட காரியங்களை இன்றும் கடவுள் நடப்பிக்கிறார் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். அப்போஸ்தலர் 2:47 இல் கடைசி சில வார்த்தைகளைக் கவனியுங்கள்! இந்தப் பாடத்தில் நாம் படிக்கப்போவது, சவுலின் மனமாற்றத்திற்குப் பின்பு நடந்தவற்றை, அதாவது அவரது மன மாற்றத்திற்குப் பின் உடனே நடந்தது என்னவென்று பார்க்கலாம்.. அவர் கிறிஸ்தவனாக மாறினதும் முதலாவது நடந்தது என்ன?

### 1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் தான் இணைக்கப்பட்டதைக் குறித்து வெளியரங்கமாகச் சாட்சி கூறினார்.

வசனம் 18இல் "எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான்" என்று காண்கிறோம். இதற்குச் சில வருடங்கட்கு முன்னர், யோர்தான் நதியில், யோவான் ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். அப்பொழுது அவர் ஆண்டவராகிய இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். (மத்தேயு 3:13-17) இயேசுவின் சீடர்களும் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் (யோவான் 4:1-3) அவர் பரலோகத்திற்குத் திரும்பிப் போகும்முன்பு, இயேசுவின் கடைசிக் கட்டளை இது - மத்தேயு 28:19. இதைத் தொடர்ந்து பெந்தேகொஸ்தே நாளில், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு, இருதயத்தில் குத்தப்பட்ட மக்கள், "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" எனக் கேட்டனர் (அப்போஸ்தலர் 2:37) பேதுருவின் பதில் - அப்போஸ்தலர் 2:38, அதன் விளைவு - அப்போஸ்தலர் 2:41! இவ்விதமாக ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றனர். முதலாவது அவர்கள் விசுவாசித்தனர். பின்னர் அவர்கள், கிறிஸ்துவிலுள்ள தங்கள் விசுவாசத்தை ஞானஸ்நானத்தின் மூலம் அறிக்கையிட்டனர் - அப்போஸ்தலர் 8:12, 36-39, 9:18, 10:47,48, 16:14,15, 30-34, 18:8, 19:5. இது ஒரு சபைப் பிரிவைச் சார்ந்த காரியமல்ல. இது புதிய ஏற்பாட்டுக் காரியம் யோவான் 14:15 பார்க்க. தான் கிறிஸ்துவில் கண்டு கொண்ட இந்தப் புதிய விசுவாசத்தைச் சவுல் எவ்வளவு சீக்கிரமாக அறிக்கை செய்துள்ளார் பாருங்கள்.

### 2. ஆண்டவரின் மக்களுடன் இணைந்து கொண்டார்.

தனது மனமாற்றத்தின் பின்னர், அவர் தமஸ்குவிலிருந்த கிறிஸ்தவர்களுடைய ஐக்கியத்தில் இணைந்தார் என்று வசனம் 19 இல் காண்கிறோம். இதன் பின்னர் எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்களுடன் ஐக்கியப்பட்டார். அதன் பின்பு தமது கிறிஸ்தவ வாழ்க்கையில், தர்சு பட்டணத்துச் சவுல், அதாவது அப்போஸ்தலனாகிய பவுல் எங்கெல்லாம் சென்றாரோ, அங்கெல்லாம் கடவுளின் மக்களின் ஐக்கியத்தை நாடினார். ஆராதனையை மகிழ்வுடன் அனுபவிக்கவும், அவரது சேவையில் ஈடுபடவும், தம் மக்கள் உள்ளூர் சபைகளில் ஐக்கியம் கொள்ள வேண்டும் என்பதே கடவுளின் திட்டம். சில கிறிஸ்தவர்கள் சபைகளில் இணைவதை விரும்புவதில்லை. நாம் ஆவிக்குரிய நாடோடிகளாக இருப்பதைக் கடவுள் விரும்பவில்லை. அப்போஸ்தலர் 2:41-47 வரை கூறப்பட்டுள்ள ஆதிக் கிறிஸ்தவர்களின் மாதிரியை நாம் பின்பற்ற வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

### 3. சென்றவிடமெல்லாம் அவர் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்.

வசனம் 20 இல், பவுல் தனது மனமாற்றத்தின் பின்னர், "தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்" என்று காண்கிறோம். அதன்பின் அவர் எங் கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் இவ்வாறே செய்து வந்தார். ஆண்டவரை ஒரு ஏமாற்றுக் காரனாகக் கருதிய அவர், இப்பொழுது ஆண்டவரை, உயிரோடு எழுந்து உயர்த்தப்பட்ட கடவுளின் குமாரனாகப் பிரசங்கம் செய்து

வந்தார்!. 2கொரிந்தியர் 5:17.ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிருபையையும், நம்மைப் பாதுகாத்து, நிறைவளிக்கும் வல்லமையையும் பற்றி மற்றவர்களுக்கு அறிவிப்பது, புதிதாகப் பிறந்த ஒவ்வொரு ஆத்துமாவின் சிலாக்கியமும், கடமையுமாகும்.

**4. தமது ஆண்டவரும், இரட்சகருமாகிய அவரது கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளர்ந்து வந்தார்.**

“சவுல் அதிகமாகத் திடன் கொண்டார்.” என்று வசனம் 22இல் காண்கிறோம். இந்த வசனத்தில் குறிப்பிடப்படுவது ஆவிக்குரிய பலம். (வசனம் 15 இல் கூறப்பட்டுள்ளது சரீர பலம்) ஒரு புதிதாகப் பிறந்த ஆத்துமாவுக்கு இது எவ்வளவு முக்கியமானது - 2பேதுரு 3:18! இந்த மனிதர் அற்புதமாக, அதி வேகமாக ஆண்டவரில் வளர்ந்தார் என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு கலாத்தியர் 1:16-18 இல் உண்டு. கடவுள் வல்லமையாகப் பயன்படுத்தின மக்கள் யாவரும் இந்த ‘அரபி தேசத்து’ அனுபவத்திற்குள் சென்று வந்தவர்களே! எடுத்துக்காட்டு: யோசேப்பு, மோசே, எலியா ஆகியோர். மூன்று வருடம் பொது ஊழியத்தில் ஈடுபடும் முன்பு நம்முடைய ஆண்டவர் இயேசுவும் கூட முப்பது ஆண்டுகாலம் நாசரேத்தூரில் செலவிட்டார். நம் ஜெபம், வேதவாசிப்பு போன்றவற்றை புறக்கணிக்கக்கூடாது. அவற்றைப் புறக்கணித்தால் வளரவே முடியாது!

**5. அவருக்கும் அதிகமான எதிர்ப்பும், பாடுகளும் நேரிட்டன.**

வசனங்கள் 23,24,25,29 படியுங்கள். தம்முடைய ஊழியரைக் குறித்து ஆண்டவர் இயேசு கூறியுள்ளதை வசனம் 16 இல் காண்கிறோம். நாம் ஆண்டவருக்கு உண்மையாக இருக்க முயற்சி செய்யும்போது, நாம் அதற்குரிய கிரயம் செலுத்த வேண்டும். - லூக்கா 14:26,27,33ஐப் படித்து மத்தேயு 5:11-12, யோவான் 16:33, அப்போஸ்தலர் 5:41, 2கொரிந்தியர் 11:24-28 உடன் ஒப்பிட்டு நோக்குக.

**6. மற்றவர்களால் தவறாக நினைக்கப்பட்டதையும், கருத்து வேறுபாடு போன்ற உட்பூசலையும் அவர் எதிர் நோக்கி வெல்ல வேண்டியிருந்தது.**

வசனம் 26 இல் இதைக் காணலாம். கிறிஸ்தவர்கள் அல்லாதோர் நம்மைத் தவறாகப் புரிந்து கொண்டு, துன்பப்படுத்துவது இயல்பு. ஆனால் இங்கோ, கடவுளின் பிள்ளைகள் எனப்படுவோர் சந்தேகக் கண்ணோடு அவரைப் பார்த்தனர். இதுவும் இயல்பே! எருசலேம் சபையில், கர்த்தருடைய பந்தியில் பங்குபெற சபையின் பழைய எதிரியான பவுல் வருகிறார். இதை நாம் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? பர்னபா போன்ற தாராள மனதுள்ள, பரந்த உள்ளம் கொண்டோர் அங்கே இருப்பதற்கு நாம் கடவுளுக்கு நன்றிகூற வேண்டும். வசனம் 27 பார்க்கவும். தொடர்ந்து பவுல், எருசலேமிலுள்ள ஐக்கியத்தில் வரவேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டார். வசனம் 28 இல் நாம் ஒரு மெய்யான ஐக்கியத்தைக் காணலாம். 1கொரிந்தியர் 1:9 கூறும் ஐக்கியம் எவ்வளவு மேலானது! இப்படிப்பட்ட ஐக்கியத்தை நாம் உலகில் எங்கேயாகிலும் காணமுடியுமா!

**7. மிகக் கடினமான இடமாகிய தர்சுவுக்குத் திரும்பிப் போனார்!**

வசனம் 30 இல் காணலாம். எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் அவரைத் தன்னுடைய வீட்டாரிடத்திற்கும், அன்பான நண்பர்களிடத்தும் அனுப்பி வைத்தனர் - மாற்கு 5:19 ஐ லூக்கா 8:39 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். நீங்கள் உங்கள் வீட்டிற்குத் திரும்பிப்போய், உங்களுடைய அருமையான நண்பர்களிடம் உங்கள் ஆண்டவரைக் குறித்துச் சாட்சி கூறினதுண்டா? எருசலேமிலே தொடங்க வேண்டும் என்பது இதுதான். லூக்கா 24:47 படிக்கவும். கிறிஸ்தவ வாழ்வை எவ்வாறு தொடங்க வேண்டுமென்று நாம் இதுவரைப் பார்த்தோம். உங்கள் ஆரம்பம் எப்படி? நன்றாக உள்ளதா?

## பாடம் 3 **தேவையானது ஒன்றே**

***(வேதபகுதி - லூக்கா 10:38-42)***

நாம் ஆரோக்கியமான, ஆனந்தமான, பயனுள்ள கிறிஸ்தவ வாழ்வு நடத்துவதற்கு மிகவும் தேவையானது ஒன்றே. அந்த ஒன்று என்னவென உங்களுக்குத் தெரியுமா? மரியாளும், மார்த்தாளும் இயேசுவை வரவேற்று உபசரித்தனர். மார்த்தாள் விருந்தினரை உபசரிப்பதிலே சிறந்த பெண். இயேசுவுக்கும், அவரது சீடர்களுக்கும் உணவு ஆயத்தம் செய்வதிலே மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். மரியாளோ, அவரது பாதபடியிலே அமர்ந்து, இயேசு கூறிய அற்புதமான காரியங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். "அவருக்கு உணவு ஆயத்தம் செய்வது எவ்வளவு பெரிய சிலாக்கியம்." என்றாள் மார்த்தாள். மரியாளோ, "அவரது பாதபடியில் அமர்ந்திருப்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம்.." என்றாள். அவர்கள் இருவரும் இவ்வாறு சிந்தித்தது சரியே! (வசனம் 39) ஆனால் மார்த்தாளோ, மரியாள் தன்னைத் தனியே உணவு பரிமாற விட்டு விட்டு வந்திருப்பது சரியல்ல என்று நினைத்தாள். தலைக்கு மேல் வேலை இருக்கும்போது மரியாள் அவ்வாறு வந்து உட்கார்ந்திருக்க ஆண்டவர் அனுமதிப்பது சரியாகுமா என்று கேள்வி கேட்டாள் (வசனங்கள் 39,40) அப்பொழுது மிகக் கனிவுடன் ஆண்டவர் மார்த்தாளே என்று பெயர் சொல்லி அழைத்து, "நீ அநேக காரியங்களைக் குறித்துக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே." என்றார். (வசனங்கள் 41,42) மரியாளோ அந்த ஒன்றைத் தெரிந்து கொண்டாள். இதுவே ஒரு கிறிஸ்தவனின் முதல் தேவை! ஊழியம் அல்ல, வேலை அல்ல, ஆண்டவர் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து கற்றுக் கொள்ள வேண்டியது மிக முக்கியமானது (வசனம் 39)

**1. தேவையான ஒன்று எதைக் குறிக்கிறது? ஆண்டவர் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவரது வார்த்தையைக் கேட்பது என்றால் என்ன அர்த்தம்?**

1. **இது நாம் அவரை ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும்.** வசனம் 38 இல் மார்த்தாள் அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள் என்று காண்கிறோம். மரியாளுங்கூட ஏற்றுக் கொண்டாள் (வசனம் 39). மரியாள் இரட்சகரது பாதபடியில் உட்காருவதற்கு முன்னதாக அவரை வரவேற்காமல் தனக்கு எதிராக உட்கார வைத்திருக்க முடியுமா? அவரது பாதத்தருகே உட்கார்ந்து, அவரது வார்த்தையைக் கேட்க வேண்டுமாயின், முன்னதாக அவரை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். மார்த்தாளும், மரியாளும் அவரைத் தங்கள் வீட்டிலே ஏற்றுக் கொண்டதுபோல, மெய்யாகவே, நீங்கள் ஆண்டவர் இயேசுவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? யோவான் 1:12 படிக்கவும்.

2. **இது அவர் மீதுள்ள நமது பக்தியை வெளிப்படுத்தும்.** மரியாள் இரட்சகரது பாதத்தருகே அமர்ந்து, கற்றுக் கொண்ட செயல், அவள் அவரை அதிகமாக நேசித்தாள் என்பதைக் காட்டுகிறது. அவர் அவளிடம் எவ்வளவாய் அன்புகூர்ந்தார் என்பதை அவள் அறிந்திருந்தாள். அவர் அவளில் முந்தி அன்புகூர்ந்த படியினாலே, அவளும் அவரிடம் அன்புகூர்ந்தாள் (1யோவான் 4:19) அவருக்காகவும், அவரது போதனைக்காகவும், எல்லாவற்றிற்கும் மேலாக, அவளுக்காக அவர் கல்வாரிச் சிலுவையில் செய்யப் போகிற தியாகத்திற்காகவும் அவரில் அன்புகூர்ந்தாள் (யோவான் 14:15) மரியாள் அவரில் அன்புகூர்ந்தபடியால், அவரிடம் கேட்டுக் கற்றுக் கொண்டவற்றை அவள் கடைப்பிடிக்க வேண்டும்.

3. **இது நமது அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.** மரியாள் நின்று கொண்டிராமல் உட்கார்ந்திருந்த அவளது தாழ்மையையும், அவரை ஆண்டவராக ஏற்றுக்கொண்டதையும் காட்டுகிறது. அவள் அவரது அதிகாரத்திற்கும், சத்தியத்திற்கும், போதனைக்கும் தன்னை அர்ப்பணித்தாள். தாழ்மையின் இடத்தில் அவள் உட்கார்ந்தாள். அவரது நுகத்தைத் தன்மேல் ஏற்றுக்கொண்டு அவரிடம் கற்றுக் கொண்டாள் - மத்தேயு 11:29. அவள் தன்னை அவரது நடத்துதலுக்கென முழுமையாக அவரிடம் ஒப்புக்கொடுத்தாள்.

**2. இந்த ஒன்று ஏன் மிக அவசியமானது?**

**1. நமது சீரான கிறிஸ்தவ வாழ்வுக்கு இந்த ஒன்று இன்றியமையாதது.** சீரான கிறிஸ்தவ வாழ்விற்கு இன்றியமையாதன இரண்டு. அவையாவன, உட்கார்ந்திருத்தலும், ஊழியம் செய்தலும், பெற்றுக் கொள்வதும், கொடுப்பதும் எனலாம். உட்கார்ந்திருப்பது மட்டும் போதாது. பின்னர் எழுந்து போய் ஊழியம் செய்ய வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக யோவான் 10:9 பார்க்கவும். 'உள்ளும் புறம்பும்' என்றுள்ளது. 'உள்ளே' என்பது முதலில் 'வெளியே' என்பது பின்தொடர்வது. உள்ளே என்பது ஆராதனையும், வெளியே என்பது சாட்சி கூறுதலையும் குறிக்கும். ஆண்டவர் இயேசு மார்த்தாளைத் தீவிரமான சேவையில் ஈடுபட்டுள்ளதற்காகக் கடிந்து கொள்ளவில்லை. வல்லமையுள்ள சேவையில் ஈடுபடும் முன்பு அவரது பாதத்தருகே அமர்ந்து கற்றுக் கொள்வது முக்கியம் என்பதை உணர்த்தினார்.

**2. கிருபையில் வளருவதற்கு இது மிகவும் அவசியம்.** கிறிஸ்தவர்கள் பலர், அவரது வார்த்தையின் மூலம் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்வதைப் புறக்கணித்ததினாலே, அவர்கள் இன்னமும் வளர்ச்சியடையாத சிறு பிள்ளைகளாகவே இருக்கின்றனர். அவர்கள் அவரது பாதபடியில் அமர்ந்து கற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர். ஆகவே அவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் பூரணத்துவத்துக்குள் வளரவில்லை. 2பேதுரு 3:18 படிக்கவும்.

**3. தெளிவான வழிநடத்துதலுக்கு இது அவசியமானது.** நம்முடைய அன்றாட வாழ்வில் ஒவ்வொரு அடியிலும் வழிநடத்துவதைவிட வேறு எதையும் செய்ய ஆண்டவர் வாஞ்சிப்பதில்லை. ஆனால் நாம் அடிக்கடி அவருடைய, 'அமர்ந்த மெல்லிய சத்தத்தைக்' கேட்கத் தவறி விடுகிறோம். (1இராஜாக்கள் 19:12) நம் வாழ்வில் நாம் அவரோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளாமலிருப்பதே இதற்குக் காரணம் எனலாம். நாம் தொடர்ந்து தவறான தீர்மானங்கள் எடுப்பது வருந்தத்தக்க காரியமாகும். நீதிமொழிகள் 3:5,6, யாக்கோபு 1:5 பார்க்கவும்.

**4. சுயத்தை மேற்கொள்ள இது மிகவும் தேவையானது** மார்த்தாள் எரிச்சலடைந்ததால், கவனம் கலைந்தது. குற்றஞ்சாட்டினாள். வசனம் 40. இரட்சகரின் பாதத்தில் தன்னைத் தாழ்த்தி அமர்வது எப்படியென அவள் அறிந்திருந்தால், இதைத் தவிர்த்திருக்க முடியும். சுயம் நிறைந்த வாழ்வை மேற்கொள்ள, நிச்சயமான வழி, அன்றாடம் அவரது பாதத்தருகே அமர்வதாகும். ஏசாயா 57:15, 1பேதுரு 3:4 படிக்கவும்.

**5. அவரது பாராட்டைப்பெற இது மிகவும் அவசியமானது.** வசனம் 42 இல் அவரது பாதத்தருகே அமர்ந்து, அவரது வார்த்தைகளைக் கேட்டதற்காக, ஆண்டவர் மரியாளைப் பாராட்டினார் என்று நாம் காண்கிறோம். நாம் அவரது பாதபடியண்டை சென்று, அமைதியாக அவரைத் துதித்துப், புகழ்வதைக் காட்டிலும் வேறெதுவும் அவரைப் பிரியப்படுத்தாது. அவர் நமது ஊழியத்தைக் கண்டு மகிழுகிறார். ஆயினும் நம்மைத் தாழ்த்தி ஒப்புக் கொடுத்து, அவரது பாதத்தருகே அமர்ந்து கற்றுக் கொள்வதே அவரை மிகவும் அதிகமாகப் பிரியப்படுத்தும். இந்தத் தேவையானதொன்றைச் செய்ய திடமான மனதும், தீர்மானமும் நமக்குத் தேவை. வசனம் 42 இல் மரியாள் ஆண்டவரின் பாதத்தருகே அமருவதைத் தெரிந்து கொண்டாள் என்று கூறியுள்ளதைக் காண்கிறோம். இது நாமாக விரும்பித் தெரிந்து கொள்வது. நாம் அவரைப் பிரியப்படுத்த வேண்டுமென்றை தீர்மானத்தில் எவ்வளவு உறுதியுள்ளவர்களாக இருக்கிறோம்?

## பாடம் 4 **வெற்றியுள்ள வாழ்க்கை**

***(வேதபகுதி - யாத்திராகமம் 14:1-14)***

கடவுளின் பிள்ளைகள் பலர் தோல்வியிலும், குறைவிலும், திருப்தியற்ற நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஒரு போதும் சமாதானம் நிறைந்த வாழ்வை அனுபவித்ததே இல்லை (ஏசாயா 30:15). பொங்கி வழியும் வாழ்வு (யோவான் 7:37-39), பரிபூரணமான வாழ்வு (யோவான் 10:10), மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு (யோவான் 15:11), விடுதலையான வாழ்வு (ரோமர் 6:7), வெற்றியுள்ள வாழ்வு (2கொரிந்தியர் 2:14), அன்பு நிறைந்த வாழ்வு (1யோவான் 2:5) போன்ற எதையும் அவர்கள் அனுபவித்ததே இல்லை. இருப்பினும் அதை நடத்த விரும்புகின்றனர்.

### 1. வெற்றியுள்ள வாழ்க்கை என்றால் என்ன?

இந்த வாழ்வு குறிப்பிடும் ஏழு வகையான வாழ்க்கையை மேலே பார்த்தோம். இன்னும் வேதாகமத்தில் இது போன்ற குறிப்புக்களைக் காணலாம். அதில் சில குறிப்புக்களைக் கீழே காணலாம்.

1. பாவமே செய்யாத அல்லது பாவமே செய்ய முடியாத வாழ்வு அல்ல இது. ஆனால் பாவத்தின்மேல் வெற்றி கொள்ளக்கூடிய வாழ்வு இது. முதலில் கூறப்பட்ட வாழ்வை நாம் இந்த வாழ்வில் அடைய முடியாது. இரண்டாவதாகக் கூறப்பட்டதை அடைய முடியும்.

2. இது ஒரு அசாதாரண வாழ்வு அல்லது கடவுளின் பிள்ளைகள் சிலர் மட்டுமே அனுபவிக்கக் கூடியது என்றும் கூறமுடியாது. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கடவுளால் அருளப்படுவது இது.

3. இது சோதனையே வராத வாழ்வு அல்ல. ஆனால் இந்த வாழ்வில் நாம் சோதனையை மேற்கொள்ள முடியும். - எபிரெயர் 4:15

4. இது வெளிப்படையான வெற்றி வாழ்வு அல்ல, ஆனால் உள்ளேயும், வெளியேயும் வெற்றியுள்ள வாழ்வு.

5. இனி மேலும் கிருபையில் வளரத் தேவையில்லை அல்லது வளரவே முடியாது என்ற நிலைக்கு வந்த முழுமையான வளர்ச்சியடைந்த வாழ்வும் அல்ல.

பாவம், சுயம், சாத்தான் மீது வெற்றி கொண்ட வாழ்வே இந்த வெற்றியுள்ள வாழ்வு. இது பாவத்தின் வல்லமையிலிருந்தும் பாவத்தின் தண்டனையிலிருந்தும், விடுதலை பெற்ற ஒரு வாழ்க்கையாகும். இது “அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடன் ஒப்புரவாக்கப்பட்ட” வாழ்க்கை மட்டுமல்ல, “அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்பட்ட” வாழ்க்கையுமாகும் (ரோமர் 5:10).

### 2. இப்படிப்பட்ட ஒரு வாழ்வு நடத்த நம்மால் இயலுமா?

இப்படிப்பட்ட ஒரு வெற்றியுள்ள வாழ்வை நாம் நடத்த வேண்டும் என்பது கடவுளின் சித்தமா? வாழ்நாள் முழுவதும், அவரது ஒவ்வொரு பிள்ளையும், இவ்வாறு வெற்றியுள்ளோராக இருக்க அவர் ஏதாகிலும் ஏற்பாடு செய்துள்ளாரா? அப்படியானால் நாம் அவரது சித்தத்திற்கு மாறுபட்ட எதையும் ஏற்றுக்கொண்டு திருப்தியடைவது என்பது அவருக்கு விரோதமானது எனலாம். இது அவரது சித்தமாக இல்லையெனில், நாம் இந்த வாழ்வைத் தேடி நாடுவதும் அவருக்கு விரோதமான பாவமே. இந்தக் கேள்வியை நாம் சற்று மாற்றிக் கேட்போம். அவரது பிள்ளைகளாகிய நாம் தோல்வி நிறைந்த வாழ்வு வாழ்வது கடவுளின் சித்தமா? எரிச்சல், முன்கோபம், உண்மையின்மை, பெருமை போன்றவற்றிற்கு வளைந்து கொடுத்து விழுந்து போவது அவசியமா? இதற்குரிய பதிலை கீழ்க்கண்ட வசனங்களிலும், முதல் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஏழு வசனங்களிலும் காணலாம். மத்தேயு 1:21, யோவான் 8:34-36, ரோமர் அதிகாரங்கள் 6,7,8 (இதன் சாரத்தை ரோமர் 6:14 இல் காணலாம்) பிலிப்பியர் 4:13, 1தெசலோனிக்கேயர் 4:3, 2தீமோத்தேயு 4:18, எபிரெயர் 7:25, 1யோவான் 1:7,9, 2:1. இந்த வசனங்கள் மூலம் கடவுளின் பிள்ளைகளாகிய நாம், ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு நடத்துவதைக் கடவுள் விரும்புகிறார் என்று தெள்ளத்தெளிவாகக் கூறமுடியும்.

### 3. இந்த வெற்றியுள்ள வாழ்க்கையின் இரகசியம் என்ன?

இந்த இரகசியம் நான்கு பண்புகளைக் கொண்டது. அவற்றை சுருக்கமாகப் பார்க்கலாம்.

**1. இந்த வெற்றி மனித முயற்சியால் கிட்டுவதல்ல,** என்கிற இந்த எளிய பாடத்தைக் கற்றுக் கொண்டால் போதும். அதுவே நாம் வெற்றியுள்ள வாழ்வில் அடியெடுத்து வைத்து விட்டோம் என்று அர்த்தம். இந்த வாழ்க்கையை நம் பலத்தைக் கொண்டு நடத்த முடியாது என்பது உறுதி. 1சாமுவேல் 2:9 கூறுவதைப் பாருங்கள். நம்மடைய தோல்விகள் எல்லாவற்றிற்கும் காரணம் இது. நாம் நம்முடைய பலத்தைக் கொண்டு பாவம், சுயம், சாத்தானை வெற்றிகொள்ள முயன்று, ஒவ்வொரு முறையும் தோல்வியடைந்து வந்துள்ளோம். நமது இரட்சிப்பின் மூன்று நிலைகளிலும் கடவுள் மனிதனின் கிரியைகளைத் தள்ளியே வைத்துள்ளார் என்பதை நினைவிற் கொள்ளவும். நம்முடைய சொந்தக் கிரியைகளினாலே நாம் பாவத்தின் கறையிலிருந்தும், தண்டனையிலிருந்தும் இரட்சிக்கப் படவில்லை (எபேசியர் 2:8-10, தீத்து 3:5). பாவத்தின் வல்லமையிலிருந்து, நமது சொந்த கிரியைகளாலே இரட்சிக்கப்படவில்லை (ரோமர் 5:10). நமது சொந்தக்கிரியைகளைக் கொண்டு பாவ (பிரசன்னத்தினின்று) சுபாவத்தினின்று இரட்சிக்கப்படுவதில்லை (யோவான் 14:3) இவை யாவும் யாத்திராகமம் 14:13-14 இல் எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளது.

**2. வெற்றி கொடுக்கப்படுகிறது - இது ஒரு ஈவு.** 1கொரிந்தியர் 15:57 இதைத் தெளிவுபடுத்துகிறது. வெற்றி யுள்ள கிறிஸ்தவ வாழ்வு என்பது கடவுளின் ஈவு. எவரெல்லாம் இதைப் பெற்றுக் கொள்கின்றனரோ, அவர்களுக்கு இது ஈவாகக் கிட்டும். எல்லா மனிதருக்கும் அவர் அருளும் இந்த வெற்றியுள்ள வாழ்வு என்பது அவரது குமாரனின் வெற்றி சிறந்த, வாழ்வு எனப்படும். ஆண்டவராகிய இயேசு ஒரு மனித சரீரத்திலிருந்து, தமது வாழ்வில் மரணத்தின் மூலமாகப் பாவத்தையும், சாத்தானையும் முறியடித்து வெற்றி சிறந்தார். இப்பொழுதோ அவரது வெற்றியுள்ள வாழ்க்கையை நீங்களும் நானும் பெற்றுக் கொள்ளத்தக்க ஈவாக அருளப்படுகிறது. நம்மு டைய மனித சரீரத்தின் மூலமாக, நாமுங்கூட இந்த வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும். ஒரேயொரு வெற்றியுள்ள வாழ்க்கை உண்டு. நீங்கள் ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் போது (யோவான் 1:12) அந்த வாழ்க்கையையும் ஏற்றுக் கொள்ளுகிறீர்கள். இதை நீங்கள் உணருகிறீர்களா? இப்பொழுது நீங்கள், அவரது வாழ்க்கையை உங்களிலும், உங்கள் மூலமாயும் நடத்த அவருக்கு இடமளியுங்கள். யோசுவா 6:16 படியுங்கள். எரிகோவின் மீது கொண்ட வெற்றி முயற்சியாலும், பாடுபட்டதினாலும் கிட்டாமல், எளிய கீழ்ப்படிதல், நம்பிக்கை மூலமே கிட்டிற்று. அந்த வெற்றியும் ஒரு ஈவு.

**3. வெற்றி என்பது நாம் தெரிந்தெடுப்பதினால் கிட்டும்.** இதைப் பற்றி நாம் அறிவது அவசியம். நாம் இந்த உலகில் வாழும்வரை நமக்கு வேண்டியதைத் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். யோசுவா ஒரு தெரிந்து கொள்ளுதலோடு இஸ்ரவேலரின் முன்பு நின்றார் (யோசுவா 24:15). இந்தத் தெரிவு செய்வதற்கு நிச்சயமான சித்தமும், திடமனதும் தேவை. ஒவ்வொரு முறையும் நாம் பாவம் செய்யச் சோதிக்கப்படும்போது, நாம் வெற்றிபெற வேண்டுமானால் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பிரியப் படுத்த விரும்பினால், நமக்கென இந்த வெற்றியைச் சம்பாதித்து, நமக்கும் இந்த வெற்றியைக் கொடுக்கக் காத்துக் கொண்டுள்ள அவரைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் அவரைத் தெரிந்து கொண்டவுடனே இதைச் செய்வதற்கான அவரது வல்லமையை நாம் பெற்றுக் கொள்கிறோம். - ரோமர் 6:13 பார்க்கவும்.

**4. வெற்றியை நாம் ஒரே நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.** வெற்றியை நாம் காத்துக் கொள்ளும்போது, வெற்றி நம்மோடு எப்போதும் வெற்றியாகவே இருக்கும். இந்தத் தொடரும் வெற்றியின் இரகசியம் என்ன? இதோ இந்த வார்த்தைகள் கூறுகின்றன. “நமக்கு ஜெயம் கொடுக்கிற ....இயேசுவை நோக்கி” என்ற வார்த்தைகள் உறுதியளிப்பதாகவுள்ளது. எபிரெயர் 12:2 இல் நம்முடைய பங்கையும், 1கொரிந்தியர் 15:57 இல் அவரது பங்கையும் கூறக் காணலாம்.

## பாடம் 5 வேதாகமம்

*(வேதபகுதி - அப்போஸ்தலர் 17:1-12)*

வேதாகமத்தை அதிகமாகப் பயன்படுத்தாத, எந்தக் கிறிஸ்தவனும், கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறவோ, கிறிஸ்தவ ஊழியத்தில் வல்லமையுடன் ஈடுபடவோ முடியாது. வேதாகமத்தின் மதிப்பு அநேகருக்குத் தெரிவதில்லை என்பது துக்கமான உண்மை. உங்கள் வாழ்வில் கடவுளின் வார்த்தைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? இந்த அற்புதமான புத்தகத்தின் அமைப்பு, செய்தி, வல்லமை குறித்துத் திரும்ப வலியுறுத்த வேண்டுமென்பதே இன்றைய முக்கியத் தேவையாக உள்ளது. அப்போஸ்தலர் 17:1-12 வரையில் வேதாகமத்தைக் குறித்துக் கூறப்பட்ட சில குறிப்புக்களைப் பார்ப்போம். அவை நமக்கு முக்கியமான மூன்று கேள்விகட்கு விடையளிக்கும்.

### 1. வேதாகமம் என்பது என்ன?

வேதாகமம் ஒரு புத்தகம். ஆனால் அதிலே கூறப்பட்டுள்ளவை யாவை? அதிலே என்ன எழுதப்பட்டுள்ளது? அப்போஸ்தலர் 17:2,11 இல் 'வேதவாக்கியங்கள்' என்று கூறப்பட்டுள்ளது.

**1. வேதாகமத்தில் வேதவாக்கியங்கள் உள்ளன.** இந்த வேதபகுதி கூறும் வேதவாக்கியங்கள் என்பன பழைய ஏற்பாட்டு நூல்களாகும். ஏனெனில் புதிய ஏற்பாட்டு நூல்கள் அப்பொழுதுதான் எழுதப்பட்டு வந்தன. நம்முடைய வேதாகமத்தில் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் இணைந்துள்ளன. ஒவ்வொரு ஏற்பாட்டிலும் நான்கு பிரிவுகள் உண்டு. பழைய ஏற்பாட்டில் பஞ்சாகமம் மோசேயினால் எழுதப்பட்ட முதல் ஐந்து நூல்கள், வரலாற்று ஆகமங்கள், பாட்டாகமங்கள்,, தீர்க்கதரிசன ஆகமங்கள் என்பன உண்டு. புதிய ஏற்பாட்டில் வரலாற்று ஆகமங்கள், பவுலின் கடிதங்கள், பொதுவான கடிதங்கள், வெளிப்படுத்தின விசேஷம் என்பன உண்டு.

**2. வேதாகமம் கடவுளின் வார்த்தை.** இதன் பொருள் என்ன? முழு வேதாகமத்தையும் எழுதுவதற்குக் கடவுள் காரணராக இருந்தார். இது அவரது மேற்பார்வையில் எழுதப்பட்டதனால், இது அதிகாரமுள்ளது, பிழையற்றது, நம்பகமானது எனலாம். வேதாகமம் முழுவதும் கடவுளின் வழிநடத்துதலினால் எழுதப்பட்டது என்பதை இரண்டு வேதபகுதிகள் உறுதிப்படுத்தியுள்ளன. இதில் முதலாவது வசனம் 2தீமோத்தேயு 3:16, "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று கூறுகிறது.. கடவுள் ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமானான். என்று கூறப்பட்டிருப்பது போன்று கடவுள் வேதவாக்கியங்களை ஊதினார். இது ஜீவனுள்ள புத்தகமாயிற்று. - (ஆதியாகமம் 2:7) இரண்டாவது வசனம் 2பேதுரு 1:21 இதிலே "...தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" என்றுள்ளது. வேதாகமத்தின் 66 புத்தகங்களை எழுதின நாற்பதுபேர் பல்வேறு நிலையில், பல்வேறு தொழிலில் இருந்தோர். அரசர், தீர்க்கதரிசிகள், மீனவர், மேய்ப்பர்கள் போன்றோர் இதில் அடங்குவர். இந்த எழுத்தாளர்கள் 1600 வருடகாலம் எழுதிவைத்த நூல்கள் இவை. இருப்பினும் இந்த 66 புத்தகங்களும் ஒன்றாகத் தொகுக்கப்பட்ட பின்னர் அதிலே ஒற்றுமையும், இசைவும் கொண்டுச் சரியாகப் பொருந்தியுள்ளது. இவ்வாறு கூட்டிச் சேர்ப்பதற்குப் பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகக் கிரியையே காரணம். அவரே இதை எழுதியவர்களின் மனதை ஒருமுகப்படுத்தி, அவரவர் தங்கள் தங்கள் எளிய வார்த்தைகளில் எழுதினாலும், இவற்றை கடவுளின் வார்த்தையாக மாற்றினார்.

**3. வேதாகமம் ஒப்பற்ற நூல்.** அப்போஸ்தலர் 17:13 இல் 'தேவவசனம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது மனித வசனம் அல்ல. வேதாகமத்தை எழுதுவதற்குக் கடவுள் வழிநடத்தினார் அல்லது உள்ளூதினார். ஆகவே இது ஒப்பற்றநூல் எனலாம். சங்கீதக்காரன், "ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகருமில்லை..." (சங்கீதம் 86:8) என்று கூறியுள்ளார். அதேபோன்று நாமுங்கூட "புத்தகங்களுள் இந்தப் புத்தகத்திற்கு நிகர் ஏதுமில்லை" என்று உறுதியாகக் கூறலாம். எவ்வாறு ஆண்டவர் இயேசு கிறிஸ்து மனிதருக்குள்ளே நிகரற்றவரோ, அதே போன்று வேதாகமும் புத்தகங்களுள் நிகரற்ற நூல் என்பதில் ஐயமில்லை.

### 2. வேதாகமம் கூறும் முக்கிய செய்தி என்ன?

அப்போஸ்தலர் 17:3இல் பவுல், ".....கிறிஸ்து பாடுபடவும், மரித்தோரிலிருந்து எழுந்திரிக்கவும் வேண்டியதென்றும்....

காண்பித்துத் திருஷ்டாந்தப்படுத்தினான்" என்று காண்கிறோம். ஆகவே வேதாகமத்தின் முக்கிய செய்தி கடவுளின் திருக்குமாரன் மனிதனாக அவதரித்து, சிலுவையில் மரித்து, உயிரோடெழுந்து, உயர்த்தப்பட்டு, என்றென்றும் உயிருள்ளவராக இருக்கிறார் என்பதே.

இந்த நூலில் உலகிலுள்ள எல்லாவற்றின் ஆரம்பம் கூறப்பட்டுள்ளது. உலகின் தோற்றமும், மனிதனின் படைப்பும் இதிலே கூறப்பட்டுள்ளது. படைப்பைக் குறித்து வேதாகமம் கூறுவது போன்று, நம்பகமான விளக்கம் வேறு எங்கும் நாம் காணமுடியாது. பரிணாமவாதக் கொள்கைக்காரர் ஆதியாகமம் கூறும் படைப்பு வரலாற்றை மறுதலிக்கலாம். அப்படியானால் அவர்கள் இதற்கு ஈடாக எதைக் கூறமுடியும்? வேதாகமம் நமக்கு வரப்போகும் காரியங்களைப் பற்றியும், நித்தியத்தைப் பற்றியும் கூறுகிறது. வேதாகமம் இல்லையெனில் நாம் இதைப் பற்றி ஏதும் அறிய முடியாது. இருட்டில் தவிப்போம். இது முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் குறித்தும் கூறுகிறது. இது கடவுள் மனிதரிடமும், மனிதர் மூலமாயும் செயல்பட்டதைக் கூறுகிறது. வேதாகமத்தில் கூறப் பட்டுள்ள செய்திகள், வரலாறு, மனோவியல், அறிவியல், அகழ்வாய்வியல், உயிரியல், மானிடவியல், புவியியல் போன்றவற்றிற்கு இசைந்ததாயும், சரியாகவும் உள்ளது. ஆயினும் இதின் மையப் பொருள் கிறிஸ்து சிலுவையில் மரித்து உயிரோடெழுந்து, உயர்த்தப்பட்டு, வரப்போகிறவர் என்பதாகும். எம்மாவு ஊர்ப்பாதையில் சந்தித்த இரண்டு சீடரோடு, ஆண்டவர் இயேசு உரையாடின போது கூறினது எவ்வளவு பொருத்தமாகவுள்ளது லூக்கா 24:27! வேதாகமத்தின் மையச் செய்தி கிறிஸ்துவைப் பற்றியது மட்டுமல்ல, அவரது செய்து முடித்த கிரியையையும் பற்றி கூறுவதாகும். வசனம் 3 இல் கிறிஸ்து பாடுபடவும், மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறியுள்ளதைக் கவனிக்க. கல்வாரி சிலுவையின் இரத்தக்கறை வேதாகமம் முழுவதிலும் படிந்திருப்பதைக் காணலாம். கடவுள் ஆதாம் ஏவாளுக்குத் தோலாடை உடுத்துவிக்கக் கொன்ற மிருகங்களின் இரத்தம் (ஆதியாகமம் 3:21), ஆபிரகாம் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் பலியிட்டது (ஆதியாகமம் 22:1-13), யாத்திராகமம் 12 இல் விரிவாகக் கூறப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டி, பலிபீடத்தின்மேல் யூதர் செலுத்தின ஒவ்வொரு பலியும், ஏசாயா 53:5 இல் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட தலைசிறந்த தீர்க்கதரிசன வசனங்களும் இதை வெளிப்படுத்துகின்றன. வேதாகமத்தின் மையச்செய்தி, கடவுளின் குமாரனான மகிமையுள்ள மனிதர், பாவமறியாத அவர், நமக்காகப் பாவமாகி, கல்வாரி சிலுவை வரைச் சென்றார். 2கொரிந்தியர் 5:21 படிக்கவும். இதுவே சுவிசேஷம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிலும், அவரது முடித்த கிரியையிலும் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் கிருபையின் சுவிசேஷம் இதுவே. கடவுளின் வார்த்தையாகிய வேதாகமம் கூறும் முக்கிய செய்தி இதுவே!

**3. வேதாகமத்தைக் கொண்டு நாம் என்ன செய்யவேண்டும்?**

**1. நாம் அதை விசுவாசிக்க வேண்டும்.** "அநேகம்பேர் விசுவாசித்தார்கள்" (வசனம் 12) இன்றைய பயங்கரமான, சாவுக்குரிய வியாதி என்பது அவிசுவாசம். யோவான் 5:46 இல் ஆண்டவர் இயேசு கூறியுள்ள வார்த்தைகளைப் பாருங்கள்.

**2. நாம் அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.** பெரோயா பட்டணத்தார் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர் (வசனம் 11). நாம் வேதாகமத்தை ஆராய்ந்து படிக்க வேண்டும். அதுவும் அன்றாடம் செய்ய வேண்டும். ஆண்டவர் இயேசு கூறியுள்ளதைப் பாருங்கள். யோவான் 5:39!

**3. நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.** பெரோயா பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டனர் என்று வசனம் 11 கூறுகிறது. நாம் கடவுளின் வார்த்தையை நம் வாழ்வில் பயன்படுத்த வேண்டுமென்பது இதன் பொருள். அதாவது நாம் வெறுமனே மூளையினால் ஏற்றுக் கொள்ளாமல், இருதயத்திலே விசுவாசிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். எபிரெயர் 4:2ஐ யாக்கோபு 1:22 உடன் ஒப்பிட்டு நோக்குக.

**4. நாம் அதைப் பிரசித்தம் செய்ய வேண்டும்.** பவுல் செய்தது போல, வசனம் 2,3. நாமுங்கூட நமது வாழ்க்கையின் மூலம், வாயின் வார்த்தையின் மூலம், வெளிப்படுத்த வேண்டும். அப்போஸ்தலர் 4:33 படிக்கவும்.

## பாடம் 6 **கடவுளின் சித்தத்தை அறிதல்**

***(வேதபகுதி - எபேசியர் 5:1-21)***

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடவுளின் சித்தத்தை அறிந்து கொள்ள ஆசைப்பட வேண்டும். எபேசியர் 5:17 இல், "…..நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்." என்று கூறப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் சிலர் கர்த்தருடைய காரியங்கள் இன்னதென்று அறியாத மதியற்ற மக்களாக வுள்ளனர். இதனால் அவர்கள் கடவுளின் ஊழியத்தில் பயன்பட முடியாமற் போய்விடுகின்றனர். எடுத்துக் காட்டாக அவர்கள் (1) கிறிஸ்தவ வாழ்க்கையின் உண்மையான தன்மையை அறியாதிருக்கின்றனர். இது ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்வதினால் (யோவான் 1:11-13) வரும் புதிய பிறப்பு (யோவான் 3:3,5,7). (2) அவர்கள் பாவத்தின் கட்டிலிருந்தும் சுயத்திலிருந்தும் விடுதலை பெற்று (ரோமர் 6:11, 7:24,25, 8:2) வெற்றியுள்ள பரிசுத்த வாழ்வு நடத்தும் (2கொரிந்தியர் 2:14) கனிதரும் (யோவான் 15:5) பரி பூரண வாழ்வின் (யோவான் 10:10) இரகசியத்தை அறியமாட்டார்கள். (3) சபை என்பது வெளிப்பிரகாரமான ஒரு நிறுவனம் அல்ல, அது ஒவ்வொரு விசுவாசியையும் உள்ளடக்கிய கண்ணுக்குத் தெரியாத உயிருள்ள சரீரம் (1கொரிந்தியர் 12:12) என்கிற திருச்சபையின் தன்மையையும், நோக்கத்தையும் அவர்கள் அறியார். (4) சபையை உருவாக்கி, பூரணப்படுத்துவதே இந்த யுகத்தில் கடவுளின் நோக்கம் என்பதையும் (அப்போஸ்தலர் 15:14) இந்த உலகம் மாற்றமடையாது, கடவுளின் இராஜ்யம் இந்த உலகில் இக்காலத்தில் கட்டப்படாமல், இவ்வுலகம் இன்னும் சீரழியும் என்கிற கடவுளின் திட்டத்தை அவர்கள் உணரமாட்டார்கள். (5) இந்த உலகிற்கும், திருச்சபைக்கும் யூதர்களுக்கும் கடவுள் வைத்துள்ள எதிர்காலத் திட்டத்தைக் குறித்து அவர்கள் ஏதும் அறியார். கடவுளின் வார்த்தையின் மூலம், இந்த மகத்தான சத்தியங்கள் அற்புதமாக நமக்கு வெளிப்பட்டுள்ளது. ஆகவே நாம் 2 தீமோத்தேயு 2:15 இன்படி நடக்க வேண்டும். அதற்கு முன் சங்கீதம் 119:18 நம்முடைய இருதயத்தின் ஜெபமாக இருக்கட்டும்.

கடவுளின் சித்தம் என்பது, கடவுளின் விருப்பம் அல்லது ஆசை என்பதை நினைவிற் கொள்க. இந்தச் சித்தத்தின் படிப்படியான ஐந்து நிலைகளைக் காண்போம்.

### 1. எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பது கடவுளின் சித்தம்.

ஒவ்வொரு மனிதனும் இரட்சிப்படைய வேண்டும் என்றே கடவுள் விரும்புகிறார். 2பேதுரு 3:9, ஏசாயா 45:22, 53:6, எசேக்கியேல் 33:11, யோவான் 1:29, 3:16, வெளிப்படுத்தல் 22:17 படிக்கவும். கடவுள் தமது பெரிதான கிருபையினால் உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் இரட்சிப்பை அருளியுள்ளார். யாவரும் இந்த ஈவை ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறமுடியாது. எல்லாரும் இரட்சிக்கப்பட முடியும் என்றுதான் வேதாகமம் கூறுகிறதேயன்றி, எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று கூறவில்லை. ரோமர் 10:13 ஐ படிக்கவும்.

### 2. அவரால் இரட்சிக்கப்பட்டோர் யாவரும் பரிசுத்தமாக்கப்படுதலே கடவுளின் சித்தம்.

1தெசலோனிக்கேயர் 4:1-4, 1பேதுரு 4:1-5 பார்க்கவும். தம்முடைய பிள்ளைகள் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்பதே கடவுளின் சித்தமாகும். எபேசியர் 1:4, 2தீமோத்தேயு 1:9, 1பேதுரு 1:15,16, 2பேதுரு 3:11. நீங்கள் அவருடைய பிள்ளையா? (.யோவான் 1:12,13) அப்படியானால் நீங்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்பதே கடவுளின் சித்தமாகும். அதாவது நீங்கள் சொஸ்தமாக வேண்டும் (யோவான் 5:6) சுத்திகரிக்கப்பட வேண்டும் (1யோவான் 1:7,9), தொடர்ந்து ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் (எபேசியர் 5:18) என்பதே அதின் பொருள்.

### 3. அவரால் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டோர் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதே கடவுளின் சித்தம்.

நாம் அவரது சேவைக்கென்றே இரட்சிக்கப்பட்டோம். அப்படியானால் கிறிஸ்தவ சேவை என்பது என்ன? இதற்குரிய பதிலை ரோமர் 12:1 இல் காணலாம். நம்மிலும், நம்மைக் கொண்டும் அவர் விரும்புவதைச்

செய்வதற்காக, நம்மை அவரது பயன்பாட்டிற்கென முழுமையாகக் கடவுளிடம் அர்ப்பணம் செய்வதே சேவை அல்லது ஊழியம் என்பதின் பொருளாகும். இதுவே அவர் தமது பிள்ளைகள் ஒவ்வொருவருக்காகவும் கொண்டுள்ள சித்தம். நம்முடைய சேவையின் அளவும் தன்மையும் மாறுபடலாம். ஆனால் இதற்குரிய பொருள் மாறுபடவில்லை. ரோமர் 12:1. இந்தக் கோணத்தில் பார்க்கும்போது நீங்கள் அவரது ஊழியரா?

**4. அவரால் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, அவருக்கென ஊழியம் செய்வோர், அவரோடும், அவருக்கென்றும் பாடுபடவேண்டும் என்பதே கடவுளின் சித்தம்.**

இந்தக் கருத்து நம் உள்ளத்தின் ஆழத்தில் ஊடுருவிப் பாயட்டும். ஏனெனில் கடவுளின் பிள்ளைகள் அநேகருக்கு இந்தப் பாடம் போதிக்கப்படுவதில்லை. 1பேதுரு 3:17 படிக்கவும். நாம் பாடுபடுவது கடவுளின் சித்தமாக இருப்பதனாலே நாம் பாடுபடுகிறோம். 1பேதுரு 4:19, பிலிப்பியர் 1:29, அப்போஸ்தலர் 9:16 கூறுவதைப் பாருங்கள். ரோமர் 12:2 இல் கூறப்பட்டுள்ள மூவகைப் பண்புகளுள்ள கடவுளின் சித்தத்தைக் கவனிக்கவும்.

**5. அவரால் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, அவருக்கு ஊழியம் செய்து, அவருக்கென பாடுபடும் மக்கள் எப்பொழுதும் தங்களுக்கான கடவுளின் சித்தம் இன்னதென்று அறிந்து, புரிந்து கொள்ள வேண்டும் என்பதே கடவுளின் சித்தம்.**

நம்மில் பலருக்குக் கடவுளின் சித்தத்தை அறிந்து கொள்வது ஒரு பெரிய பிரச்சனையாகவேயுள்ளது. ஆயினும் கீழ்க்கண்ட வசனங்கள் கூறும் வாக்குறுதியைப் பாருங்கள். சங்கீதம் 25:9, 32:8, 73:24 நீதிமொழிகள் 3:5,6; 16:3. ஏசாயா 58:11, யோவான் 16:13, யாக்கோபு 1:5,6.

நாம் கடவுளின் சித்தத்தை அறிவது எப்படி? அவர் தமது சித்தத்தை நமக்கு எவ்வாறு வெளிப்படுத்துகிறார்? இதோ அவை:

**1. அவரது வார்த்தையை நாம் ஆழ்ந்து படிக்கும்போது -2தீமோத்தேயு 2:15.** நாம் கடவுளின் வார்த்தையை அதிகமாகப் படிக்கும்போது, அவருக்குப் பிரியமான காரியங்கள் எவையென்றும், அவரது பிள்ளைகள் வாழ்வில் கடவுள் என்ன செய்ய விரும்புகிறார் என்பதையும், நாம் அதிகமதிகமாய் அறிய இயலும். (அப்போஸ்தலர் 9:6, யோவான் 2:5).

**2. அவரது முன்னறிவின்படி,நமது அர்ப்பணிப்புக்கு ஏற்ப பதிலளிக்கிறார். ரோமர் 12:1-2.** ஒரு குறிப்பிட்ட காரியத்தில் நாம் கடவுளின் வழிநடத்துதலை நாடும்போது, நாம் சூழ்நிலைகளைக் கவனிக்க வேண்டும். அதன் மூலம் அவரது சித்தத்தை நாம் புரிந்து கொள்ளத்தக்கதாக இருக்க, அவரை நாம் முழுவதுமாக நம்ப வேண்டும் (சங்கீதம் 37:5).

**3. நாம் ஊக்கமாக ஜெபிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் மூலம் பதிலளிக்கிறார். ரோமர் 8:26-27.** தெளிவான வேத போதனை, கடவுளின் முன்னறிவு, பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய சத்தம் போன்றவை இசைந்து செல்லும் போது, நாம் அதுவே கடவுளின் சித்தம் என்று தெளிவாக அறிய முடியும் (1யோவான் 5:14,15)

பவுலும், எப்பாபிராவும் கொலோசெ பட்டணத்து விசுவாசிகட்கு ஜெபித்தது போல, நாமும் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டும். (கொலோசெயர் 1:9,10, 4:12) இவற்றோடு நாம் 1யோவான் 2:17, பிலிப்பியர் 2:13, அப்போஸ்தலர் 22:14 ஐயும் நினைவுபடுத்திக் கொள்ளலாமே!

## பாடம் 7 **ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்**
### *(வேதபகுதி - லூக்கா 18:1-43)*

ஜெபிப்பதைக் காட்டிலும் உன்னதமான வேலை ஏதுமில்லை எனலாம். ஏனெனில் ஜெபிப்பதென்பது உன்னத நிலையிலுள்ளோர் செய்வதாகும். ஜெபம் என்பது, கடவுளோடு தொடர்பு கொள்வது, ஐக்கியப்படுவது எனலாம். ஜெபம் என்பது கடவுளிடம் நமக்குத் தேவையானதைக் கேட்பதல்ல. அதுவும் ஜெபத்தில் ஒரு பகுதிதான். ஜெபத்தின் மேலான முக்கியத்துவத்தை வலியுறுத்த நமது ஆண்டவர் லூக்கா 18:1-8 வசனங்களில் உள்ள உவமையைக் கூறியுள்ளார். "....எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்....." என்று வசனம் 1 ஆரம்பித்துள்ளதைக் கவனிக்கவும். ஜெபிப்பது என்பது நமக்குக் கிடைத்துள்ள சிலாக்கியமாகும். இந்த அதிகாரத்தில் நமக்கு ஐந்து எடுத்துக் காட்டுகள் கூறப்பட்டுள்ளன.

1. வசனம் 3 இல் - விதவையின் விண்ணப்பத்தைக் காணலாம்.
2. வசனம் 11 இல் - பரிசேயனின் ஜெபத்தைப் பார்க்கலாம்
3. வசனம் 13 இல் - ஆயக்காரனின் ஜெபத்தை அறிகிறோம்.
4. வசனம் 18 இல் - தலைவன் ஒருவனின் வேண்டுதலைப் படிக்கின்றோம்.
5. வசனம் 38 இல் - பார்வையற்ற பிச்சைக்காரனின் வேண்டுதலைப் படிக்கின்றோம்.

**1. நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?**

இதற்கு நாம் பல்வேறு பதில்களைக் கூறமுடியும். ஆயினும் இந்த வேதபகுதியின் அடிப்படையில் பதில் கூறலாம். "ஜெபம் பண்ணவேண்டும்." என்று ஆண்டவரால் அழுத்தமாகக் கூறப்பட் டுள்ளது. ஜெபம் என்பது கட்டாயமானதொன்று. எவ்வகையில் இது கட்டாயமானதாகும்?

**1. நாம் நமக்காக ஜெபிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.** கடவுளின் அளவற்ற இரக்கத்தினால் நமக்கு ஒரு புது வாழ்வு கொடுக்கப்பட்டுள்ளது. அவரது திவ்விய சுபாவத்திற்கு நாம் பங்காளிகளானோம். (2பேதுரு 1:4) இந்த வாழ்வை நாம் ஜெபத்தின் மூலம் மட்டுமே தொடர முடியும். நம் வாழ்வு எவ்வாறு இருக்கவேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ, அவ்விதமாயிருக்க ஜெபிக்கும்போது மட்டுமே சாத்தியமாகும். நாம் பாவத்தை யும், நம்முடைய எதிராளியான சாத்தானை வெல்லும் இரகசியத்தை ஜெபிக்கும்போது மட்டுமே, அறிய முடியும். நாம் ஜெபிக்கும் போதுதான் நம்முடைய கிறிஸ்தவ ஊழியமும்கூட நல்ல விதத்திலே இருக்கும்.

**2. நாம் பிறருக்காக ஜெபிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.** நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தால், நாம் பிறருக்காக ஜெபிப்பது எவ்வளவு அற்புதமான ஊழியம் என்பதையும் அறிவோம். இது உண்மை என்றால், நாம் பிறருக்காக ஜெபிக்காமல் இருப்பது எவ்வளவு பெரிய பாவம்! - 1சாமுவேல் 12:23 பார்க்கவும். நம்மைச் சுற்றியுள்ள மக்களின் தேவைகள், பாவங்கள், துக்கங்கள், பாடுகள், உடைந்த உள்ளங்கள் போன்றவற்றைக் குறித்து நாம் சிந்திக்கும்போது, இப்படிப்பட்ட மக்களுக்கெனக் கடவுளின் கிருபையுள்ள நிவாரணம், உதவி, இரட்சிப்பு போன்றன தேவைப்படும். இழந்த மக்களுக்கென இவை அருளப்பட ஜெபிக்க வேண்டியது நம்மேல் விழுந்த கடமையல்லவா?

**3. நாம் நமது ஆண்டவருக்காக ஜெபிக்க வேண்டியது நமது கடமையாகும்.**கடவுள் தமது வேதாகமத்தில், "மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள்" (2பேதுரு 1:4) பலவற்றை நமக்கு அளித்துள்ளார். ஒவ்வொரு வாக்குத்தத்தமும் நம்முடைய வாழ்விற்கும், ஊழியத்திற்கும் தேவையான யாவற்றையும் நாம் அவரிடம் பெற்றுக் கொள்வதற்காக அவரை நம்ப வேண்டுமென்றும், அவரைச் சார்ந்திருக்கவும் தூண்டுகிறது. தொகை குறிப்பிடப்படாத, நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயராலே கையொப்பமிட்ட (யோவான் 14:13), நம்மிடம் கொடுக்கப்பட்ட, குறைவற்ற (பிலிப்பியர் 4: 19), பரலோக வங்கியின் காசோலை போன்றது இது. இந்தக் காசோலையை மாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம். இதற்கென, நாம் தவறாமல் ஜெபத்தின் மூலம் அவரிடம் சென்று நமக்கென உள்ள அவரது அளவற்ற தெய்வீகக் கிருபையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**2. நாம் எப்போது ஜெபிக்க வேண்டும்?**

நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும் என்பதே இதற்குப் பதில். அதாவது எல்லா நேரங்களிலும்,

எல்லாச் சூழ்நிலைகளிலும் ஜெபிக்க வேண்டுமென்பதே இதற்குப் பொருள். எபேசியர் 6:18, 1தெசலோனிக்கேயர் 5:17 பார்க்க. நாம் எப்பொழுதெல்லாம் ஜெபிக்கவேண்டும் என்பதற்கு சில நடைமுறை ஆலோசனைகள்:

**(1). வழக்கமான வேளைகளில் ஜெபிக்க வேண்டும்.** நாம் ஒவ்வொரு நாளும் வழக்கமாகச் செய்யும் காரியங்கள் உண்டு. அதேபோன்று ஜெபிக்கிற பழக்கத்தை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். சங்கீதம் 55:17ஐ தானியேல் 6:10 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

**(2). பரிசுத்த ஆவியானவர் நம்மைத் தூண்டும்போதெல்லாம் ஜெபிக்க வேண்டும்.**

நாம் ஜெபிக்கும் இடத்திற்குச் செல்லும்போதெல்லாம், பரிசுத்த ஆவியானவர் நம்மோடு கூட இருந்து, நாம் ஜெபிப்பதற்கு அவர் நம்மை வழிநடத்துகிறார். ரோமர் 8:26-27 பார்க்கவும். நாம் ஜெபிக்க நினைத்திராத யாருக்காகவோ ஜெபிக்கும்படி பரிசுத்தாவியானவர் வழிநடத்துகிறார். நமது ஜெபத்தின்மூலம் கடவுள் அவர்களது தேவையை அற்புதமாகச் சந்தித்துள்ளார் என்பதை நாம் பின்னர் அறியும்போது அது எவ்வளவு ஆச்சரியமாகவுள்ளது. இம்மாதிரியான அனுபவம் உங்களுக்கும் ஏற்பட்டதுண்டல்லவா!

**(3). கவலைகளும், துன்பங்களும் அழுத்தும்போது ஜெபிக்கவேண்டும்.** இக்கட்டான வேளைகட்கென ஆண்டவர் அருளியுள்ள அற்புதமான வாக்குறுதியைச் சங்கீதம் 50:15 இல் காணலாம். இந்த வாக்குத்தத்தத்தைச் சற்று கூர்ந்து கவனியுங்கள். இது ஆபத்து வராமல் தடுப்பது அல்ல. ஆபத்திற்குள்ளேயிருந்து விடுதலை அளிப்பதாகும். இப்படிப்பட்ட விடுதலையைப் பவுலும், சீலாவும் அனுபவித்தனர். அப்போஸ்தலர் 16:25

**(4). நமது தனிப்பட்ட தேவைக்காக ஜெபிக்க வேண்டும்.** இப்படிப்பட்ட விசேஷத் தேவைகள் ஏற்படும் சூழல் என்னுடைய வாழ்விலும், உங்களுடைய வாழ்விலும் வருவதுண்டல்லவா? அப்போஸ்தலர் 12:5 ஐ யாக்கோபு 5:13-15, 17, 18 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும்.

**(5). இயன்றபோதெல்லாம் நாம் பிறருடன் சேர்ந்து ஜெபிக்க வேண்டும்.** தனியாகவும் ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 6:6) அதோடு, பிறருடன் இணைந்து ஜெபிப்பதற்குத் தனி மதிப்பு உண்டு. அதற்கென விசேஷித்த அழைப்பும் உண்டு. மத்தேயு 18:19,20, அப்போஸ்தலர் 1:13,14ஐப் படித்துப் பார்க்கவும்.

**3. நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும்.**

நாம் எவ்வாறு ஜெபிக்கவேண்டும் என்பதற்கான மூன்று எடுத்துக்காட்டுக்களை நாம் இந்த அதிகாரத்தில் காண்கிறோம். அவையாவன:

**(1). நாம் அந்தப் பரிசேயனைப் போல ஜெபிக்காமல், ஆயக்காரனைப்போல ஜெபிக்க வேண்டும் (வசனங்கள் 5,10-13)** நாம் நம்மீது நம்பிக்கை வைக்காமல் ஜெபிக்க வேண்டும். நம்முடைய நம்பிக்கை முழுவதும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தகுதியினைச் சார்ந்திருக்க வேண்டும். ஏனெனில் அவரே, பரிசுத்தமான கடவுளை ஜெபத்தின் மூலம் அணுகுவதற்கென (வசனம் 13) நமக்காக இரத்தம் சிந்தினார். அந்தப் பரிசேயனைப் போல் நாம் கடவுளிடம் வந்தால் அவர் நம் ஜெபத்தைக் கேட்கமாட்டார். ஆயக்காரனைப் போல அவரிடம் வரும்போது அவர் நமது ஜெபத்தைக் கேட்பார்.

**(2). நாம் சோர்ந்து போகாமல் விடாப்பிடியாக ஜெபிக்க வேண்டும். (வசனங்கள் 1-8)**

கடவுள் நம்முடைய ஜெபங்களுக்கு உடனடியாகப் பதிலளிக்காவிட்டால் நாம் எளிதில் சோர்வடைந்து விடுகிறோம். விடாப்பிடியாக நின்ற அந்த விதவையின் உவமையைப் படித்துப் பாருங்கள். ஒரு ஏழை விதவையின் வேண்டுதலுக்கு அந்தக் கெட்ட மனிதன் ( அந்த அநீதியுள்ள நீதிபதி ) செவி கொடுப்பானாகில், தம்முடைய மக்களின் ஊக்கமான ஜெபங்களுக்குக் கடவுள் எவ்வளவு அதிகமாய்ப் பதிலளிப்பார்! இதுவே இந்த உவமையின் மையக் கருத்து. வசனங்கள் 38,39 படிக்கவும்.

**(3). சிறு பிள்ளையைப் போல எளிமையோடும், நம்பிக்கையோடும் ஜெபிக்க வேண்டும்** (வசனங்கள் 16,17). சிறு பிள்ளைகள் தங்கள் பூலோகத் தகப்பனிடம் வருவதுபோல நாமும் கடவுள் முன்பாக வரவேண்டும். ஜெபம் என்பது சிறு பிள்ளைகள் எளிய சொற்களால் மழலை பேசுவது போன்றது.. ஜெபம் என்பது நடைமுறையில் செயல்பட வேண்டுவது என்றும், ஜெபத்திற்கு மிகப் பெரிய காரியம் என்றோ, மிகச் சிறிய காரியம் என்றோ ஏதுமில்லை, ஜெபம் என்பது பூமியிலே மிகவும் உன்னதமான வேலை என்று நீங்கள் வெளிப்படுத்துகிறீர்களா?

## பாடம் 8 மற்றவர்கள் செய்யலாம் ஆனால் நீயோ, அதைச் செய்யக்கூடாது

*(வேதபகுதி - 2கொரிந்தியர் 6:14-7:1*

நாம் ஆண்டவருக்கென உயர் நிலையில் இருக்க வேண்டுமாயின், கவலையீனமாயும், உலகப் பிரகாரமாயும் வாழக்கூடாது. மற்ற கிறிஸ்தவர்கள் ஒழுங்கற்ற வாழ்க்கை நடத்தும்போது, நாம் நல்லதெது, கெட்டது எதுவென அறிந்து, நமது தகுதியைக் குறைத்துக் கொள்ளாதிருப்பது மிகவும் இன்றியமையாதது எனலாம். கடவுளின் வார்த்தையே நமது தகுதியை நிர்ணயிப்பதாகும். கடவுள் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும், பிரித்தெடுக்கப்பட்ட ஒரு வாழ்வு நடத்த அழைக்கிறார். அதாவது அவர்கள் தீமையானவற்றையும், அவருக்குப் பிரியமில்லாதவற்றையும் விட்டு வெளியரங்கமாக விலகி, அவருக்கென்று முன்வர வேண்டும் என்று அவர் அழைக்கிறார். பிரித்தெடுக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்வு என்பது, இவ்வுலகில் வாழ்வதற்கான வல்லமையேயன்றி, உலகிற்காக வாழ்வது அல்ல என்று ஒருவர் கூறியுள்ளார்.

கிறிஸ்தவர்கள் தன்னிகரற்ற மக்கள் என்று 2கொரிந்தியர் 6:14 - 7:1 வரையுள்ள பகுதியில் நாம் படிக்கிறோம். அவர்கள் அவிசுவாசிகளிடமிருந்து முற்றும் வேறுபட்டவர்கள் (வசனம் 14), விசுவாசிகள் நீதியின் ஊழியர், அவர்கள் அநீதியின் ஊழியரோடு தொடர்ப,ற்றவர்கள் (வசனம் 14), அவர்கள் ஒளியின் பிள்ளைகள், இருளின் பிள்ளைகளோடு ஐக்கியப்படாதோர் (வசனம் 14), அவர்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானோர், பேலியாளுக்கு உரியோரல்ல (வசனம் 15), அவர்கள் தேவனுடைய ஆலயத்தின் பங்காளிகள், விக்கிரக வழிபாட்டிற்கு விலகினவர்கள் (வசனம் 16). ஆனபடியினால் கிறிஸ்தவர்கள், ஆண்டவரை நேசிக்காத, மறுதலிக்கும் மக்களைவிட்டு விலகிப் பிரிந்துபோக வேண்டுமென்று (வசனம் 17) கூறப்பட்டுள்ளது. 'ஆனபடியினால்' என்ற சொல்லைக் கவனியுங்கள்!

### 1. 'பிரித்தெடுக்கப்படுதல்' என்கிற போதனை வேதாகமத்தின் ஒரு முக்கிய கோட்பாடு

இந்தப் போதனை ஆதியாகமம் முதல், வெளிப்படுத்தல் வரை வலியுறுத்தப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக ஆதியாகமம் 1:4ஐப் படித்து, ஆதியாகமம் 12:1, ஆதியாகமம் 17:10,11 உடன் ஒப்பிட்டு நோக்குக. ஆசரிப்பு நியமங்கள் ஏன் கொடுக்கப்பட்டன? பன்றியிறைச்சியும், சிலவகை மீன்களையும் சாப்பிடக்கூடாது (லேவியராகமம் 11:7,12) என்று யூதருக்கு ஏன் தடை விதிக்கப்பட்டுள்ளது? அவன் ஏன் எருதையும், கழுதையையும் இணைத்து ஏரில் பூட்டி உழுவதற்கு அனுமதிக்கப்படவில்லை (உபாகமம் 22:10)? இரண்டு வகை விதைகளைக் கலந்து விதைக்கவோ, (லேவியராகமம் 19:19), சணல் நூலும், கம்பளி நூலும் கலந்த வஸ்திரம் தரிக்கவோ (லேவியராகமம் 19:19) கூடாதென்று ஏன் தடை விதிக்கப்பட்டுள்ளனர்? அவர்கள் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்கிற பாடத்தைக் கடவுள் அவர்களுக்குப் போதிக்க விரும்பினார். பிரிக்கப்பட்ட மக்கள் என்பதைக் காட்டவே விருத்தசேதனம் என்கிற நியமமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு யூதன் 'கலப்பற்ற' ஆடை அணிவது அவன் பிரித்தெடுக்கப்பட்டவன் என்பதை நினைவுபடுத்துவதற்காகவே. இதே காரணத்திற்காகவே அவன் உழவு செய்யும்போதும் கலப்பற்ற ஜோடியைப் பயன்படுத்த வேண்டும். இப்பொழுது யாத்திராகமம் 10:26, 11:7 ஐப் படித்து, யாத்திராகமம் 33:15,16, லேவியராகமம் 20:24, 2தீமோத்தேயு 2:19 ஐ ஒப்பிட்டுப் படிக்கவும்.

### 2. 'பிரித்தெடுக்கப்படல்' என்கிற இந்தக் கோட்பாடு நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் தொடுவ தாகவுள்ளது.

இது நமது தனிப்பட்ட வாழ்வு, பொதுவாழ்வு, விருப்பங்கள், பொழுதுபோக்கு, பழக்கங்கள், நாம் உண்ணும் உணவு, உடுத்தும் உடை, வாசிக்கும் புத்தகங்கள், நம்முடைய நண்பர்கள், நமது அன்றாட வேலைகள் போன்றவற்றையும் தொடுவதாகவுள்ளது. இது நமது அந்தரங்கமான, வெளியரங்கமான வாழ்க்கையையும் தொடுவதாகவுள்ளது. 2கொரிந்தியர் 7:1 ஒப்பிடுக. இது பாவமானவற்றையும், சந்தேகத்திற்குரியவற்றையும் தொடுவதோடு, உலகத்திற்கும், இரண்டாம் தரமுள்ள பொருட்களையும் தொடுவதாகவுள்ளது. நாம் இந்த பிரித்தெடுக்கப்பட்ட வாழ்வை நடத்தப் பயிற்சி எடுப்போமாயின், மேற்கூறிய காரியங்களில், சில கொள்கைகளைக் கடைப்பிடிக்க, நாம் சரியான வாழ்வு நடத்த, சரியான தீர்மானங்களைச் செய்ய, கீழ்க்கண்ட வினாக்களுக்கு உண்மையான விடையளிக்க வேண்டும். (வேறுபட்டு சிந்திக்கும் மக்கள்மீது நாம் நமது

எண்ணங்களைத் திணிக்கக்கூடாது என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

1. இது கடவுளை மகிமைப்படுத்துமா - இல்லையா?
2. இது என் கிறிஸ்தவ வாழ்வை ஊக்குவிக்குமா அல்லது தாக்குமா?
3. இது பலவீனமுள்ள ஒரு சகோதரனுக்கு உதவியாக இருக்குமா, அல்லது தடுக்குமா?
4. இது என்னுடைய சாட்சியைத் தகர்க்குமா அல்லது வளர்க்குமா?
5. இது பரிசுத்த ஆவியானவரை மகிழ்விக்குமா அல்லது துக்கப்படுத்துமா?
6. இது என்னைக் கடவுளின் சித்தத்திற்குள்ளாக நடத்துமா அல்லது சித்தத்தைவிட்டு விலக்குமா?
7. இது கடவுளைப்பற்றிய போதனையைக் கவர்ச்சியுள்ளதாக்குமா? (தீத்து 2:10)

**3. பிரித்தெடுக்கப்பட்ட வாழ்வு நடத்தும் யாவருக்குமுரிய ஒரு சிறப்பான வாக்குத்தத்தம் உண்டு.** இதை நாம் 2கொரிந்தியர் 6:17, 18 இல் காணலாம். இது மூன்று பகுதியுள்ள வாக்குத்தத்தமாகும். நாம் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்வு நடத்த ஆயத்தமாகும்போது, ஆண்டவர் வாக்களிப்பதாவது.

1. “நான் உங்களை ஏற்றுக்கொள்வேன்”
2. “நான் உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்”
3. “நீங்கள் எனக்குக் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்கள்”

லூக்கா 15:11-24 இல் கெட்டகுமாரனுடைய உவமை கூறப்பட்டுள்ளது. அதிலே முதலாவது அவன் ‘மகனாக’ இருந்தான். ஆயினும் அவன் தூரதேசத்திற்குப் போனான். தகப்பனுடன் இருந்த ஐக்கியத்தை விட்டு விலகினான். நாம் பிரிக்கப்பட்ட வாழ்வு நடத்தாமற் போனால், நாமும்கூட அவனைப் போன்றே இருப்போம். நாம் பின்வாங்கிப் போன நிலையில், (நாம் அவரது பிள்ளைகளாக இருந்தும்) தகப்பனை விட்டுப் பிரிந்து வாழ்கிறோம். நாம் அவரது ஐக்கியத்தை விட்டு விலகிப் போய்விட்டோம். நாம் வளர்ச்சியற்ற, கீழ்ப்படியாத பிள்ளைகளைப் போன்றே நடக்கிறோம். தூரதேசத்திலிருந்த எல்லாவற்றையும் விட்டுப் பிரிந்து கெட்டகுமாரன் திரும்பி வந்த போது, தகப்பன் செய்தது என்ன?

1. அவனை ஏற்றுக் கொண்டான். லூக்கா 15:20,21 பார்க்க
2. தூரதேசத்திலிருந்தபோது இருந்த பிரிந்த உறவைப் போன்றல்லாது மீண்டும் அவனுக்குத் தகப்பனானான் - லூக்கா 15:22,23
3. அவனை மகனைப் போன்று நடத்தினான் - லூக்கா 15:24

பிரிக்கப்பட்ட வாழ்வு நடத்தாத கிறிஸ்தவன், தூரதேசத்திலே இருந்த கெட்ட குமாரனைப் போலிருப்பது மட்டுமல்லாமல், உலகத்தின் எல்லாக் காரியங்களோடும் இணைந்து, தகப்பனுடைய நெருக்கமான ஐக்கியத்தை விட்டு விலகி, தகப்பனுடைய வீட்டிலுள்ள எல்லா வசதிகளையும், மகனுக்குரிய சிலாக்கியங்களையும் அனுபவிக்காமல் இருப்பதற்கு ஒப்பாகவுள்ளான். பிரிக்கப்பட்ட வாழ்வு நடத்தாத கிறிஸ்தவனே, நீயும் இப்படித்தான் இருக்கிறாயா?

மற்ற கிறிஸ்தவர்கள் உலகப் பிரகாரமாக வாழலாம். அவர்கள் கேள்விக்குரிய இடங்களுக்குச் சென்று கடவுளைக் கனவீனப்படுத்தலாம். அவரது நாமத்தை தூஷிக்கும் மக்களோடு உலகத்திற்கேற்றபடி நடக்கும் மக்களோடுச் சேர்ந்திருக்கலாம். நீங்கள் கடவுளுக்குரிய மேலானவர்களாயும், “பரிசுத்தமும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான” (எபிரெயர் 7:26) ஆண்டவர் இயேசுவைப் போன்று வாழ விரும்பினால் நீங்கள் மேற்கூறியவாறு இருக்கக்கூடாது. நீங்கள் அவரைப் போன்று வாழ விரும்புகிறீர்களா? அப்படியானால் 2கொரிந்தியர் 6:17 - 7:1 வரை படிக்கவும்.

## பாடம் 9 **எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி ஊழியம் செய்**

***(வேதபகுதி - 1கொரிந்தியர் 9:1-27)***

இந்தப் பாடத்தின் தலைப்பு 1கொரிந்தியர் 9:22,23 லிருந்து எடுக்கப்பட்டது. இவை அப்போஸ்தலனாகிய பவுலினால் எழுதப்பட்ட வார்த்தைகள். இவை அவரது வாழ்க்கையின், ஊழியத்தின் தணியாத தாகத்தைக் காட்டுவதாகவுள்ளது. இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவனின் மேலான வாஞ்சையாக இருக்கவேண்டும். ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காகப் பவுல், வாழவும், ஏன் அதற்காகச் சாகவும் கூட ஆயத்தமாக இருந்தார். மற்றவர்கள் இரட்சிப்படைய வேண்டுமென்கிற தீராத பாரம் அவருக்குள் இருந்தது. அவர் மக்களது இரட்சிப்புக்காக ஏங்கினார். அவர்கள் எப்படியாகிலும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவர் எந்தக் கஷ்டத்திற்குள்ளும், இக்கட்டிற்குள்ளும் போக ஆயத்தமாக இருந்தார். “கடவுளே, ஸ்காட்லாந்து நாட்டைத் தாரும் அல்லது நான் சாகிறேன்” என்று ஜான் நாக்ஸ் கதறினது போல, பவுலும், “கடவுளே ஆத்துமாக்களைத் தாரும் அல்லது நான் சாகிறேன்.” என்று பாரத்துடன் ஜெபித்தார். அவர் வேலையில் இருந்தாலும், ஓய்வு எடுத்தாலும், வீட்டிலிருந்தாலும், வெளியிலிருந்தாலும், சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், எந்தச் சூழலிலும், இந்த மனிதர் இழந்துபோன மக்களின் இரட்சிப்புக்கென வகை தேடினார். ரோமர் 9:1-3, 10:1 ஆழ்ந்து படித்துப் பார்க்கவும். ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கென நாம் கொண்டுள்ள பாரத்தைப் பகிர்ந்து கொள்கிறோமா? மக்களின் இரட்சிப்பைப் பற்றின மெய்யான பாரம் நமக்குண்டா? அவர்களின் இரட்சிப்பிற்கென நாம் ஏதாகிலும் செய்கின்றோமா? இந்த மேலான நோக்கத்தை நிறைவேற்றாமல், வேறு பல இரண்டாம் தரமான காரியங்களில் ஈடுபடுவது எளிது. இதைக் குறித்த சிலவற்றை நாம் காண்போம்.

**1. ஆத்துமாக்களின் இரட்சிப்பே ஒவ்வொரு கிறிஸ்தவனது வாழ்வின் மேலான நோக்கமாக இருக்க வேண்டும்.**

நீங்கள் ஆண்டவருக்குரியவர்களாக இருந்தால், ஆத்துமாக்களின் இரட்சிப்பே உங்களுடைய, என்னுடைய வாழ்வின் மேலான நோக்கமாயிருக்கும். இதுவே நம்முடைய ஆண்டவரின் மேலான பாரமாகும் (லூக்கா 19:10, யோவான் 9:4, 1தீமோத்தேயு 1:15). இழந்துபோன மக்களைத் தேடவும், இரட்சிக்கவுமே அவர் வந்தார். அதையே நாமும் செய்ய வேண்டுமென அவர் கட்டளையிட்டுள்ளார் (யோவான் 20:21) இந்தச் சேவைக்காகவே நாம் இரட்சிக்கப் பட்டுள்ளோம் (எபேசியர் 2:10).

**(1). இதுவே உங்களுடைய, என்னுடைய வாழ்வின் மேலான நோக்கமாக இருக்க வேண்டும்.** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதே நமது முதன்மையும், முக்கியமானதுமாயிருக்க வேண்டும். இது என்னுடைய மேலான வேலையா? அல்லது என் சபையின் வேலையா? ஒரு கிறிஸ்தவன் அல்லது ஒரு சபை முழுக்க முழுக்கச் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். வெளியிலுள்ள மக்களைப் பாராமல், உள்ளுக்குள் இருக்கும் மக்களைப் பார்ப்பது மிக எளிதான செயலாகும். “ஜீவ வசனத்தைப் பற்றிக்கொண்டு” (பிலிப்பியர் 2:15) “உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளவேண்டும்” (தீத்து 1:9).

**(2). இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவனின் நோக்கமாக இருக்கவேண்டும்.** ஏதோ ஒரு சில கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, எல்லாருக்குமுரியது- அப்போஸ்தலர் 8:4 பார்க்கவும். இதில், எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தவர்கள், அப்போஸ்தலர் மட்டுமல்ல (வசனம் 1) சபையைச் சேர்ந்த சாதாரண மக்களும்தான் என்பதைக் கவனிக்கவும். இதுவே சுவிசேஷ ஊழியத்திற்குரிய புதிய ஏற்பாட்டு முறை. இதுவே இக்காலத்திற்கும் தேவை..

**(3). ஆத்துமாக்களின் இரட்சிப்பே நோக்கமாகும்.** மக்கள் இழந்துபோன நிலையிலுள்ளனர். அவர்கள் இரட்சிப்படைய வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே அவர்களை இரட்சிக்க முடியும் (அப்போஸ்தலர் 4:12). அவர்கள் மன்னிப்படைய வேண்டும் (அப்போஸ்தலர் 13:38), மறுபடியும் பிறக்கவேண்டும் (யோவான் 3:5), நீதிமானாக்கப்பட வேண்டும் (ரோமர் 5:1), கடவுளின் மேலான இரட்சிப்பின் முழுமைக்குள் வழி நடத்தப்பட வேண்டும் (ரோமர் 15:29) என்பதே நமது நோக்கமாயிருக்கட்டும்.

**2. நாம் தொடும் ஒவ்வொரு ஆத்துமாவும் ஒரு வருங்காலக் கிறிஸ்தவன் என்று எதிர் பார்க்க வேண்டும்.** ‘எல்லாருக்கும்’ என்று பவுல் கூறுகிறார் (1கொரிந்தியர் 9:22). ஆம்! கடவுள் எல்லா மனிதரையும்

நேசிக்கிறார் (யோவான் 3:16). கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் (2கொரிந்தியர் 5:15).என்று தான் சந்தித்த யாவருக்கும் பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர் அப்போஸ்தலர் 20:26 இல் கூறுவதைப் பாருங்கள். தான் சந்தித்த எல்லா ஆத்துமாக்களுக்கும் உண்மையோடு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். எசேக்கியேல் 3:18 பார்க்க. நாமுங்கூட இதே போன்று உண்மையோடிருந்தால், நடைமுறையில் இது எவ்வாறு செயலாற்றும்? எல்லா வேளைகளிலும் நாம் ஆத்துமாக்களை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டுமென்பதே இதன் பொருள். வீட்டிலோ, வியாபாரத்திலோ, பயணத்திலோ, கடிதம் எழுதும்போதோ, விடுமுறையிலோ, எல்லா வேளைகளிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும், கிறிஸ்து யார் என்பதைத் தேவையிலுள்ள யாவருக்கும் எடுத்துரைக்க வேண்டும். 1பேதுரு 3:15 பார்க்கவும்.

**3. ஆத்துமாக்கள் இரட்சிப்படைய நாம் எல்லா முறைகளையும் கையாள வேண்டும்.**

உங்களுடைய, என்னுடைய இரட்சிப்பைச் சம்பாதிக்க நமது இரட்சகர் பரலோகத்தை விட்டு பூலோகத்திற்கு வந்து, சிலுவைக்குச் சென்றதை நினைத்துக் கொள்ளுங்கள் (2கொரிந்தியர் 8:9) ஒரு ஏழை, பாவியான பெண்ணை இரட்சிக்க அவர் ஒரு தனிப்பட்ட பாதையில் பயணம் செய்தார் (யோவான் 4:4). அவள் மூலம் அநேகர் வந்தனர் (யோவான் 4:39-42). லூக்கா 15:4-24 வரையுள்ள உவமையைப் பாருங்கள். அதிலே காணாமற்போன ஆடு (வசனங்கள் 4-7), காணாமற்போன காசு (வசனங்கள் 8-10), காணாமற்போன மகன் (வசனங்கள் 11-24) மீது பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் உள்ள கரிசனையைப் பாருங்கள். இழந்துபோன பாவியின் இரட்சிப்பின் பணியிலிருந்து நாம் நம்மை விலக்கிக் கொண்டால் என்ன நடக்கும்? நாம் மற்றவர்களை இதில் ஈடுபடுத்தினால், நாம் நம்மை விலக்கிக் கொள்ளலாம். இதற்கெனத் தியாகம், சோர்வின்மை, திடமனது போன்றவை வேண்டும். அப்பொழுதுதான் நாம் வெற்றி பெற முடியும். (சங்கீதம் 126:6) இதற்கென நாம் எத்தகைய வழிமுறைகளைக் கையாள வேண்டும்? பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. அப்பொழுது அவர் நம்மை ஆத்தும ஆதாயம் செய்யும் முறைகளைக் கையாள வழி நடத்துவார். அவர் நமக்கு ஜெபிப்பதற்கான பாரத்தைக் கொடுப்பார் (ரோமர் 10:1). அப்பொழுது அவர் நம்மை, நமது சாட்சியை ஏற்றுக்கொள்ள அவர் ஆயத்தப்படுத்தின, தாகமுள்ள ஆத்துமாக்களிடம் வழி நடத்துவார் (அப்போஸ்தலர் 8:26,29,30). அவர்களிடம் பேசுவதற்கு அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தாள் அல்லது வேத பகுதியைப் பயன்படுத்த வழி காட்டுவார். அவரே நமது உரை யாடலை சரியான பாதையில் திசை திருப்பி, அதன் மூலம் ஆண்டவரைப்பற்றிப் பேச உதவுவார். (சங்கீதம் 107:2). ஆனால் நமக்கு முக்கியமானது நாம் அவரோடு மெய்யான தொடர்புடன் இருக்க வேண்டுமென்பதே - நீதிமொழிகள் 8:34 படிக்கவும்.

**4. ஒரு சிலரையாகிலும், இரட்சிப்புக்குள் வழி நடத்துவதே கடவுளின் ஊழியன் செய்யும் வேலையாகும்.** சுவிசேஷத்தைப் புறக்கணித்த மக்களுக்கே பவுல் அதைப் பிரசங்கித்தார். கிடைக்கும் எல்லா மீன்களையும் எந்த மீனவனாலும் பிடிக்க இயலாது. அவன் சிலவற்றை மட்டுமே பிடிப்பான். சிலவேளைகளில் எதுவும் பிடிக்க இயலாது (ரோமர் 11:13). விலையேறப் பெற்ற ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் நடத்தும் மகிழ்ச்சியை நாம் பெற வேண்டும் என்பதே கடவுளின் திட்டமாகவுள்ளது. 2கொரிந்தியர் 1:14, 1தெசலோனிக்கேயர் 2:19ஐக் கவனமாகப் படிக்கவும். இந்த வசனங்களில் பவுல் தான் ஆண்டவரிடம் வழி நடத்தியவர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் இப்பொழுது கிறிஸ்துவின் சமூகத்தில் இருக்கின்றனர். அவருங்கூட ஒரு நாளில் ஆண்டவரோடு இருக்கும்படி போகும்போது அவர்களோடு இணைந்து மகிழுவார்.

**5. சுவிசேஷத்தின் வெற்றி, அது எவரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளதோ, அவர்களது கீழ்ப் படிதலைச் சார்ந்துள்ளது.** வசனம் 23ஐ ஜெபத்துடன் படிக்கவும். உண்மையில் பார்த்தால் இன்று சுவிசேஷம் வீழ்ச்சி யடைவதைக் காண்கிறோம். இது ஏன்? ஒரு சில கிறிஸ்தவர்கள் மட்டுமே ஆண்டவரின் கடைசிக் கட்டளைக்குக் கீழ்ப்படிவதினாலேயா? (மத்தேயு 28:19). விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் இரட்சிப்பு உண்டாவதற்குச் சுவிசேஷம் இன்றும் தேவ பலனாயுள்ளது (ரோமர் 1:16). ரோமர் 10:14,15 கூறுவதைக் கவனமாய்ப் பாருங்கள்.

## பாடம் 10 **தொடர்ந்து செல்ல வேண்டியவன் கிறிஸ்தவன்!**

***(வேதபகுதி - 2கொரிந்தியர் 5:1-10)***

அவிசுவாசிகளின் எதிர்காலம் அச்சமூட்டுகிற ஒன்றாகவுள்ளது. கிறிஸ்தவர்களுக்கென்று வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் அதே கடவுளின் வார்த்தை, அவிசுவாசமுள்ள ஆத்துமா வுக்கெனக் காத்திருக்கும் அச்சுறுத்தும் பயங்கரமான முடிவைப் பற்றியும் எச்சரித்துள்ளது. பிதாவின் வீட்டைக் குறித்து வாக்குறுதி தந்து (யோவான் 14:1-3) நம்மை ஆறுதல் படுத்தும் அதே அன்புள்ள ஆண்டவர் இயேசு, தெளிவான வார்த்தைகளினால், வேதனையுள்ள மரணம் (யோவான் 8:21,24), நித்திய நரகவாழ்வு (மத்தேயு 5:22,29,30; 10:28;18:9;23:15,33; மாற்கு 9:43,45,47, லூக்கா 12:5) போன்றவை உண்டெனவும் வலியுறுத்திக் கூறியுள்ளார். எவ்வளவு பயங்கரமான எதிர்காலம்!. நாம் தொடர்ந்து நம் கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறிச் செல்லும் போது, இந்த பயங்கர முடிவு பற்றி பயப்படத் தேவையில்லை. இதற்காக கடவுளுக்கு நன்றி கூற வேண்டும்.

கிறிஸ்தவனின் எதிர்காலம் எப்படிப்பட்டது? நாம் பூலோகத்திலிருக்கும்போது, தொடர்ந்து பாவத்தால் சூழப்பட்டுள்ளோம். நமது பங்கான சோதனைகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறோம். நமது வாழ்நாளின் போது ஆண்டவரின் வருகை தாமதிக்குமானால் நாம் மரண இருளின் பள்ளத்தாக்கிற்குள் செல்ல வேண்டும். இவை யாவும் நமக்கு நேரிட்டாலும், ஒரு கிறிஸ்தவனின் எதிர்காலம் மகிமையாயுள்ளது. நமது ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவர் பாவத்தை வென்றார். அவர் மூலமாய் நாமும்கூட முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகவும் இருக்கிறோம் (ரோமர் 8:37) .நமது சோதனையிலும், வேதனையிலும் தாங்குவதற்குப் போதுமான அவரது கிருபையை வாக்களித்துள்ளார். (2கொரிந்தியர் 12:9) அவர் பாதாளத்தின் பயங்கரத்தை முறியடித்து, மரணத்தின் கூர் ஒடியச் செய்துள்ளார் (1 கொரிந்தியர் 15:54-57). ஆகவே கிறிஸ்தவனின் எதிர்காலம் இதைவிட மகிமையுள்ளது. தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கென கடவுளுக்கு நன்றி கூறுக. கடவுளின் வார்த்தை, வரப்போகிற நமது எதிர்கால வாழ்வு குறித்து என்ன கூறுகிறது?.

**1. கிறிஸ்தவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியுள்ளான்.**

இதுவே விசுவாசியின் (எதிர்நோக்கும்) மேலான நம்பிக்கையாகும். இந்த ஒரு நிகழ்ச்சியையே அவன் எல்லாவற்றிற்கும் மேலாகக் கருதி நிச்சயத்தோடு எதிர் நோக்கியுள்ளான். கிறிஸ்தவனின் நம்பிக்கை மரணமல்ல. மரணமில்லாமல் நாம் எடுத்துக்கொள்ளப்படுவதையே எதிர்நோக்கி நம்பிக்கையோடு காத்திருக்கிறோம். (1கொரிந்தியர் 15:51, 1தெசலோனிக்கேயர் 4:17) பரலோகம் நமது வீடு என்கிற அற்புதமான நம்பிக்கை இருந்தாலும், ஒரு கிறிஸ்தவனின் நம்பிக்கை பரலோகம் அல்ல (யோவான் 14:1-3) அவன் நம்பிக்கை நிச்சயமாக பூலோக அரசாங்கத்தின் மீதும் அல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரப் பிரகாரமான வருகையே கிறிஸ்தவ னின் நம்பிக்கையாகும், இது நிச்சயமான நம்பிக்கை (யோவான் 14:1-3). உறுதி செய்யப்பட்ட நம்பிக்கை(அப்போஸ்தலர் 1:9-11).. ஆறுதலளிக்கும் நம்பிக்கை (1தெசலோனிக்கேயர் 4:18). சுத்திகரிக்கும் நம்பிக்கை (1யோவான் 3:3). ஆசீர்வாதமான நம்பிக்கை (தீத்து 2:13).

**2.கிறிஸ்துவினுடையவர்களுக்கென, அவர் வரும் அந்த நாளை எதிர்நோக்கி கிறிஸ்தவன் ஆவலோடு, காத்திருக்கிறான்.** அவர் வரும்போது இரண்டு அற்புதமான நிகழ்வுகள் நேரிடும்.

1. **"கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்"** (1தெசலோனிக்கேயர் 4:16) அவருக்குச் சொந்தமானவர்கள் எழுந்திருப்பார்கள் (1கொரிந்தியர் 15:23,52).

2. **"...உயிரோடிருக்கும் நாமும்.....எடுத்துக் கொள்ளப்பட்டு....இருப்போம்"** (1தெசலோனிக்கேயர் 4:17, 1கொரிந்தியர் 15:51) ஆண்டவர் வரும்போது, பூவுலகில் உயிரோடுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் உடனடியாக மறுரூபமாக்கப்படுவான். அதாவது ஒரு புதிய சரீரத்தைப் பெறுவான். ஆம் நமக்கு ஒரு புதிய சரீரம் (1கொரிந்தியர் 15:35-39), அவரைப் போன்ற மகிமையுள்ள சரீரம் (பிலிப்பியர் 3:21) கிட்டும். இந்தப் பலவீனமுள்ள, கட்டுப்பாட்டுக்குள் உள்ள, அழிந்துபோகும் சரீரம் நமக்கு இராது. நமக்குப் புதிய சரீரம் கொடுக்கப்படும். இப்படிப்பட்ட இந்தப் பரிசுத்தமான எதிர்பார்ப்புடன் நாம் ஆவலாய்க் காத்திருக்கிறோம் (ரோமர் 8:23).

**3. கிறிஸ்தவன் அவருடன் வரப்போகும் நமக்கு அருமையானவர்களை அடையாளங் கண்டு இணையப்போகும் அந்தக் கூடுகையை எதிர் நோக்கியுள்ளான்.**

கிறிஸ்துவுக்குள்ளாக மரித்த, கொஞ்சகாலம் நம்மை விட்டுப் பிரிந்து சென்ற நமக்கு அருமையான யாவரையும் அப்பொழுது சந்திப்போம். நாம் அவர்களைப் பார்க்கும்போது எளிதில் அவர்களை அடையாளம் காண இயலும். கடவுளின் வார்த்தை இதைக் குறிப்பிட்டுள்ளது (1கொரிந்தியர் 13:12) லூக்கா 16 ஆம் அதிகாரத்திலுள்ள உவமை இதை விளக்குகிறது (லூக்கா 9:27-36) கிறிஸ்துவின் வருகை இதனை உறுதிப்படுத்துகிறது (1தெசலோனிக்கேயர் 4:17) கிறிஸ்துவின் வருகை இதற்கு உத்திரவாதமளிக்கிறது (1கொரிந்தியர் 15:20, பிலிப்பியர் 3:21). ஆகவே இந்தச் சிந்தையோடு உங்கள் இருதயங்களைத் தேற்றிக்கொண்டிருங்கள் (1தெசலோனிக்கேயர் 4:18).

**4. கிறிஸ்தவன் நிர்மலமான மகிழ்ச்சி நிறைந்த எதிர்காலத்தை எதிர் நோக்கியுள்ளான்.**

இப்பொழுது நாம் துக்கம், ஏமாற்றம், கண்ணீர், பிரிவு, வியாதி, மரணம், போன்றவற்றை அனுபவிக்கிறோம். இருப்பினும் நலமானவைகள் வரப்போகின்றன. இனித் துன்பமில்லை, துயரமில்லை வெளிப்படுத்தல் 21:4 படிக்கவும். அந்த நாளிலே நம்முடைய மகிழ்ச்சிக்கு இன்னொரு சிறப்பான காரணம் உண்டென்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியுள்ளார். அதை 2கொரிந்தியர் 1:14, 1தெசலோனிக்கேயர் 2:19 இல் காணலாம். நமது வாழ்க்கையின் மூலம், சாட்சியின் மூலம், ஆதாயம் பண்ணப்பட்டு, ஆண்டவரின் பிரசன்னத்தில் நிற்கும் மக்களைப் பார்க்கும்போது கிட்டும் மகிழ்ச்சியே அது என்று பவுலடியார் கூறியுள்ளார்.

**5. கிறிஸ்தவன், கிறிஸ்துவைப் போல வாழ்ந்ததற்காகவும், உண்மையான ஊழியத்திற்கெனவும் கிட்டும் பரிசை எதிர்நோக்கியுள்ளான்.**

நாம் கவனமாய் நடந்து (எபேசியர் 5:15) ஆண்டவருக்கென ஈடுபட்டுள்ள ஊழியத்தில் உத்தமமும், உண்மையுமுள்ளவர்களாக இருந்தால் (மத்தேயு 25:21) 'நல்லது' என்கிற அவரது பாராட்டைப் பெறுவோம். அவரது பரிசையும் பெறுவோம். இதற்குத் தொடர்புள்ள மத்தேயு 12:36, ரோமர் 14:12, 1கொரிந்தியர் 3:13,14, 4:5, 2கொரிந்தியர் 5:10 வாசித்துப் பார்க்கவும். பரிசுகள் யாவும் கிரீடங்களாக உருவகித்துக் கூறப்பட்டுள்ளன. அவைகள் யாருக்குக் கொடுக்கப்படும் எனக் காணலாம்.

***1. கட்டுப்பாடுள்ள வாழ்வு நடத்துவோருக்கு*** (1கொரிந்தியர் 9:25) **2. சோதனையைச் சகிக்கிற மனிதருக்கு** (.யாக்கோபு 1:12) ***3. ஆத்தும ஆதாயம் செய்வோருக்கு*** (1தெசலோனிக்கேயர் 2:19,20) ***4. மந்தையைப் பராமரிக்கிறவர்களுக்கு*** (1பேதுரு 5:2-4) ***5. அவரது பிரசன்னமாகுதலை விரும்புகிறவர்களுக்கு*** (2தீமோத்தேயு 4:8). ஆகவே நாம் முழுமையான பரிசைப் பெறும் தகுதியடைய பல்வேறு வழிகள் உண்டு என அறிகிறோம் (2யோவான் 8).

**6. கிறிஸ்தவன் புதிய பொறுப்புக்களை ஏற்பதை எதிர்நோக்கியுள்ளான்.**

நித்தியமாக நாம் அவருக்கே ஊழியம் செய்யவிருக்கிறோம் (வெளிப்படுத்தல் 22:3). இங்கே நாம் எஜமான விசுவாசத்தோடு அவருக்குச் செய்யும் ஊழியமே, அங்கே நாம் செய்யவிருக்கும் ஊழியத்தின் அளவையும், தன்மையையும் நிர்ணயம் செய்யும். லூக்கா 19:17 படிக்கவும். பரிசுத்தமாகவும், சீராகவும் ஜெபத்துடன், ஆர்வத்துடன் செய்யும் ஊழியத்திற்குக் கிட்டும் பரிசு எவ்வளவு சிறந்தது.

**7. கிறிஸ்தவன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கடைசியான மகிமை நிறைந்த ஆளுகையையும், வெற்றியையும் காண எதிர்நோக்கியுள்ளான்.**

அவர் இந்த உலகில் ஆயிரம் வருடம் ஆட்சி செய்யும்போது நாம் அவரோடு கூட இருப்போம். (வெளிப்படுத்தல் 20:1-6). அவர் இராஜாதி இராஜாவாய், கர்த்தாதி கர்த்தாவாயிருப்பார் (வெளிப்படுத்தல் 19:16). அப்பொழுது நாம் மிகவும் மகிழ்ந்து களிகூருவோம்! இப்பொழுது ஆண்டவர் புறக்கணிக்கப்பட்டு அநேகரால் வெறுத்துத் தள்ளப்படுகிறார். அந்த நாளிலே எல்லோரும் அவரே கர்த்தரென்று ஒப்புக்கொள்வார்கள் (பிலிப்பியர் 2:10,11). ஆம், நாம் நிச்சயமாக வரப்போகின்ற அந்த மகுடம்சூட்டும் நாளை ஆவலோடு எதிர்நோக்கியுள்ளோம். இதற்காகக் கிறிஸ்தவனே முன்னேறிச் செல்!

தொடர் 5

# பிலிப்பியருக்கு
# எழுதின நிருபம்


பாடம் 1 நமக்குள் கடவுளின் உன்னதமான வேலை

பாடம் 2 சுவிசேஷத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

பாடம் 3 பாடுகளின் மூலம் ஊழியம்

பாடம் 4 கிறிஸ்து இயேசுவின் சிந்தையைக் கொண்டிருத்தல்

பாடம் 5 விசுவாசத்திலே, பவுலின் மகன்

பாடம் 6 ஆண்டவரை முழுமையாக அறிதல்

பாடம் 7 பின்னானவைகளும், முன்னானவைகளும்

பாடம் 8 பூலோக கவலைக்குப் பரலோக மருந்து

பாடம் 9 கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றையும் செய்யலாம்

பாடம் 10 எதிர்பாராத இடங்களிலுள்ள பரிசுத்தவான்கள்

## பாடம் 1 **நமக்குள் கடவுளின் உன்னதமான வேலை**

***(வேதபகுதி - அப்போஸ்தலர் 16:6-34)***

பிலப்பியருக்கு எழுதப்பட்ட இந்த நிருபம் கிருபையில் ஆரம்பமாகி (1:2) கிருபையில் முடிவடைகிறது (4:23). இதனை புதிய ஏற்பாட்டிலுள்ள மேய்ப்பனைக் குறித்தச் சங்கீதம் 23 எனக் கூறுவர். பவுலின் கடிதங்களுள் மிக அருமையானவற்றுள் இதுவும் ஒன்று. இக் கடிதத்தை அரைமணி நேரத்துக்குள் வாசித்து முடித்துவிடலாம். இது நமக்குச் சிறப்பாகத் தோன்றுவதற்கு ஏழு காரணங்கள் உண்டு. அவையாவன:

**1. பவுலின் மற்ற கடிதங்களைவிட இது வேறுபட்டது**. அவரது பெரும்பாலான கடிதங்கள், கடவுளின் சத்தியம் கூற, கோட்பாடுகளைப் போதிக்க, தவறைத் திருத்த, விசவாசத்தை உறுதிப்படுத்தல் என்பன போன்ற பல காரணங்களுக்காக எழுதப்பட்டவை. பிலிப்பியருக்கு எழுதிய நிருபமோ, இறையியல் சாசனமாக இல்லாமல் கடிதம் எழுதியவரின் ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

**2. பவுலின் மற்ற கடிதங்களைவிட இது எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடியது.** பவுல் நமக்கு முன்பாக வைக்கும் வாத, பிரதிவாதங்களைப் புரிந்து கொள்வதோ, கோட்பாட்டு விளக்கங்களை அறிந்து கொள்வதோ, எல்லாருக்கும் எளிதானதல்ல. எடுத்துக்காட்டு ரோமருக்கு எழுதிய நிருபம். ஆனால் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தை யாவரும் படித்து எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

**3. இது சிறையிலிருந்து எழுதப்பட்ட நிருபம்.** பவுல் ரோமாபுரிச் சிறையில் கைதியாக இருந்தபோது கி.பி.62 இல் எழுதப்பட்ட கடிதம். ஆகவே இது ஆர்வமூட்டும் கடிதமாகவுள்ளது.

**4. இக்கடிதத்தில் கூறப்படும் முக்கியக் குறிப்பு மகிழ்ச்சியாகும்.** ஆம், மகிழ்ச்சி அதுவும் சிறையிலிருந்து வருகிறது! 'சந்தோஷம்' (3:1) என்பதே இக் கடிதத்தின் மையவார்த்தை. இந்த வார்த்தை பல்வேறு வடிவங்களில் இந்த நிருபத்தில் 18 தடவைகட்குக் குறையாமல் வருகின்றது. நாம் சந்தோஷப்பட வேண்டும். எதற்காக? **(1).** பரிசுத்தவான்களுடைய ஐக்கியத்திற்காக (1:3-11). **(2).** சுவிசேஷ ஊழியத்தில் வரும் உபத்திரவங்களுக்காக(1:12-30). **(3).** நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள மேலான முன் மாதிரிக்காக (2:1-18). **(4).** உண்மையான நண்பர்களுக்காக (2:19-3:1) **(5).** நாம் ஏற்றுக்கொண்டுள்ளவற்றின் ஆதாரத்திற்கு (3:2-16). **(6).** நமது குடியிருப்பு பரலோகத்தில் இருப்பதற்காக (3:17 - 4:1). **(7).** உத்தம கூட்டாளிகள் யாவருக்காகவும் (4:2,3),**(8).** எப்பொழுதும், எல்லாவற்றிற்காக(4:4-9) **(9).** கடவுளின் பிள்ளைகளின் தயாளம், கடவுளின் ஈவுக்காகவும் (4:10-20).

**5. ஐரோப்பா கண்டத்தில் நிறுவப்பட்ட முதலாவது திருச்சபைக்கு எழுதப்பட்ட கடிதம்.**
பிலிப்பிப் பட்டணத்தில் திருச்சபை ஆரம்பமான வரலாறு அப்போஸ்தலர் 16:6-34 வரையுள்ளது.

**6. அன்றாட வாழ்வில் கிறிஸ்தவ அனுபவம் பற்றிக் கூறும் கடிதம் இது.** "கிறிஸ்தவனின் அனுபவத்தில் கிறிஸ்து" என்பதே இதன் மையக்கருத்து எனலாம். கிறிஸ்தவனாக வாழ்வது, பாடுபடுவது, ஜெபிப்பது, வேலை செய்வது, அன்பு செலுத்துவது, சகிப்பது, சாவது எப்படியென்று பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் கூறுகிறது.

**7. இது நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.** நமது ஆண்டவரின் பெயர், அவரைக் குறிக்கும் சொல் இந்த நிருபத்தில் 70 தரம் வருகின்றன.

இந்த முதலாம் பாடத்தின் மைய வசனமாகப் பிலிப்பியர் 1:5ஐக் கூறலாம். "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்புகிறேன்" என்கிற இந்தக் கருத்து 1. பிலிப்பி சபைக்கு எப்படிப் பொருந்தும். 2. இக்காலச் சபைக்கு எவ்வாறு பொருந்தும். 3. தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கு எவ்வாறு பொருத்தமாகும் என்று காண்போம்.

**1. பிலிப்பிப் பட்டணத்துச் சபையில் கடவுளின் வேலை.** பிலிப்பிப் பட்டணத்துச் சபையைத் தொடங்கினவர் யார்? எவ்வாறு? கடவுள் அதைத் தொடங்கினார், தொடர்கிறார், அவரே சபையை முடிவுக்குக் கொண்டு வருபவர். இச்சபையின் வரலாற்றை அப்போஸ்தலர் 16:6-34 வார பார்க்கலாம். அவர் எவ்வாறு தமது 'நற்கிரியையைத்' தொடங்கினார்?

**1. ஜெபிக்கும் சில பெண்மணிகளின் மனதில் பாரத்தைக் கொடுத்ததனால்.** அப்போஸ்தலர் 16:13 வாசிக் கவும். எப்போதாகிலும் ஆண்டவர் கிரியையைத் தொடங்கும் முன், ஒருவரையோ, சிலரையோ பாரப்பட்டு ஜெபிக்க ஏற்படுத்துகிறார். உண்மையாக ஜெபிக்கும் போது கடவுள் இணைந்து செயல்படுகிறார். ரோமர் 8:26,27.

**2. தமது ஊழியரின் காலடிகளைச் சரியாக நடத்துவதன்மூலம்.**ஆசியாவிலே பிரசங்கம் செய்ய வேண்டுமென்று கடவுளின் ஊழியர் திட்டமிட்டிருந்தனர். ஆனால் பரிசுத்த ஆவியானவரோ, அவர்களது திட்டத்தை மாற்றி, பிலிப்பி பட்டணத்திற்கு வழி நடத்தினார். அப்போஸ்தலர் 16:6,7 பார்க்கவும். ஜெபத்திற்குப் பதிலளிக்கும் விதமாக, கடவுள் தமது ஊழியர்களை, ஐரோப்பாவின் முதல் திருச்சபையை நாட்ட வழி நடத்தினார்.

**(3). தமது ஊழியர்களுக்குக் கொடுத்த தரிசனத்தின்மூலம்.** அப்போஸ்தலர் 16:8,9 படிக்கவும். சில பெண்கள் கூடி ஜெபித்ததினால் இவை யாவும் நடந்தன. இப்படிப்பட்ட காரியங்கள் எப்பொழுதெல்லாம் நடக்கின்றன? ஜெபிக்கும்போதே - சில வேளைகளில் (இந்தச் சம்பவத்தில்) ஜெபிக்க ஆரம்பிக்கும் முன்னரே கூட (ஏசாயா 65:24) கடவுள் அற்புதமாக, வல்லமையோடு செயல்படுகிறார். இன்றும் அவ்வாறே செய்து வருகிறார்.

**(4). தமது ஊழியக்காரர்களைக் கீழ்ப்படியச் செய்வதின்மூலம்.** அப்போஸ்தலர் 16:10 இல் ‘உடனே’ என்கிற வார்த்தையைக் கவனிக்கவும். உடனடியாகச் சந்தேகப்படாமல், முழுமையாகக் கீழ்ப்படிந்தனர் என்பதை இது காட்டுகிறது. இந்த விதமாகத் தமது ஊழியர்கள் கீழ்ப்படிய முன்வரும்போது, அவர்களைக் கொண்டு கடவுள் பெரிய காரியங்களைச் செய்ய முடியும்.

**(5). சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததன்மூலம்.** மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் நோக்கத்தோடு அவர்கள் பிலிப்பி பட்டணத்திற்குச் சென்றனர் (வசனம் 10). ‘இரட்சிப்பின் வழியை’ அவர்களுக்கு அறிவித்தனர் (வசனம் 17)

**(6). மனமாற்றம் என்கிற அற்புதங்களை நடப்பிப்பதின் மூலம்.** இதிலே மூன்று மனமாற்றம் பெற்ற நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளது. 1. லீதியாளும் அவள் வீட்டாரும்(வசனங்கள் 14,15), 2. குறி சொல்லுகிற ஆவியைக் கொண்டிருந்த பெண் (வசனங்கள் 16-18), 3. சிறைச்சாலைக்காரனும் அவனது வீட்டாரும் (வசனங்கள் 25-34). ஒவ்வொரு மனமாற்றமும் கடவுளால் நிகழ்ந்தது!

**(7). உபத்திரவத்திலே உண்மையாயிருந்ததின் மூலம்.** பிலிப்பிப் பட்டணத்தின் சபையைக் கட்டுவதற்கென கடவுள் தமது ஊழியர் உபத்திரவப்பட அனுமதித்தார் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அப்போஸ்தலர் 16:22-24 வரை படித்து பிலிப்பியர் 1:12 ஐ ஒப்பிட்டு நோக்குக.

**2. இன்றைய திருச்சபையில் கடவுளின் வேலை.** திருச்சபையை ஆரம்பித்தவரும், ஆதரிப்பவரும் கடவுள். அவரே அதை முடிவுபரியந்தம் நடத்துவார். மத்தேயு 16:13-18 வரை கவனமாகப் படிக்கவும். குறிப்பாக வசனம் 18. அப்போஸ்தலர் 16 இல், “பாதாளத்தின் வாசல்கள்” சுவிசேஷத்தின் வளர்ச்சிக்கெதிராகச் செயல்படுவதைப் பார்க்கலாம். ஆண்டவர் தமது சபையைப் பிலிப்பிப் பட்டணத்தில் கட்டுவதற்கு எதிராகச் செயல்பட்ட அந்தகாரச் சக்திகள் யாவற்றையும் மேற்கொண்டார். அந்நிய சக்திகள் பல இன்றைய சபைக்கு எதிராக அணிவகுத்து நின்றாலும், பிலிப்பியர் 1:5 இன்படி நடக்கிறது. எபேசியர் 5:25-27 வரை கூறப்பட்டுள்ளவையும் உண்மையே.

**3. ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் கடவுளின் வேலை.** பிலிப்பிப் பட்டண சபையை ஆரம்பித்து, நடத்துகிறவர், இக்காலத் திருச்சபையின் ஆரம்பகர்த்தாவும், முடிக்கிறவருமானவர். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்விலும் தமது கிரியையைத் தொடங்கி முடிக்கிறவராக இருக்கிறார். கடவுள் ஒருவரே கிறிஸ்தவனை உருவாக்க முடியும். கிறிஸ்தவன் என்பவன் பாவ உணர்வு பெற்றவன் (யோவான் 16:8), மறுபடியும் பிறந்தவன் (யோவான் 3:3), மீட்கப்பட்டவன் (எபேசியர் 1:7). நீதிமானாக்கப்பட்டவன் (ரோமர் 5:1), பரலோகவாசியானவன் (கொலோசெயர்1:13), முத்திரை போடப்பட்டவன் (எபேசியர் 4:30). தெய்வீக சுபாவத்திற்குப் பங்காளி (2பேதுரு 1:4). இப்படிப்பட்டவற்றைக் கடவுள் ஒருவரே செய்ய முடியும்.

ஆகவே (1). **கடவுள் தமது வேலையை உங்களில் தொடங்கியுள்ளாரா?** அவர் உங்களை இரட்சித்துள்ளாரா? (ரோமர் 10:9,10) (2**). அவர் தொடங்கியிருந்தால், உங்களில் அவர் தமது வேலையைத் தொடருவார்.**யோவான் 6:37. 10:27-29, 17:12. 2தீமோத்தேயு 1:12,. யூதா 24. இதை உறுதிப்படுத்துகின்றன.

**(3). அவர் உங்களில் தமது வேலையை நடத்தி முடிப்பார்.** கிறிஸ்துவின் நாள் பரியந்தமும், அவர் வரும்வரை தொடர்ந்து நடத்துவார். 1யோவான் 3:2, சங்கீதம் 138:8ஐ பிலிப்பியர் 2:13 உடன் ஒப்பிடுக.

## பாடம் 2 **சுவிசேஷத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?**

***(வேதபகுதி - பிலிப்பியர் 1:1-11)***

இந்தக் கடிதத்தில் 'சுவிசேஷம்' என்கிற சொல் ஒன்பது தடவை இடம் பெற்றுள்ளது. 1. இது மகிமையுள்ள வார்த்தை. இதற்கு 'நற்செய்தி' என்கிற பொருள் உண்டு. யோவான் 3:16 இல் இரத்தினச் சுருக்கமாகச் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. 1கொரிந்தியர் 15:1-4 வசனங்களில் சுவிசேஷம் விளக்கமாயுள்ளது. 2. இது மிகவும் மதிப்புள்ள வார்த்தை. இந்த மிகப் பழம்பெரும் வார்த்தையை உண்மையாக இரட்சிக்கப்பட்ட யாவரும் விரும்புவார்கள். 3. அதிகம் வெறுக்கப்பட்ட வார்த்தையும் இதுதான். சாத்தான் இதனை நஞ்சைப் போல வெறுக்கிறான். சுவிசேஷத்தை எதிர்க்கிற மக்களும் அப்படியே வெறுக்கின்றனர். 4. இது மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட வார்த்தையாகும். சுவிசேஷத்தைக் குறித்து அறியாதோர் எத்துணை பேர்! சுவிசேஷத்திற்கும், மதத்திற்கும் வேறுபாடு தெரியாமல் குழப்பம் அடைந்தோர் எத்துணை பேர்! 5. இது இரட்சிக்கும் வார்த்தை. மனித இருதயத்தைத் திறக்கும் வல்லமையுள்ளது. (அப்போஸ்தலர் 16:14) அந்தகாரச் சக்திகளை முறியடிக்கும் வல்லமையுள்ளது (அப்போஸ்தலர் 16:18) நம்மைத் தட்டியெழுப்பி, இரட்சித்து, வாழ்வை மாற்றவல்ல (அப்போஸ்தலர் 16:26-34) கடவுளின் வெடிகுண்டு இது எனலாம். 6. இது மக்களை அடையாளங் காட்டும் வார்த்தையாகும். மெய்யாகவே மறுபடியும் பிறந்த எவரும், மதத்தைப் பற்றியோ, கிறிஸ்தவமார்க்கம் பற்றியோ பேசாமல், சுவிசேஷத்தை மட்டுமே கூறுவர்.

7. இது ஒரு வேதாகம வார்த்தை. வேதாகமத்திலே சுவிசேஷத்திற்கெனக் கொடுக்கப்பட்ட பட்டங்களையும், குறிப்புக்களையும் பார்க்கலாம். அவையாவன: 1). தேவனுடைய சுவிசேஷம் (ரோமர் 1:1), 2). கிறிஸ்துவின் (வல்லமையுள்ள) சுவிசேஷம் (ரோமர் 1:16), 3). என் சுவிசேஷம் (ரோமர் 2:16), 4). உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷம் (எபேசியர் 1:13) 5). சமாதானத்தின் சுவிசேஷம் (எபேசியர் 6:15), 6). கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷம் (2கொரிந்தியர் 4:4) 7). நித்திய சுவிசேஷம் (வெளிப்படுத்தல் 14:6) என்பன. இது இரட்சிக்கப்பட்ட மக்களாகிய நமக்கு என்ன செய்தது? நம்மோடிருந்து என்ன செய்கிறதென்று சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். சுவிசேஷம் நமக்குச் செய்வதையும், நம்மோடிருந்து செய்வதையும் பார்த்துச் சும்மா இருக்கலாமா? அதைக் கொண்டு நாம் ஏதாகிலும் செய்யவேண்டாமா? சுவிசேஷத்தைக் கொண்டு நாம் என்ன செய்வது?

**1. நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.**

வசனம் 3 இல் "அதற்கு (சுவிசேஷத்திற்கு) உடன்பட்டவர்கள்" என்று கூறுவதைச் "சுவிசேஷத்தில் ஐக்கியம்" என்று பொருள் கூறலாம். 'ஐக்கியம்' என்ற பதத்திற்குப் "பொதுவான ஆர்வமும், செயல்பாடும் உள்ள காரியத்தில் இணைந்து பங்கு பெறுதல்" என்று அர்த்தம். அதாவது சுவிசேஷத்தினால் நாம் பகிர்ந்து கொள்ளும் எல்லாவற்றையும் குறித்து இது கூறுகிறது. ஆம். இழந்துபோன மக்களுக்கு நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் (1கொரிந்தியர் 9:16) என்பது சரிதான். ஆனால் இங்கே கூறப்படுவது, "சுவிசேஷத்தில் ஐக்கியம்", என்பதே! சுவிசேஷ ஊழியத்தில் ஐக்கியம் குறித்த இரண்டு அருமையான எடுத்துக் காட்டுகளை, வசனங்கள் 2:22, 4:3 இல் காணலாம். நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள கீழ்க்கண்ட முறைகளைக் காணலாம்.

**(1). நாம் ஒருவருக்காக மற்றொருவர் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும்.** வசனம் 6ஐப் பாருங்கள். ஒவ்வொரு முறையும், பவுலடியார், பிலிப்பிப் பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களை திரு. அ..... திருமதி. ஆ.,, செல்வி இ.... (அவர்களிடம் நிச்சயமாக குறைகளும், வீழ்ச்சிகளும் நிறைந்திருந்தன) என்று நினைத்த போதெல்லாம், அவர்களுக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தினார். இதுதான் மெய்யான கிறிஸ்தவ ஐக்கியம் அல்லது கூட்டு எனலாம். நாமும் இவ்வாறு பகிர்ந்து கொள்கிறோமா?

**(2). நாம் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டும்.** வசனம் 4ஐப் பாருங்கள். பவுல் எப்படிப்பட்ட ஜெபிக்கிற மனுஷனாக இருந்தார். பவுல் தமது நண்பர்களுக்காக ஜெபித்தார். வசனங்கள் 9-11 இல் எதற்காக என்று பட்டியலிட்டு கூறியுள்ளார். 1) அன்பிலே பெருக, 2) அறிவிலே வளர, 3) ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற, 4) நீதியுள்ளவர்களாக, 5) நிறைந்த கனிகொடுக்கிறவர்களாக. நான் உங்களுக்காக இப்படி ஜெபிக்கிறேனா? நீங்களும் எனக்காக ஜெபிக்கிறீர்களா?

**(3). நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும்.** வசனம் 7 இல் 'இருதயத்தில்' என்கிற வார்த்தையைக் கவனிக்கவும். பின் வசனம் 8யும் யோவான் 13:34,35 படித்துப் பாருங்கள்.

**2. நாம் சுவிசேஷத்தைப் பாதுகாக்க வேண்டும்.**

வசனம் 7இல், "......சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி, அதைத் திடப்படுத்தி வருகிறதினாலும்,,,,," என்றும் வசனம் 17இல், "சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று..." என்றும் வசனம் 27 இல், "......ஒரே ஆத்துமாவினாலே, சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப் போராடி......" என்றும் பவுல் கூறியுள்ளதைப் பாருங்கள். பவுல் இந்த நிருபத்தை எழுதின காலத்தில் சுவிசேஷத்திற்கு எதிராளிகள் பலர் இருந்தனர். இன்றும், சுவிசேஷத்திற்கென விரோதிகள் பலர் உள்ளனர். ஆகவே நாம் 2தீமோத்தேயு 4:3 (3:1-8) இல் கூறப்பட்டுள்ள எச்சரிப்புக்குச் செவிகொடுத்து, யூதா 3இல் கூறியுள்ள ஆலோசனைக்குக் கீழ்ப்படிய வேண்டும். நாம் கள்ள உபதேசங் கள் நிறைந்த காலத்தே வாழ்ந்து வருகிறோம் என்பதை மறக்க வேண்டாம். வேறொரு சுவிசேஷத்தைப் (கலாத்தியர் 1:6) பிரசங்கிப்போர் பலர் உண்டு. நாமோ உண்மையான சுவிசேஷத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் (1தெசலோனிக்கேயர் 2:4). எந்த நிலையிலும் நாம் நம்புகிற சுவிசேஷத்திற்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். 1தீமோத்தேயு 1:11, 6:20 படிக்கவும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவரது ஊழியத்தைக் குறித்தும் கூறப்பட்ட மேலான சத்தியத்திற்கு எதிராகக் கேள்வி கேட்கப் பலர் துணிந்துவிட்டனர். அதை மறுக்கவும் செய்கின்றனர். குறிப்பாக 1. அவர் கன்னியிடம் பிறந்தது. (.மத்தேயு 1:18-25) 2. அவரது பாவமற்ற பரிசுத்த வார்த்தை (யோவான் 8:46) 3. நமது பாவங்களுக்கென தியாகமாக அவர் மரித்தது (2கொரிந்தியர் 5:21) 4. அவரது வெற்றியுள்ள உயிர்த்தெழுதல் (ரோமர் 1:4) 5. யாவரும் காணவிருக்கும் அவரது வருகை (வெளிப்படுத்தல் 1:7) போன்றவை.

வேதாகமம் கொடுக்கப்பட்ட விதமும், அதன் அதிகாரமும் சந்தேகப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு, கள்ள உபதேசங்களும்,கொள்கைக் குழப்பங்களும் நமது நாட்டில் பெருகி வருகின்றன. இப்படிப்பட்ட தாக்குதல்கள் நிறைந்த வேளையில் நாம் பாதுகாப்புப் பணியில் உடனடியாக ஈடு படவேண்டியது அவசியம். அவசரமும் கூட. நாம் விசுவாசத்தைக் காக்க எழும்புவோம். நாம் அச்சமின்றி இந்தப் போராட்டத்திலே ஈடுபடுவோம்.

**3. நாம் சுவிசேஷத்தைப் பரப்ப வேண்டும்.**

வசனம் 12 இல் இதைக் காணலாம். கள்ள உபதேசத்தைத் தடை செய்ய, எதிர்த்தும் போராட ஒரே வழி, நிச்சயமான வழி, சத்தியத்தைப் பரப்ப வேண்டும். இதை எப்படிச் செய்வது? பிரசங்கிப்பதன் மூலம் நாம் அதைச் செய்யும்படி கட்டளை பெற்றுள்ளோம். மத்தேயு 28:19. இதற்கு எடுத்துக்காட்டை நாம் அப்போஸ்தலர் 8:4 இல் காணலாம். ஆனால் பிலிப்பியர் 1:12 இல் "..எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்." என்று பவுல் கூறுகிறார். அப்போஸ்தலர் 16:22-25 வரையுள்ள பகுதி பாடுகள் மூலம் சுவிசேஷம் பரம்புகிறது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு: பவுலும், சீலாவும் ஜெபித்தனர், ஆராதித்தனர், பாடினர் - சிறைச்சாலையிலிருந்த மற்றவர்கள் யாவரும் இதைக் கேட்டனர். அவர்கள் வேதனையில் கதறி, முறுமுறுத்து, கதறி அழுதிருந்தால் அதையும் மற்ற கைதிகள் கேட்டிருந்திருப்பர். ஆனால் அது எவ்வளவு மோசமான சாட்சியாக இருந்திருக்கும். சமீபத்தில் உங்களுக்குச் சம்பவித்தவைகள் எவை? நீங்கள் அதை ஏற்றுக்கொண்ட விதம், சுவிசேஷம் பிரபலமாக ஏதுவாயிற்றா அல்லது தடை செய்ததா? ஒவ்வொரு சூழ்நிலையிலும், இக்கட்டான நிலையிலும், சுவிசேஷம் நம் மூலம் பரம்ப, அவர் அளிக்கும் கிருபை நமக்குப் போதுமானதாகவுள்ளது எனலாம். (2கொரிந்தியர் 12:9)

**4. நாம் சுவிசேஷத்தைக் காண்பிக்க வேண்டும்.**

வசனம் 27, இதைத் தெளிவுபடுத்துகிறது. சுவிசேஷத்திற்குப் பாத்திரராக நாம் நடக்க வேண்டும். நம்முடைய சொல்லும் செயலும் அதைக்காட்ட வேண்டும். பிலிப்பியர் 2:15 ஐ ஒப்பிடுக. நம்முடைய நடத்தை சுவிசேஷத்திற்கு இசைந்ததாகவுள்ளதா? நம்முடைய விசுவாசம் கிரியைகளுள்ளதா? (யாக்கோபு 2:17, தீத்து 2:10) படிக்கவும். சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள, பாதுகாக்க, பரம்பச்செய்ய, காண்பிக்கத் தேவையான இரகசியத்தைப் பிலிப்பியர் 2:13 இல் காணலாம்.

## பாடம் 3 **பாடுகளின் மூலம் ஊழியம்**

***(வேதபகுதி - பிலிப்பியர் 1:22-30)***

நாம் வாழ்வில் நேரிடும் பாடுகளை ஏதோ ஒரு இரகசியம் என்று கருதுவதற்கும், அதை ஊழியமாகக் கருதுவதற்கும் பெரிய வேறுபாடு உண்டு. ஆண்டவரால், ஒரு விசுவாசிக்குக் கொடுக்கப்பட்ட பாடுகள் என்பது ஒரு ஊழியம் என்று பிலிப்பியர் 1:29 இன் மூலம் அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் இது. ஒவ்வொரு மெய்யான கிறிஸ்தவனிடமும் தவறாமல் காணப்படும் இரண்டு காரியங்கள் உண்டு. அவைகள்: விசுவாசம், பாடுகள் என்பன. கிறிஸ்தவர்கள் எனப்படுகிற நாம் விசுவாசிகள் (யோவான் 14:1). நம்முடைய 'விசுவாசமே' நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைவிட்டு வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆனால் இரண்டாவது வேறுபடுத்தும் அடையாளம், நாம் விசுவாசிகளாக இருப்பதினால் பாடுபடுகிறோம் என்பதே (1பேதுரு 4:16). கிறிஸ்தவர், கிறிஸ்தவர் அல்லாதோர், எல்லா மக்களுக்கும், எந்த நிலையிலிருந்தாலும் பாடுகள் என்கிற அனுபவம் தொடருகிறது. ஜாதி, மத இன வேறுபாடின்றி யாவரையும், தாக்குவது இது. பாடுகள் என்பது யாவருக்குமுள்ளது. அரசன் முதல், ஆண்டிவரையுள்ள யாவரையும் பாடுகள் அணுகும் யோபு 5:7, 14:1 பார்க்கவும். "வாழ்க்கையும், பாடுகளும் ஒன்றே. வாழ்க்கைச் சக்கரத்தில் சுழலும் நாம், பாடுகளைச் சந்திக்க வேண்டும். பாடுகள் என்பவை இயற்கையானவை, தவிர்க்க முடியாதன." என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். இது எவ்வளவு உண்மையான கூற்று. நாம் யாவரும் உடலாலும், மனதாலும் ஆவிக்குரிய நிலையிலும் பாடுபடுகிறோம். பிறர் நலம் நோக்கும் மனிதருக்கு, குறிப்பாகக் கிறிஸ்தவர்களுக்கு இவ்வுலகில் நிலவும் பல்வேறுவகையான பாடுகள் பெரிய பிரச்சினையாகவுள்ளது. தொன்று தொட்டு நிலவும் பாடு என்பது குற்ற மனசாட்சியாகும். இது நிரபராதிக்கும், குற்றவாளிக்கும் வரும் பாடு. காரணமின்றி வரும் பாடுகள் உண்டு. கடவுளின் வார்த்தையிலே, பாடுகளுக்கான ஒரேயொரு பரிகாரத்தைக் காணலாம். பிலிப்பியர் 1:29 இல் பாடுகள் பற்றி கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். இதிலே கூறப்பட்டுள்ள பாடுகள் கிறிஸ்தவ அனுபவத்திலே மட்டும் நேரிடும். கிறிஸ்தவர்களாக இருப்பதினாலே, கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே வந்து, கிறிஸ்தவர்கள் மட்டுமே அனுபவிக்க வேண்டிய பாடுகள் இவை.

### 1. கிறிஸ்தவர்களாக இருப்பதனாலே, கிறிஸ்தவர்கள் பாடுபடவேண்டும்.

கடவுளின் பிள்ளைகளாக இருப்பதினாலே நேரிடும் ஒருவகைப்பாடுகள் உண்டு. ஏனெனில் அவர்கள் அவரது பிள்ளைகள். அவரது இரத்தத்தினால் மீட்கப்படாதோர் இதற்குத் தப்பித்துக் கொள்வர்

(1). பவுல் கூறுவதைக் கவனியுங்கள். '....உங்களுக்கு' (வசனம் 29) என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் யார்? பிலிப்பியர் 1:1 இல் இக்கடிதத்தை, "பிலிப்பிப் பட்டணத்தில்(எங்குமுள்ள) கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

(2). வசனம் 28ஐப் படிக்கவும். ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதனால் பாடுபட்டால், அவன் மெய்யாகவே கிறிஸ்தவனாக இருக்கிறான் என்பதற்கு அது அடையாளமாகும். நமக்குப் பாடுகள் இல்லையெனில்,, நாம் மெய்யான சாட்சியுள்ள கிறிஸ்தவர்களாக இருக்கின்றோமா? என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும்..

(3). மத்தேயு 5:10-12, 16:24, யோவான் 16:33, 1பேதுரு 4:16 படிக்கவும்.

(4). அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் முழுவதையும் படித்துப் பாருங்கள். அதிலே ஆதிக் கிறிஸ்தவர்களுக்குக் குறிப்பாக பேதுரு, யோவானுக்கு (அப்போஸ்தலர் 4:3) பவுலுக்கு (அப்போஸ்தலர் 14:19) ஸ்தேவானுக்கு (அப்போஸ்தலர் 7:54-60) யாக்கோபுக்கு (அப்போஸ்தலர் 12:1,2) வந்த பாடுகளைப் பாருங்கள். நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால், பாடுகளை எதிர்பார்க்க வேண்டும். ஏனெனில் நாம் ஆண்டவராகிய இயேசுவோடு இணைக்கப்பட்டிருப்பதினால் இவை நேரிடும். உறுதியான தீர்மானத்தோடு, முழுக்க முழுக்க நாம் கிறிஸ்துவைப் பின்பற்ற ஆயத்தமாகும்போது, அவருக்கென நாம் அதிகமாகப் பாடுபடவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

(5). நம் வாழ்வில் ஆண்டவர் அனுமதிக்கும் வேறுவகையான பாடுகள் பல உண்டு. இவை ஆண்டவருக்குச் சாட்சியாக இருப்பதனால் வருவதல்ல. ஆனால் வேறு காரணங்களுக்காக ஆண்டவர் இதை நம் வாழ்வில்

அனுமதிக்கிறார். அவர் நம்மீது கொண்டுள்ள அன்பினாலே, ஞானமுள்ள நோக்கத்தோடு அவற்றை நம் வாழ்வில் அனுமதிக்கிறார். 1பேதுரு 4:19, 5:10 படித்து, 2கொரிந்தியர் 12:7-10 வரை ஒப்பிட்டு நோக்குக.

**2. பாடுகள் என்பது ஒரு வரம்.**

"....கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் (சிலாக்கியமாக) உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது." என்று பிலிப்பியர் 1:29ஐ வாசிக்கலாம். பாடுகள், சிலாக்கியமாக மாற்றப் படுகிறது. பிலிப்பியர் 2:5-9 வரை வாசித்து, வசனம் 11 இல் கூறப்பட்டுள்ள, 'தந்தருளினார்' என்கிற வார்த்தையைப் பார்க்கவும். அதே வார்த்தை பிலிப்பியர் 1:29 இல் 'அருளப்பட்டிருக்கிறது' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதாவது 'தெய்வீக மேன்மை' என்று இதற்குப் பொருள் கூறலாம். தமது குமாரனை எல்லவற்றிற்கும் மேலாக உயர்த்த, பெருமைப்படுத்த விரும்பிய பிதாவாகிய கடவுள் ஒரு மேலான நாமத்தைக் கொடுத்தார் (2:11). அதேபோல, அவர் தமது பிள்ளைகட்கும் மேலான அந்தஸ்தை அளிக்க விரும்பியே அவருக்கென நாம் பாடுபடும், சிலாக்கியத்தையும் கொடுக்கிறார் (1:29) இதுவே அப்போஸ்தலர் 5:41, 16:23-25க்குரிய விளக்கம் எனலாம்.

**3. கிறிஸ்தவனாகப் பாடுபடுவதனால் என்ன மேன்மை?**

பிலிப்பியர் 1:29 இல் இரண்டு முக்கிய காரணங்கள் கூறப்பட்டுள்ளன;

**(1). நாம் 'அவர் நிமித்தமாகப்' பாடுபடுகிறோம்.** அப்போஸ்தலர் 5:41 இல் 'அவருடைய நாமத்துக்காக' என்றும், 9:16 இல் 'என்னுடைய நாமத்தினிமித்தம்' என்றும் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கவும். வேறு காரணங் களுக்காகப் பாடுபடுவதுண்டு 1பேதுரு 4:15 படிக்கவும். விசுவாசி, பாடுகளைச் சகிப்பதற்குரிய இரகசியம் இதுதான். அது அவருக்காகப் பாடுபடுகிறோம் என்பதே.

**(2). நாம் கிறிஸ்துவின் சார்பில் பாடுபடுகிறோம்.** 'அவர் நிமித்தமாக' என்று கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பாடுகளும் அவரது மக்களின் பாடுகளும் ஒன்றே - சகரியா 2:8ஐ அப்போஸ்தலர் 9:5 உடன் ஒப்பிட்டுப் படிக் கவும். நாம் கிறிஸ்துவுக்காக பாடுபடும்போது நாம் அவரோடு கூட ஒரு ஒப்பற்ற ஐக்கியத்தில் இணைகிறோம். பிலிப்பியர் 3:10. கொலோசெயர் 1:24, 1பேதுரு 4:12,13 படிக்கவும். நாம் பாடுகளில் அவருக்குப் பங்காளிகளாவது எவ்வளவு மேலான சிலாக்கியம்!

**4. இவற்றில் கடவுளின் நோக்கம் என்ன?**

அவர் நம்மை நேசிக்கிறார். ஆகவே, நம்மைப் பாடுகட்குட்படுத்துவதில் அவரது அன்பான, ஞானமுள்ள நோக்கம் ஏதோ ஒன்று இருக்க வேண்டும். அந்த நோக்கம் ஐந்து வகைப்படும்.

**(1). நம்முடைய விசுவாசத்தைச் சோதிக்க.** உபாகமம் 8:2, 1பேதுரு 1:7 படிக்கவும். நம்முடைய விசுவாசம் உண்மையானதுதானா என்று அறியவும், நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தவுமே கடவுள் நமக்குப் பாடுகளை அனுமதிக்கிறார். மத்தேயு 13:20,21 படிக்கவும்.

**(2). நம்மிலே நற்பண்புகளை உருவாக்க.** எபிரெயர் 2:10. பிலிப்பியர் 1:6, 2:13 படிக்கவும்.

**(3). சுவிசேஷம் பரம்புவதற்காக.** பிலிப்பியர் 1:12 இல் இதைக் காணலாம்.

**(4). பரிசுத்தவான்களைத் திடப்படுத்த.** பிலிப்பியர் 1:14,30 படிக்கவும்.

**(5). நமக்கு பரலோகத்திற்குரிய ஏக்கம் ஏற்பட.** 2தீமோத்தேயு 2:12, பிலிப்பியர் 1:21-23 ஐ வாசிக்கவும்

***பாடுகள் ஏதோ ஒரு இரகசியம் என்று கருதாமல், அவற்றை ஒரு ஊழியம் என்று கருதி, அதைப் பற்றிப் பேசக் கடவுள்தாமே நம்மை வழிநடத்துவாராக - பிலிப்பியர் 1:29***

## பாடம் 4 **கிறிஸ்து இயேசுவின் சிந்தையைக் கொண்டிருத்தல்**
### *(வேதபகுதி - பிலிப்பியர் 2:1-13)*

பிலிப்பிப் பட்டணத்துச் சபையில் ஒரு பலவீனம் காணப்பட்டது. மூன்று முறை அப்போஸ்தலர் அந்தக் கிறிஸ்தவர்களைக் கடிந்துரைக்கிறார். இது கொள்கைக் குழப்பத்திற்காக அல்ல. கவலையீனமான, ஒழுங்கின்மைக்காக - 1:27, 2:1-5, 4:1-5 வரை பார்க்கவும். அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தில் இருந்தனர். ஆயினும் அவர்கள் 'ஆவியின் ஒருமையைக்' காத்துக்கொள்ளவில்லை (எபேசியர் 4:3) ஒற்றுமைக்குப் பதிலாக பிரிவினை இருந்தது. இணைந்திருப்பதற்குப் பதிலாகப் பிரிந்திருந்தனர். அவர்கள் விசுவாசம் நன்றாயிருந்தது. ஆனால் நடக்கையோ தவறாக இருந்தது. ஆரோக்கியமான உபதேசத்தில் உறுதியாக இருப்போர் பலர், உபதேசத்தை எல்லாவற்றிலும் 'அலங்கரிக்கத் தக்கதாக' (தீத்து 2:10) இருக்கமாட்டார்கள். திருச்சபைக்குள் இடறலுண்டாக்கும் இப்படிப்பட்ட காரியங்கள் இருப்பதன் காரணமென்ன? இவற்றை உண்டாக்குவது எது? சுயம் எனலாம். சுயத்திலிருந்து வருவது பெருமை! பிலிப்பியக் கிறிஸ்தவர்களில் சிலர் சுயத்தை மையமாகக்கொண்டு பெருமையில் திளைத்தனர். அவர்களுக்குப் பவுல் வேண்டுகோள் விடுக்கிறார் (1பேதுரு 5:5) பேதுருவின் வார்த்தைகளில் இது "மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" என்பதே. இசைவு, ஒற்றுமை, ஐக்கியம் போன்றவற்றிற்குரிய இரகசியம் 'தாழ்மை' என்பதாகும். பிலிப்பியர் 2:1-13 வரையுள்ள பகுதியில் கூறப்பட்டுள்ள மேலான போதனைகளை நாம் கவனிக்கலாம்.

**1. நாம் கீழ்ப்படிவதற்கான புத்திமதி.**

வசனம் 5 இல் இதைக் காணலாம். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது", அதாவது தாழ்மையுள்ள, கீழ்ப்படுத்தும் பண்பு, வசனம் 5இல் கூறப்பட்டுள்ள புத்திமதிக்கு அவசியம் யாது என்று முதல் நான்கு வசனங்களைப் படித்தால் புரியும். அதில் கூறப்பட்டுள்ள குறைவுகளைப் பார்க்கும்போது, பவுல் அதன் அடிப்படைக் காரணத்தை அறிந்திருந்தார். அது அவர்களிடமிருந்த பெருமையே. ஆகவேதான் அவர் கிறிஸ்து இயேசுவின் சிந்தையைக் கொண்டிருக்கக் கிறிஸ்தவர்களுக்குப் புத்திமதி கூறியுள்ளார். அவரது சிந்தை தாழ்மை, சாந்தம், அன்பு நிறைந்தது. அப்போஸ்தலன் அதோடு நிறுத்தி விடவில்லை. தொடருகிறார்.

**2. நாம் பின்பற்ற வேண்டிய மாதிரி.**

மீண்டும் வசனம் 5ஐப் படித்து, தொடர்ந்து வசனம் 6 படிக்கவும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் தாழ்மை உருக் கொண்டிருப்பதைக் காண முடியும். அவரால் மட்டுமே மத்தேயு 11:29ஐக் கூறமுடியும். தாழ்மைக்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டு அவர் ஒருவரே! வசனங்கள் 6 முதல் 11 வரை படிக்கும்போது, ஆண்டவர் இயேசு தம்மை அற்புதமாகத் தாழ்த்தினதையும், மகிமையாக உயர்த்தப்பட்டதையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளதைக் காணலாம்.

**(1). கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தும்படி தம்மை மிக அதிகமாகத் தாழ்த்தினவர் யார்?** வசனங்கள் 5,6 இல் 'கிறிஸ்து இயேசு....' என்று பதிலளிக்கப்பட்டுள்ளது.

1). "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்..." பிதாவாகிய கடவுளுக்குப் பார்க்கத்தக்க உருவம் இல்லை. கிறிஸ்து பார்க்கக் கூடியவராக, கடவுளாக இருந்தார், இருக்கிறார். அவரே என்றென்றும் கடவுள். அவர் கடவுளாக இருந்தார், இருக்கிறார், எப்போதும் இருப்பார் (யோவான் 1:1).

2). "தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்" ஏனெனில் அவர் கடவுளாக இருந்தார். அவர் தமக்குச் சொந்தமல்லாத ஒன்றை தேவனுக்குச் சமமாயிருப்பதை உரிமை கொண்டாடி எடுத்துக் கொள்ளவில்லை. யோவான் 5:18, 5:23, 10:33 படிக்கவும்.

**(2). வசனங்கள் 7,8 இல் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்மைத் தாழ்த்தினவிதம் விளக்கப்பட்டுள்ளது.** இதில் அவர் சிம்மாசனத்திலிருந்து, சிலுவைவரை இறங்கிச் சென்ற ஏழு படிகள் கூறப்பட்டுள்ளன.

1). "தம்மைத்தாமே வெறுமையாக்கி" னார்(வசனம் 7) அவர் தமது தெய்வீகத் தன்மையைத் துறந்தார் என்பது இதற்குப் பொருளல்ல. அவர் மனிதனாக அவதரித்தபோது, அவர் தாமாக முன்வந்து, தமது மகிமையை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டார் என்பதே பொருள். அவர் தமது இராஜரீக வஸ்திரங்களை எடுத்துவிட்டு, மனிதனாக நம் நடுவே வந்தார். ஆயினும் அவர் அப்போதும் இப்போதும்,எப்போதும் இராஜரீகம் உள்ளவராகவே இருக்கிறார் கொலோசெயர் 2:9.

2). அவர் 'அடிமையின் ரூபமெடுத்தார்' (வசனம்7) வசனம் 6இல் கூறப்பட்ட 'தேவனுடைய ரூபம்'

என்பதோடு ‘அடிமையின் ரூபம்’ (வசனம் 7) என்றும் கூறப்பட்டுள்ளதை ஒப்பிட்டுப் பார்க்கவும். மாற்கு 10:45, லூக்கா 22:27 பார்க்கவும். பின்பு யோவான் 13:3-5, 13-17 வரைப் படிக்கவும்.

3). “அவர் மனுஷர் சாயலானார்” (வசனம் 7) ரோமர் 8:3ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும் .சாயல் மட்டுமே மனிதன். ஆனால் அவர் மெய்யான கடவுள். அவரே மெய்யான கடவுள், மெய்யான மனிதன்.

4). அவர் “மனுஷ ரூபமாய்க் காணப்பட்டார்” (வசனம் 8) அவர் மனிதனுக்கு ஒப்பாக இருந்தார் (எபிரெயர் 2:17); அவர் பசியாயிருந்தார் (மத்தேயு 4:2); அவர் சோதிக்கப்பட்டார் (மத்தேயு 4:3); அவர் களைப்பாக இருந்தார். மாற்கு 4:38, 15:39, லூக்கா 15:2, 23:41,7:46 ஒப்பிட்டு நோக்குக.

5). அவர் “தம்மைத் தாமே தாழ்த்தினார்” (வசனம் 8) அவர் சிறிய ஊரில், பெத்லகேமில் பிறந்தார் (மீகா 5:2), புறக்கணிக்கப்பட்ட நாசரேத்தூரில் வாழ்ந்தார் (யோவான் 1:46) அவர் ஒரு சிறிய தொழிலைச் செய்தார் (மத்தேயு 13:55), அவருக்குத் தலை சாய்க்க இடமில்லை (லூக்கா 9:58).

6). அவர் “மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி”னார் (வசனம் 8). எபிரெயர் 5:8,9ஐ ரோமர் 5:19, 2கொரிந்தியர் 8:9 உடன் ஒப்பிட்டுப் படிக்கவும்.

7). “அதாவது சிலுவையின் மரணபரியந்தமும்” (வசனம் 8). இதுவோ மிகவும் கீழ்த்தரமான, இழிவான மரணமாகக் கருதப்பட்டது. இருப்பினும் அவர் இந்த இழிவான, அவமானமான (எபிரெயர் 12:2) மரணத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுத்தார். ஏனெனில் அவர் நம்மில் அன்பு கூர்ந்ததினாலே இதைச் செய்தார்.

***அவர் இவ்வளவு கீழானநிலைக்கு வந்தபோதும் கடவுள் அவரை உயர்த்தினார்.***

**(3). நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மகிமைக்கு உயர்த்தப்பட்டதை வசனங்கள் 9 முதல் 11 வரை விளக்குவதைக் காணலாம்.** அவர் சிலுவையின் அவமானத்திலிருந்து மகிமையின் சிம்மாசனத்திற்கு உயர்த்தப்பட்ட ஏழு படிகளைக் காண்போம்

1). “தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி” னார் (வசனம் 9). கடவுளாக இருக்கும் கிறிஸ்து எப்போதும் பிதாவின் மகிமையில் பங்கு கொண்டுள்ளார். ஆனால் இப்போதோ அவரை மனிதனாக எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தியுள்ளார். எபேசியர் 1:20-21 பார்க்கவும்.

2). கடவுள் “எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை” அவருக்குத் தந்தருளினார் - வசனம் 11. ‘இயேசு’ என்கிற மேலான நாமம், எல்லா நாமத்திலும் மேலானது. ஏனெனில் அவர் எல்லாருக்கும் மேலானவர். உன்னதப் பாட்டு 1:3, மத்தேயு 1:21, அப்போஸ்தலர் 4:12 படிக்கவும்.

3). இயேசுவின் நாமத்தில், முழங்கால்யாவும் முடங்கும் – வசனம் 10. விசுவாசிகள் ஒவ்வொருவரும் தாழ்மையோடும், பக்தியோடும் இப்போது அவரைப் பணிகின்றனர் (எபேசியர் 3:14). ஒரு நாளிலே அவரது விரோதிகளும் அவர் யாரென அறிந்து, அவரைப் பணிந்து கொள்வார்கள். எகிப்தியர் யோசேப்புக்கு முன்பாக விழுந்து வணங்கியது போல (ஆதியாகமம் 41:43)வும், எலியாவுக்கு முன்பாக அகசியாவின் படைத்தலைவன் வணங்கியது போல (2இராஜாக்கள் 1:13), முழங்காற்படியிட்டு வணங்குவர். இவ்வாறு நடக்க வேண்டுமென்று கடவுள் கூறியுள்ளார் (ஏசாயா 45:23) - வெளிப்படுத்தல் 6:15-17 வரைப் படிக்கவும்.

4). ‘வானோர்’ வசனம் 10 - ஆவிகள் கூட்டம்

5). ‘பூதலத்தோர்’ வசனம் 10 - பூமியின் மக்கள்

6). ‘பூமியின் கீழானோர்’ வசனம் 10 - சாத்தான், கள்ளத்தீர்க்கதரிசி, மிருகம், பிசாசுகளும், துன்மார்க்கமான நரகத்தின் மக்கள்.

7). “பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக, இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும்......” வசனம் 11 இது எவ்வளவு அற்புதமானது. வெளிப்படுத்தல் 5:12 ஐப் பாட வேண்டும் போல் உங்களுக்குத் தோன்றவில்லையா? தாழ்மைக்குத் தலை சிறந்த எடுத்துக் காட்டாக, சாந்தம், சுயநலமற்ற தன்மை என்பவற்றிற்க்கு சான்றாக, நமது ஆண்டவராகிய இயேசு நம்முன்னே சித்தரிக்கப்பட்டுள்ளார். அதே சிந்தையுடையவர்களாக நாமும் இருக்க வேண்டும். ஆனால் அது எப்படி நடக்கும்?

**3. நாம் அனுபவிக்கப்போகும் வல்லமை**

அது எப்படி நடக்கும் என்பதை வசனம்13 கூறுகிறது. நமக்கு விருப்பம் வரும்போது கடவுள் அதை நிறைவேற்றுகிறார். நமக்குள்ளே அவர் கிரியைச் செய்யும்போது, நாம் வெளியே செயலாற்றுகிறோம். (வசனம் 5,13)

## பாடம் 5 **விசுவாசத்திலே, பவுலின் மகன்**

*(வேதபகுதி - பிலிப்பியர் 2:19-24)*

தீமோத்தேயுவைக் குறித்து நமக்கு என்ன தெரியும்? அவனது தகப்பன் கிரேக்கன், தாய் யூதப் பெண்மணி (அப்போஸ்தலர் 16:1). அவனது சொந்த ஊர் லீஸ்திரா. அவனது பாட்டியின் பெயர் லோவிசாள் (2தீமோத்தேயு 1:5). அவனது குடும்பம் பக்தியுள்ள குடும்பம் (2தீமோத்தேயு 3:15). தீமோத்தேயு இளைஞனாக 15 வயதிருக்கும் போது, பவுலும், பர்னபாவும் தங்கள் முதலாம் அருட்பணிப் பயணத்தின்போது லீஸ்திராவுக்கு வந்தனர் (அப்போஸ்தலர் 14:6,7). அப்பொழுதுதான் தீமோத்தேயு மனந்திரும்பியிருக்க வேண்டும். ஆறு வருடங்களுக்குப் பின் பவுல் திரும்ப லீஸ்திராவுக்கு வந்தபோது, அவன் சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான் (அப்போஸ்தலர் 16:2). தனது இரண்டாம் பயணத்தின்போது பவுல், தீமோத்தேயுவைத் தன்னுடன் அழைத்துச் சென்றார்(அப்போஸ்தலர் 16:3). அதன்பின் இவர்கள் இருவரும் இணைந்தே, கொரிந்து, அத்தேனே, பிலிப்பி, ரோமாபுரி பட்டணங்களில் இருந்தனர். இந்த நிருபத்தைப் பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது அவருக்கு 65 வயது இருக்கும். தீமோத்தேயுவுக்கு 35 வயதிருக்கலாம். இப்பொழுது பிலிப்பியர் 2:19-23 வரைப் பார்க்கலாம்.

**1. தீமோத்தேயுவுடன் பவுலுக்குள்ள ஆவிக்குரிய உறவு.** இது மூன்று வகை உறவாகும்.

(1). தகப்பன் பிள்ளை உறவு (வசனம் 22) - 1தீமோத்தேயு 1:2,18 ஒப்பிட்டுப் பார்க்கவும். பவுலின் ஆவிக்குரிய மகன் தீமோத்தேயு. 1கொரிந்தியர் 4:15 படிக்கவும்.

(2). எஜமான், உதவியாள் உறவு (வசனம் 19 “அனுப்பலாமென்று..” ). பவுல் தன்னை அனுப்புகிற இடங்களுக்குச் செல்ல தீமோத்தேயு ஆயத்தமாக இருந்தான். பவுலைத் தனது ஆவிக்குரிய தலைவனாக, மேலதிகாரியாக ஏற்றுக் கொண்டிருந்தான். நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம் (கலாத்தியர் 3:28). ஆயினும் விசுவாசத்திலே நமக்கு மேலாக இருப்போருக்குக் கீழ்ப்படிய வேண்டிய காலங்களும் உண்டு.

(3). சுவிசேஷத்திலே ஐக்கியம் (வசனம் 22). “அவன் எனக்குக் கீழே ஊழியஞ் செய்தான்” என்று பவுல் கூறவில்லை. “அவன் என்னுடனே கூட ஊழியஞ்செய்தான்” என்றுதான் கூறியுள்ளார். இது பவுலின் பெருந் தன்மையான, தாழ்மையைக் காட்டுகிறது. இது பவுலும், தீமோத்தேயும் கூட்டாகச் செய்த ஊழியம். இவர்கள் கடவுளின் பணியில் உடன் வேலையாட்கள் (2கொரிந்தியர் 6:1)

**2. தீமோத்தேயுவினிடம் பவுல் கொண்டிருந்த அன்பு.** அப்போஸ்தலனாகிய பவுல், தனது விசுவாச குமாரனான இந்த இளைஞனுக்கு எழுதிய இரண்டு கடிதங்களையும் வாசித்துப் பார்த்தால், அதிலே, மிகுந்த கரிசனையோடும், அன்போடும் குறிப்பிட்டுள்ள அநேக வார்த்தைகளை எழுதியிருக்கக் காணலாம். இப்பொழுது வசனம் 20ஐப் பாருங்கள். “என்னைப் போல மனதுள்ளவன்” என்று குறிப்பிடுவது, “எனக்கு அருமையான வன்” என்று பொருள்படும். இது நமக்கு தாவீது, யோனத்தான் உறவை நினைவுபடுத்துகிறது (2சாமுவேல் 1:26) ஆனால் இது சற்று வேறுபட்டது. பவுல் தீமோத்தேயுவைவிட வயதில் முப்பது வருடம் பெரியவர். நம்மை நேசித்து, நமக்கு உதவும் நமது ஆவிக்குரிய தகப்பன்மார், ஆலோசகர்கள், வழிகாட்டிகளுக்கு நாம் நன்றி யுடையோராய் இருக்கவேண்டும்.

**3. தீமோத்தேயுவுக்குப் பவுலின் பாராட்டு** வசனம் 22 இல் அப்போஸ்தலன், தீமோத்தேயுவைப் பாராட்டிக் கூறியுள்ளதைப் பாருங்கள். “அவனுடைய உத்தம குணத்தை” என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது அவன் சோதனையில் வெற்றி பெற்று விட்டான் என்றும் பொருள் கூறலாம். இதைவிட மேலான பாராட்டு ஏதாகிலும் உண்டா! கிறிஸ்தவனாக, அருட்பணியாளனாக, கடவுளின் ஊழியனாக, போதகராக இருக்கும்போது, சோதனைகள் வரும். இதைத் தவிர்க்க முடியாது! தீமோத்தேயுவுக்கும் சோதனை நேரிட்டது. தீமோத்தேயு சோதனையை முறியடித்தான். பவுல் இதற்காகத் தீமோத்தேயுவைப் பாராட்டினார்.

(1). அவன் நம்பிக்கைக்குரியவனாயிருந்தான் (வசனம் 19). பவுல் தீமோத்தேயுவை நம்பிச் சார்ந்திருந்தார்.

(2). அவன் உண்மையுள்ளவனாயிருந்தான். (வசனம் 20) "உண்மையாய்" என்கிற வார்த்தையைக் கவனியுங்கள். தீமோத்தேயு முழுக்க முழுக்க உண்மையுள்ளவனாயிருந்தான்.

(3). அவன் தன்னலமற்றவன் (வசனங்கள் 21,22) வசனம் 21 இல் மற்றவர்களெல்லாரையும்விட தீமோத்தேயு வித்தியாசமானவன் என்று பவுல் கூறியுள்ளார்.

இந்தப் பாடத்தின் இறுதிக்கு வந்துள்ள நாம், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்திலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். கள்ள உபதேசங்களும், பின்மாற்றமும் நிறைந்த காலத்தே, கிறிஸ்துவின் மெய்யான ஊழியனாக வாழ்ந்த ஒரு மனிதனின் நடக்கையையும், சாட்சியையும் பார்க்கலாம்.

**4. தீமோத்தேயுவுக்குப் பவுலின் கனிவான ஆலோசனை.** 2தீமோத்தேயுவில் கூறப்பட்டுள்ள அநேக ஆலோசனைகளில் தெரிந்தெடுத்த ஏழு காரியங்களை மட்டும் நாம் பார்க்கலாம்:

***(1)."அனல்மூட்டி எழுப்பிவிடு"*** 1:6,7.-பரிசுத்த ஆவியானவர் அருளிய வரம்தான் தீமோத்தேயுவுக்குக் கிடைத்த "அனல்மூட்டி எழுப்பிவிடும்" வரமாகும். பரிசுத்த ஆவியானவரால் அனல் மூட்டி உன் வாழ்வு முழுவதும் பற்றி எரிவதாக இருக்கட்டும் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது (எபேசியர் 5:18). நமக்கும் இந்த ஆலோசனை தேவை! வசனம் 6 இல் "தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்பிவிடு" என்று கூறியுள்ளார். இதனால் அவர் நமக்கு விடுதலை அளித்து, சிறப்பாக்கி, அறிவூட்டுகிறார்.

***(2). காத்துக்கொள்*** - 1:14. இதற்கு விளக்கத்தை 1தீமோத்தேயு 6:3 இல் காணலாம். கள்ள உபதேசத்தின் காலத்தில் வாழ்ந்த தீமோத்தேயுவுக்குச் சத்தியத்தைக் காத்துக்கொள்ள ஊக்குவிக்கிறார். நாமுங்கூட அப்படிப்பட்ட காலத்திலே வாழ்கிறோம். நமக்கும்கூட இந்த ஆலோசனை பொருந்தும். 1தீமோத்தேயு 1:3-10, 4:6,16 6:20 படிக்கவும். நாம் சத்தியத்தைக் காத்துக் கொள்வது எப்படி? விசுவாசத்தினாலேயும் (கடவுளுக்கடுத்தது), அன்பினாலேயும் (மனிதனுக்கடுத்தது) , எபேசியர் 4:15ஐ ஒப்பிட்டுப் படிக்கவும்.

***(3). தீங்கனுபவி*** 2:3,4. தீமோத்தேயு போர்ச்சேவகனாக இருப்பதனால் தீங்கனுபவிக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்வு என்பது ரோஜாப்பூ மெத்தையல்ல. இதற்குக் கிருபை(2: 1) வேண்டும். மனோதிடமும் வேண்டும் (வசனம் 3). லூக்கா 9:23 ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும். போராட்டம் இருப்பதனால் நாம் எதிலும் சிக்கிக் கொள்ளாமல் (வசனம் 4) விடுதலையுடன் அதிலே ஈடுபட வேண்டும். இப்படி ஏன் செய்ய வேண்டும் என்பதற்குரிய காரணம் வசனம் 4 இல் இருக்கிறது.

***(4). உத்தமனாக நிறுத்து*** 2:15. கடவுளின் பாராட்டைப் பெறவேண்டும் என்பதே தீமோத்தேயுவின் தீரா வாஞ்சை. இந்த வாஞ்சையை நிறைவேற்றக் கடவுளின் வார்த்தையை நம்முடைய வாழ்வில் சரியான இடத்தில் வைக்கவேண்டும். அப்போது இது நம்மை வசனங்கள் 16,17,18,23 இல் கூறப்பட்டுள்ள காரியங்களிலிருந்து பாதுகாக்கும். 1தீமோத்தேயு 6:20,21 ஒப்பிட்டுப் பார்க்க.

***(5). விலகியோடு*** 2:22. அதிலிருந்து தப்பியோடு என்பதே இதன் பொருள். 1தீமோத்தேயு 6:9-11 ஒப்பிட்டுப் படிக்கவும். நாம் எவைகளை விட்டு விலகியோட வேண்டும்? பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு- 1தீமோத்தேயு 4:12 ஒப்பிட்டுப் பார்க்க. இந்தச் சோதனைகள் அசுத்த வாழ்வுக்கு வழிநடத்தும். வாலிப வயதில் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் வரும். அசுத்தமான ஆலோசனைகள் ஒவ்வொன்றையும் விட்டு நாம் ஓடவேண்டும். பின்னர் நாட வேண்டிய நான்கு காரியங்கள் உண்டு (வசனம் 22) ஆதியாகமம் 39:7-12 ஐ நீதிமொழிகள் 18:10 உடன் ஒப்பிட்டுப் பார்க்க.

***(6). நிலைத்திரு*** 3:14. அநேகர் தொடங்குவர், ஆனால் முடிப்பதில்லை. யோவான் 8:31, 15:9ஐ அப்போஸ்தலர் 1:14, 2:42; 13:43; 14:22, கொலோசெயர் 4:2, எபிரெயர் 13:1 ஒப்பிடுக. அத்துடன் லூக்கா 9:62, 2தீமோத்தேயு 4:10 ஐயும் படிக்கவும்.

**(7). மனத்தெளிவுள்ளவனாயிரு** 4:5. மத்தேயு 26:41, கொலோசெயர் 4:2 , 1பேதுரு 4:7 இந்த ஆலோசனைகள் யாவும் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்டவையாயினும், நம் வாழ்விலும் பயன்படுத்த வேண்டியவையே!

## பாடம் 6 **ஆண்டவரை முழுமையாக அறிதல்**

***(வேதபகுதி - பிலிப்பியர் 3:1-11)***

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பேரில் கொண்டுள்ள ஏழு வகையான வாஞ்சைகளைப் பவுலடியார் இந்தக் கடிதத்தில் கூறியுள்ளார். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மெய்யான இந்த அவா இருக்க வேண்டும். அவை படிப்படியானவை.

1. அவரை ***அறிதல்*** - 3:10 2. அவரை ***ஆதாயப் படுத்திக் கொள்ளுதல்*** (3:9) 3. அவரை ***மகிமைப்படுத்தல்*** (1:20) 4. ***கிறிஸ்துவுக்குள்*** இருக்கிறவனாகக் ***காணப்படுதல்*** (3:9) 5. உயிரோடெழுந்திருப்பதற்குத் ***தகுதியாதல்*** (3:10) 6. ***அவருடனேகூட இருத்தல்*** (1:23) 7. கிறிஸ்துவின் நாளில் ***மெச்சப்படுதல்*** (2:16).

இந்த மேலான ஏழு ஆசைகளில் முதலாவது நிற்பது முக்கியமானது, அவரை அறிந்து கொள்வதாகும். மற்ற ஆறு வாஞ்சைகளும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட முறையில் அறிந்து கொண்டதின் அடிப்படையில் எழுந்தவைகளாகும். கிறிஸ்துவை அறிந்துகொண்ட விதத்தினை அப்போஸ்தலர் வசனம் 8இல் எவ்வாறு கூறியுள்ளார் என்பதைச் சற்று கவனித்துப் பாருங்கள். வலியுறுத்திக் கூறியுள்ள வார்த்தைகளை உற்று நோக்குக. 1. ***'இயேசுவை'*** அறிதல். 2. ***'கிறிஸ்து'*** இயேசுவை அறிதல் 3. ***'கர்த்தராகிய'*** கிறிஸ்து இயேசுவை அறிதல் 4. ***'என்'*** கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக.....

வாழ்க்கையில் சீர்தூக்கிப் பார்த்தால், ஆண்டவரை அறிவதே மேலான காரியமாகத் தோன்றுகிறது. இந்த அறிவைப் பெறுவதற்கென எல்லாவற்றையும் இழப்பது என்பது சாலச் சிறந்தது வசனம் 7,8. இந்த மேன்மையான அறிவைப் பெறுவதற்கென, பவுல் எவற்றை இழந்தார்? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அவர் எதைக் குப்பையாகக் கருதுகிறார்? பவுல் கிறிஸ்தவனாக மாறியவுடனே, தன் பழைய நண்பர்களை இழந்தார், சமுதாய அந்தஸ்தை இழந்தார், உலக வாழ்வில் உயர்வு, பண ஆதாயம் போன்றவற்றைக்கூட இழந்துவிட்டார். ஏன் சொல்லப் போனால் சரீர வசதிகளையும் இழந்தார். இதைவிட மேலான சிலவற்றையும் இழந்தார். வசனங்கள் 5,6 இல் கிறிஸ்தவனாகும்வரை, சிறந்த மேன்மையானவைகளாகப் பவுல் கருதின ஏழு காரியங்களை மனமாற்றத்தின் பின் நஷ்டமாகவும் (வசனம் 7) குப்பையாகவும் (வசனம் 8) கருதுவதாகக் கூறியுள்ளார். அவையாவன:

1. ***"எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன்"*** (வசனம் 5) அவர் ஒரு மெய்யான யூதன் என்பதை இது காட்டுகிறது. 2. ***"இஸ்ரவேல் வம்சத்தான்"*** (வசனம் 5) அவர் முற்பிதாவான யாக்கோபின் வம்சாவழியாக வந்தவர். 3. ***"பென்யமீன் கோத்திரத்தான்"*** (வசனம் 5) பென்யமீன் யூதா கோத்திரங்கள் முக்கியமாகக் குறிப்பிடப்படும் பேறுபெற்ற இரு கோத்திரங்கள். 4. ***"எபிரெயரில் பிறந்த எபிரெயன்"*** (வசனம் 5) ஒரு யூதனுக்குக் கிடைக்கும் எல்லாவித சலுகைகளையும் அவர் பெற்று, அனுபவித்தார். 5. ***"நியாயப்பிரமாணத் தின்படி பரிசேயன்"*** (வசனம் 5) பரிசேயர் என்போர் யூத மதப் பிரிவினரில் மிகுந்த கண்டிப்புள்ள குழுவினர். 6. ***"பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்."***(வசனம் 6) அப்போஸ்தலர் 8:3ஐ 26:9-11 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். 7. ***"நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாத வன்"*** (வசனம் 6). மத காரியங்களில், குறைபாடுள்ளவனென எந்தப் பரிசேயனும் இவரைக் குற்றம்கூற முடியாது.

மேற்கூறிய இவைகள் யாவும் தன்னுடைய மனமாற்றம் வரைக்கும் அப்போஸ்தலனுக்கு இலாபமாகத் தோன்றின. தமஸ்குச் சாலையில் உயிருடன் எழுந்த ஆண்டவரைச் சந்தித்த பின்னர் (அப்போஸ்தலர் 9:3-6) அவர் இவற்றையெல்லாம், கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக அறியும் அறிவின் மேன்மைக்காக, பயனற்றதாகவும், குப்பையாகவும் கருதினார். ஆண்டவர் கிறிஸ்துவை அறிகிற இந்த அறிவு நான்கு வகைப்பட்டதாகும் என்று வசனம் 10 இல் குறிப்பிட்டுள்ளார். இந்த நான்கு வகையில் அவரை அறிவது என்பது அவரை முழுமையாக அறிவது எனலாம்.

### 1. அவரை அறிதல்

**"**இப்படி நான் அவரையும்.... அறிகிறதற்கும்**"** (வசனம் 10) முக்கியமான கிறிஸ்தவ அனுபவங்கள் யாவும் ஆண்டவரை அறிவதில் அதுவும் தனிப்பட்டமுறையில் அறிவதிலேதான் ஆரம்பமாகின்றன. மக்களில் பலர்

கிறிஸ்துவை அறிந்திருக்கின்றனர் என்பது சாமுவேல் இருந்த நிலை - 1சாமுவேல் 3:7, நிக்கொதேமுவைப் போன்ற நிலை - யோவான் 3:2-12 எனலாம். 2தீமோத்தேயு 1:12 இல் அப்போஸ்தலன் கூறுவதைப் பாருங்கள், “இன்னாரென்று அறிவேன்” என்கிறார். கடவுளையும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே இரட்சிப்பு (யோவான் 17:3) நாம் அவரை நம்முடைய சொந்த இரட்சகராக நம்பி, அவரை ஏற்றுக்கொண்டு, அவர் சிலுவையில் சம்பாதித்த மன்னிப்பு என்ற ஈவைப் பெற்றுக் கொள்ளும்போதுதான் நாம் அவரை அறிய ஆரம்பிக்கின்றோம். நீங்கள் அவரை அறிவீர்களா - யோபு 22:21 பார்க்கவும். அவரை அறிவதிலேயும் வெவ்வேறு நிலைகள் உண்டு. தமஸ்கு சாலையில்தான் பவுல் முதலாவது ஆண்டவரை அறிந்தார் (அப்போஸ்தலர் 9:3-6) ஆனால் முப்பது வருடங்கட்குப் பின்னர் பிலிப்பியர் 3:10 இல் கூறியுள்ளதைப் பாருங்கள். ஆண்டவரின் வெளியரங்க ஊழியத்தின் ஆரம்பத்தில் பிலிப்பு முதலாவது அவரை அறிந்தான். ஆனால் இரண்டு வருடங்கட்குப் பின்னர் அவனிடம் கூறியுள்ளதை யோவான் 14:9 இல் பாருங்கள். ஓசியா 6:3, 2பேதுரு 3:18 கூறிப்பதையும் பாருங்கள். நீங்கள் அவரை அறிவீர்கள்? நீங்கள் எவ்வளவாய் அவரை அறிந்துள்ளீர்கள்?

### 2. அவரது வல்லமையை அறிதல்

“நான் அவரையும் அவருடைய உயிர்தெழுதலின் வல்லமையையும் அறிகிறதற்கு.....” என்பதின் பொருள் என்ன? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார், அவர் மெய்யாகவே மரணமடைந்தார். (யோவான் 19:33-35) அவரது மரணத்தின் பின்னர் அவரது உடல் யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்டது (யோவான் 19:38-42) அதன் பின்னர் என்ன நடந்தது? அவர் மீண்டும் உயிருடன் எழுந்தார்! அவரை உயிருடன் எழுப்பின வல்லமையான சக்தி - அந்த “உயிர்த்தெழுதலின் வல்லமை” என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், அவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் ஐக்கியப்படும் போது, அனுபவிப்பதற்கென கிட்டும் வல்லமையா கும். இதுவே ரோமர் 6:3-4இன் கருத்தாகும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் கடவுளின் கோபாக்கினையிலிருந்து இரட்சிக்கப்பட்டோம். இது அவரது மரணத்தின்மூலம் கிட்டுகிறது (ரோமர் 5:9) ஆயினும் நாம் பாவத்தின் வல்லமையிலிருந்து, அவரது ஜீவனாலே இரட்சிக்கப்படுகிறோம் (ரோமர் 5:10) இது அவரது உயிர்த்தெழுந்த வாழ்வு - அவரது உயிர்த்தெழுந்த ஜீவன் - எபிரெயர் 7:25, யூதா 24 ஒப்பிட்டுப் பார்க்கவும்.

### 3. அவரது பாடுகளை அறிதல்

“நான்....அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்.....” இது அவரது நிந்தை, அவமானம், இகழ்ச்சி போன்றவற்றில் பங்கடைதல், சுருங்கக்கூறின் அவர் நமது சார்பாகப் பிடிக்கப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டு, சிலுவையில் அறையுண்டு சகித்த பாடுகள் எனலாம். கொலோசெயர் 1:24 ஐ பிலிப்பியர் 1:29 உடன் ஒப்பிட்டு நோக்குக. நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாக நடக்கத் தீர்மானித்தால் நாம் ஓரளவுக்காவது, அவரது பாடுகளில் பங்குபெற வேண்டும். இந்த அற்புதமான ஐக்கியத்தைப் பற்றி அறிந்துள்ள நாம், அவரது சிலுவை அவமானத்தைப் புறக்கணிக்க இயலுமா?

### 4. அவரது நோக்கத்தை அறிதல்

“அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி...” ஒவ்வொரு விசுவாசிக்கும் கடவுள் வைத்துள்ள நோக்கம் ரோமர் 8:28,29 இல் உள்ளது. நாமும் ஆண்டவராகிய இயேசுவைப் போல மாறவேண்டும் என்பதே கடவுளின் நோக்கம். இந்த நோக்கம் நம்மில் நிறைவேறுவதற்காக அவர் மரிக்க வேண்டியதாயிற்று. நம்முடைய இரட்சகர் மரித்தபோது, கடவுளின் எண்ணப்படி, திட்டப்படி நாமும் அவருடன் மரித்தோம். ரோமர் 6:2-,6 வசனங்களைப் படிக்கவும். ஆகவேதான் ரோமர் 6:11 இல் .உங்களை “....மரித்தவர்களாகவும்,,,, எண்ணிக்கொள்ளுங்கள்.” என்று ஆலோசனை கூறியுள்ளார். கடவுள் தமது நோக்கத்தின்படி உங்களில் செயலாற்றுவதை நீங்கள் அறிவீர்களா? நீங்கள் ஒவ்வொரு நாளும், பாவத்திற்கும், அவரது சித்தத்திற்கு எதிரான யாவற்றிற்கும் மரித்தவர்களாக எண்ணிக் கொள்கிறீர்களா? கலாத்தியர் 2:20 கூறியுள்ள சத்தியத்தை அன்றாட அனுபவத்தில் காண்கிறீர்களா?

பாடம் 7 **பின்னானவைகளும், முன்னானவைகளும்**

***(வேதபகுதி - பிலிப்பியர் 3:12-21)***

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் ஒரேயொரு மேலான நோக்கம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அதனையே அவர் பிலிப்பியர் 3:13,14 இல் "நான் ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி. இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்கிறார். பவுல் ஒரு ஓட்டப் பந்தய வீரனின் எடுத்துக்காட்டை இங்குக் கூறுகிறார். அவர் ஒரு கிரேக்க ஓட்டப் பந்தயக்காரனை படம் பிடித்துக் காட்டுகிறார். அவன் பந்தய மைதானத்தில் ஓடும்போது, பழைய பந்தயங்களில் ஏற்பட்ட தோல்விகளை மறந்து, நாடி நரம்புகளைத் தட்டி எழுப்பி, இலக்கை அடைவதற்கென மனதை ஒருமுகப்படுத்தி, பந்தயத்தில் வெற்றி பெற வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு ஓடுகிறான். வாழ்க்கை என்ற இந்த ஓட்டப் பந்தயத்தில் நாம் வெற்றியடைவதற்கு நிதானத்துடன் மறக்க வேண்டியவற்றை 'மறந்து' இலக்கை நோக்கித் தொடர வேண்டும்.

**1. நாம் மறக்கவேண்டிய பின்னானவைகள் யாவை?**

நினைவாற்றல் என்பது பெரிய சொத்து எனக் கருதுவது தவறு. நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய வற்றை மறப்பதும் நல்லதல்ல. அதனால் பல பிரச்சினைகள் வரும். இருப்பினும் மறக்க வேண்டிய சில உண்டு:

***(1). நமது பழைய பாவங்களை மறக்கவேண்டும்.*** நாம் உண்மையாகவே மனந்திரும்பி பாவங்களை அறிக்கையிட்டு, விட்டுவிட்டிருந்தால் (நீதிமொழிகள் 28:13) நாம் அவற்றை மறந்துவிட வேண்டும். நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டு, விட்டுவிடும் போது கடவுள் அவற்றை மன்னிக்கிறார், மறந்தும் விடுகிறார் (1யோவான் 1:9ஐ சங்கீதம் 103:12, ஏசாயா 44:22. மீகா 7:19. எபிரெயர் 10:17 உடன் ஒப்பிட்டு நோக்குக) கடவுள் நம் பாவங்களை மறந்துவிட்டாரெனில் நாமுங்கூட மறக்கவேண்டும். அல்லது அவற்றின் நினைவு நமக்கு இடையூறு விளைவிக்கும்.

***(2). நம்முடைய பழைய தோல்விகளை மறக்கவேண்டும்.*** இது அவ்வளவு எளிதான செயலல்ல. நமது தோல்விகளையே தொடர்ந்து நினைத்து, அவற்றை மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்தால், நமது சமாதானம் பாதிக்கப்படும். நமது முன்னேற்றம் தடைபட்டு, நாம் ஆண்டவருக்கென பயன்படுவது மட்டுப்படும். மக்கள் சிலர் எப்போதும் நடந்ததை எண்ணி வருந்திக்கொண்டேயிருப்பர். கடந்ததை நினைத்து வருந்தி என்ன பயன்?

***(3). நம்முடைய பழைய வெற்றிகளையும் மறக்கவேண்டும்.*** நாம் நமது பழைய சாதனைகளிலே கருத்தூன்றியிருந்தால், இன்றைய வெற்றிகளைக் கோட்டை விட்டு விடுவோம். அது பெருமையைப் பிறப்பிக்கும். கிறிஸ்தவர்கள் சிலர் பழைய அனுபவங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். சில ஊழியர்களும் கூட தங்கள் பழைய புகழிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

***(4). நம்முடைய பழைய இன்பங்களையும் மறக்கவேண்டும்.*** வனாந்திரத்தில் இஸ்ரவேலர் இதைச் செய்யத் தவறினர். அவர்கள் எகிப்திலே அனுபவித்த மிகுதியான உணவு, தண்ணீரை நினைத்து அவ்வப்போது அழுதனர் என்று நாம் வாசிக்கின்றோம். எண்ணாகமம் 11:5,6, 20:5, 21:5 பார்க்கவும். அவர்கள் அந்தப் பழைய வசதிகளிலே முழுமனதையும் ஈடுபடுத்தினபடியால், கடவுளின் தற்போதைய அற்புதமான ஈவுகளை அனுபவிக்கத் தவறிவிட்டனர்.

***(5). நம்முடைய பழைய துன்பங்களையும் மறக்க வேண்டும்.*** ஒரு பெரிய செல்வத்தை இழந்துவிட்டோமா? மறந்து விடுக. அதையே நினைத்துக் கொண்டிருந்தால் அது திரும்ப வராது. நம்மை யாராகிலும் விழத்தள்ளி விட்டார்களா? மறந்து விடுக. அந்த அனுபவத்தையே மீண்டும் மீண்டும் நினைவிற் கொண்டுவரும்போது, மனக்கசப்பையும், ஆத்திரத்தையும் விளைவிக்கும். அது மற்றவர்களைக் காட்டிலும், நமக்கே அதிகக் கேடு விளைவிக்கும்.

***(6). நம்முடைய பழைய ஆசீர்வாதங்களை மறக்க வேண்டும்.*** அவை இன்றைய தேவைக்குப் போதுமானவையல்ல. நாமும் சங்கீதக்காரன் சங்கீதம் 103:2 இல் கதறுவது போலக் கதற வேண்டும். இன்றைய தேவைக்கு நேற்றைய ஆசீர்வாதம் போதாது. அவரது ஆசீர்வாதங்கள் காலைதோறும் புதிதாயுள்ளன (புலம்பல் 3:23).

***(7). நாம் பிறருடைய பாவங்களையும் தோல்விகளையும் மறக்கவேண்டும்.***இது மிக அவசியனாதொன்று.

ஏனெனில் நாம் மற்றவர்களின் குறைவுகளை எளிதில் நினைவுபடுத்துவோம். அவர் நமக்கு விரோதமாகக் குற்றம் செய்திருந்தால் நாம் அதை மன்னித்து, மறக்கவேண்டும். “அதெல்லாம் என்னால் முடியாது உன்னாலேதான் முடியும்” என்று கூற வேண்டாம். மறக்கவேண்டும் என்பதற்காக நாம் நம் நினைவாற்றலைத் திசை திருப்ப வேண்டும். மறவாமல் இருப்பதற்கென ஒருவன் உருவத்தை மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வரவேண்டும். இந்த முறையை சற்று மாற்றுங்கள். உருவத்தை நினைவுபடுத்த மறுத்து விடுங்கள். மறந்து விடுங்கள். அப்பொழுது மறப்பது எளிது.

**2. நாம் நாட வேண்டிய முன்னானவைகள்.**

தான் அடைய வேண்டுமென்று, பிரயாசப்படுகின்ற, தொடர்ந்து வாஞ்சிக்கின்ற மூன்று காரியங்களைக் குறித்து அப்போஸ்தலன் இங்கு கூறுகிறார்.

**(1). நாம் பரிபூரணத்தை நாடித் தேடவேண்டும்.** வசனம் 12இல் “முற்றும் தேறினவனானேன்” என்ற வார்த்தைகள் ஆவிக்குரிய முதிர்ச்சியை அல்லது பரிபூரணத்தைக் குறிப்பன. இது பாவமற்ற, குறைவற்ற நிலையைக் குறிப்பதல்ல. இங்கு வளர்ச்சியின் தேவையை அவர் வலியுறுத்துகிறார்- எபிரெயர் 6:1 பார்க்க. நாம் வளருவதற்கெனக் கடவுளின் வார்த்தையை ஏற்க வேண்டும். தவறாமல் ஜெபிக்க வேண்டும். ஆண்டவரின் திராட்சத்தோட்டத்து வேலையில் ஈடுபட வேண்டும்.

**(2). கடவுள் நம்மை எதற்காகப் பிடித்துள்ளாரோ, அதைச் செய்ய நாட வேண்டும்.**

வசனம் 12 இன் பிற்பகுதி இதைக் கூறுகிறது. கடவுள் நமக்கென வைத்துள்ள பொதுவான நோக்கம் ரோமர் 8:28-30 இல் கூறப்பட்டுள்ளது. ஆயினும் நம் ஒவ்வொருவருக்கென அவர் தனிப்பட்ட திட்டம் வைத்துள்ளார் - அது ஒரு வாழ்க்கைத் திட்டம். உங்கள் வாழ்விற்கென அவர் வைத்துள்ள திட்டத்தை நீங்கள் கண்டு கொண்டீர்களா? நீங்கள் அதற்காகத் தொடர்கிறீர்களா? அப்போஸ்தலர் 9:6 ஐப் படியுங்கள். பவுலின் அதே கேள்வியை நீங்கள் ஒவ்வொரு நாளும் கேளுங்கள்.

**(3). இரட்சிக்கப்படாதோரை *ஆதாயம் செய்ய ஆழ்ந்த கரிசனை, நாட்டம் தேவை.***

வசனங்கள் 18,19இல் கூறப்பட்டுள்ள மக்கள மீது கரிசனை வேண்டும். ஆண்டவரின் வருகையை நாம் எதிர்நோக்கியுள்ளோம். அவரது வருகை நமக்கு மகிமை, இரட்சிக்கப்படாதோருக்கு இருள். ஆகவே நாம் அவர்கட்காகப் பாரப்பட்டு ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும். 2பேதுரு 3:11,12 பார்க்க. நற்செய்திப்பணி எவ்வளவு அவசரமானது! அவசியமானது!

**3. நாம் ஏன் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, இந்த ஒன்றைச் செய்யவேண்டும்?**

**(1). ஏனெனில் நாம் பரலோகக் குடிமக்கள். பரலோகம் நமது வீடு.** நம்முடைய பெயர்கள் அங்கே எழுதப்பட்டுள்ளன (லூக்கா 10:20). கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் அங்கே இருக்கின்றனர் (எபேசியர் 3:14).

**(2). ஏனெனில் ஆண்டவர் நம்மை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வருவார்.** பரிசுத்தமான வாழ்விற்குக் கிட்டும் பரிசு இது (1யோவான் 1:3). பொறுமையுடன் காத்திருப்பதன் பலன் இது (ரோமர் 8:25).

**(3). ஏனெனில் நாம் நம்முடைய பழைய சரீரத்திற்குப் பதிலாகப் புதிய சரீரத்தைப் பெறுவோம்.** இதனை வசனம் 21 கூறுகிறது. நாம் அவருடைய சரீரத்திற்கு ஒப்பான சரீரத்தைப் பெறுவோம். 1கொரிந்தியர் 15:20,23 பார்க்கவும்.

**(4). ஏனெனில் பரிசுபெறும் நாள் வருகிறது.** வசனம் 14 இல் இதைக் காணலாம். கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நிற்போம் என்பதை இது நினைவு படுத்துகிறது. அப்பொழுது நமக்குப் பரிசு கிடைக்கும். அல்லது இழப்பும் இருக்கும். ரோமர் 14:12. 1கொரிந்தியர் 3:12-15, 2கொரிந்தியர் 5:10 பார்க்கவும்.

**(5). ஏனெனில் மகிமை வரப்போகிறது.** வசனம் 21 இல் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## பாடம் 8 **பூலோகக் கவலைக்குப் பரலோக மருந்து**

*(வேதபகுதி : பிலிப்பியர் 4:1-9)*

பூலோகக் கவலைக்குப் பரலோக மருந்தை நாம் பிலிப்பியர் 4:7 இல் காணலாம். அதுவே, "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்". "சமாதானத்தின் தேவன்" (வசனம் 9) அருளும் "தேவசமாதானம்"(வசனம் 7) நம்மைத் துன்புறுத்தும் கவலை, மனவிசாரம், பயம், சஞ்சலம் போன்ற யாவற்றிற்கும் மருந்து எனலாம்.

வாழ்வின் இன்னல்களும், நிலையற்ற தன்மையும் மக்களைக் கவலையில் தள்ளும் கருவிகளாகவுள்ளன. நாம் வாழும் இந்தக் காலத்தைப் போன்று கவலை, சஞ்சலம், சோதனைகள் போன்றன, வேறு எப்போதும் வந்ததில்லை எனலாம். ஒவ்வொரு செய்கையிலும் குழப்பம், பாடுகள், இழப்பு போன்றவை ஏற்பட்டு நமது இரட்சகர் லூக்கா 21:26 இல் கூறியுள்ள வார்த்தைகள் நிறைவேறி வருகின்றன. ஆயினும் கடவுளின் உண்மையான பிள்ளைகள், "கர்த்தருக்குள்" நிலைத்திருக்கிறவர்கள் (வசனம் 1), தங்கள் "நாமங்கள் ஜீவபுத்தகத்தில்" எழுதப்பட்டுள்ளவர்கள், (வசனம் 3) இந்தப் பயங்கள், கவலைகட்கு இடமளிக்க மாட்டார்கள். இருப்பினும் நம்மில் பலர் அப்படி இல்லையே.

நம்மில் பலர் பழைய சம்பவங்களால், பல ஆண்டுகட்கு முன்னர் நிகழந்த அனுபவங்களினால் எழும் பயம், விசாரத்தால் நிறைந்துள்ளனர். இன்னும் சிலர், தங்கள் எதிர்காலத்தைக் குறித்தும், முதிர் வயது, சுகம், செல்வம்பற்றிக் கவலைப்பட்டு, பயந்து, கலங்குகின்றனர். இன்னும் சிலரோ, நிகழ்காலக் கவலைகளினால் பாரப்பட்டுக் கலங்குகின்றனர். கிறிஸ்தவனுக்கு வரும் பயம் விசாரம், கவலை என்பன பயனற்றவை, தேவையற்றவை, பார்க்கச் சகிக்காத, பாவமான செயல்.

**1. ஒரு கிறிஸ்தவன் கவலைப்பட்டு, பயந்து, கலங்குவது பயனற்றதாகும்.**

இதைக்குறித்து நமது ஆண்டவர் கூறுவதை மத்தேயு 6:25-27 இல் பாருங்கள். கவலைகளால், பயத்தினால் நாம் சாதிக்கப்போவது என்ன? ஏதுமில்லை. கவலையைப் போன்று குப்பையாக சேருவது வேறு ஏதுமில்லை. இது ஆபத்தானது. இது நமது சரீரத்தைக் கெடுக்கும். சிந்தையைக் கெடுத்து, ஆவிக்குரிய வாழ்வையும் கெடுக்கும். சரீரப் பிரகாரமாக நமது ஜீரணத்தைக் கெடுக்கும். இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும், தூக்கமின்மையை ஏற்படுத்தும், சரீரத்தை முடக்கிவிடும். நம் இருதயத்தையும் இது அதிகமாகப் பாதிக்கும். "கவலை என்பது எண்ணத்தினூடாகச் செல்லும் ஒரு சிறிய நீரோடை போன்றது. இதை ஊக்குவித்தால், இது ஒரு பெரிய வாய்க்காலை உருவாக்கி, மற்ற எல்லா எண்ணங்களையும் அதிலே இழுத்துக் காய்ந்து போகச் செய்யும்".

**2. ஒரு கிறிஸ்தவன் கவலைப்பட்டு, பயந்து, கலங்குவது தேவையற்றது.**

ஏன்? ஏனெனில் நமக்கு எல்லாம் வல்ல, அன்புநிறைந்த பரமபிதா ஒருவர் உண்டு. அவர் தமது பிள்ளைகளின் தேவையை அறிந்து அவற்றைக் கொடுக்க வல்லவர். (மத்தேயு 6:28-32) அந்த அன்புள்ள பரம பிதா எங்கேயிருக்கிறார்? அவர் "சமீபமாயிருக்கிறார்" என்று வசனம் 5 கூறுகிறது. வசனம் 5 ஆண்டவரின் பிரசன்னத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது. மத்தேயு 28:20,எபிரெயர் 13:5

**3. ஒரு கிறிஸ்தவன் கவலைப்பட்டுப் பயந்து கலங்குவது தகுதியற்றது.**

இது நம்பிக்கையின்மையைக் காட்டுகிறது என்பதில் ஐயமில்லை! கவலைப்படும் கிறிஸ்தவன், முரண்பட்டவன் - 1பேதுரு 5:7 பார்க்கவும். "இது அவர் உங்கள்மேல் கொண்டுள்ள கரிசனை" என்றும் கூறலாம். கவலைப்பட்டுக் கலங்குவது கிறிஸ்தவனுக்குத் தகுதியல்ல!

**அப்படியானால் இந்தக் கவலைக்கும், பயத்திற்கும், மருந்துதான் என்ன?**

மனோவியல் ரீதியாகப் பரிகாரங்கள் பல உண்டு. அவற்றுள் சில பயனுள்ளவை. இருப்பினும் அவைகளில் ஒன்றாகிலும் இந்தப் பிரச்சனையின் ஆணிவேரை அணுகுவதில்லை. கடவுள் கூறும் பரிகாரத்தில் மூன்று முக்கியக் கூறுகள் உண்டு. இவற்றை நாம் பிலிப்பியர் 4:6 இல் காணலாம். அவையாவன: 1. ஒன்றுக்கும் கவலைப்படாதிருப்பது 2. எல்லாவற்றிற்காகவும் ஜெபிப்பது 3. எதுவாயினும் நன்றி கூறுதல்.

**1. ஒன்றுக்குங் கவலைப்படாதிருப்பது.**

எதைப்பற்றியும் நினைக்கக்கூடாது என்பது இதற்குப் பொருளல்ல. அளவுக்கு மீறிய கவலையும், விசாரமும்

இருக்கக் கூடாது என்பதுதான் இதற்கு அர்த்தம். யாத்திராகமம் 20:15 இல் கடவுள் கட்டளையிட்டிருப்பது போன்ற ஒரு கட்டளை இதுவாகும். ஆனாலும், கவலை, விசாரத்திலும் நிறைந்துள்ள ஒருவன், “பயப்படாதே! கவலைப்படாதே!” என்று கூறுவது பயனற்றதாகும் என நீங்கள் கூறலாம். அது உண்மைதான் “கவலைப்படாதே” என்று ஒரு மருத்துவரோ, மனோவியல் மருத்துவரோ, போதகரோ கூறுவதில் பயனில்லை. ஆனால் கடவுளே இதைக் கூறும்போது, அது முற்றிலும் மாறுபட்டது எனலாம். “ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்” என்று அவர் கூறும்போது, அவரிடம் பரிகாரம் உண்டு. ஏனெனில் நம்முடைய விடுதலைக்கு அவர் வல்லமை அளிக்கிறார் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

**2. எல்லாவற்றிற்காகவும் ஜெபிப்பது.**

“எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்” என்று வசனம் 6 கூறுகிறது. எல்லாவற்றையும் என்பது எல்லாவற்றைப்பற்றி குறிப்பிடுவது. உங்கள் பயங்கள், கவலைகளை அவரிடம் கொண்டுவந்து, அவற்றை நீக்கும்படி கேட்டதுண்டா?

*1). “**ஜெபத்தினாலும்**”* என்பது அதைப்பற்றி பேசுவதல்ல, மெய்யாகவே ஜெபிப்பதாகும்.

*2). “.....**வேண்டுதலினாலும்**”* இது ஊக்கமுடன் ஆழ்ந்து கேட்பதைக் கூறும் சொல் எனலாம். கவலையும் விசாரமும் உறுதியாக நம்மை அழிக்கும் கருவிகள். எனவே இவற்றிலிருந்து விடுபட நமது ஜெபங்கள் ஊக்க முள்ளதாகவும், அவசரமானதாகவும் இருக்கவேண்டும்.

*3) .“....**தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்**”* இவை நிச்சயத்தைக் குறிக்கும் சொற்களாகும். நாம் பொதுவாக ஜெபிக்காமல், குறிப்பிட்ட காரியத்திற்காக ஜெபிக்க வேண்டும்.

**3. எதுவாயினும் நன்றி கூறுதல்**

“எல்லாவற்றையுங்குறித்து..... ஸ்தோத்திரத்தோடுகூடிய.....” என்று வசனம் 6 இல் காண்கிறோம். நாம் நன்றி கூற இயலாத சில காரியங்களும் உண்டு. அப்படி ஏதாகிலும் உண்டா? அப்படி உங்கள் வாழ்வில் தற்செயலாக நேர்ந்த ஏதாகிலும் உண்டா? ரோமர் 8:28 உங்கள் வாழ்வின் அனுபவமா? அப்படியானால் நாம் கடவுளுக்கு, எல்லாவற்றிற்காகவும், எதற்கும் நன்றி கூற வேண்டும். இந்த அதிகாரத்தில் வசனம் 4ஐ வசனங்கள் 11,12 உடன் ஒப்பிடுக. கர்த்தரைத் துதிக்கும் போது கவலை காற்றாய் பறந்துவிடும்! கடவுளின் பரிகாரத்தில் கூறப்பட்ட இந்த மூன்று முக்கிய கூறுகளையும் சேர்க்கும்போது என்ன பலன் கிட்டுகிறது தெரியுமா? வசனம் 7 “....எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்” இதை ஆராய்வோம்.

***1). இந்தச் சமாதானத்தின் நிச்சயம்*** ....“காத்துக்கொள்ளும்”

***2). இந்தச் சமாதானத்தின் தரம்*** .“தேவசமாதானம்” கடவுள் எப்போதாகிலும் கவலைப்படுவதையோ, பயப்படு வதையோ, பதைபதைப்பாக இருப்பதையோ நாம் கற்பனை செய்யமுடிகிறதா?

***3). இந்தச் சமாதானத்தின் பண்பு.*** “எல்லாப் புத்திக்கும் மேலானது” இது தர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது. ஆனால் நம் அனுபவத்திற்கு அப்பாற்பட்டதல்ல.

***4). இந்தச் சமாதானத்தின் தகுதி.*** “.....உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும்.... காத்துக் கொள்ளும்.” கடவுளின் இந்தச் சமாதானம் ஒரு காவற்காரன் போலிருந்து, பயம், கவலை, விசாரம் போன்றவை நம் இருதயத்தையும், சிந்தையையும் (இந்த இரண்டு இடங்களில்தான் அவை நுழைய வகைதேடும்) அணுகாதவாறு காத்துக்கொள்ளும். (ஏசாயா 26:3)

***5). இந்தச் சமாதானத்தின் வாய்க்கால்.*** “....கிறிஸ்து இயேசுவுக்குள்....” நாம் அவர் மூலமாய்க் கடவுளோடு சமாதானம் பெறுகிறோம். (ரோமர் 5:1, கொலோசெயர் 1:20) அவர் மூலமாய் கடவுளின் சமாதானத்தைப் பெறுகிறோம் (யோவான் 14:27, ரோமர் 15:13) பூலோக கவலைக்குரிய பரலோக மருந்தாகிய இதை நாம் கிறிஸ்துவாகிய அவருக்குள் காண்கிறோம்.

## பாடம் 9 **கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றையும் செய்யலாம்.**
*(வேதபகுதி - பிலிப்பியர் 4:13-17)*

பிலிப்பியர் 4:13 எவ்வளவு அற்புதமான வசனம்! இந்த வசனத்தின் பிற்பகுதியை மட்டும் வாசித்தால் பெருமையுள்ள ஒருவன் அகம்பாவத்துடன் கூறிய வார்த்தைகளாகத் தோன்றும். அல்லது தெய்வீக மனிதனின் கூற்றாகவும் கருதலாம். ஆனால் இதற்கு விளக்கம் வசனத்தின் முற்பகுதியிலேயுள்ளது. “எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு” எப்போது? வசனத்தின் முற்பகுதி கூறுகிறது: “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே”. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் இரகசியத்தைக் கற்றுக்கொண்ட ஒரு மனிதனின் வாக்குமூலம் இது எனலாம். “கிறிஸ்துவின் மூலம் நான் எந்தச் சூழலையும் மேற்கொள்ள முடியும்” என்பதே இதற்குச் சரியான மொழி பெயர்ப்பு. நாம் நிச்சயமாக கற்றுக்கொள்ள வேண்டுமென அதிகமாக வாஞ்சிக்கும் இரகசியம் இதுவே. நமக்கெதிராக எழும்பும் அல்லது எழும்பவிருக்கும் எந்தச் சூழ்நிலையையும் மேற்கொள்ள ஒவ்வொரு நாளும் வெற்றியுள்ள வாழ்வு நடத்த, சோதனையின் நடுவே நம் பிரச்சனைகள், இக்கட்டான சூழல் போன்றவற்றின் மீது வெற்றி பெற்று, “கிறிஸ்துவுக்குள் எல்லா சூழ்நிலைக்கும் நான் மேலானவன்” என்று கூறமுடியுமல்லவா! பவுல் அப்போஸ்தலனின் சாட்சியின் மூலம், ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த வெற்றியுள்ள மகிமையான வாழ்வை நடத்த முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நீங்களும், நானும் இந்த வாழ்வை நடத்த இயலும்.

### 1. இந்த வெற்றியுள்ள வாழ்விற்கு எடுத்துக்காட்டு

இங்கு பிலிப்பியர் 4:13 இல் கூறப்பட்ட வெற்றியுள்ள வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் ஒருவரை மாதிரியாகக் காணலாம். “என்னால் இப்படிப்பட்ட வாழ்வு நடத்தமுடியும்.” என்கிறார் பவுல். அவரால் நடத்தமுடிமென்றால், நம்மாலும் நடத்தமுடியுமல்லவா! பவுலுக்கு ஒரு இரகசியம் வெளிப்பட்டிருக்குமானால், அந்த இரகசியம் நமக்கும் தான் வெளிப்படும். “ஆனால் பவுல் மிகப் பெரிய மனிதர். அவரால் எந்தச் சூழ்நிலையையும் மேற்கொள்ள முடியும். நான் ஒரு சாதாரண மனிதன்தானே.” என்று நினைக்கிறீர்களா? நாம் இவ்வாறு நினைப்பது தவறு. பவுல் பெரிய மனிதனாக இருப்பதற்கும் அவரது வாழ்வின் எல்லா அற்புதங்களுக்கும் காரணம் அவர் இந்த இரகசியத்தைக் கற்றுக்கொண்டதுதான். ஒரு மனிதனிடம் இயற்கையாகவே அதிகமாகத் திறமைகள் இருக்குமாயின் அவற்றால் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் இரகசியத்தைக் கற்றுக்கொள்வது கடினமாகும். நம் திறமையால் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ இயலாது, கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே பவுலால் இதை நடத்தமுடிந்தது. அப்படியானால் நீங்களும் நானும் இதைச் செய்ய முடியுமல்லவா!

### 2. இந்த வெற்றியுள்ள வாழ்வு எவ்வளவு காலத்திற்கு?

இதை எவ்வாறு அளவிடுவது? இவ்வெற்றி எவ்வளவு காலத்திற்குத் தொடரும்? இதற்குப் பதிலாகப் பவுல், “எந்த நிலைமையிலும்” எல்லாவற்றிலும் என்று கூறியுள்ளார். அதுவே மெய்யான வெற்றி! கடும் சோதனை, பெருங்குழப்பம், திகைப்பு, பெரும் சிக்கல், துன்பம், கவலை போன்றன கிறிஸ்துவின் மூலம் எதிர்கொள்ளும் போது ஒன்றுமில்லாது போகும். கிறிஸ்துவைக் கொண்டு நாம் அவற்றையெல்லாம் மேற்கொள்ள முடியும். - 2தீமோத்தேயு 4:18 பார்க்கவும். ஒவ்வொரு விசுவாசியும், கிறிஸ்துவின் மூலமாக, வெற்றி கொள்ளக்கூடிய சூழ்நிலைகளென பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் கூறியுள்ள சிலவற்றைக் காணலாம்.

**1). வசனம் 4 கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.** நமக்கு எல்லாமே சுமுகமாகச் செல்லும்போது சந்தோஷமாக இருப்போம். ஆனால் ஏதாகிலும் இடையூறு நேரிட்டால் உடனே நாம் கவலைப்பட்டு கலங்குவோம். ஆனால் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு எப்போதும் சந்தோஷமாக இருக்கவேண்டும். (சங்கீதம் 34:1) துக்க வேளையிலும், இன்பமான சூழலிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக சோதனைகளில் அகப்படும்போது (யாக்கோபு 1:2,3), உபத்திரவப்படும்போது (அப்போஸ்தலர் (5:41), குறைவு, பஞ்சம் நேரிடும்போது (ஆபகூக் 3:18) சந்தோஷமாயிருக்கவேண்டும். 1தெசலோனிக்கேயர் 5:16, சங்கீதம் 68:3 படிக்கவும்.

**2). வசனம் 5 “உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக.”** இது நாம் மற்றவரிடம் காட்டும் பொறுமையாகும். நாம் எப்பொழுதும் பொறுமையுடனும், இனிய முகத்துடனும், நம்முடைய !

இரட்சகரைப் போல "சாந்தமும், மனத்தாழ்மையுமாய்" (மத்தேயு11:29) இருப்பது எளிய செயலன்று ஆனால் அவர்எவ்வாறு மக்களிடம் பொறுமையுடனிருந்தார் என்பதை அதிகாரம் 2 வசனங்கள் 5-8 படித்தால் தெரியும்
**3). வசனம் 6 ஒன்றுக்கும் கவலைப்படாமல் இருங்கள்.** வாழ்க்கையில் கவலையில்லாமல், சுகவீனம் இல்லாமல், இழப்பு ஏதுமின்றி, தோல்வியின்றி சோதனை ஏதும் அணுகாமல் வாழ்வது என்பது எவ்வளவு அருமையானது! சங்கீதம் 37:1-11 படிக்கவும்.
**4). வசனம் 6 எல்லாவற்றையுங் குறித்து "ஜெபத்தினாலும்..தெரியப்படுத்துங்கள்"** நம்மில் பெரும்பாலோர் இதிலே, குறைவுடையோராய் இருக்கின்றோம். நம் அன்றாட வாழ்வில் 'பெரிய' காரியங்களுக்காக ஜெபிக்கிறோம். சிறிய, முக்கியமற்ற காரியங்களுக்காக அடிக்கடி ஜெபிக்க மறந்து விடுகிறோம். நாம் எல்லாவற்றிற்காகவும் ஜெபிக்க வேண்டும். எப்பொழுதும் ஜெபசூழலில் வாழவேண்டும். 1தெசலோனிக்கேயர் 5:17 பார்க்கவும். நம்முடைய பெரும்பாலான தோல்வி கட்குக் காரணம் ஜெபத்திற்கு முதலிடம் கொடாமலிருப்பதே எனலாம்.
**5). வசனங்கள் 8,9 அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.** இந்த வசனங்களில் எவ்வளவு பெரிய பட்டியல் உள்ளது. இந்த நற்குணங்கள் இக்காலத்திற்கும் எவ்வளவாய்த் தேவைப்படுகின்றன. இந்த நற்குணங்களை நாம் கடைப்பிடித்து, வெற்றியுள்ள வாழ்வு வாழவேண்டும். வெற்றியுள்ள வாழ்வு என்பது உண்மை, நீதி, நியாயம், தூய்மை, அன்பு, நற்குணம், நிறைந்த வாழ்வு எனலாம். வசனம் 8இல் அவைகளையே "சிந்தித்துக் கொண்டிருக்கவும்", வசனம்9 இல் அவைகளைச் 'செய்யவும்' தூண்டுகிறார் என்பதை நினைவிற் கொள்க.
**6). வசனம்11 "நான் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்."** சுகத்திலும், சுகவீனத்திலும், ஏழ்மையிலும், செல்வத்திலும், தோல்வியிலும், வெற்றியிலும் மனநிறைவு. குறைவிலும் நிறைவாயிருந்து அவரை மகிமைப் படுத்து. அதுவே மெய்யான வெற்றி.
**7). வசனம் 22 பரிசுத்தவான்கள் ....இராயனுடைய அரண்மனையிலுள்ளவர்களும்.** இவர்கள் எதிர்பாராத இடங்களில் உள்ள கிறிஸ்தவர்கள். அதைவிட மேலானது, இக்கட்டான இடங்களில் வாழும் கிறிஸ்தவர்கள் எனலாம்.

**3. இந்த வெற்றியுள்ள வாழ்வின் விளக்கம்.**

"எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" என்னால் எந்தச் சூழலையும் மேற்கொள்ள முடியும் என்று பவுலால் எப்படிக் கூறமுடிகிறது? இவ்வாறு என்னால் கூறமுடியுமா? இதற்கு என்ன செய்ய வேண்டும்? இதற்குப் பதில், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே" என்பதுதான் இதன் பொருள்.

***1). கிறிஸ்து இல்லாமல் என்னால் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ இயலாது.*** அவர் இல்லாமல் வெற்றியுள்ள வாழ்வு என்பது அடையமுடியாத ஒன்று எனலாம். யோவான் 15:5 பார்க்க. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு என்பது என்னுடையதே அல்ல.

***2). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே இந்த வெற்றியுள்ள வாழ்க்கையாகும்.***
இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அவர் மனித சரீரத்தில் மனிதனாக இந்த வாழ்வை நடத்திக் காட்டினார். எல்லாச் சூழ்நிலையையும் மேற்கொண்டார். எடுத்துக்காட்டாக வசனம் 8இல் கூறப்பட்டுள்ள எல்லா நற்பண்புகளின் முழு வடிவம் அவரே என்று கூறலாம்.

***3). மனிதனாக ஒரு சரீரத்தில் இந்த வாழ்வை நடத்திய அவர் அதே வாழ்வை, அவருக்கென ஒப்புக்கொடுத்த எவரிலும் உருவாக்க விரும்புகிறார்.*** ஒரு கிறிஸ்தவனில் உள்ளும், புறம்பும் இந்த வெற்றியுள்ள வாழ்வை அதாவது கிறிஸ்துவின் வாழ்வை அவர் உருவாக்குகிறார். இது அவரது வாழ்வு, அவரது வெற்றி.

***அவர் என் தலைவராகும்போது, நான் அவர் மூலமாக ஒவ்வொரு சூழ்நிலையையும் மேற்கொள்ளுவேன்.***

## பாடம் 10 **எதிர்பாராத இடங்களிலுள்ள பரிசுத்தவான்கள்!**

## **(வேதபகுதி - பிலிப்பியர் 4:19-23)**

இந்தப் பாடம் பிலிப்பியர் 4:21,22 வசனங்களை அடிப்படையாகக் கொண்டது. அங்கு அப்போஸ்தலனாகிய பவுல் தன் கடிதத்தின் பின்குறிப்பாக இதைச் சேர்த்துள்ளார். அந்தக் குறிப்பில் ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்கள் (குறிப்பாக நீரோ மன்னனின் வீட்டில் வேலை செய்யும் அடிமைகள்) தங்கள் வாழ்த்துக்களைப் பிலிப்பிப் பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்குத் தெரிவிக்கிறார்கள். யார் இந்த ரோமாபுரி பரிசுத்தவான்கள்? அவர்கள் கிறிஸ்தவர்கள், விசுவாசிகள், கிறிஸ்துவின் சீடர்கள். ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்தவான். கடவுளுக்கு முன்பாக அவன் நிற்கும் வரை. பரிசுத்தவான் என்பதை வசனம் 21 சுட்டிக் காட்டுகிறது. "கிறிஸ்து இயேசுவுக்குள்ளானவர்" என்று. பெரும்பாலும் இவ்வுலக வாழ்வைக் கடந்து சென்ற மக்களைக் குறிப்பிடவே இந்த வார்த்தையைப் பயன்படுத்துவார்கள். அதிகார பூர்வமாக உயிரோடு இருக்கும் எவருக்கும் இந்தப் பட்டம் கொடுக்கப்படுவதில்லை. சபையில் புனிதர் பட்டம் பெறுவோர், துறவு வாழ்வு வாழ்வோர் போன்றவர்கட்கு மட்டுமே கொடுக்க வேண்டுமென மக்கள் இதைத் தனித்து வைத்துள்ளனர். ஆனால் புதிய ஏற்பாட்டில் இதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. பவுல் தனது கடிதங்கள் யாவற்றிலும் விசுவாசிகளைப் பரிசுத்தவான் கள் என்று அழைப்பதைக் காணலாம். ரோமாபுரியில் (ரோமர் 1:7) எபேசுவில் (எபேசியர் 1:1) பிலிப்பிப் பட்டணத்தில் (பிலிப்பியர் 1:1) பரிசுத்தவான்கள். இந்தப் பரிசுத்தவான்கள் யார்? இவர்கள் கடவுளின் பிள்ளைகள் (யோவான் 1:12), ஆவியினாலே மறுபடியும் பிறந்தவர்கள் (யோவான் 3:5), கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்கள். (1பேதுரு 1:18-19)

இராயனுடைய அரண்மனையில் பரிசுத்தவான்கள்! சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எவ்வளவு அதிர்ச்சி தரும் செய்தி அது. தவறான இடங்களில் இருந்த பரிசுத்தவான்கள் பற்றி வேதாகமத்தில் பல இடங்களில் காணலாம். நீரோ மன்னனின் அரண்மனையில் பரிசுத்தவான்கள் இருப்பதில் தவறு ஏதுமில்லையே! அவர்கள் அங்கே இருப்பது விசித்திரமானது. அற்புதமானது எனலாம். பரிசுத்தவான்களை அப்படிப்பட்ட இடங்களில் எதிர்பார்க் கவே முடியாது. இரண்டாயிரம் வருடங்கட்கு முன்பு இருந்த ரோமரின் நாகரீகத்தில் இரக்கமின்றிக் கொடூரமாகத் தண்டிப்பதும், அளவு கடந்த ஊழலும் இருந்தனவென்று வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளனர். ரோமாபுரி அநீதி நிறைந்தச் சாக்கடையாக இருந்தது. மனித வரலாற்றிலே இல்லாத அளவுக்குக் கொடுமையும் இழிவும் பெருகியிருந்த காலம் அது. நீரோ மன்னன் கொலைபாதகன். கொள்ளைக்காரன். பொய்யன், கோழை, குடிகாரன், பெருந்தீனிக்காரன், முறை தவறி நடந்தவன். இது போன்ற பாவங்களின் மொத்த உரு. மிகவும் கேவலமானவன் எனலாம். அவன் காலத்தே வாழ்ந்த புறமதத்தவர் அவனைக் குறிப்பிடும்போது, "அவன் இரத்தமும், மண்ணும் கலந்தவன்" எனக் கூறுவர்! அவன் தகாத வழியிலே அரசாட்சிக்கு வந்தவன். சட்டப்படி பதவிக்கு வரவேண்டிய வனை நஞ்சு கொடுத்துக் கொன்று, அவனது சகோதரியை மணந்து கொண்டான். தனது கொடுமையினால் அவளது மனதை உடைப்பதற்காக இதைச் செய்தான். பின்னர் அவளைக் கொல்ல உத்தரவிட்டான். அவன் தன் சொந்தத் தாயைக் கொன்றான். இரண்டாம் மனைவியைக் காலால் உதைத்துக் கொன்று போட்டான். அவனது சீர் கெட்ட இருதயத்தை நல் வழிப்படுத்த முயன்ற ஒரு சிறந்த தத்துவ மேதையைக் கொன்று போடக் கட்டளையிட்டான். தன் தலைநகரைச் சுட்டு சாம்பலாக்கி, இதற்காக நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்களை இரத்த சாட்சியாகச் சாகடித்தான். முப்பது வயது நிரம்பும் முன்பே இந்த ஊழல் நிறைந்த, கொடூரமான மிருகம், எல்லாவகைக் குற்றங்களையும் செய்து, கொடுமையும், கேடும் நிறைந்தவனானான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்குக் கிறிஸ்துவுக்காக வாழ்வது எவ்வளவு கடினம். பிலிப்பிப் பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் இந்தப் பரிசுத்தவான்களின், நீரோவின் அடிமைகளின், வாழ்த்துக்களை அனுப்புகிறார். இந்த மக்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களைப் பார்ப்போம்.

### 1. விரும்பக் கூடாதவற்றிலிருந்துங் கூட கடவுள் பரிசுத்தவான்களை உருவாக்க முடியும்.

இந்த அடிமைகள் உரிமையற்றோர், படிப்பறிவு இல்லாதோர். தாழ்த்தப்பட்டோர், ஊழல்நிறைந்த சமுதாயத்தில் வாழ்வோர். இருப்பினும் கடவுளின் கிருபை இவர்களை மேற்கொண்டது. பாவிகளாக இருந்த அவர்கள்

பரிசுத்தவான்களாக மாறினர். கல்லறைவாசி இல்லறவாசியாக மாறியது போல (மாற்கு 5:1-20) கடவுளின் வல்லமையால், மனிதரால் கைவிடப்பட்ட மக்கள் பலர் இவ்வாறு மாற்றம் அடைந்துள்ளனர். உடைந்துபோன வாழ்வைச் சரிசெய்ய கடவுளால் முடியும். அஞ்ஞான தேசத்தில் வாழும் அடிமைகளையும், பலவீனரையும், தாழ்த்தப்பட்டோரையும் உயர்த்துவதிலே, அவர்களைத் தமது பிள்ளைகளாக்குவதிலே அவர் மகிழ்வடைகிறார். 1கொரிந்தியர் 1:27-29. கடவுளுக்கு நன்றி! சுவிசேஷம் மோசமான மக்களை இரட்சிக்கும். அது சாக்கடையிலிருந்து சொர்க்கத்திற்கு உயர்த்தும். (எபிரெயர் 7:25).

**2. எல்லா இடங்களிலும் கடவுள் தமது சாட்சிகளை வைத்துள்ளார்.**

நீரோ மன்னன் வீட்டிலுங்கூட! நீங்கள் பயணம் செய்யும்போது உயர் பதவியில் இருப்போர், தாழ்மையான மக்கள், பாமரர் போன்ற பல்வேறு நிலையிலுள்ள மக்கள் ஆண்டவருக்கு உண்மையுள்ளோராய், சாட்சியாக இருப்பதைக் காணலாம். இன்றும் கடவுள் தம்முடைய யோசேப்புக்களையும் (ஆதியாகமம் 39:1-6), நெகேமியாக்களையும் (நெகேமியா 1:11), தானியேல்களையும் (தானியேல் 1:1-21) ஆங்காங்கு வைத்துள்ளார். அவருக்குச் சாட்சியாக இருப்பது எப்பேற்பட்ட சிலாக்கியம்!

**3. எங்கிருந்தாலும், நாம் கடவுளுக்குச் சாட்சியாக வாழ முடியும்.**

ஆம். விரும்பத்தகாத இடத்திலுங்கூட! கிறிஸ்தவன் இருக்கக்கூடாத இடங்களும் உண்டு. அவன் விற்கத்தகாத பொருட்கள் உண்டு. வைத்துக்கொள்ளக் கூடாத கூட்டாளிகளும, குழுக்களும் உண்டு - 2கொரிந்தியர் 6:14 - 7:1 படிக்கவும். இருப்பினும் கடவுள் நம்மை எங்கெல்லாம் வைத்திருக்கிறாரே, அங்கெல்லாம் அவரது கிருபையினாலே அவருக்கென சாட்சியாக வாழ முடியும். அரண்மனையிலும், சிறைச்சாலையிலும், தொழிலிலும், வியாபாரத்திலும், வீட்டிலும் ஆண்டவருக்கு நாம் உண்மையுள்ள சாட்சியாக இருக்கமுடியும்.

**4. ஏதோ ஓரிடத்தில் நாம் கடவுளுக்குச் சாட்சியாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.**

ஒருவேளை நீங்கள் பேரரசர் அரண்மனையிலோ, அலுவலகத்திலோ, வீட்டிலோ இருக்க வேண்டுமென அவர் விரும்பலாம். நீங்கள் ஆப்பிரிக்காவிலோ, வட இந்தியாவிலோ, தென் அமெரிக்காவிலோ இருக்க வேண்டுமென விரும்பலாம். இந்த நேரத்தில் அவர் உங்களை எங்கே வைத்துள்ளாரோ, அங்கே நீங்கள் அவருக்குச் சாட்சியாக இருங்கள். அங்கே நீங்கள் சாட்சியாக இருப்பது கடினமாக இருக்கின்றதா? இராயனுடைய அரண்மனையிலுள்ள பரிசுத்தவான்களை நினைத்துக் கொள்ளுங்கள். அவிசுவாச உலகைக் கண்டு ஆத்திரப்பட வேண்டாம். கலங்க வேண்டாம். இந்த உலகத்தையும், சாத்தானையும் கலங்கப் பண்ணுகிற பரிசுத்தவான்களில் ஒருவராக நீங்கள் இருக்க வேண்டும். கடவுள் உங்களை எங்கே வைத்துள்ளாரோ அங்கே நீங்கள் ஆண்டவருக்கு உயிருள்ள சாட்சியாக இருக்கிறீர்களா? அப்போஸ்தலர் 1:8 பார்க்கவும்.

**5. எவர்களுக்கு அதிகம் மன்னிக்கப்பட்டதோ, எவர்கள் கடினமான வழியில் இரட்சிக்கப் பட்டனரோ, அவர்கள் வைராக்கியமுள்ள பரிசுத்தவான்களாகவும், ஒளி வீசும் சாட்சிகளாகவும் விளங்குவார்கள்**

ரோமாபுரியிலுள்ள "பரிசுத்தவான்கள் அனைவரும் விசேஷமாக இராயனுடைய அரண்மனையிலுள்ளவர்களும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்." என்று பவுல் பிலிப்பிப் பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதியுள்ளார். தங்களைவிட நல்ல நிலையிலும், நல்ல சூழலிலும் இருக்கும் அதிக சிலாக்கியம் பெற்ற தங்கள் சகோதர, சகோதரிகளை நினைத்து இந்த ஏழை அடிமைகள் உற்சாகத்தோடும், அன்போடும் கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றனர். இப்பொழுது லூக்கா 7:36 -50 வரை படியுங்கள். குறிப்பாக வசனங்கள் 44-47 வரை, அதிலும் குறிப்பாக வசனம் 47 பார்க்கவும். நமக்காகவும், நமக்கெனவும் கடவுள் செய்த எல்லாவற்றையும் பார்க்கும்போது, அவர் பேரிலும், அவரது மகிமையிலும் நமது அன்பு பெருகுகிறதல்லவா!